தமிழ்ப் பேரவைச் செம்மல்

# வெள்ளைவாரணனார்

நூல் வரிசை – 7

## *திருவருட் பயன்*

**நிரம்ப அழகிய தேசிகர் உரையும்**

**க.வெள்ளைவாரணனார்**
திருக்குறள் சைவத் திருமுறைகளை
ஒப்பு நோக்கி எழுதிய உரை விளக்கமும்

*ஆசிரியர்*
பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்

மாணவர் பதிப்பகம்

*நூற்குறிப்பு*

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **வெள்ளைவாரணனார் நூல் வரிசை : 7** **திருவருட் பயன்** |
| ஆசிரியர் | : | **பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்** |
| பதிப்பாளர் | : | **இ. தமிழமுது** |
| மறு பதிப்பு | : | 2014 |
| தாள் | : | 16.0 கி. மேப்லித்தோ |
| அளவு | : | 1/8 தெம்மி |
| பக்கம் | : | 8 + 184 = 192 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | **உரு. 180/-** |
| நூலாக்கம் | : | டெலிபாய்ண்ட் சென்னை -5. |
| அட்டை வடிவமைப்பு | : | வி. சித்ரா |
| அச்சு | : | வெங்கடேசுவரா ஆப்செட் பிரிண்டர்ஸ் இராயப்பேட்டை, சென்னை - 14. |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| வெளியீடு | : | **மாணவர் பதிப்பகம்** பி-11, குல்மொகர் அடுக்ககம், 35, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை -600 017 தொ.பே: 2433 9030 |
| நூல் கிடைக்கும் இடம் | : | **தமிழ்மண் பதிப்பகம்** தொ.பே. : 044 2433 9030. |



தமிழ்ப்பேரவைச் செம்மல்

# க. வெள்ளைவாரணனார்

| | |
|---|---|
| தோற்றம் | மறைவு |
| 14.01.1917 | 13.06.1988 |

# பதிப்புரை

*19 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியும், 20ஆம் நூற்றாண்டின் தொடக்கப்பகுதியும் தமிழ்ப்புலமையும் தமிழாய்வும் மேலோங்கி வளர்ந்த பொற்காலமாகும். இப் பொற்காலப் பகுதியில்தான்* ***தமிழ்ப்பேரவைச் செம்மல்*** *பெருந்தமிழறிஞர்* ***க. வெள்ளைவாரணனார்*** *தோன்றி வளர்ந்து வாழ்ந்து தாய்மொழித் தமிழுக்கு வளமும் வலிமையும் சேர்த்தார்.*

*இப்பெரும்பேரறிஞர் எழுதிய நூல்கள் அனைத்தையும் வெளியிட முடிவுசெய்து* ***க.வெள்ளைவாரணனார் நூல் வரிசை*** *எனும் தலைப்பில் 21 தொகுதிகள் முதல் கட்டமாக வெளியிட்டுள்ளோம். கைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களைத் தேடியெடுத்து இனிவரும் காலங்களில் வெளியிட முயல்வோம்.*

***தமிழ் இசை, தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கணம், சைவ சித்தாந்தம்*** *ஆகிய நால்வகைத் துறைகளை மையமாகக் கொண்டு இவர் எழுதிய நூல்கள் தமிழுக்கும் தமிழருக்கும் பெரும் பயன்தரக் கூடிய அறிவுச் செல்வங்களாகும். ஆழ்ந்த சமயப்பற்றாளர், பதவிக்கும் புகழுக்கும் காசுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொள்ளாது தமிழ்ப்பணி ஒன்றையே தம் வாழ்வின் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர், நடுவணரசு தமிழகத்தில் கலவைமொழியாம் இந்தியைக் (1938) கட்டாயப் பாடமாகத் தமிழ்நாட்டுக் கல்வி நிறுவனங்களில் புகுத்தியபோது அதனை எதிர்த்துப் போர்ப்பரணி பாடிய தமிழ்ச் சான்றோர்களில் இவரும் ஒருவர்.* ***காக்கை விடுதூது*** *எனும் இந்தி எதிர்ப்பு*

நூலை எழுதி அன்று தமிழ்நாட்டு ஆட்சிக் கட்டிலில் முதல்வராக அமர்ந்திருந்த இராசாசிக்கு அனுப்பித் தம் எதிர்ப்பைப் பதிவு செய்தவர்.

தம்முடைய தமிழாய்வுப்பணி மூலம் தமிழ் வரலாற்றில் நிலைத்து நிற்பவர், தமிழையும் சைவத்தையும் இரு கண்களெனக் கொண்டவர். தமிழிலக்கணத் தொன்னூலாம் **தொல்காப்பியத்தையும்**, பின்னூலாம் **நன்னூலையும்** ஆழ்ந்தகன்று கற்று ஒப்பாய்வு செய்தவர், தம் கருத்துகளும் வாழ்க்கை முறையும் முரண்படாமல் எண்ணியதைச் சொல்லி, சொல்லியபடி நடைமுறையில் வாழ்ந்து காட்டிய பெருந்தமிழறிஞர்.

**தொல்காப்பியன்** என்ற பெயர் இயற்பெயரே என்று நிறுவியவர், தொல்காப்பியர் காலத்தில் வடக்கே **வேங்கடமலைத்தொடரும்**, தெற்கே **குமரியாறும்** தமிழக எல்லைகளாக அமைந்திருந்தனவென்றும், கடல்கோளுக்குப் பிறகு **குமரிக்கடல்** தென் எல்லை ஆனது என்பதையும், தொல்காப்பியர் இடைச்சங்கக் காலத்தவர், தொல்காப்பியம் இடைச்சங்கக் காலத்தில் இயற்றப்பட்டது என்பதையும், முச்சங்க வரலாற்றை முதன்முதலில் கூறியது இறையனார் களவியல் உரைதான் என்பதையும், தொல்காப்பியம், சங்கச் செய்யுளுக்கும் திருக்குறளுக்கும் நெடுங்காலத்திற்கு முன்னரே இயற்றப்பட்டது என்பதையும், திருமூலர் தம் **திருமந்திரமே** சித்தாந்த சாத்திரம் பதினான்கிற்கும் முதல் நூலாக திகழ்வது என்பதையும், திருமுறை கண்ட சோழன் **முதலாம் இராசராசன்** அல்ல **முதலாம் ஆதித்தனே** திருமுறை கண்ட சோழன் என்பதையும், **வள்ளலாரின் திருவருட்பா** தமிழின் சொல்வளமும், பொருள் நுட்பமும், ஒப்பற்றப் பேரருளின் இன்பமும் நிறைந்தது என்பதையும், சைவ சமயம் ஆரியர்க்கு முற்பட்டது என்பதையும், பழந்தமிழ் நாகரிகத்தின் ஊற்றுக்கண் தமிழும் சைவமும் என்பதையும் தம்

*நூல்களின் வழி உறுதி செய்தவர். தம் ஆய்வுப் புலமையால் பல புதிய செய்திகளையும் தமிழ் உலகுக்கு அளித்தவர்.*

*இவர் எழுதிய நூல்கள் தமிழ்உலகிற்குப் பெருமை சேர்ப்பன. தமிழ் இலக்கிய வரலாற்றிற்கு கூடுதல் வரவாக அமைவன. இவருடைய அறிவுச் செல்வங்கள னைத்தையும் ஆவணப்படுத்தும் நோக்குடன் தொகுத்து தமிழ் உலகிற்கு வைப்பாகக் கொடுத்துள்ளோம். இதனை வெளிக்கொணர எமக்குத் துணையாயிருந்த எம் பதிப்பகப் பணியாளர்கள், நூல்கள் கொடுத்து உதவியவர்கள், கணினி, மெய்ப்பு, அச்சு, நூல் கட்டமைப்பு செய்து இந்நூல்வரிசை செப்பமுடன் வெளிவரத் துணைநின்ற அனைவருக்கும் நன்றி. எம் தமிழ்க் காப்புப் பணிக்கு துணை நிற்க வேண்டுகிறோம்.*

*2010* **பதிப்பகத்தார்**

## தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளை வணங்குவோம்!

*"தமிழாராய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர் களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கிய, இலக்கணப்பெருஞ் செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்து புதிய ஆய்விற்குத் தடம் பதித்தவர்கள் இவர்களே ஆவர்.*

*மேலை நாட்டார் வருகையினால் தோன்றிய அச்சியந்திர வசதிகளும், கல்வி மறுமலர்ச்சியும் புதிய நூலாக்கங்களுக்கு வழி வகுத்தன. ஆறுமுக நாவலர் (1822-1879) சி.வை. தாமோதரம் பிள்ளை (1832-1901), உ.வே. சாமிநாதையர் (1855-1942) ஆகியோர் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளாய் விளங்கித் தமிழுக்கு வளம் சேர்த்தனர்" என்று தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர், இ. சுந்தரமூர்த்தி தனது 'பதிப்பியல் சிந்தனைகள்' எனும் நூலில் பதிவு செய்துள்ளார். இந்நூல் தொகுதிகளை வெளியிடுவதன் மூலம் தமிழ்ப்பதிப்பு முன்னோடிகளை வணங்குவோம்.*

# முதல் பதிப்புரை

**சிவ**நெறியும் செந்தமிழும் வளர இயலும் பணிகளைச் செய்யும் பேரார்வமுடைய நண்பர்கள் திரு. பு. ர. சுவாமி நாதன், M.A., L.T., அவர்களும், ஒரத்தூர் நிலக்கிழார் வித்துவான் திரு சு. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களும் திருவருட்பயன் நிரம்ப அழகிய தேசிகர் உரையுடன் கூடிய இவ்வுரை விளக்கத்தினைச் சைவசித்தாந்த மகாசமாசத்தின் மணிவிழா மலராகத் தமது பொருட்செலவில் வெளியிட்டுதவினார்கள். இந்நூலின் படிகள் முற்றும் செலவாகிய நிலையில் இப்பொழுது இரண்டாம் பதிப்பாக இந்நூல் வெளியிடப் பெறுகின்றது. இதனை நிறைவேற்றிக் கொடுத்தருளிய திருவருளை நெஞ்சார நினைந்து போற்றுகின்றேன்.

இதனை இரண்டாம் பதிப்பாக வெளியிடுதற்கு அன்பு கூர்ந்து இசைவளித்த திரு பு. ர. சுவாமிநாத முதலியார், திரு சு. குஞ்சிதபாதம் பிள்ளை ஆகிய நண்பர்கள் இருவருக்கும் எனது உளமார்ந்த நன்றியினை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூலினை வனப்புற அச்சிட்டுதவிய அண்ணாமலைநகர் சிவகாமியச்சக உரிமையாளர் டாக்டர் கோ. இராஜசுந்தரம் எம்.ஏ., எம்.லிட்., பி எச்.டி. அவர்கட்கு எனது பாராட்டும் நன்றியும் என்றும் உரியவாகும்.

இந்நூலினை வாங்கிப் பயன்கொள்ளுமுகமாக இத்தகைய தமிழ்ப்பணிக்குத் தமிழன்பர்கள் மேலும் மேலும் ஆக்கமும் ஊக்கமும் நல்குவார்கள் என உறுதியாக நம்புகின்றேன்.

*7-9-76*

*142,* கனகசபை நகர் — இங்ஙனம்,

சிதம்பரம் — **க. வெள்ளைவாரணன்**

# திருவருட் பயன்

உ
*சிவமயம்*

# முன்னுரை

**தில்லைவா ழந்தணர்தம் திருமரபில் தோன்றித்**
**தென்றமிழும் வடமொழியும் திறமுறவே பயின்று**
**மல்லல்நெடுந் தமிழாலிம் மாநிலத்தோர் வாழ**
**மறைஞான சம்பந்தர் மலரடிகள் போற்றிச்**
**செல்வமலி சித்தாந்தச் செழும்பொருள்நூல் எட்டும்**
**சீர்பெறவே அருள்செய்த உமாபதியின் திருத்தாள்**
**அல்லலெலாம் அகன்றொழியத் தலைக்கணியாக் கொள்ளும்**
**அன்புடையார் சிந்தையினில் இன்பநிறைந் திடுமே.**

*உமாபதிசிவாசாரியார் அருளிச்செய்த திருவருட்பயன் என்னும் இந்நூல், திருக்குறள்போன்று குறட்பாக்களால் இயன்றது; பத்து அதிகாரங்களையுடைது. ஒவ்வோரதிகாரமும் பத்துக் குறள்களை யுடையன. இதன்கண் நூறு குறட்பாக்கள் உள்ளன.*

*ஆசிரியர் திருவள்ளுவனார், 'அறமுதலாகிய மும்முதற் பொருள்' எனத் தொல்காப்பியர் குறித்தவண்ணம் தம்நூலை மூன்றன்பகுதியாக (முப்பாலாக) இயற்றியுள்ளார். தொல் காப்பியனார்க்கும் திருவள்ளுவர்க்கும் பின்வந்த பெருமக்கள் உறுதிப்பொருள்களுள் மூன்றாவதாகிய இன்பத்தைச் சிற்றின்பம், பேரின்பம் என இரண்டாகப் பகுத்து, முன்னதனை இன்பம் என்றும், பின்னதனை வீடு என்றும் பெயரிட்டு உறுதிப்பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்காகக்கொண்டனர். நான்காவதாகப் பிரித்துரைக்கப்படும் வீடுபேறு, பேரின்பம் என்றபெயரால் இன்பத்துள்ளேயே அடங்கும் என்பது,*

**"சிற்றின்பம் வேண்டி அறனல்ல செய்யாரே**
**மற்றின்பம் வேண்டுபவர்"** (173)

*எனவும்,*

**'இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்**
**துன்பத்துட் டுன்பங் கெடின்'** (369)

*எனவும்வரும் திருக்குறட்பாக்களால் இனிதுவிளங்கும். எனவே ஆசிரியர் திருவள்ளுவர் தாம் கூறிய முப்பாலில், நான்காவதாகப் பகுத்துரைக்கப்படும் வீடுபேற்றின்பமும் அடங்கவே நூல் செய்துள்ளார். இதுபற்றியே, 'முப்பாலில் நாற்பால் மொழிந்தவர்' (திருவள்ளுவர்மாலை-**19**) எனவும், 'அறம்பொருளின்பம் வீடென்னுமந் நான்கின், திறந்தெரிந்து செப்பியதேவு' (ஷெ **8**) எனவும் திருவள்ளுவரைப் புலவர் பெருமக்கள் பலரும் உளமுவந்து போற்றியுள்ளார்கள். திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்னும் மும் முதற் பொருளே விரித்துரைக்கப்படினும் அம்முப்பொருள்களின் வாயிலாக முடிந்த பேரின்ப நிலையாகிய வீடுபேறும் தெளிவிக்கப் பெற்றுளது. இந்நுட்பம்,*

**'அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்**
**திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்'** (50)

*எனவரும் திருவள்ளுவமாலையால் இனிதுபுலனாதல் காணலாம்.*

*உறுதிப் பொருள் நான்கினுள் இறுதிக்கண்ணதாகிய வீடு பேற்றுநிலை, திருக்குறளில் கடவுள் வாழ்த்து முதலிய பாயிரப் பகுதியிலும், துறவற இயலில் அருளுடைமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் ஆகிய அதிகாரங்களிலும் தெளிவாக உணர்த்தப்பெற்றிருத்தலை உணர்ந்த உமாபதி சிவாசாரிய சுவாமிகள், தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அருளிய மெய்வைத்த சொற்பொருள்களை விரித்து விளக்கும் நோக்குடன் வீட்டுநெறிப் பாலாகத் திருவருட் பயன் என்னும் இந்நூலை அருளிச் செய்துள்ளார். திருவள்ளுவர் தெய்வப் புலவர் என்பதும், அவரருளிய திருக்குறள் மெய்யுணர்வினால் உணர்ந்துரைத்த சொற்பொருள் நலங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தமிழ்மறை என்பதும்,*

' தனியறிவை - முன்னந்

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றையவர் என்று - நிலைத்தமிழின்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் உரைத்த
மெய்வைத்த சொல்"

(நெஞ்சுவிடு தூது-கண்ணி 23-25)

எனவரும் உமாபதி சிவாசாரியார் வாய்மொழியால் இனிது விளக்கப்பெற்றிருத்தல் அறியத் தக்கதாகும்.

திருவருட்பயன் என்னும் இந்நூல், திருக்குறளை அடியொற்றி அதன்கண் குறிப்பாகக் கூறப்பெற்றுள்ள மெய்ந்நூற் பொருளின் விளக்கமாக அருளிச் செய்யப்பெற்ற சைவசித்தாந்த நூலென்பது, இதன்கண் உள்ள குறள் வெண்பாக்களின் சொற் பொருளமைப்பாலும், பத்துக் குறள் கொண்டது ஓர் அதிகாரமாக அமைந்த அதிகாரத் தொடர்பாலும், முதல் அதிகாரமாகக் கடவுள் வாழ்த்தை வைத்து "அகர முதல" எனத் திருவள்ளுவர் தொடங்கியது போலவே இந்நூலாசிரியரும் பதிமுது நிலையை இந்நூலின் முதலதிகாரமாக வைத்து.

"அகர வுயிர்போல் அறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து" (திருவருட்பயன்-1)

என இந்நூலைத் தொடங்கியிருத்தலாலும் நன்கு துணியப்படும்.

நூலமைப்பு முறையில் பொதுமறையாகிய திருக்குறள் யாப்பினையும் பொருளமைப்பினையும் அடிப்படையாகக் கொண்டு இந்நூலை இயற்றத் தொடங்கிய உமாபதி சிவாசாரியார், இறைவனது திருவருள் ஞானம் பெற்ற சிவநெறிச் செல்வர்கள் திருவாய் மலர்ந்தருளிய அருள் நூல்களாகிய திருமுறைகளிலே சிறப்பாக விளக்கப்பெறும் திருவருளுண்மையாகிய நற்பொருட் பயன்களைச் சிறப்புடைப் பொருள்களாகக் கொண்டு இதனை இயற்றியுள்ளாராதலின் இந்நூல் திருவருட்பயன் என்னும் பெயர்த்தாயிற்று.

இந்நூலிலுள்ள பத்ததிகாரங்களும் பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருண்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியுநெறி,

உயிர்விளக்கம், இன்புறுநிலை, அஞ்செழுத்தருள் நிலை, அணைந்தோர் தன்மை என இம்முறையில் அமைந்துள்ளன. இவ்வமைப்பு முறையினை அடியொற்றியே இந்நூலாசிரியர் திரட்டியுதவிய திருமுறைத்திரட்டும் பத்ததிகாரங்களாகப் பகுக்கப்பெற்றுள்ளது. இப்பகுப்பு முறையைக் கூர்ந்து நோக்குங்கால் திருவருட்பயனாகிய இச் சித்தாந்த சாத்திரத்திற்கும் இந்நூலாசிரியர் திரட்டியுதவிய தேவார அருள்முறைத்திரட்டுக்கும் நெருங்கிய தொடர்புண்டென்பது இனிது புலனாம். மூவர் தேவாரங்களிலிருந்து திரட்டப்பெற்ற இத்திருமுறைத் திரட்டு. ஆளுடைய பிள்ளையார் முதன்முதல் திருவாய்மலர்ந்தருளிய 'தோடுடையசெவியன்' என்னும் திருப்பாடல் முதலாகத் தொண்ணூற்றொன்பது திருப்பாடல் களையுடையது. இது, சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலியனவாக இவ்வாசிரியர் இயற்றிய சைவசித்தாந்த நூல்களில் விரித்துரைக்கப்படும் சித்தாந்த நுண்பொருளுக்குரிய முன்னூல் சான்றாக இவ்வாசிரியரால் திரட்டப்பெற்றதாகும். இவ்வுண்மை,

**'தேசுமிகும் அருட் பயின்ற சிவப்பிரகாசத்தில்**
**திருந்து பொதுச் சங்கற்ப நிராகரணந் திருத்தி**
**ஆசிலருள் வினாவெண்பாச் சார்பு நூலால்**
**அருள் எளிதிற் குறிகூட அளித்து ஞானப்**
**பூசைதக்க காரணமுன் புகன்றதனிற் புரிந்து**
**புணர்விக்கச் சிவஞான போதசித்தி வழிநூல்**
**மாசில் சதமணிக் கோவை. முன்னூல் சான்று**
**மருவு திருமுறைத் திரட்டு வைத்தனன் மன்னுயிர்க்கே'**

எனவரும் ஞானதீக்கைத் திருவிருத்தத்தால் நன்குபுலனாகும். எனவே உலகப்பொதுமறையாகிய திருக்குறளை அடியொற்றிச் சிவநெறிச் செல்வர்கள் அருளிய திருமுறைகளில் அமைந்த திருவருள் உண்மைகளைச் சிறப்புமுறையில் எடுத்துரைக்கு முகமாகத் திருவருட்பயன் என்னும் இந்நூல் இயற்றப்பெற்றதெனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும்.

திருக்குறளைப் பின்பற்றிக் குறள்வெண்பா யாப்பில் பிற்காலத்தில் தோன்றிய நூல் ஔவையார் குறள் என்பதாகும். இந்நூல், வீட்டுநெறிப்பால், திருவருட்பால், தன்பால் என முப்பாலாய், முப்பத்தொரு அதிகாரங்களையுடையதாய், ஒவ்வோரதிகாரமும்

பத்துக் குறட்பாக்களால் இயன்று முந்நூற்றுப்பத்துக் குறட்பாக்களை யுடையதாகும். சிவப்பிரகாசம் **80**-ஆம் செய்யுளுரையில் இந்நூலிலுள்ள

**"நல்லன நூல்பல கற்கினுங் காண்பரிதே**
**எல்லை யிலாத சிவம்"** **(ஔவை குறள்-206)**

என்ற குறள்வெண்பாவை ஔவையார் வாக்காக மதுரைச் சிவப்பிரகாசர் எடுத்துக்காட்டியுள்ளார். அவர் குறித்த ஔவையார் குறளின் வேறாக அவர்காலத்தில் 'வீட்டுநெறிப்பால்' என்றபெயருடன் மற்றொரு நூலும் வழங்கியதென்பது, சிவப்பிரகாசம் **25**-ஆம் செய்யுளுரையில், 'வீட்டுநெறிப்பாலினும்,

**"ஆணவம் பிண்டி யருமாயை தான்உமி**
**காமியம் மூக்கென்று காண்"**

என்பதும் கண்டு கொள்க" என அவ்வாசிரியர் மேற்கோளாக எடுத்துக் காட்டுதலாலும் இக் குறள்வெண்பா ஔவையார் குறளில் இல்லாமையாலும் நன்கு புலனாம்.

சிதம்பரம் கண்கட்டி மடம் மறைஞான சம்பந்தர் என்பார், சைவ சமயநெறி, மகா சிவராத்திரி கற்பம், சோமவார கற்பம், வருத்தமற உய்யும்வழி, பரமோபதேசம், பதி பசு பாசப் பனுவல், சங்கற்ப நிராகரணம் முதலிய நூல்களைக் குறள் வெண்பாக்களால் இயற்றியுள்ளார். இவ்வாறு குறள் வெண்பாக்களால் இயன்ற நூல்களுள் திருக்குறளை அடுத்து எண்ணத்தக்கவாறு சொற்பொருள் நலங்களால் தெளிவும் செறிவும் பெற்றுச் சிறப்புடன் திகழ்வது, உமாபதி சிவாசாரியார் அருளிய திருவருட்பயன் என்னும் இந்நூலேயாகும். இஃது இந்நூலாசிரியரால் சிவஞானபோதத்தின் சார்பு நூலாக இயற்றப்பட்ட சிவப்பிரகாசத்தினைப் பயிலுதற்கு வாய்ப்பாக அந்நூற் பொருளைச் சுருங்க விளக்கும் சுருக்க நூலாகவும் தெய்வப்புலமைத் திருவள்ளுவர் அருளிய திருக்குறளின் அங்கமாகவும் இயற்றப்பெற்றதென்பது,

**"பவப்பிரகாசப் படரிருள் விழுங்குஞ்**
**சிவப்பிர காசத் திருப்பெயர் மேவி**
**...............................................**
**சைவநூற் சலதி நொய்தினிற் கடத்தும்**

**மரக்கல மதற்கு மாலுமி யொப்ப**
**எழிலீரைந்தும் வழுவறப் புணர்த்தித்**
**தெள்ளுசீர்ப் புலமை வள்ளுவன் தனக்கோர்**
**நற்றுணை யுடைத்தெனக் கற்றவர் களிப்ப**
**அருட் பயன் என்னா வதற்கொரு நாமந்**
**தெருட்படப் புனைந்து செந்தமிழ் யாப்பிற்**
**குறளடி வெள்ளை ஒருநூ றியம்பினன்"**

*என இந்நூலுரையாசிரியர் நிரம்பவழகிய தேசிகர் தமது உரைச்சிறப்புப் பாயிரத்தில் தெளிவாகக் குறிப்பிடுதலால் நன்கு புலனாம்.*

*திருவருட் பயனுக்கு அமைந்த உரைகளில் மிகவும் தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது நிரம்ப அழகிய தேசிகர் உரையாகும். கொன்றைமா நகரம் சண்முகசுந்தர முதலியார் அவர்களுக்குப்பின் மெய்கண்ட நூல்கள் பதினான்கின் உரையினையும் தொகுத்து மெய்கண்ட சாத்திரம் என்ற பெயரால் வண்ணக்களஞ்சியம் காஞ்சி நாகலிங்க முதலியாரவர்கள் கி. பி. **1897**-ஆம் ஆண்டில் வெளிட்டுள்ளார்கள். அப்பதிப்பில் திருவருட் பயனுக்கு வெளியிடப் பெற்றுள்ள உரை நிரம்ப அழகிய தேசிகர் உரையாகும். அதனையடுத்து, கி. பி. **1898** ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மகாவித்துவான் கந்தசாமி முதலியார் மாணாக்கர் கா. சுந்தரமூர்த்தி முதலியார் அவர்கள் வெளியிட்ட சித்தாந்த சாத்திர உரைத் தொகுப்பில் திருவருட் பயனுக்குப் பழைய பதவுரையும் நிரம்ப அழகியர் பொழிப்புரையும் சேர்த்து வெளியிட்டுள்ளார்கள். 'இதற்குப் பதவுரை செய்தவர் நாமம் பிரதிகளில் காணப்படவில்லை. ஆயினும் சித்தாந்த சாத்திரங்களுக்குப் பெரும்பாலும் பதவுரை வேலப்ப பண்டாரம் செய்திருக்கின்றனர்' எனத் தாம் வெளியிட்டுள்ள பதவுரையைப்பற்றி அவர் குறித்துள்ளார். சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாசத்தார் இருமுறை வெளியிட்டுள்ள சித்தாந்த சாத்திர உரைப்பதிப்புக்களில் திருவருட் பயனுக்குச் சிந்தனையுரை வெளியிடப் பெற்றுள்ளது. இவ்வுரை நிரம்ப அழகிய தேசிகர் உரையைத் தழுவிப் பதவுரையாக அமைந்த தாயினும் பொருள் கொள்ளும் நெறியிலும் பாட பேதங்களிலும் அவ்வுரையினின்றும் சிற்சில இடங்களில் வேறுபட்டுள்ளது.*

மேலே குறிப்பிடப்பெற்ற திருவருட்பயன் உரைப்பதிப்புக்களில் உரையாசிரியர்கள் தம் உரைகளிற்கொண்ட பாடம் இவையெனவும், திருவருட்பயனாகிய குறள்வெண்பாக்களின் சொன்முடிபு பொருண்முடிபுகள் இவையெனவும் எளிதின் அறிந்து கொள்ளத்தக்க விளக்கக் குறிப்புக்கள் இடம்பெறவில்லை. இந்நிலையில் நூலின் மூலபாடம் இதுவெனவும் உரையாசிரியர் இன்னபாடத்தைக்கொண்டு இவ்வாறு உரையெழுதியுள்ளார் எனவும், சொன்முடிபு பொருண்முடிபுகள் இவையெனவும், இந்நூலாசிரியர் தாம் கூறும் பொருள் முடிபுகட்கு இவ்வாசிரியரால் ஆதரவாகக் கொள்ளப்பட்ட தொன்னூல் முடிபுகள் இவையெனவும், அதிகார இயைபுடன் அவ்வவ் அதிகாரங்களிலுள்ள குறள்களுக் கிடையேயமைந்த பொருளியைபு இவையெனவும் தமிழ்பயிலும் மாணாக்கர்கள் தெளிவாகவுணர்ந்து கொள்ளத்தக்க வகையில் இந்நூலுரையினை மேற்கோள் ஒப்புமை விளக்கத்துடன் வெளியிட வேண்டும் என்ற விருப்பம் நெடுநாட்களாகவே எனக்கு உண்டு. சைவ சித்தாந்த நூல்களை முறையே பயில எண்ணியவர்கள் முதற்கண் திருவருட்பயனையும் பின்னர்ச் சிவப்பிரகாசத்தையும் பயிலுதல் இன்றியமையாதது என்பர் பெரியோர். முதலிற் பயிலுதற்குரிய சித்தாந்த நூலாகிய இத்திருவருட்பயனுக்கு, இந்நூல் தோன்றிய வரன்முறையினை அடியொற்றித் திருக்குறள், சைவத்திருமுறைகள், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய முன்னூல்களிலிருந்து மேற்கோள் ஒப்புமைகாட்டி, நிரம்ப அழகிய தேசிகர் உரையினையும் அதனோடு வேறுபட்ட இடங்களிற் சிந்தனையுரையையும் விளக்கும் முறையில் புதுவாக ஆராய்ந்து எழுதிய உரைவிளக்கத்துடன் இந்நூலாசிரியர் உமாபதிசிவாசாரியார் திருவருளாலும் அவர் தம் ஞானாசாரியர் மறைஞானசம்பந்தர் திருவருளாலும் இந்நூல் சைவசித்தாந்த மகா சமாச மணிவிழா நன்னாளில் வெளிவருகின்றது. உமாபதி சிவம் திருவடிக்கண் உள்ள ஆர்வம் ஒன்றே காரணமாக விரைந்து எழுதப்பெற்ற இவ்வுரை விளக்கத்தில் எனது அறியாமை காரணமாக நேர்ந்த பிழைகளைப் பொறுத்தருளி இம்முயற்சிக்கு மேன்மேலும் ஊக்கமளித்து உதவும் வண்ணம் செந்தமிழும் சிவநெறியும் வளர்க்கும் நல்லறிஞர்களை அன்புடன் வேண்டுகின்றேன். தமிழ்த் தெய்வத்தின் திருவடிகட்கு என்னாலியன்ற தொண்டுகளைச் செய்ய என்னை உருவாக்கிப்

பணிகொள்ளும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கும், அதனை நிறுவிய பெருங்கொடை வள்ளல் செட்டிநாட்டரசர் அண்ணாமலையரசர் புகழுருவிற்கும் அவர் தம் மைந்தரும் பல்கலைக்கழக இணைவேந்தரும் ஆகிய டாக்டர் இராஜாசர் மு. அ. முத்தைய செட்டியார் அவர்கட்கும் என் உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

இவ்வுரை விளக்கத்தினை எழுதும்படி ஊக்கியதுடன் இதனை வெளியிடும் பொறுப்பினையும் உளமுவந்து ஏற்றுக் கொண்ட என் கெழுதகை நண்பர்கள், சிதம்பரம் இராமசாமிச் செட்டியார் நகர உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு பு. ர. சுவாமிநாதன், M.A , L.T., ஒரத்தூர் நிலக்கிழார் வித்துவான், திரு சு. குஞ்சிதபாதம் பிள்ளை ஆகியவர்கட்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளும் கடமையுடையேன். இந் நூலினைக் குறித்தகாலத்தில் வனப்புற அச்சிட்டுதவிய சிதம்பரம் பாண்டியன் அச்சகத்தாரது பணி பாராட்டுதற்குரியதாகும்.

அன்புள்ள,

**க. வெள்ளைவாரணன்.**

Q Q Q

# உமாபதிசிவாசாரியார் வரலாறு

**சைவ**நன்மக்களால் சந்தானாசிரியர் எனப்போற்றப் பெறும் நால்வருள் நான்காமவராக வைத்துப் போற்றப் பெறுபவர் கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் ஆவர். இவர் வாழ்ந்தகாலம் கி. பி. பதினாலாம் நூற்றாண்டாகும். இக்காலப்பகுதியில் நம் தமிழகத்திற் பிறசமயத்தினரும், பிறமொழியாளருமான மகமதியர்களும் கன்னடமொழியினைத் தாய்மொழியாகக் கொண்ட விசயநகர வேந்தர்களும் தம் தம் மொழிகளை அரசாங்க மொழியாகக்கொண்டு ஆட்சிபுரிந்தமையால் அவர்களது ஆட்சியில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. சமயக் கொள்கைபற்றியும் பொருளுடைமை பற்றியும் தமிழ் மக்கள் பல்வேறு அல்லல்களுக்குட்பட்டு உரிமையிழந்த காலம் இது. இக்காலத்திலேதான் தில்லையில் தில்லை வாழந்தணர் மரபிலே உமாபதிசிவாசாரியார் தோன்றினார்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கத் தோன்றிய இவர், செந்தமிழும், வடமொழியும் நன்குபயின்று தேர்ந்தார். வேதங்களையும் சிவாகமங்களையும் ஓதியுணர்ந்தார். தில்லைமூவாயிரவருள் ஒருவராய்த் தில்லைச்சிற்றம்பலப் பெருமானது திருமேனியினைத் தீண்டிப் பூசிக்கும் நற்பேறுடைய இப்பெருந் தகையார், ஒருநாள் சிவிகையிலமர்ந்து பகல் விளக்குடன் திருக்கோயிலுக்குச் சென்றார். அந்நிலையில் மெய்கண்டதேவர் மாணவராகிய அருணந்தி சிவாசாரியார்க்கு மாணவராகிய மறைஞானசம்பந்தர் என்பார், இவரது பரி பக்குவத்தினை நன்குணர்ந்து ‘பட்ட கட்டையிற் பகற்குருடு ஏகுதல் பாரீர்’ என்று இவர் செவியிற்படுமாறு கூறினார்.

இச்சொல்லைச் செவிமடுத்த இவர், சிவிகையைவிட்டுக் குதித்து விரைந்து ஓடி மறைஞானசம்பந்தர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அவ்வாசிரியர்பால் மெய்யுணர்வு உபதேசம் பெற்றுச் சிவஞானச் செல்வராயினார். பண்டைக் குலத்தை மறந்து தொண்டக்குலத்துள் முதல்வராகிய உமாபதிசிவாசாரியார்,

*தில்லையின் கீழ்த்திசையிலுள்ள கொற்றவன்குடியில் எழுந்தருளி யிருந்து, தம்மையடைந்த மாணாக்கர் பலர்க்கும் சிவ தீக்கைசெய்து சிவஞான உபதேசம் செய்தருளிச் வசை சித்தாந்த நுண்பொருள் களையும், சைவத் திருமுறைகளின் பெருமையினையும் விரித்துரைக்கும் சிறந்த பல நூல்களை இயற்றியருளினார்.*

*சிவஞானச்செல்வராகிய இவரது திருவருட்பெற்றியை யுணர்ந்து பேரன்பினால் இவரது திருமடத்திற்கு நாள்தோறும் விறகு கொணர்ந்து கொடுத்தலை நியமமாகக் கொண்ட பெற்றான் சாம்பான் என்பானது வேண்டுகோட்கிணங்கித் தில்லைச் சிற்றம்பலமுடையானாகிய இறைவன்.*

**'அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்**
**குடியார்க் கெழுதியகைச் சீட்டு-படியின்மிசைப்**
**பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து**
**முத்தி கொடுக்கை முறை'**

*என்ற பாடலை எழுதிக்கொடுத்தருள, அதனைப்பெற்ற உமாபதிசிவாசாரியார், அவ்வண்ணமே அவனுக்குப் பேதமறச் சிவ தீக்கைசெய்து இப்பிறவியிலேயே சிவப்பேறு நல்கினார் என்பதும், அதனை நம்பாமல் ஐயுற்ற சுற்றத்தார் முதலிய மற்றையவர்கள் காணத் தம் திருமடத்தில் அபிடேக நீரிற்செழித்து வளர்ந்திருந்த முள்ளிச்செடிக்கும் அம்முறையிலேயே சிவ தீக்கைசெய்து முத்திகொடுத்தருளினார் என்பதும் இவ்வாசிரியரைக் குறித்து வழங்கும் செவிவழிச் செய்திகளாகும்.*

*இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்; சிவப்பிரகாசம், திருவருட் பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் சித்தாந்த நூல்கள் எட்டும், கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிக்கோவை என்பனவும், வடமொழியில் பவுட்கரம் என்னும் உபாகமத்திற்கு எழுதிய விருத்தியுரையும் ஆகும். இவ்வாசிரியர் சங்கற்ப நிராகரணம் என்னும் நூலினை 'ஏழஞ்சிருநூறெடுத்த ஆயிரம் வாழுநற் சகனம் மருவாநிற்ப' இயற்றியதாக அந்நூலில் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தலால், அந்நூல் சாலிவாகனசகம் 1235-க்குச் சரியான கி.பி. 1313-இல் இயற்றப்பெற்றதென்பது நன்கு விளங்கும்.*

*சிவப்பிரகாசம் முதலாகச் சங்கற்ப நிராகரணம் ஈறாக இவரால் இயற்றப்பெற்ற சித்தாந்தநூல்கள் எட்டினையும் 'சித்தாந்த அஷ்டகம்' என்ற பெயரால் வழங்குதல் மரபு. இங்குச் சொல்லப்பட்ட எட்டு நூல்களுள் உண்மைநெறி விளக்கம் என்பது உமாபதி சிவாசாரியாரால் இயற்றப் பெற்றதன்றென்றும், இந்நூலின் இறுதியில்*

**"எண்ணும் அருள்நூல் எளிதின் அறிவாருக்**
**குண்மை நெறிவிளக்கம் ஓதினான்—வண்ணமில்லாத்**
**தண்காழித் தத்துவனார் தாளே புனைந்தருளும்**
**நண்பாய தத்துவநா தன்"**

*என இந்நூலாசிரியர் பெயர் கூறும் பாயிரச் செய்யுளொன்று சிந்தனையுரையிலும், அரசாங்கக் கையெழுத்துப் பிரதியில் இந்நூல் மூலத்தின் இறுதியிலும் காணப்படுதலாலும், உரையாசிரியர் இந்நூலைத் துகளறுபோதத்தின் வழியமைந்தது எனக் குறித்தலாலும், இந்நூல் சீகாழித் தத்துவநாதர் என்பவரால் இயற்றப்பெற்றதென்றும், இந்நூலாசிரியராகிய தத்துவநாதர் என்பார், துகளறுபோதம் என்னும் நூலை இயற்றிய சீகாழிச் சிற்றம்பல நாடிகளின் மாணாக்கர் என்றும் ஆராய்ச்சியறிஞர் எஸ். அனவரதவிநாயகம் பிள்ளையவர்கள் எழுதியுள்ளார்கள்.*

*சித்தாந்த சாத்திரங்களை முதன்முதல் தொகுத்து உரையுடன் அச்சிட்ட கொ. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் உமாபதிசிவம் அருளியனவாகக் கூறப்படும் எட்டு நூல்களையும் 'சித்தாந்த அஷ்டகம்' என ஒன்றாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார். தருமையாதீனத்து வெள்ளி யம்பலவாணத் தம்பிரான் அவர்கள் தம்காலத்து வழங்கிய தொன்னூல்கள் பலவற்றையும் ஆராய்ந்து எழுதிய முத்தி நிச்சயப் பேருரையில் உண்மைநெறி விளக்கம் என்னும் இந்நூலை உமாபதி சிவாசாரியார் இயற்றிய சிவப்பிரகாசம் முதல் சங்கற்பநிரா கரணம் ஈறாகவுள்ள நூல்களின் நடுவே ஐந்தாவதாகக் குறித்திருப்பதுடன் இவ்வுண்மைநெறி விளக்கத்திற்குச் சீகாழிச் சிற்றம்பல நாடிகள் ஓர் உரை இயற்றியுள்ளார் என்ற செய்தியையும் தெளிவாகக் குறித்துள்ளார்.*

*"ஏக காலத்தின் அறுபத்துமூன்று திருப் பெயருக்குச் சாம்பவதீக்கையான் சத்தியோ நிர்வாணதானம் பண்ணித் தாமும்*

சமாதியிருந்து சிவகதியடையும் பெருமையுடைய சிற்றம்பலநாடிப் பண்டாரத்தான் உரையெழுதப்பட்ட உண்மை நெறி விளக்கம்" (முத்தி நிச்சயப் பேருரை=பக்கம் **257, 258**) என வெள்ளியம் பலவாண முனிவர் இந்நூலைப் பற்றித் தெளிவாகக் குறிப்பிடுதலால் உண்மைநெறி விளக்கமாகிய இந்நூல் சீகாழிச் சிற்றம்பல நாடிகளுக்குக் காலத்தால் முற்பட்ட தொன்னூல் என்பதும், அதனை அவரியற்றிய துகளறுபோதத்தின் வழிநூலெனக் கூறுதல் பிழையென்பதும் நன்கு துணியப்படும்' அன்றியும் அறிஞர் அனவரதவிநாயகம் பிள்ளையவர்களிடத்துள்ள உண்மைநெறி விளக்க உரைப் பிரதியாகிய ஓலைச்சுவடியொன்றில்,

"சிவக்கியான சுவாமிகள் சன்னிதானத்திலே சிற்றம்பல நாடியள் சாஷ்த்திர உரையை அறிக்கை செய்யிறதுக்கு உத்தரவு கட்டளையிட்டது சுளருயருஞூ ஆடிமீ உயஉ சோமவாரம்" என்றொரு குறிப்புள்ளது என அவர்களே குறிப்பிடுதலால், உண்மைநெறி விளக்கத்திற்கு அமைந்த அவ்வுரை சிற்றம்பல நாடிகள் சாத்திரங்களுள் ஒன்றாகிய துகளறுபோதத்தை இணைத்து விளக்கும் முறையில் அமைந்த தென்றும் 'எண்ணும் அருள்நூல்' என்ற பாயிரப் பாடல் உண்மைநெறி விளக்க நூலினைக் குறிப்பதன்றி அந்நூலுக் கமைந்த உரைவிளக்கத்தைக் குறிப்பதென்றும் கொள்ளுதலே நெடுங்காலமாக வழங்கிவரும் நூல்வரலாற்று முறைக்கு ஒத்ததாகும்.

Q Q Q

உ

# நிரம்ப அழகிய தேசிகர்

திருவருட்பயனுக்கு அமைந்த உரைகளுள் நிரம்ப அழகிய தேசிகர் இயற்றியவுரை மிகவும் பழமைவாய்ந்ததாகும். இவ்வுரையினை இயற்றிய நிரம்பவழகிய தேசிகர் என்பவர், வேதாரணியம் என வழங்கும் திருமறைக்காட்டில் சைவ வேளாளர்க்குரிய குருமரபிற்பிறந்தவர். இவர்க்குப் பெற்றோர் இட்டபெயர் நிரம்பவழகியர் என்பதாகும். ‘நித்தமணாளர் நிரம்பவழகியர், சித்தத்திருப்பரால் அன்னே என்னும்’ எனவரும் திருவாசகத் தொடரையுளங்கொண்ட இவருடைய பெற்றோர்கள் இறைவனுக் குரியதாகிய நிரம்ப அழகியர் என்ற பெயரை இவருக்கு இட்டழைத்தார்கள் எனக்கொள்ளுதல் ஏற்புடையதாகும். இவர் தமிழிலும் வட மொழியிலும் வல்லவர். சைவசித்தாந்த நூல்களில் நிரம்பிய தேர்ச்சியுடையவர். சிவஞானசித்தியார் சுபக்கத்திற்கும் திருவருட்பயனுக்கும் இவர் எழுதிய உரைகள் இவரது சைவசித்தாந்த நுட்பத்தையும் தமிழிலும் வடமொழியிலும் இவருக்குள்ள பரந்த நூற்புலமையையும் இனிது விளக்கும் முறையில் அமைந்துள்ளன.

இவர், கருணை ஞானப்பிரகாசரிடம் சிவதீக்கை பெற்றவர் என்றும், மதுரையையடுத்த திருப்பரங்குன்றத்தில் மடம் அமைத்துக்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்திருந்தவரென்றும், திருவிளையாடற்புராணம் இயற்றிய பரஞ்சோதி முனிவரோடு உடன் பயின்றவரென்றும் இவரது வரலாறுணர்ந்தோர் கூறுவர். சைவசித்தாந்த நூலுரையாசிரியருள் ஒருவராகிய இவர், சிறந்த செந்தமிழ்க் காப்பியங்களை இயற்றிய பெரும் புலவராகவும் திகழ்கின்றார். இவரால் இயற்றப்பெற்ற செய்யுள் நூல்கள் சேதுபுராணம், திருப்பரங்கிரிப் புராணம், திருவையாற்றுப்புராணம் என்பனவாகும்.

நிரம்ப அழகியராகிய இப்புலவர்பெருமான். தம் பெயருக் கேற்பச் சொற்பொருள் நயங்களால் நிரம்ப அழகிய செய்யுட்களைப் பாடவல்லவர் என்பது இவர் இயற்றியனவாக மேற்குறித்த புராணங்களைப் பயில்வார்க்கு இனிது விளங்கும். திருப்பரங்கிரிப் புராணத்தில் கற்பக விநாயகரைப் பரவிப் போற்றுவதாக அமைந்தது,

**வஞ்சகத்தி லொன்றானைத் துதிக்கைமிகத் திரண்டானை**
**வணங்கா ருள்ளே**
**அஞ்சரண மூன்றானை மறைசொலுநால் வாயானை**
**யத்த னாகித்**
**துஞ்சவுணர்க் கஞ்சானைச் சென்னியணி யாறானைத்**
**துகளெ ழானைச்**
**செஞ்சொன்மறைக் கெட்டானைப் பரங்கிரிவாழ்**
**கற்பகத்தைச் சிந்தை செய்வாம்.**

எனவரும் பாடலாகும். இதன்கண் ஒன்றுமுதல் எட்டுவரை யிலுள்ள எண்களைச் சிலேடைப் பொருளமைய இந்நூலாசிரியர் அமைத்துள்ள நயம் உணர்ந்து மகிழத் தக்கதாகும். இவர் இலக்கண நுட்பங்களைச் செய்யுளிற் சுவை பெற அமைத்துப் பாடுதலில் வல்லவர். செல்வமுண்டாக்கும் என்னும் கருத்தினை,

**'வெறுங்கையர் என்னும் சொல்லின்**
**மென்மையை வன்மையாக்கும்'**

என்ற தொடரால் அழகாகப் புலப்படுத்தியுள்ளார். வெறுங்கையர் என்ற சொல், தம்கையில் ஒன்றுமில்லாதார் என்ற பொருள்பட வறியாரைக்குறித்து வழங்குவது. இதன்கண் உள்ள மெல்லெழுத்தாகிய ஙகரத்தை அதன் இன வல்லெழுத்தாகிய ககரமாக மாற்றினால், அச்சொல் வெறுக்கையர் என்றாகிச் செல்வம் உடையார் என்ற பொருளைத் தரும்.

இவர் வாழ்ந்த காலம் கி. பி. **16**-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியாகும். இவர் இவற்றிய சிவஞான சித்தியார் உரை முடிவில் குரு வணக்கமாகப் பின்வரும் பாடலொன்று காணப்படுகின்றது :

**"சத்தும் அசத்தும் சதசத்தும் சத்திய மாகிநிற்கும்**
**சித்தன் திருவம்பல வாணன் என்னுள்ளம்**
**[சேர்ந்தனனால்**

**சத்தம் பயின்ற பதிபசு பாசத்தைச் சொல்லும் சத்தம்**
**அத்தம் அதற்குள் அநுபோகம் காண்டற் கரிதல்லவே"**

*இதனால் இவர், திருவம்பலவாணர் என்னும் ஞானாசாரியா ரிடத்து மெய்ந்நூற்பொருள்களைக் கேட்டுணர்ந்தவர் என்பது புலனாம். 'ஞானநெறி காட்டும் நிரம்பவழகன்' என இவர் போற்றப்படுதலால். இவ்வாசிரியர் வழிவழியாக மாணாக்கர் பலர்க்குச் சிவதீக்கை செய்து ஞானநூற் பொருளை அறிவுறுத்தும் ஞானாசாரியர் பரம்பரையில் தோன்றியவர் என்பது நன்கு விளங்கும்.*

Q Q Q

உ

திருச்சிற்றம்பலம்

கொற்றவன்குடி - உமாபதி சிவாசாரியார்

அருளிச்செய்த

# திருவருட் பயன்

## நிரம்ப வழகிய தேசிகர் உரை

### சிறப்புப்பாயிரம்

### காப்பு

நேசத்தடியர் நினைந்துருகி நின்றிட்ட
வாசத் தளைகடக்க மாட்டாது — பாசத்
திருகோட்டு முக்கட் சிவபெருமா னீந்த
ஒருகோட்டு நால்வா யுவா.

### நேரிசையாசிரியப்பா

திருமகள் பிறந்த விரிதிரைப் பாற்கடற்
சூறையங் கடுங்காற் சுழுற்றுபு வெடுப்ப
வலைவ தறவெழுந் தண்டமீப் படர்ந்து
நிலைபெற நின்ற நெடுந்திர ளன்ன
வின்னல்தீர் இன்ப நன்னலஞ் சுரத்தலின்
விளங்கெழிற் றருமந் திரண்டுவீற் றிருந்த
வண்ணமும் போலும் அண்ணல்தன் கயிலை
காவலிற் புரக்குங் கண்ணுதற் கடவுள்
நந்திதாள் சுமந்துவந் தவ்வழித் தோன்றற்
பெண்ணையா றுடுத்த வெண்ணெய் நின்றுருத்த
தொண்டர்க ளிதய முண்டக மலர்த்தும்
விஞ்சைவா ளிரவி மெய்கண்ட தேவன்
மறையகத் தடக்கிய வொருதனிக் குடிலையும்
அருள்நூல் நிறைந்த பொருண்முழு துணர்த்தும்
ஆடி போலக் கூடிய காட்சியிற்

புகல்சிவ ஞான போதநூல் தொகுத்த
அகல்பொருள் தேர்தற் கருமையும் ஆங்கவன்
சம்பிர தாயத் தந்தமில் வான்பொருள்
உலவரப் பெருங்களி யுள்ளம் படைத்த
பண்பின் மேதகைய சண்பையர் கோமான்
தற்பலன் தேராப் பற்பல சமயிகள்
மலைத்தலைக் கொண்மூ மாருத மறைந்தெனத்
தலைத்தலை யிரியத் தானினி துரைத்த
புகழ்சிவ ஞானபோத முள்ளுறையாந்
திகழ்சிவ ஞான சித்தியின் விரிவும்
என்போல் மருண்ட புன்புல மாக்கள்
தீரா விடும்பையுந் திருவுளங் கொண்டுதன்
ஆராக் காதலின் ஆக்கியோ னாகப்
பாவிடங் கொண்டதன் னாவிடங் கொண்டு
பவப்பிர காசப் படரிருள் விழுங்குஞ்
சிவப்பிர காசத் திருப்பெயர் மேவித்
திசைமகள் மருங்கிற் பரிவுடன் வளைத்த
நரலையின் தொகைக்கு நான்மடங் குடைய
சைவநூற் சலதி நொய்தினிற் கடத்தும்
மரக்கல மதற்கு மாலுமி யொப்ப
எழிலீ ரைந்தும் வழுவறப் புணர்த்தித்
தெள்ளு சீர்ப் புலமை வள்ளுவன் றனக்கோர்
நற்றுணை யுடைத்தெனக் கற்றவர் களிப்ப
அருட்பய னென்னா வதற்கொரு நாமந்
தெருட்படப் புனைந்து செந்தமிழ் யாப்பிற்
குறளடி வெள்ளை யொருநூ றியம்பினன்;
மற்றவன் புலியூர் வளநகர்க் கீழ்பாற்
கொற்றவன் குடியிற் குடிகொண் டுறைந்த
பூசர னுறைந்த புதுமதி வேணியுங்
காசறுங் கண்டமுங் கரந்த
தேசிக னுமாபதி சிவனென் பவனே.

*சிறப்புப்பாயிரம் முற்றிற்று.*

ǫ ǫ ǫ

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# திருவருட்பயன்

உமாபதிசிவன் என்னும் பிள்ளைத்திருநாமத்திற்கும் இந்நூற்கும் முதல்வராகிய கொற்றவன்குடி முதலியார், அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினுள் வீட்டுநெறி காட்டுவான், தம்மால் எடுத்துக்கொள்ளப்பட்ட இலக்கியம் இடையூறின்றி யினிது முற்றுதற் பொருட்டு ஆதிக்கண்ணே கரிமுகக் கடவுளை வணக்கஞ்செய்தருளுகின்றார்; 'வழிபாடு தெய்வ வணக்கஞ்செய்து, மங்கலமொழி முதல் வகுத் தெடுத்துக் கொள்ளப்பட்ட இலக்கண இலக்கியம் இடுக்க ணின்றி யினிது முடியும்' என்பாராகலின்.

## காப்பு

**நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்**
**கற்குஞ் சரக்கன்று காண்.**

இதன் பொருள்:- அடைந்தோர்பாற் செய்யும் நல்லருளினையுடைய யானை முகத்தினையும், என்றும் ஒருபடித் தாயிருக்கும் இளமையினையும் பெற்ற கடவுளை, ஒருவர் மன மொழி மெய்களால் வந்திப்பாராயின், அவர்க்கு வேதாகம புராண முதலியகலைகள் யாவும், வருந்திக் கற்கும் பண்டமல்ல என்றவாறு. இதனால், தானே எளிதின் வரும் என்பதாம்.

உலகத்து ஆனைகளெல்லாம் அடைந்தோர்பால் துன்பஞ் செய்தலின், இதனை நற்குஞ்சரக்கன்று என்று அருளிச் செய்தார். யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் என்றறிக. இஃது ஆகுபெயர்.

***விளக்கம் :*** *குஞ்சரம் — யானை; இஃது ஆகுபெயராய் யானை முகத்தினையுடைய பிள்ளையாரை யுணர்த்தியது. கன்று என்பது இளமைபற்றிய மரபுப் பெயர். நற் குஞ்சரக் கன்று என்புழி நன்மை என்றது, எல்லாவுயிர்களையும் இடர்நீக்கி, உய்யக் கொள்ளுந்திறத்தில் மூத்த பிள்ளையார்பால் இயல்பாக நிகழும் அருளாகிய நலத்தினை. நல் என்பதற்கு, நல்ல ஞான சொரூபம் எனப் பொருள் உரைப்பர் சிந்தனையுரையாசிரியர். நண்ணுதல் — மனமொழி மெய்களால் வழிபடுதல். கலை ஞானம் — நூலறிவு. சரக்கு — பிறர்பாற் கேட்டுப் பெறுதற்குரிய அரும்பொருள். புறத்தே ஒருவரையடுத்துக் கற்றறிதற்குரிய பொருள் அன்று. எனவே மூத்த பிள்ளையாரை வழிபட்ட அளவில் அவர் உள்நின்றுணர்த்த அரிய கலைகள் எல்லாம் எளிதின் வந்தடையும் என்பதாம்.*

## க. பதிமுதுநிலை

*அஃதாவது, மேலாகிய இறைவனது இயல்பு.*

**1. அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்**
**நிகரிலிறை நிற்கும் நிறைந்து**

***இ-ள் : அகரமாகியவுயிர், எழுத்துக்களெல்லாவற்றினும் பொருந்தி வேறற நின்றாற் போலத் தனக்கோர் உவமனில்லாத் தலைவன், உலகுயிர் முழுவதும் ஒழிவற நிரம்பி ஞானவுருவாய் அழிவின்றி நிலைபெறும் என்க.***

***அகரம், தானே தனித்தும் ஏனை உயிருடம்புகளெல்லாம் வேறின்றிப் புணர்ந்தும் நிற்றலானும், அங்ஙனம் புணர்ந்த வழியும் தன்னுருவு தோன்றாதாகலானும், முதற்கண் வைக்கப்படுதலானும், விகாரமின்றி நாதமாத்திரையாய் இயல்பாற் பிறத்தலானும் இறைவற்கு உவமையாயிற்று, இவ்வொப்புவமையாற் சடமாகிய ஒலிவடிவன்று என்பதற்கு அறிவாகி என்றும், அகரம்போல ஒருகாற்புணர்ந்து நீங்கா தென்பதற்கு நிறைந்தென்றும், அவ்வகர முதலிய எழுத்துக்களும் உட்படுதற்கு எங்குமென்றும், மாணாக்கர்க்கு அறிவுறுத்தற் பொருட்டு உவமனொடு புணர்த்தினும் அன்னது அன்றென்பதற்கு நிகரில் என்றும் கூறியருளினார். 'அக்கரங்கள் தோறுஞ் சென்றிடும் அகரம்போல நின்றனன் சிவனுஞ் சேர்ந்தே' என்றருளிச் செய்தவாறு காண்க.***

**இதனால், இறைவனது உண்மையும், அவன் வேறற நின்றமையும் கூறப்பட்டன.**

விளக்கம்:- பதிமுதுநிலை என்னும் இவ்வதிகாரம், இறைவனது அநாதி முறைமையான பழமையினை யுணர்த்துவது பதி - இறைவன். முதுநிலை - முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ச் சொல்லிறந்து நின்ற தொன்மை நிலை. இவ்வதிகாரம் திருக்குறட் கடவுள் வாழ்த்தினை அடியொற்றி யமைந்ததாகும்.

இவ்வுலக நிகழ்ச்சியைக் கூர்ந்து நோக்குங்கால், இவ்வுலகம் ஓர் ஒழுங்கு நிலையில் நின்று செயற்படுதல் இனிது புலனாம். இத்தகைய நியதியொடு பொருந்திய செயற்பாட்டுக்கு நிமித்த காரணமாய் உடனின்று இயக்கி நிற்கும் பேராற்றல் வாய்ந்த முழுமுதற்பொருள் ஒன்று இருத்தல் வேண்டும் என்பது அறிஞரனைவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும். இங்ஙனம் எல்லார்க்கும் புலனாகும் இவ்வுலக நிகழ்ச்சியினை அடிப்படையாகக் கொண்டே, காணப்படாது உயிர்க்குயிராய் உடனின்றியக்கியருளும் முழுமுதற் பொருளாகிய கடவுளது உண்மையினை உணர்த்தக்கருதிய திருவள்ளுவர்,

**'அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே யுலகு'** **(1)**

என அருளிச் செய்தார். "எழுத்துக்களெல்லாம் தம்மை உடனின்று செலுத்தும் அகரவொலியினைத் தமக்கு முதலாக வுடையன; அதுபோல, உலகமும் தன்னை உடனின்று இயக்கி நிற்கும் ஆதிபகவனாகிய இறைவனைத் தனக்கு முதலாக உடையது" என்பது இதன் பொருள். இங்கு 'உலகு' என்றது, உடம்பொடு காணப்படும் உயிர்த் தொகுதியினை. ஓர் வரையறையுடன் காணப்படும் இவ்வுலக நிகழ்ச்சியாகிய காரியத்தினைக்கொண்டு இதற்கு நிமித்த காரணமாகிய முதற் பொருள் ஒன்றுண்டு எனத் துணிய வேண்டியிருத்தலால், 'உலகு ஆதிபகவனை முதலாக உடையது, என உலகின்மேல் வைத்துக் கூறினார். ஆயினும், தனக்கு முதல்வனாக ஆதி பகவனைத் தேர்ந்துகொள்ளும் உணர்வுரிமையும் உடைமைத் தன்மையும் உலகிற்கு இன்மையால், 'உலகிற்கு

முதல்வன் ஆதிபகவன்' என்பதே இத் திருக்குறளின் கருத்தாகக் கொள்ளுதல் வேண்டும் என விளக்கம் கூறுவர் பரிமேலழகர்.

ஆசிரியர் தொல்காப்பியனாரும்,

**'எழுத்தெனப்படுப, அகரமுதல'** **(நூன்மரபு-1)**

என்றும்,

**'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்'**

**(மொழிமரபு-13)**

என்றும் வரும் நூற்பாக்களில், எழுத்துக்கள் எல்லாவற்றின் இயக்கத்திற்கும் காரணமாய் நிற்கும் அகரம் முதன்மையுடைய தாதலைத் தெளிவாகக் குறித்துள்ளார். "அகரம் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம்மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்ட தாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மை யுடைத்தென்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயாய் நிற்குந் தன்மையும் போல" எனவும், "இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற்போல, அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையேயாய் நிற்கும் என்பது சான்றோர்க் கெல்லாம் ஒப்பமுடிந்தது. 'அகரமுதல' என்னுங் குறளான் 'அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம்; அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகம்' என வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் 'எழுத்துக்களில் அகர மாகின்றேன் யானே' எனக் கூறியவாற்றானும் பிறநூல்களானும் உணர்க" எனவும் தொல்காப்பிய முதற் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் அகரத்தைப்பற்றிக் கூறிய கருத்துக்கள், திருக்குறள் முதலதிகாரத்தின் முதற்குறளின் விளக்கமாக அமைந்திருத்தல் காணலாம்.

இத்திருக்குறட் பொருளை,

**"அகரமுதலானை அணியாப்பனூரானை"** **(1-88-5)**

எனத் திருஞானசம்பந்தரும்,

**"ஆனத்தின் முன்னெழுத்தாய் நின்றார்போலும்"** **(6-28-1)**

*எனத் திருநாவுக்கரசரும்,*

**"அகரமுதலின் எழுத்தாகி நின்றாய்"** **(7-1-7)**

*எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்,*

**"ஆருமறியார் அகாரமவனென்று"** **(திருமந்திரம்-1751)**

*எனவும்,*

**"அகரமுதலாய் அனைத்துமாய் நிற்கும்"** **(ஷை-1753)**

*எனவும் திருமூலநாயனாரும் பொன்னேபோல் போற்றியுள்ளமை காணலாம்.*

*'வேதத்துள், அத்துவிதம் என்றதுமன்றி, ஏகம் எனவும் ஒற்றுமைப்பட ஓதுதலால், அதற்கு மாறாக உயிர்கள் பல என்றும் இறைவன் அவற்றுடன் ஒன்றி நிற்கின்றார் என்றும் வேறுபடக் கூறுவதென்னை?" என்னும் தடையினை நிகழ்த்திக் கொண்டு அதற்கு விடைகூறும் நிலையில்,*

**'ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றேபதி பசுவாம்**
**ஒன்றென்ற நீ பாசத்தோடுள காண்-ஒன்றின்றால்**
**அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்**
**இக்கிரமத் தென்னும் இருக்கு'**

*என மெய்கண்டதேவரும்,*

**'ஒன்றென மறைகளெல்லாம் உரைத்திட உயிர்கள் ஒன்றி**
**நின்றனன் என்று பன்மை நிகழ்த்துவதென்னை யென்னின்**
**அன்றவை பதிதான் ஒன்றென்றறையும் அக்கரங்கள்தோறும்**
**சென்றிடும் அகரம்போல் நின்றனன் சிவனும் சேர்ந்தே'**

*என அருணந்திசிவனாரும் கூறும் விளக்கங்கள், இத்திருக்குறட் பொருளை அடியொற்றி அமைந்தனவாகும்.*

*'அகரமுதல எழுத்தெல்லாம்' என்னும் திருக்குறளையும் அதனையடியொற்றி யமைந்தனவாக இங்கெடுத்துக்காட்டிய சாத்திர தோத்திரங்களையும் தழுவியமைந்தது, இத்திருவருட் பயனின் முதற்குறளாகும். அகரம் நாத மாத்திரையான் இயற்கைத்*

தோற்றமுடைத்தாய் நிறைந்து முதன்மையுற்று நிற்ப, ஏனை எழுத்துக்களெல்லாம் அவ் அகரத்தின் இயக்கத்தான் விகார முயற்சியிற்றோன்றி அகரத்தால் வியாபிக்கப்பட்டுப் பரதந்திரமுடை யனவாய் நிலவுதல்போல, ஆதிபகவனாகிய இறைவன் இயற்கையுணர்வினானே முற்றுமுணர்ந்து யாண்டும் நிறைந்து நின்று முழுமுதல்வனாய் விளங்கி நிற்ப, உலகனைத்தும் அவனது ஆணையான் வியாபிக்கப்பட்டுப் பரதந்திரமுற்று வினைக்கீடாக உலகு உடல் கருவி நுகர்வினைப் பெற்று நிலவாநின்றன என்பது கருத்து. முதலாய் என்னும் உவமையடை பொருளினும், நிறைந்து என்னும் பொருளடை உவமையினும் கூட்டியுரைத்தற்குரியன. இங்ஙனம் எழுத்துக்களெல்லாவற்றினும் நிறைந்து அவைதமக்கு முதலாய் நிற்கும் பொதுவியல்பு பற்றி ஆதிபகவனாகிய இறைவனை அகரத்தோடு ஒப்பித்தருளினும் அப்பரம்பொருள், அறிவே உருவாய் யாங்கணும் நீக்கமற நிறைந்து எல்லாப்பொருட்கும் ஆதாரமாய் நிற்கும் முழுமுதல்வனும் உடையானும் ஆதலால், உண்மையான் நோக்கும்வழி அவன் தன் உடைப்பொருளாகிய பசு பாசங்களுள் ஒன்றனோடும் உவமிக்கப்படான் என்பதே தெய்வப் புலவராகிய நாயனாருக்குக் கருத்தென்பது அறிவுறுத்துவார். 'அறிவாகி எங்கும் நிகரிலிறை நிற்கும் நிறைந்து' என்றார். 'அகரவுயிர்போல்' என்பது, 'அகரமுதல' என்னும் முதற்குறளையும், 'அறிவாகி' என்பது 'வாலறிவன்' என்னும் இரண்டாங்குறளின் தொடரையும், 'நிகரிலிறை' என்பது 'தனக்குவமையில்லாதான்' (திருக்குறள்-**7**) என்னும் தொடரையும், 'எங்கும் நிறைந்து நிற்கும்' என்பது 'இறைவன்' (திருக்குறள்-**5,10**) என்னும் பெயர்ப்பொருளையும் விளக்கும் முறையில் அமைந்திருத்தல் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

எழுத்துக்கள் உயிர்,மெய் என இருதிறத்தனவாய் அகரமுதல ஆதல்போன்று, உலகமும் உணர்வுடைய உயிர்கள், உணர்வில்லாத ஏனைய உயிரல்பொருள்கள் என இருதிறத்தினதாய் ஆதிபகவனை முதல்வனாகவுடையது என்றவாறு. உயிரெழுத்து சீவான்மாவுக்கும், மெய்யெழுத்து தத்துவப் பிரபஞ்சத்திற்கும், அகரம் ஆதிபகவனாகிய இறைவனுக்கும் உவமை. இம்முதற்குறளால் சிவனுக்குத் தன்னியல் பாகிய சொரூபவிலக்கணம் இதுவெனவுணர்த்தினாராயிற்று.

*இவ்வாறு இறைவன் உயிர்களின் மனமொழி மெய்களுக்கு எட்டாத நிலையில் அறிவே வடிவாய் அப்பாற்பட்டு நிற்பானாயின், உயிர்கள் அவனை வழிபட்டு மலமாக நீங்கி வீடுபெறுவது எவ்வாறு என ஐயுற்ற மாணாக்கர்க்கு ஐயநீங்க அறிவுறுதத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**2. தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி**
**பின்னமிலான் எங்கள் பிரான்.**

***இ-ள்:* வாக்கு மனங்கட்கு எட்டாத தனது விமல ஆனந்த வீட்டின் எல்லையை நிலைபெற்ற ஆன்மாக்கள் வந்து பொருந்தும்படி செய்யும் அருளாகிய பராசத்தியுடனே பேதமின்றி ஒன்றி நிற்பான் எம்முடைய இறைவன் என்க.**

***மன்னுயிர்கள் என்றதனால், ஆன்மாக்கள் வினைவயத்தில் உருவுஞ் தொழிலும் வேறுபடுவதன்றி, நிலமுதல் நாதமீறாகிய தத்துவங்கள்போலப் பிறந்திறப்பன அல்லவாம்.***

***இதனால், அவன் ஓர் சத்தியோடும் கூடிநிற்பன் என்பதூஉம், அது, கருணைவடிவிற்றென்பதூஉம் கூறப்பட்டன.***

***விளக்கம் :*** *இது, மேற்குறித்தவாறு அருவமும் அல்லாமல் உருவமும் அல்லாமல் இருக்கிற இறைவன், தன்னிற்பிரிவிலா அருளாகிய சத்தியால் ஐந்தொழில் நிகழ்த்தி மன்னுயிர்கட்கு அருள் வழங்குமாறு உணர்த்துகின்றது. தன்னிலைமையாவது, மாற்ற மனங்கழிய நின்ற இறைவனாகிய தனது ஈறிலாப் பேரின்ப நிலையாகிய வீடுபேறு. உயிர்கள் என்றும் அழிவில்லாதன என்பார், மன்னுயிர்கள் என்றார். மன்னுதல்-நிலைபெறுதல். மன்னுயிர்கள் தன்னிலைமை சாரச் சத்தி தரும் எனவும், (அந்தச்) சத்தியொடு பின்னமிலான் எங்கள் பிரான் எனவும் இரு தொடராக இயையும். இடைநின்ற சத்தி என்னும் சொல் முன்னும் பின்னும் சென்றியைதலின், இது தாப்பிசைப் பொருள்கோள். பின்னமிலான்-வேறுபடப் பிரிதலில்லாதான். இறைவனை ஆதிபகவன் என்ற பெயரால் திருவள்ளுவர் குறித்துள்ளார். ஆதிபகவன் என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர் பரிமேலழகர். அவர் கருத்துப்படி இத்தொடர் ஆதியாய பகவன் என விரியும்; முதற்கடவுள் என்பது இதன்பொருளாகும். இனி, ஆதிபகவன் என்ற தொடர்க்கு*

ஆதிசத்தியொடு கூடிப்பிரிவின்றியுள்ளானாகிய சிவன் எனச் சிவநெறிச்செல்வர் பொருள்கொள்வர். 'அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன், ஒன்றினுந் தோய்வின்றித் தானே சொயம்பிரகாசமாய் நிற்குந் தன்னுண்மையிற் 'சிவம்' எனவும், உலகெலாமாகி வேறாய் உடனுமாய் இவ்வாறு உயிர்களின்வழி நிற்குந் தன்மையிற் 'சத்தி' எனவும் தாதான்மியத்தால் இருதிறப்பட்டு உலகினை இயக்கி நிற்றல் பற்றி" இறைவனை ஆதிபகவன் என்ற பெயரால் திருவள்ளுவர் குறித்துள்ளார் எனக்கொள்ளுதல் பொருந்தும்.

**'சத்தியுள் ஆதியோர் தையல் பங்கன்' (1-115-4)**

எனவரும் திருஞானசம்பந்தர் தேவாரத்தொடர் திருவள்ளுவர் கூறிய 'ஆதிபகவன்' என்ற திருப்பெயர்க்குரிய விளக்கமாக அமைந்திருத்தல் இக்கருத்தினை வலியுறுத்துதல் காணலாம். 'சத்தி பின்னமிலான் எங்கள்பிரான்' என்னும் இத்திருவருட் பயனும் 'ஆதிபகவன்' என்னும் திருக்குறள் தொடரின் விளக்கமாக அமைந்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணர்தற்பாலதாகும். இறைவன், சத்தியுஞ் சிவமுமாய்ப் பிரிவற நின்றே உலகினைப் படைத்துக் காத்து மறைத்து அழித்து அருள்புரிகின்றான் என்பது,

**'தன்னிற் பிரிவிலா எங்கோமான்' (திருவெம்பாவை)**

எனவும்,

**'எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்'**
**(சிவஞானசித்தியார் .சுபக் 165)**

எனவும்,

**'சிவனெனும் பொருளும் ஆதிசத்தியொடுசேரின்**
**எத்தொழிலும் வல்லதாம்' (சௌந்தரியலகரி)**

எனவும் வரும் ஆன்றோ ருரைகளால் இனிதுணரப்படும்.

இங்ஙனம் அம்மையப்பனாய் நின்று அருள்புரியும் இறைவ னொருவனையன்றியும் உயிர்கட்குத் துணைசெய்வார் வேறு கடவுளரும் உளரோ என ஐயுற்ற மாணாக்கர்க்கு, அவனையொப்பார் ஒருவருமிலர் எனவும், அவ்விறைவன் தன்னையொப்பாரையில்லாத் தலைமகன் எனவும் அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

## 3. பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மை யான்.

*இ-ள்: எவ்விடத்தும் உளதாய நிறைவினானும், நேர்மையினானும், மிகுந்த கருணையினானும், ஒருத்தராற் பெறுதற்கு அருமையினானும் ஆய இந்நான்கினும் தனக்கோர் ஒப்புவமை யில்லாதான் முன்னம் கிளந்த எம்மிறைவன் என்க.*

*இவ்வாற்றான் தனக்கு உவமன் இல்லானாகவே மற்றனைத் தியல்பினானும் ஒப்பிலனாதல் உய்த்துணர்க. "அண்டப்பகுதியி னுண்டைப் பிறக்கம், அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி, ஒன்றனுக்கொன்று நின்றெழில்பகரின், நூற்றொருகோடியின் மேற்படவிரிந்தன, இன்னுழைகதிரின் துன்னணுப்புரையச் சிறியவாகப் பெரியோன்" எனவும், 'பெருமைக்கு அண்டம் அணுந்தார அணு அண்டத்து நின்றுநுணங்கிய தண்டாச் சீர்த்தி' எனவும் அருளிச் செய்தவாறு காண்க. குவ்வுருபு மூன்றாம் வேற்றுமைப் பொருள் தந்தது; "யாதனுருபிற் கூறிற்றாயினும், பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்" (தொல்-வேற்றுமை மயங்கியல் 23) என்பது இலக்கண மாகலின்.*

*இதனால், இறைவனது உயர்வு கூறப்பட்டது.*

*விளக்கம்:* இஃது, ஒருவாற்றானும் தனக்கு ஒப்பில்லாதவன் இறைவன் என்பது உணர்த்துகின்றது.

மிகப்பெரிய அண்டங்கள் யாவும் தன்வியாபகத்துள் அடங்கத் தான் அவையெல்லாவற்றையும் கடந்து மேலாக விரிந்து நிற்கும் பெருமையினாலும், மிகமிகச்சிறிய அணுத்தோறும் ஊடுருவி யாண்டும் நீக்கமறக் கலந்துநிற்கும் நுண்மையினாலும், உயிர்தோறும் உயிர்க்குயிராய்நின்று அருள்சுரக்கும் பெருங்கருணைத் திறத்தினாலும், உயிர்களின் முயற்சியாற் சென்றடைய முடியாத திருவாகிய வீடுபேற்றின்பத்தினை உயிர்களின் அறிவெல்லைக்கு அப்பாற்பட்டு நின்று வழங்கும் அருமைத்திறத்தினாலும் தன்னை ஒப்பார் ஒருவரும் இல்லாத தனிமுதல்வன் இறைவன் என்றவாறு.

தன்னை ஒப்பார் எவரும் இல்லாதவன் எனவே தன்னின் மிக்கார் ஒருவரும் இல்லாதவன் என்பது தானே விளங்கும். இது,

**'தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்ற லரிது' (கடவுள் வாழ்த்து-7)**

*எனவரும் திருக்குறளுக்கு விளக்கவுரைபோன்று அமைந்திருத்தல் காணலாம். ஒரு பொருட்குக்கூறும் உவமையினை, ஒத்தது, உயர்ந்தது என இருவகையாகப் பகுத்து, ஒத்தலை ஒப்பு எனவும், உயர்ந்ததனை உவமன் எனவும் வழங்குவர் சான்றோர். அம் முறையில் இறைவனுக்கு ஒப்புக்கூறுங்கால் அவனுக்கு உயர்ந்தாரு மில்லை ஒப்பாருமில்லை என்பதனை திருமுறையாசிரியர்கள் இனிது விளக்கியுள்ளார்கள்.*

**'தன்னொப்பாரில்லாத் தூயவன்' (1-113-2)**

**'தன்னேர்பிறரில்லானை' (2-62-3)**

*என ஆளுடையபிள்ளையாரும்,*

**'தன்னொப்பாரில்லாதானை' (6-46-2)**

**'மற்றாருந்தன்னொப்பாரில்லாதானை' (6-1-2)**

**'தன்னொப்பில்லாத் தில்லை நடம்பயிலுந் தலைவன் தன்னை'**

**'ஒப்புடையனல்லன் ஒருவமனில்லை' (6-97-10) (6-33-6)**

*என ஆளுடைய அரசரும் இத்திருக்குறட் பொருளை யெடுத் தாண்டுள்ளமை இங்கு ஒப்புநோக்கத் தக்கதாகும்.*

*'பேரருட்கும் ஒப்பின்மையான்' எனவே 'அறவாழி யந்தணன்' என்ற திருக்குறளில் அந்தணன் என்ற பெயராற் குறிக்கப்பட்ட பேரருளுடைமையும் புலப்படுத்தப்பட்டிருத்தல் அறிந்து மகிழத்தக்க தாம்.*

*இறைவன், படைத்தளித்தழிக்கும் மூவருள் ஒருவனால் இணைத்துப்பேசும் முறையுண்மையால், அவனை ஒப்பின்மையான் என முதன்மை கூறுதல் பொருந்துமோ என ஐயுற்ற மாணாக்கர்க்கு ஐயமறுப்பதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**4. ஆக்கி எவையும் அளித்தா சுடனடங்கப்**
**போக்குமவன் போகாப் புகல்.**

***இ—ள்:*** ***இறையனாகிய அக்கடவுள், ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட உலகங்களெல்லாவற்றினையும் படைத்து நிறுத்தி இச்சா ஞானக் கிரியைகள் உணராத வண்ணம் ஆன்மாக்கள் எல்லாம் மூலமலத்துடனே அடங்கி யிருக்கும்படி அழித்தலைச் செய்யுந்தான் எஞ்ஞான்று நீங்காததோர் புகலிடமாயிருக்கும் என்க.***

***ஆசுடன் அடங்க என்றதனால், புனருற்பத்தி யுண்டென்பது கூறியவாறாயிற்று. "உயிரவை யொடுங்கிப் பின்னும் உதிப்பதென் அரன்பாலென்னிற் - செயிருறு மலத்தினாகும்" (சித்தியார் 52) என்றருளிச் செய்தவாறு காண்க.***

***இதனால் அவனொருவனே முத்தொழிற்கும் உரியவன் என்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *உலகைப் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முத்தொழிற்கும் உரியவன், மகா சங்காரகாலமாகிய ஊழி முடிவில் உலகங்களெல்லாவற்றையும் தன்கண் ஒடுக்க வல்ல இறைவன் ஒருவனே என்பது உணர்த்துகின்றது.*

*எவையும் ஆக்கி அளித்து அடங்கப் போக்குமவன் போகாப் புகல் ஆம் என்க. எவையும்-அவன் அவள் அது எனப் பகுத்துரைக்கப் படும் உயிர்த்தொகுதிகள் எல்லாவற்றையும். ஆக்குதல்-உயிர்கட்கு ஆணவமலம் நீங்குகைப் பொருட்டாக உடல், கருவி, உலகு, நுகர்பொருள்களைப் படைத்தல். அளித்தல் உயிர்கட்குக் கன்மமலம் நீங்குதற் பொருட்டாக வினைப் பயனாகிய போகங்களை நுகரும்படி உயிர்களை உடம்புடன் நிறுத்திக் காத்தல். போக்குதல்-கன்மத்தினால் அலைப்புண்ணும் உயிர்களை இளைப்பாற்றுதற் பொருட்டு அவைபெற்ற உடல் கருவி உலகு நுகர்பொருள்களாய மாயேயங்களை அழித்து மாற்றுதல். ஆசு - குற்றம்; என்றது எல்லாக் குற்றங்கட்கும் மூலமான ஆணவமலமாகிய மாசினை. அடங்க - ஒடுங்க. போக்கும் அவன் - போக்குதலாகிய அந்தத்தைச் செய்யும் மகா சங்காரகாரணனாகிய அச்சிவபெருமான். போகா - நீங்காத. புகல் - புகலிடம்; பற்றுக் கோடு. இறைவன் செய்யும் முத்தொழில்களுள் முதலிரண்டனையும் 'ஆக்கி அளித்து' என எச்சப்படக் கூறி, மூன்றாவதாகிய அழித்தலை முதல்வனாகிய*

அவனொருவனுக்கேயுரியதாக அவனொடு புணர்த்திப் "போக்குமவன்" என்றது,

**" அவனவ ளதுவெனும் அவைமூ வினைமையின்**
**தோற்றிய திதியே யொடுங்கிமலத் துளதாம்**
**அந்தம் ஆதி யென்மனார் புலவர்"**

என வரும் சிவஞானபோத முதற் சூத்திரப் பொருளை உளங் கொண்டு கூறியதாகும். முதனூலாசிரியராகிய மெய்கண்டார் 'அவன் அவள் அது எனும் அவை' எனச் சுட்டிய உலகத் தொகுதியினை 'எவையும்' என்ற வினாவினாலும், மூவினைமையின் தோற்றிய திதியே' என்பதனை 'ஆக்கி அளித்து' என்ற தொடராலும், 'ஒடுங்கி மலத்துளதாம்' என்பதனை 'ஆசுடன் அடங்கப் போக்கும்' என்ற தொடராலும், 'அந்தம் ஆதி' என்பதனைப் 'போக்குமவன் போகாப் புகல்' என்ற தொடராலும் இந்நூலாசிரியராகிய உமாபதிதேவ தம்பிரானார் தொகுத்துணர்த்திய நுட்பம் உணர்ந்து போற்றத்தகுவதாகும்.

**'ஆசுடன் அடங்கப் போக்குமவன்'**

என்றது,

**"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"** (5)

என்னும் திருக்குறளையும்,

'போகாப் புகல' என்றது, 'சார்புணர்ந்து' என்னுந் திருக்குறளில மைந்த 'சார்பு' என்னும் சொற்பொருளையும் அடியொற்றியமைந்தன வாகும்.

**"ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்**
**போக்குவாய்"** **(சிவபுராணம்)**

எனவரும் திருவாசகத் தொடரை நினைவுபடுத்தும் முறையில் இத்திருவருட்பயனாகிய குறள் அமைந்திருத்தல் அறிந்து மகிழத் தக்கதாகும்.

இத்தகைய முதல்வன், எவ்வுருவினன் என வினவிய மாணாக்கர்க்கு இன்னவுருவினன் என அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.

**5. அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்**
**உருவம் உடையான் உளன்.**

*இ-ள்: சிவம சக்தி நாதம் விந்து என்னும் அருவடிவு நான்கும், மகேசன் உருத்திரன் மால் அயன் என்னும் உருவடிவு நான்கும் உடையன், அவ்விறைவன் அறிவுடையாரது உள்ளத்தின் தோன்றும் ஞானவுருவினையும் உடையனாகலான்.*

*அருவும் உருவும் உளனெனவே, அருவுருவாகிய சதா சிவ வடிவமென்பது கூற வேண்டாவாயிற்று.*

"சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்தருள் உருத்திரன்தான் மால் அயன் ஒன்றி
னொன்றாய்
பவந்தரும் உருவநாலிங் கருவநான் குபயமொன்றா
நவந்தரு பேதமாக நாதனார் நடிப்பரென்ப'
(சித்தியார்-சுபக். 164)

*என்றும்,*

'குறித்ததொன் றாகமாட்டாக் குறைவிலனாதலானும்'
(மேற்படி-6)

*என்றும் அருளிச் செய்தவாறு காண்க.*

*இதனால் அவன் அருவுருவு கூறப்பட்டன.*

***விளக்கம்:*** *அருவம், உருவம், அருவுருவம் எனப்பகுத் துரைக் கப்படும் மூவகைத்திருமேனிகளையும் உடையான் அவற்றுள் ஒன்றினும் அடங்காது ஞானமே திருமேனியாகக் கொண்டு உயிர்க்குயிராய் விளங்குவோன் இறைவன் என்பது உணர்த்துகின்றது.*

*சிவம் சத்தி நாதம் விந்து என்பன நான்கும் இறைனுக்குரிய அருவத்திருமேனிகள், மகேசுரன், உருத்திரன்மால், அயன் இவைநான்கும் அம்முதல்வனுக்குரிய உருவத் திருமேனிகள். சதாசிவன் என்பது ஒன்றும் அருவுருவத் திருமேனி, இவ்வாறு நவந்தருபேதமாக இறைவனுக்கு மூவகைத் திருமேனிகள் கூறப்படினும், இறைவனை மேற்குறித்த மூவகையுள் ஒன்றினும் அடக்கிக்கூறுதல் இயலாது என்பதாம்.*

*இத்திருவருட்பயனில் 'அறிஞர்க்கு அறிவாம் உருவம் உடையான்' என இறைவனை ஆசிரியர் குறித்தலால் இறைவனுக்கு ஞானமே இயல்பாகிய உருவமாதலை உடம்பொடு புணர்த்துக் கூறினாராயிற்று. இதனால் 'வாலறிவன்' (திருக்குறள் -**2**) என்ற தொடர்ப்பொருளும், 'ஞானத்திரளாய் நின்ற பெருமான்' **(1-69-3)** என்றாங்குவரும் திருமுறையாசிரியர் வாய்மொழிகளும் நன்கு வலியுறுத்தப்பட்டமை காணலாம். உளன்-உள்ளத்தின்கண் உள்ளான்: எனவே 'மலர்மிசை யேகினான்' (திருக்குறள்-**3**) என்ற தொடர்ப் பொருளையும் ஆசிரியர் குறிப்பாற் புலப்படுத்தியதிறம் உணர்ந்து போற்றத்தகுவதாகும்.*

**"உருவமும் உயிருமாகி ஓதியவுலகுக்கெல்லாம்**
**பெருவினை பிறப்பு வீடாய்நின்ற எம்பெருமான்"** (4-63-3)

*எனவும்,*

**'அண்டமா ரிருளூடு கடந்தும்பர்**
**உண்டுபோலுமொ ரொண்சுடர்'** (5-97-2)

*எனவும்,*

**'சுடர்விட்டுளன் எங்கள்சோதி'** (3-54-5)

*எனவும்,*

**'எந்தையாரவர் எவ்வகையார்கொலோ'** (3-54-3)

*எனவும் வரும் திருமுறைத் தொடர்கள் இங்கு ஒப்புநோக்கியுணரத்தக் கனவாகும்.*

*மூவகைத் திருமேனிகளையும் உடையான் எனவே, இத்திரு மேனிகளை இவனுக்குக் கொடுத்தற்கு இவனுக்கு மேலும் ஒரு தலைவன் உளனோ? என ஐயுற்ற மாணாக்கர்க்கு ஐயம் நீங்க அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாம்.*

### 6. பல்லா ருயிருணரும் பான்மையென மேலொருவன் இல்லாதான் எங்கள் இறை.

***இ-ள்:** நிறைந்து நின்ற எண்ணிறந்த ஆன்மாக்களும் அறிவிக்க அறியும் பகுதிபோலத் தனக்கு மேலாய் நின்று உணர்த்துவதோர் கடவுளை யில்லாதான் எம்முடைய இறைவன் என்க.*

**இதனாற் கடவுட்டன்மை ஒருவராற் பெறாது இயல்பாகவுடையன் என்பது கூறப்பட்டது**

***விளக்கம்:*** *தமக்குமேலாய் நின்று முதல்வன் அறிவிக்க அறியுந் தன்மையனவாகிய உயிர்களைப்போன்று தனக்கு மேலாய் நின்று அறிவிக்குந் தலைவனாகத் தன்னின்மிக்கார் ஒருவரும் இல்லாத தனிமுதல்வனே இறைவன் என்பது உணர்த்துகின்றது, பல் ஆர் உயிர் - பலவாய் நிறைந்த உயிர்கள். உணரும் பான்மையாவது தமக்குமேலாய் நின்று இறைவன் அறிவிக்க அறியுந்தன்மை.*

*ஒரு பொருளுக்கு எடுத்துக் காட்டப்படும் உவமை அப்பொருளோடு ஒத்ததாகிய 'ஒப்பு' எனவும், அப்பொருளின் மிக்கதாகிய 'உவமன்' எனவும் இருதிறப்படும். இறைவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்பதனைத் 'தனக்குவமையில்லாதான்' (திருக்குறள்-7) என்ற தொடரால் திருவள்ளுவர் தொகுத்துக் கூறியுள்ளார். அவர் கூறிய இத்தொடர்ப் பொருளை அடியொற்றி இறைவனுக்கு ஒப்பின்மையை இவ்வதிகாரத்து மூன்றாங்குறளாலும், உவமன் இன்மையை ஆறாங்குறளாகிய இதனாலும் இந்நூலாசிரியர் பகுத்துணர்த்தினார். இவற்றால் ஒப்புடையனல்லன். 'ஒருவமனில்லி' என்னுந் திருமுறைத் தொடர்ப் பொருளை விளக்கினாராயிற்று. 'உயிர்களெல்லாம் இறைவன் உடன் நின்றுணர்த்த உணர்ந்து உய்யுந்தன்மையன. இறைவனே தனக்கு மேலாய் உடன் நின்று உணர்த்துவோர் யாருமின்றித் தானே முழுதுணர்ந்து உயிர்கட்கு உணர்த்தி உய்விப்போன் தானொருவனேயாகத் திகழும் தனிமுதல்வன் என்பார், 'பல் ஆருயிர் உணரும் பான்மையென மேல் ஒருவன் இல்லாதான், என்றர்.*

*இங்ஙனம் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி உயிர்கட்கு நலம்புரியும் இறைவன் எவ்விடத்துள்ளான் என வினவிய மாணாக்கர்க்கு விடை கூறுவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**7. ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்.**

***இ-ள்:*** **நீங்காத ஞானமாய் அடியார்கள் உள்ளக் கமலத்தினைவிட்டு ஒருபொழுதும் பிரிதல் செய்யான், தான் தேவர்களால் காண்டற்கரிய மேலோனாயினும் என்க.**

அடியவரெனவும், வானாடரெனவும் பொதுப்படக் கூறினமையால், யாவராயினும் அன்பர்க்கெளியவனாதலும், அன்பரல்லாதவர்க்கு அரியவனாதலும் உடையன் என்பதாம், ‘கனவிலுந்தேவர்க்கு அரியாய் போற்றி, நனவிலும் நாயேற்கருளினை போற்றி’ என்றருளிச்செய்தார், போதவூர் புகழகம் போர்த்த மெய்யன்-வாதவூர் வந்த மறைமுதற்றலைவர்.

இதனால் அவன் அருள்புரியுமாறு கூறப்பட்டது.

*விளக்கம்: –* வானநாடரும் அறிய ஒண்ணாத இறைவன் தான் அருளிய ஒழுக்க நெறியினைக் கடைப்பிடித்தொழுகும் அடியார்கள் உள்ளத்தே அகலாது இடங்கொண் டெழுந் தருளியுள்ளான் என்பது உணர்த்துகின்றது.

ஆனா அறிவு-நீங்காத பேரறிவு. ‘அடியவர்க்கு ஆனா அறிவாய் அகலான்’ எனவே, அன்புடைய அடியார்கள் உள்ளத்திலே நீங்காத பேரறிவாய் அகலாது எழுந்தருளியிருந்து அவர்களது மனம் ஐம்பொறிகளின் வழியே செல்லாவண்ணம் தடுத்துநிறுத்தித் திருத்திப் பணிகொள்ளுதல் அம்முதல்வனது அருளியல்பென்பதும், அவனது திருவருளின் வழியொழுகும் அடியார்கள் உள்ளத்தே இறைவன் பிரிவின்றி நிற்றலால் அவர்கள் ஈறிலாப் பேரின்ப வாழ்விற்கு உரியவராவரென்பதும் புலப்படுத்தியவாறு. இத்தொடர்,

> **“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
> **நெறிநின்றார் நீடுவாழ்வார்” (6)**

எனவரும் திருக்குறட் பொருளைத் தன்னகத்தே கொண்டு நிற்றல் அறியத்தக்கதாகும்.

“அகனமர்ந்த அன்பினராய் அறுபகைசெற்றைம் புலனுமடக்கி ஞானப்புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்”

என ஆளுடையபிள்ளையாரும்,

> **“தொடர்ந்தென் சிந்தைத் தன்னுருவைத் தந்தவனை”**
>
> **“கருதுவா ரிதயத்துக் கமலத்தூறுந் தேனவன்காண்”**

**"காண்டற்கரிய கடவுள் கண்டாய் கருதுவார்க்காற்ற
வெளியான் கண்டாய்"**

**"மனந்திருந்தும் மழபாடி வயிரத்தூணே"**

*என ஆளுடைய அரசரும்,*

**"திருத்தித் திருத்தி வந்தென் சிந்தை இடங்கொள்
கயிலாயா"**

*என ஆளுடைய நம்பியும்,*

**"அடியாருள்ளத் தன்புமீதூரக்
குடியாக்கொண்ட கொள்கையும் சிறப்பும்"**

**"வானநாடரும் அறியொணாத நீ
... ... ... ... ... ... ... ...
என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா"**

*என ஆளுடைய அடிகளும் அருளிய திருமுறைத் தொடர்களையுளங்கொண்டு இறைவனது அருமையில் எளிய அழகினை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது, இத்திருவருட்பயனாகும்.*

*அடியார்கள் உள்ளத்தே அகலாதுறைதல் இறைவனது இயல்பெனின், அம்முதல்வன் ஏனையிடங்களில் நிலையாய்த் தங்குதல் இல்லையோ என ஐயுற்று வினவிய மாணாக்கர்க்கு ஐயம் நீங்க அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**8. எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்குமவன் தானே தனி.**

***இ-ள்:*** ***எல்லாவுலகங்களிடத்தும் அளவிறந்தவுயிர்கள் மாட்டும் நீரிடை நின்ற தழல்போல இரண்டறக் கலந்திருந் தான் ஆயினும் அக்கடவுள் அப்பதங்களிற் றங்காது நீங்கி ஏகனாய் நிற்பன் என்க.***

***ஏகாரம் பிரிநிலை. 'பார்பதம் அண்டமனைத்துமாய்' (திருவாசகம்) என்பதனுள் 'நீருறுதீ' என்றருளிச் செய்தவாறு காண்க. நீருறுதீ என்பது காய்ந்த புனலின்கண் உளதாய வெம்மை.***

***இதனால் யாண்டும் நிரம்பி நிற்பினும் அதிற்றோயான் என்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:-*** *இறைவன் அடியார்கள் உள்ளத்தே அன்பு மீதூரக் குடியாக்கொண்ட கொள்கையனாயினும் எவ்விடத்தும் எல்லாவுயிர்களிலும் நீக்கமறக்கலந்து ஒன்றாய் விளங்குதலே அவனது இறைமைத்தன்மை என்பதும், இங்ஙனம் அம் முதல்வன் கலப்பினால் உலகுயிர்களோடு ஒன்றாய் நிற்பினும் அவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றி அப்பாற்பட்டு வேறாய்த் தனித்து தனக்கு எய்தலின்றி அப்பாற்பட்டு வேறாய்த் தனித்து நிற்றல் அம்முதல்வனது இயல்பென்பதும் உணர்த்துகின்றது.*

*அவன் எங்கும் எவையும் நீர்உறும் எரிபோல் தங்கும் (ஆயினும்) தானே தனி என இயைத்துரைக்க. அவன் - அம்முதல்வன். எங்கும் – சடப்பொருள்கள்தோறும். எவையும் அவன் அவள் அது எனப் பகுத்துரைக்கப்படும் உயிர்த் தொகுதி தோறும். ஏகம் – ஒன்றாதல். நன்றாகக் காய்ச்சப்பட்ட புனலின்கண்ணே தீயின் தன்மையாகிய வெம்மை எங்கும் பரவி ஒன்றாய்க்கலந்து நிற்றல்போல, இறைவனும் உலகுயிர்கள் தோறும் பிரிப்பின்றி ஒன்றாய்க்கலந்துள்ளான் என்பார், 'எங்கும் எவையும் எரியுறு நீர்போல் ஏகம் தங்கும் அவன்' என்றார்.*

*இத்திருவருட்பயன் உரையாசிரியராகிய நிரம்ப அழகிய தேசிகர், 'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் பரந்ததோர் படரொளிப்பரப்பே, நீருறுதீயே' (கோயிற்றிருப் பதிகம்-**7**) எனவரும் திருவாசகப் பொருளை யுளங்கொண்டு 'எரியுறுநீர்போல்' என்பதனை 'நீர் உறும் எரிபோல்' என மாற்றிப் பொருள்கூறிய நயம் உணர்ந்து போற்றத்தக்கதாகும். இனி 'எரியுறுநீர்' என்னும் இத்தொடர்க்கு, 'எரியில்வைத்துக் காய்ச்சப்பட்டமையால் தீயின் தன்மையாகிய வெம்மையினைப்பொருந்திய நீர்' எனப்பொருள் கூறி, காய்ச்சப்பட்ட நீர் தன் தன்மையாகிய தண்மை, தழலின் தன்மையாகிய வெம்மையுள் அடங்கி ஒன்றாதல்போன்று, எல்லாவுலகங்களும் எல்லாவுயிர்களும் இறைவனாகிய தனது வியாபகத்துள் அடங்கி ஒன்றாகத் தான் யாண்டும் நீக்கமறத்தங்கும் அவன்' என உவமையை விரித்துரைத்தலும் பொருந்தும்.*

திருவள்ளுவர் கூறிய 'இறைவன்' என்னும் பெயர்க் காரணத்தை விளக்கும் முறையில் அமைந்தது இத்திருவருட் பயனாகும்.

இறைவன், கலப்பினால் உயிர்களேயாய் அவற்றோடு ஒன்றாய் நிற்றலும், தன்னியல்பால்அவற்றின் வேறாய் நிற்றலும், உயிர்க்குயிராய் நின்று அறிவித்தலால் அவற்றோடு உடனாய் நிற்றலும் என மூவகை நிலைகளையும் ஒருங்குடையான் என்பது, சிவஞானபோதத்தில் 'அவையே தானேயாய்' என வரும் இரண்டாஞ்சூத்திரத்து, 'அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய்' என விரித்துரைக்கப்பட்டது. இத் திருவருட்பயனில், 'எங்கும் எவையும் .....ஏகம்' என்றதனால் ஒன்றாதலையும், 'எரியுறு நீர்போல் தங்கும் அவன்' என்றதனால் உடனாதலையும், தானே தனி' என்றதனால் வேறாதலையும் ஆசிரியர் உய்த்துணரவைத்துள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

முதல்வன் உயிர்களோடு நீக்கமறக்கலந்து உடனாய் நிற்கவும் உயிர்கட்குப் பிறவித்துன்பம் உண்டாவானேன் என வினவிய மாணாக்கர்க்கு விடையிறுப்பதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.

**9. நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன்**
**சலமிலன் பேர்சங் கரன்.**

**இ-ள்: தன் தாளினையடைந்தார்மாட்டு நன்மையினைச் செய்தலும், அதுசெய்யார்மாட்டு அது செய்யாதிருத்தலும் உடையனாயினும், வயிரம் என்பது சிறிதும் இலன்; இன்பத் தினைப்பண்ணும் சங்கரன் என்னும் பெயரினையுடையான் ஆகலான் என்க.**

**வடமொழியில், சம் என்பது சுகம்; கரன் என்பது பண்ணுவான்; இவையிரண்டும் புணர்ந்து சங்கரன் என நின்றது.**

**இதனால் விருப்பு வெறுப்பிலனென்பதூஉம், அவரவர் செய்திக்கொத்த பயனுதவும் நடுவுநிலைமையுடையனென் பதூஉம் கூறப்பட்டன.**

***விளக்கம்:*** *யாவரிடத்தும் விருப்பு வெறுப்பில்லாதவன் இறைவன் என்பது உணர்த்துகின்றது.*

*என்பில்லாத உடம்பை வெயில் தெறுமாறு போன்று அன்பிலாதாரை ஒறுத்துத் திருத்துதல் அறிவுருவினனாகிய முதல்வனது இயல்பென்பார்,'நண்ணார்க்கு நலமிலன்' என்றும், தம்மைப்போன்றே தம் அடியார்களும் இன்புருவினராய்த் திகழும் வண்ணம் பேரருள்வழங்குதல் இன்புருவினனாகிய அவனது அருளின் நீர்மையென்பார், 'பேர் சங்கரன், நண்ணினர்க்கு நல்லன், என்றும், இவ்வாறு தன்னைச் சாராதார்க்குத் துன்பமும் சார்ந்தார்க்கு இன்பமும் விளைத்தலால் இறைவன் விருப்பு வெறுப்பு உடையவனோ என்னில் அம்முதல்வன் வேண்டுதல் வேண்டாமையிலான் என்பார் 'சலமிலன்' என்றும் கூறினார்.*

*இதனால்,*

**'வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்**
**கியாண்டு மிடும்பை யில'** *(திருக்குறள்-**4**)*

*எனவரும் தெய்வப்புலவர் வாய்மொழிக்கு விளக்கங் கூறியவாறு. இறைவனடி சேர்ந்தார்க்கு யாண்டும் பிறவித்துன்பங்கள் உளவாகா எனவே, அவனடி சேராதார் மனக்கவலையுட்பட்டுப் பிறவிக்கடலில் அழுந்தித் துன்புறுவர் என்பதும் அறிவுறுத்தாராயிற்று சலம்-வஞ்சனை; நடுவுநிலையின் வழுவி ஒருபாற் சாய்தல்*

**"சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்**
**நலமிலன் நாடொறும் நல்கு வான்நலம்**
**குலமில ராயினுங் குலத்துக் கேற்பதோர்**
**நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே"** **(4-1-6)**

*எனவரும் திருநாவுக்கரசர் வாய்மொழியும்.*

**"சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல்**
**சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச்-சார்ந்தடியார்**
**தாந்தானாச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்**
**ஆய்ந்தார்முற் செய்வினையும் ஆங்கு"**
**(சிவஞானபோதம், வெண்பா-6)**

எனவரும் மெய்கண்டார் வாய்மொழியும் இத்திருவருட்பய னோடு ஒப்புநோக்கி யுணரத்தக்கனவாகும்.

இங்ஙனம் வேண்டுதல் வேண்டாமையிலானாய் வெளிப் படாதுள்ள இறைவனை விரும்பி வழிபட்டால் எளிவந்து அருள்செய்வானோ என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்து வதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.

**10. உன்னுமுள தைய மிலதுணர்வா யோவாது**
**மன்னுபவந் தீர்க்கும் மருந்து.**

***இ-ள்:-*** ***ஞானமாய்ப் பிரிப்பின்றி நின்று அனாதியே தொடர்ந்துவரும் பிறவிப்பிணியினை அறுத்தற்கு ஓர் மருந்தான தன்மையினையுடையன் அக்கடவுள்; அதற்கு ஓர் ஐயமில்லை. அதனை எஞ்ஞான்றும் இடைவிடாது அன்புடன் நினைப்பீராக என்க.***

***இதனால், பதியினை வழிபட வேண்டுமென்பதும் உறுதிப்பாடுங் கூறப்பட்டன.***

***விளக்கம்:-*** *உயிர்க்குயிராய் நின்றருளும் இறைவன் திருவடியை இடைவிடாது நினைப்பார்க்குப் பிறவியறும் என்பது உணர்த்துகின்றது.*

*'உணர்வாய் ஓவாது மன்னுபவம் தீர்க்கும் மருந்து, உளது; ஐயம் இலது உன்னும்' என இயைத்துப்பொருள் கொள்க. உன்னும் –(இடைவிடாது) நினைப்பீராக. உளது என்றது, என்றும் உள்ள மெய்ப்பொருளாகிய கடவுளை. தோற்றக் கேடுகளின்றி என்றும் உள்ளதாய், தன்பால் ஒன்றும் ஊடுருவிக்கலத்தல் இயலாமையால் தூய்மையுடைய தாய், தனக்கு எத்தகைய விகாரமுமின்றி என்றும் ஒரு பெற்றியதாய் உயிர்களின் உள்ளத்தே அகலாது நிற்றல் இறைவனியல்பு என்பது புலப்பட, அம்முதல்வனை 'உள்ளது' எனக்குறித்தார். ஐயத்தினின்றும் நீங்கித் தெளிந்த மெய்யுணர்வுடைய பெரியோர்க்கே அவனது இயல்பு இனிது விளங்கும் என்பார், 'ஐயம் இலது' என்றார். அன்பினால் தன்னை இடைவிடாது நினைந்து போற்றும் அடியார்கள் உள்ளத்தே அவர்கள் நினைந்த அவ்வுருவாய் விளங்கித்தோன்றி நல்லனவும் தீயனவும் இன்ன இன்ன என*

*அறிவுறுத்தி மனத்தினைத் திருத்தி அவர்தம் அறிவுக்கறிவாய் நீங்காது உடன் நின்று அவர்தம் பிறவிப்பிணியைப் போக்கி வீடுபேற்றின் பத்தினை வழங்கும் அருமருந்தாகத் திகழ்வோன் இறைவனாகிய மெய்ப்பொருள் என்பார், 'உணர்வாய் ஓவாது மன்னுபவம் தீர்க்கும் மருந்து' என அம்முதல்வனைச் சிறப்பித்துப் போற்றினார். 'மந்திரமுந்தந்திரமும் மருந்துமாகித் தீராநோய்தீர்த் தருள வல்லான்' **(6-54-8)** எனவும், 'மருந்தினனே பிறவிப் பிணிப்பட்டு மடங்கினர்க்கே' (திருவாசக-நீத்தல்-**18**) எனவும் வரும் அருள் மொழிகள் இங்கு நினைக்கத்தக்கன. ஓவுதல்-இடையறவுபட நீங்குதல். ஓவாது என்னும் வினையெச்சம் தீர்க்கும் என்னும் வினைகொண்டு முடிந்தது. மன்னுபவம்-அனாதியே தொடர்ந்துவரும் பிறவிப்பிணி. இதனையே 'தீராதநோய்' எனக்குறித்தார் திருநாவுக்கரசர்.*

**'ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு' (திருக்குறள்-357)**

*என்பதனை உளங்கொண்டு, 'உளது' மன்னுபவந் தீர்க்கும் மருந்து உன்னும்' எனவும்,*

**'ஐயத்தினீங்கித் தெளிந்தார்க்கு' (திருக்குறள்-353)**

*என்பதனை எண்ணி 'ஐயம் இலது' எனவும்,*

*மலர்மிசை யேகினான்' (திருக்குறள்-**3**) என்பதனை மனங் கொண்டு 'உணர்வாய் ஓவாது' எனவும், உமாபதிதேவ தம்பிரானார் இத்திருவருட்பயனை அமைத்த திறம் உணர்ந்து மகிழத்தக்கதாகும். இந்நூலின் முதலதிகாரத்துப்பத்தாங்குறளாகிய இது.*

**'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடி சேராதார்'**

*எனவரும் திருக்குறள் முதலதிகாரத்துப் பத்தாவது திருக்குறட் பொருளை நினைவுகூரும் முறையில், இறைவனடியை இடைவிடாது நினைவார்க்குப் பிறவியறுதல் உறுதி என நியமித்துப் பயன் கூறுவதாக அமைந்திருத்தல் கூர்ந்துணரத் தக்கதாகும்.*

## 2. உயிரவைநிலை

*அஃதாவது, பலவாய உயிர்களது முறைமை, இதனைப் பன்மை வாசகப்படுத்திய அதனால் பதி ஒன்றே என்பது தானே கொண்டு கிடந்தது. பதியின் இயல்பு கூறிற்றாகலான், மேலை அதிகாரத்தினோடு இதற்கு இயைபுடைத்து எனக் கொள்க. பசு-உயிர்-சேதனன்- புற்கலன் சீவன்-அணு-வியாபகன்- ஆன்மா என்பன ஒருபொருட்கிளவி.*

**11. பிறந்தநாள் மேலும் பிறக்குநாள் போலுந்
துறந்தோர் துறப்போர் தொகை.**

*இ-ள்: உயிர்கள் தோற்றிய காலத்தினது தொகையும், மேற்றோற்றுங் காலத்தினது தொகையும், இறைவன் திருவடியை அடைந்தாரது தொகையும், மேல் அடைதற் குரியாரது தொகையும் தம்மில் ஒக்கும்.*

*எனவே அளவில என்பதாம். ஈற்றில் நின்ற தொகை, நான்கனோடுங் கூட்டப்பட்டது. இதில் உயிருண்மை யுடைத் தெனக் கூறியது எதனாலென்னில், பொருளுண்மை பெற்றே அதனியல்பு கூற வேண்டும்; பித்திகையுடைத்தாயே சித்திரமெழுத வேண்டுமாறு போல.*

*இதனால், உயிர்களது உண்மையும் மிகுதியும் கூறப் பட்டன.*

*விளக்கம்:* கடவுள் உண்மை கூறிய பதிமுது நிலை என்னும் அதிகாரத்தை அடுத்து உயிர்களது உண்மை கூறுவதாக அமைந்தது, உயிரவைநிலை என்னும் இரண்டாம் அதிகாரமாகும். பதி (இறைவன்) ஒருவனே ஆக உயிர்கள் எண்ணில் ஆகலின் உயிரவை எனப் பன்மைச் சொல்லாற் குறித்தார். அவை என்றது, அவன் அவள் அது என இவ்வாறு அவயவப் பகுப்புடையனவாய்ச் சுட்டப்படும் உயிர்த்தொகுதியினை. 'அவனவளதுவெனும் அவை' என்றார் மெய் கண்டதேவரும்.

இவ்வதிகாரத்தின் முதற்குறள் உயிர்களது உண்மையும் அவை எண்ணில் என்பதும் உணர்த்துகின்றது.

இக்குறளின் ஈற்றிலுள்ள தொகை என்பதனைப் பிறந்த நாள் பிறக்கும்நாள், துறந்தோர், துறப்போர் என்னும் நான்கினோடும் கூட்டி, துறந்தோர் தொகை பிறந்தநாள் தொகை போலும் எனவும், துறப்போர் தொகை மேலும் பிறக்கும் நாள் தொகை போலும் எனவும் நிரனிறைப் பொருள் கொள்க. பிறந்தநாள்-உலகம் தோன்றியது முதற்கொண்டு இதுகாறும் உயிர்கள் பிறவியுட்பட்டுத் தோன்றிய நாட்கள். பிறக்கும் நாள்- இனிமேலும் உயிர்கள் பிறவியுட்பட்டுப் பிறத்தற்கு உளவாகும் நாட்கள். துறந்தோர்-பிறவிப்பிணிப்பினின்றும் விடுபட்டு இருவகைப்பற்றினையும் நீத்து இறைவனடியைத் தலைப்பட்டு இன்புறும் உயிர்கள். மேலும் துறப்போர்-இனிமேலும் இறைவனருளால் பிறவிப்பிணிப்பினின்றும் நீங்கி உய்திபெறுதற்கு உரியவராக இப்பொழுது பாசப்பிணிப்புடன் கூடிப் பிறந்து இறக்கும் நிலையினராயுள்ள உயிர்கள்.

"ஆன்மாக்கள் முன்பு பிறந்தநாளுக்கும் இனிமேல் பிறக்கப் போகிற நாளுக்கும் இத்தனையென்று தொகையில்லாததுபோல, தேகாதிப் பிரபஞ்சத்தைத் துறந்தடைந்த பேர்களுக்கும் இனிமேல் துறந்தடையப் போகிற பேர்களுக்கும் ஓர் அளவில்லை" என இக்குறளுக்குப் பொருளுரைப்பர் சிந்தனை யுரையாசிரியர். எனவே படைப்புக் காலந் தொட்டுப் பலவகைப் பிறப்புக்களிற் பிறந்து இருவகைப் பற்றினையும் துறந்து வீடுபெற்ற உயிர்களையும், இனிமேலும் பிறந்து இருவகைப் பற்றினையுந் துறந்து வீடுபெறுதற்கு உரியவகையிற் பாசப்பிணிப்புடன் கூடியுள்ள ஏனைய உயிர்களையும் இத்துணையர் என அறிந்து கணக்கிட்டுக் கூறுவதென்பது, உலகந் தோன்றியது முதல் எத்தனை நாட்கள் ஆயின. இனிமேல் வரக்கூடிய நாட்கள் எத்தனை என ஆராய்ந்து எண்ணித் தொகை கூற ஒண்ணாதவாறுபோல இயலாததொன்றாம் என்றவாறு எனவே இதுகாறும் வீடு பெற்ற உயிர்களும் இதுவரை வீடுபெறாத பாசப்பிணிப்புடன் கூடிய உயிர்களும் அளவற்றன என அவற்றது மிகுதி கூறியவாறு. உயிர்கள் எண்ணிலவாதல் கூறும் இத்திருவருட் பயன்,

> **"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**
> **திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று"** (22)

என வரும் திருக்குறளை அடியொற்றியமைந்ததாகும், "இந்தவகைப்பற்றினையும் விட்டாரது பெருமையை எண்ணாற்கூறி யறியலுறின் அளவுபடாமையான் இவ்வுலகத்துப் பிறந்திறந்தார் இத்துணையர் என கூறியலுற்றாற்போலும். முடியாதென்பதாம்" என இதற்குப் பொருள் கூறுவர் பரிமேலழகர். இது திருக்குறளின் துறந்தார் என்றது, யான் எனது என்னும் இருவகைப் பற்றினையும் விட்டொழித்து வீடுபேற் றின்பத்தினைப் பெற்ற நல்லுயிர்களை. பெருமை-மிகுதி, வையத்து இறந்தார் என்றது, இப்பிறப்பிற் பற்று நீங்காது மீளவு இவ்வுலகத்திற் பிறந்து வீடுபெறும் நோக்கத்துடன் இவ்வகைப்பற்றும் நீங்கத் துறவினை மேற்கொள்ளவேண்டி பாசப்பிணிப்புடைய உயிர்களை. துறந்தார். வையத்து இறந்தார் எனத் திருவள்ளுவர் பகுத்துரைத்த இருவகையுயிர்களையும் இந்நூலாசிரியராகிய உமாபதிதேவர் துறந்தார் துறப்போர் என முறையே குறித்துள்ளமை இங்குக் கூர்ந்துணரற் பாலதாகும்.

"ஆன்மாக்களை இலக்கத்தினால் அளவுபடுத்தற்கு அஃதென்றது ஏதென்னில் ஒவ்வொருயோனிவர்க்கங்கள்தோறும் உண்டான ஆன்மாக்களை அளவுபடுத்தப்படாதது கொண்டே எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதத்திலுண்டாகிய ஆன்மாக்களையும் அளவுபடுத்தப்படாதபடியாலும், அன்றியும் அவதாரந்தோறும் திருவடியிலே கூடின ஆன்மாக்கள் ஜநநங்களில் வாராதிருக்கவும் பிரபஞ்சம் காரியப்பட்டு வருகிற ஆன்மவர்க்கம் தொலையாதது கொண்டும் அப்படிசொன்னதென அறிக. இதற்குப் பிரமாணம், கோயிற் புராணத்தில், 'எத்தகைய போகங்க ளெவற்றினுக்குங் காரணமாய். வைத்தபடி இடம்போதா வகைநெருங்கு மன்னுயிர்கள்' எனவும், 'கற்பங்கள்தொறும் நடஞ்செய் கழலடைந்தோர் கணிப்பிலரால்' **(22)** எனவும் வருமது கண்டுகொள்க" (சிவப்பிரகாசம்-**19** உரை) என மதுரைச்சிவப்பிரகாசர் கூறும் விளக்கம் இங்கு ஒப்புநோக்கத் தகுவதாகும். **(1)**

உயிர்கள் எண்ணிலவாயின் அவற்றின் இயல்புவிளங்க அவற்றைச் சிலவகையுட்பட அடக்கிக் கூறுதல் இயலுமோ எனவினவிய மாணாக்கர்க்கு அவ்வுயிர்களை மூவகைப்படுத்துணர்த்து வதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

## 12. திரிமலத்தார் ஒன்றதனிற் சென்றார்கள் அன்றி ஒருமலத்தார் ஆயும் உளர்.

***இ-ள்:*** ***ஆணவம், கன்மம், மாயை என்னும் மலங்கள் மூன்றுடையராகியும், இம்மூன்றில் மாயை நீங்கி ஏனைய இரண்டும் உடையராகியும், அவ்விருவகையுமல்லாது ஆணவம் ஒன்றினையும் உடையராகியும், சொல்லப்பட்ட மூன்று திறத்தினையுடையார் அவ் ஆன்மாக்கள் என்க.***

***ஆயும் என்பது மூன்றிடத்தும் கூட்டப்பட்டது. அவர்கள் நிரனிறையிற் சகலர், பிரளையாகலர், விஞ்ஞானகலராம். "உரைதரும் இப்பசுவர்க்கம் உணரின் மூன்றாம். உயரும் விஞ்ஞானகலர் பிரளையாகலர் சகலர்- நிரையின்மலம், மலங்கன்மம், மலங்கன்ம மாயை நிற்கும்" (சிவஞானசித்தி- சுபக் 254) என்று அருளிச்செய்தவாறு காண்க.***

***இதனால், தொடர்பின் விகற்பத்தால் உயிர்கள் மூவகைப் பட்டமை கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *உயிர்கள் மூவகைப்படும் முறைமையினை உணர்த்துகின்றது.*

*ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களும் உடைய உயிர்கள் சகலர் என்றும், அவற்றுள் மாயாமலம் நீங்க ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடைய உயிர்கள் பிரளயாகலர் என்றும், ஆணவமலம் ஒன்றேயுடைய உயிர்கள் விஞ்ஞானாகலர் என்றும் பெயர் கூறப்படுவர். திரிமலத்தார் மும்மலமுடைய சகலர்கள். அதனில் ஒன்று தீர்ந்தோர்-மும்மலத்துள் மாயாமலம் ஒன்று நீங்க இருமலமுடைய பிரளயாகலர். ஒருமலத்தார்-ஆணவமலம் ஒன்றே உடைய விஞ்ஞானகலர். விஞ்ஞானகலர்- விசிட்ட ஞானத்தாலே கலையாகிய பந்தம் அற்றவர்; இறைவன் தன்மையிடத்தனாய் உள்நின்றவாறே உண்ர்த்த விளையும் விஞ்ஞானத்தால் கலைநீங்குதற்கு உரிமையுடையார். இச்சொல், விஞ்ஞானகலர் என மருவி வழங்கும். பிரளயாகலர்- பிரளயகாலத்திற் கலை அற்றவர்; பிரளயகாலத்தில் இறைவன் தானே குருவாய் முன்னிலைக்கண் நின்று உணர்த்துதலால் கலையாகிய பந்தம் (கட்டு) நீங்கும் உரிமையுடையார். சகலர் கலையாகிய பிணிப்புடன் கூடியவர்.*

*கலை-பந்தம் (பிணிப்பு). இறைவன் சகலர்க்கு அவர் வடிவுபோலும் குருவடிவாகிய மானுடப்போர்வையில் மறைந்து படர்க்கையில் நின்று உபதேசத்தால் உணர்த்துவன் என மெய்ந்நூல்கள் கூறும்.* ***(2)***

*இவ்வாறு உயிர்கள் மும்மலமுடையன. இருமலமுடையன, ஒருமலமுடையன என மலத்தொடர்பினால் வேறுபடுவனவாயின். அவ்வேறுபாட்டால் அவை தம்முள் ஒருயிர்க்கு ஒருயிர் அடிமையாகுமோ? என ஐயுற்று வினவிய மாணாக்கர்க்கு ஐயந்தீர அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்து வரும் குறள் வெண்பாவாகும்.*

**13. மூன்றுதிறத் துள்ளாரும் மூலமலத் துள்ளார்கள்
தோன்றலர்தொத் துள்ளார் துணை.**

***இ-ள்: இம் மூன்றுதிறத்து ஆன்மாக்களும் மூலமலமாகிய ஆணவத்தாற் பிணிக்கப்பட்டவர்களே; அவருள் மாயை யென்னுந் துணையினையுடைய சகலர் தாங்கள் கட்டுற்றவ ரென்னுந் தன்மை தமக்குத் தெரிதல் இலர்.***

***எனவே ஏனையர் இருவருக்குந் தெரியும் என்பதாம். மலம் என்பது அழுக்கு. உம்மை, முற்று.***

***இதனால் முன்னர் ஒவ்வொன்றாக நீக்கப்பட்டது. மாயையுங் கன்மமும் அல்லது ஆணவம் அன்றென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *மேற்குறித்த மூலகை உயிர்களும் தோன்றாத் துணையாயுள்ள முதல்வன் ஒருவனுக்கே அடிமையாவன வன்றி அவைதம்முள் ஒன்றற்கு ஒன்று அடிமையாவன அல்ல என்பது உணர்த்துகின்றது.*

*'தொத்து' என்பதற்கு மாயைத் தொடர்பு எனப் பொருள் கொண்டு, 'தொத்து துணையுள்ளார்- மாயையென்னுந் துணையினையுடைய சகலர், தோன்றலர்- (தாங்கள் கட்டுற்றவர் என்னும் தன்மை) தமக்குத்தெரிதல் இலர்' எனப்பொருள்வரைந்தார் நிரம்ப அழகிய தேசிகர். இவ்வாறன்றி, 'துணைதோன்றலர் தொத்து உள்ளார்' என இயைத்து, "மூவகைப் பட்ட ஆன்மாக்களும் ஆணவமலத்தினையுடையவர்கள். தோன்றாத்துணையாயிருக்கிற கர்த்தாவுக்குத் தொத்தடிமை; ஒருத்தருக்கொருத்தர் அடிமையல்ல"*

எனப்பொருளுரைத்தார் சிந்தனையுரையாசிரியர். 'துணைதோன்றலர்' என்றது, உயிர்கட்குத் தோன்றாத் துணையாய் நின்று அருள்புரியும் இறைவனை, தொத்து உள்ளார்-கொத்து அடிமையாக உள்ளவர்கள். தொத்து -கொத்து; ஈண்டு ஒருசேர அடிமைப்பட்டுள்ள தன்மையினைச் சுட்டி நின்றது இனி, தோன்றலர் என்ற சொல்லே தோன்றாத்துணையாய் நின்ற இறைவனைக் குறிக்குமாதலால், பின்வந்த 'துணை' என்ற சொல்லுக்கு 'ஒப்பு' எனப்பொருள் கொண்டு 'மூவகை உயிர்களும் எல்லாக் கேட்டிற்கும் மூலமாகிய ஆணவமலத்தினையுடையராதலால், அம்முத்திறத்தாரும் தோன்றாத் துணையாய்நின்ற இறைவனுக்குக் கொத்தடிமை யுடையராய்த் தம்முள் வேற்றுமையின்றிச் சமமாவர்' எனப்பொருள் கூறுதல் ஏற்புடையதாகும்.

உயிர்கள், தம்மை உடைய முதல்வனாகிய இறைவனொருவனுக் கன்றித் தம்முள் ஒருவருக்கொருவர் அடிமையல்ல என்பது,

**'அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்**
**அவர்க்கேநாம் அன்பாவ தல்லாற் — பவர்ச்சடைமேற்**
**பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்**
**காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்'**

**(அற்புதத்திருவந்தாதி-3)**

என அம்மையாரும்,

**'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்**
**... ... ... ... ... ... ... ... ... ...**
**தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான**
**சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்**
**கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்**
**கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே' (6-98-1)**

என அப்பரடிகளும்,

**'யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம்,**

**(திருவாசகம் - 34)**

எனத் திருவாதவூரடிகளும் அருளிய பொருளுரைகளால் இனிது புலனாம். படைத்தளிக்குந் தொழிற்குரியராய் மூல மலம் நீங்கப்

*பெறாதாராகிய அயனொடு மாலும் ஏனையமுப்பத்து மூவராகிய தேவர் முதலிய யாவரும் மக்கட்குலத்தாராகிய நம்மை ஒத்தவர்களே என்பது,*

**'சாவமுன்னாட்டக்கன் வேள்வித்தகர் தின்று நஞ்சமஞ்சி**
**ஆவ வெந்தாயென் றவிதா விடு நம்மவரவரே**
**மூவரென்றே எம்பிரானொடு மெண்ணி விண்ணாண்டு மண்மேல்**
**தேவரென்றே யிறுமாந்தென்ன பாவந் திரிதவரே'**
**(திருவாசகம்-திருச்சதகம்-4)**

*எனவரும் மணிமொழியால் நன்கு புலப்படுத்தப்பட்டிருத்தல் காணலாம்.* ***(3)***

*ஆன்மாவை அடிமை என்று சொல்வானேன்? ஆன்மாத்தானே பிரமமாம் எனக் கொண்டால் வரும் குற்றம் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுரைகூறித் தெருட்டுவதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**14. கண்டவற்றை நாளுங் கனவிற் கலங்கியிடுந்**
**திண்டிறலுக் கென்னோ செயல்.**

***இ-ள்:* பலகாலும் சகலாவத்தையால் தாம் கண்டறிந்த பொருள்களைச் சொப்பன அவத்தையில் திரிபுபடக் காணுந் திணிந்த வெற்றியினையுடைய உயிர்களுக்குச் செயலுடைத் தென்பது எவ்வண்ணமோ என்க.**

***திண்டிறல் என்பது, அன்மொழித்தொகையாய் இகழ்ச்சிக் குறிப்பு மொழியாய் நின்றது திரிபுடக் காண்டலாவது, நல்குரவாளர்தமைச் செல்வராகவும் செல்வர் தமை நல்கூர்ந்தவராகவும், உறுப்பில்லார்தமை உறுப்புடையராகவும், உறுப்புள்ளார்தமை உறுப்பில்லாராகவும் ஒன்று ஒன்றாக மாறுபடக்காண்டல் முதலாயினவெல்லாம்.***

***விளக்கம்:*** *நனவிற் கண்டவற்றைக் கனவில் மாறுபடக் கொள்ளும் இயல்பினையுடைமையால் எதனையும் உள்ளவாறு அறிந்து செய்யமாட்டாத ஆன்மா பிரமம் அன்று என அறிவுறுத்துகின்றது.*

*நனவு-விழிப்புநிலை. கனவு-உறக்கநிலை நனவிலே கண்ட காட்சியை நாள்தோறும் மயங்கியறிகிற-அறிவின் திண்மையில்லாத ஆன்மாக்கள் முதல்வன் துணையின்றித் தாமே எதனையும் அறிந்து செய்ய வல்லன அல்ல என்பதாம்.*

*திண்திறல்-திண்ணிய வெற்றியையுடையது அன்மொழித் தொகை; ஈண்டு திண்மையில்லாதது என இகழ்ச்சிக் குறிப்பாய் நின்றது. திண்டிறலுக்குச் செயல் என்னோ என இயையும்.* ***(4)***

*உயிர் உணர்தற்றன்மையது ஆதலால், அதுதானே எங்குமாய் நின்று அறியும் என்றல் அமையாதோ? என வினவிய மாணாக்கர்க்கு அதன் மாட்டாமையினை அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**15. பொறியின்றி யொன்றும் புணராத புந்திக்**
**கறிவென்ற பேர்நன் றற.**

***இ-ள்:* செவி முதலிய கருவிகள் கூடாமல் யாதொரு விடயமும் எய்தமாட்டாத உணர்வினையுடைய உயிர்களுக்கு நூல்வல்லோர் அறிவுடையன என்று இட்டபேர் மிகவும் அழகிது என்க.**

**பொறியின்றி ஒன்றும் புணராதென்பதனால், அது கூடிப் புணரும் என்பதாயிற்று. புந்தி ஆகுபெயர், நன்றென்பது முன்னையதுபோல் இகழ்ச்சிக் குறிப்பு மொழி.**

**இவை இரண்டுபாட்டானும் உயிர்கட்கு ஓர் முன்னிலை யான் அன்றி அறிவும் தொழிலுங் கூடாமை கூறப்பட்டன.**

***விளக்கம்:*** *ஐம்பொறிகளாகிய கருவிகளின் துணையின்றி ஒன்றையும் உணரமுடியாத அறிவுக்குறைபாடுடையன ஆன்மாக்கள் என்பது உணர்த்துகின்றது.*

*பொறிகளாவன, உயிர்களின் அறிவு புறத்தே சென்று பொருள்களை யுணர்தற்கு வாயில்களாகவுள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகள். புந்தி-புத்தி; என்றது, ஆகுபெயராய் அதனை அகக்கருவியாகவுடைய உயிரை உணர்த்தி நின்றது. 'புந்திக்கு அறிவு என்ற பேர் அற நன்று' என இயைக்க.*

உயிர்க்குச் சித்து என்பது ஒரு பெயராகலின் அதனையே ஈண்டு அறிவு என்றபேர் எனக்குறித்தார். அற-மிகவும், நன்று என்றது, ஈண்டு இகழ்ச்சிக்குறிப்பாய் நன்றன்று என்பது பட நின்றது.

**'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
**தாளை வணங்காத் தலை' (9)**

எனவரும் திருக்குறளில், உயிர்களின் உணர்வுக்குச் செவி முதலிய பொறிகள் இன்றியமையாத வாயில்களாதல் வலியுறுத்தப் பட்டமையால் அத்தகைய வாயில்களாகிய பொறிகளின் துணையின்றி ஒன்றையும் உணரமாட்டாத குறையுணர்வுடைய உயிர்களை முற்றுணர்வுடைய பிரமம் எனக்கொள்ளுதல் ஒரு சிறிதும் பொருந்தாதென்றவாறு.

அவ்வாறாயின் ஆன்மாவுக்குத் தானேயுணரும் அறிவில்லையோ? என வினவிய மாணாக்கர்க்கு உணர்த்த உணரும் அறிவினையுடையது ஆன்மா என அறிவுறுத்துவது அடுத்து வரும் குறட்பாவாகும்.

**16. ஒளியும் இருளும் உலகும் அலர்கட்**
**டெளிவி லெனிலென் செய.**

**இ-ள்: விளக்கஞ் செய்யும் ஞாயிறு திங்கள் அங்கி யென்னுஞ் சுடர்களும், மயக்கினைச் செய்யும் அந்தகாரமும், பலவகைப் பொருளோடு சிறந்த உலகமும், விழித்திருக்கிற கண்ணிடத்துச் சோதி இல்லையாயின் என்ன பயனைச் செய்தற் பொருட்டு? எனவே யாதும் இன்றென்பதாம் என்க.**

**இவ்வுவமையால், 'மிகுந்த பிரகாசமாகிய சிவனுடைய ஞானமும், இருளாகிய ஆணவமும், கலை முதல் நிலமீறாகிய தத்துவங்களும், நித்தமாய் உயிர்களிடத்து உணர்வில்லையாயின் என்னபயனைச் செய்யும்?' என்னும் பொருள் தோன்றி நின்றது. இஃது ஒட்டென்பதோர் அலங்காரம். இம் மூன்றுவகையினாலும் நன்று தீதுகளை அடைவன உயிர்களே யாம் என்பதாயிற்று.**

**இதனால், விளக்க விளங்கும் கண்போல உணர்த்த உணரும் உணர்வினையுடையரென்பதூஉங் கூறப்பட்டது.**

***விளக்கம்:*** *தாமேயுணருந் தன்மையின்றிப் பிறர் உணர்த்த உணரும் இயல்புடையன உயிர்கள் என்பது உணர்த்துகின்றது.*

*ஒளி-ஞாயிறு. திங்கள், தீ முதலிய ஒளியுடைப்பொருள்கள். இருள்- பொருள்கள் புலப்படாதவாறு கண்ணொளியை மறைத்து நிற்பது. உலகு-கட்புலனாகிய உலகப்பொருள்கள். அலர்கண்-விழித்திருத்தலால் அலர்ந்தகண். தெளிவு என்றது, கண்ணிடத்தே இயல்பாகவுள்ள சோதியை.*

*காண்டற்குத் துணைபுரியும் ஒளியுடைப் பொருளும் காட்சியைத் தடைசெய்து நிற்கும் புறஇருளும் கட்புலனாகும் உலகமும் இருந்தும் அவற்றாற் பயன் கொள்ளுதற்குரிய கண்ணிடத்தே தெளியவுணரும்ஒளிக்கூறு இல்லையாயின்அவற்றாற் பயனில்லாதவாறு போல, உயிரறிவுக்குத் துணைபுரியும் சிவனது அருளொளியாகிய ஞானமும், உயிரறிவை மறைப்பதாகிய ஆணவ இருளும், உயிர்களின் நுகர்ச்சிக்குரிய உலகமும் ஆகிய இம் மூவகைப் பொருளும் இருந்தும் உயிர்கட்கு அறிவென்பது இல்லையாயின் மேற்குறித்தவற்றின் உண்மையாற் சிறிதும் பயனில்லை என்பதாம்.*

*சொல்லக்கருதியபொருளை வெளிப்படக் கூறாது மறைத்து, அதனைப்புலப்படுத்துதற்குரிய ஒத்ததொரு பொருளைக் கூறுதலின் இக்குறள் ஒட்டு என்னும் அணியாகும்.*

*பதி பசு பாசம் எனப்படும் முப்பொருளிலேயும் அறிதலைச் செய்யும் பொருள் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அதனை விளங்க அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**17. சத்தசத்தைச் சாரா தசத்தறியா தங்கணிவை**
**உய்த்தல்சத சத்தாம் உயிர்.**

***இ-ள்: நிலைபெற்ற ஞானமாகிய சிவனுக்கு அநித்தங்களான சடப்பொருள்களைப் புதிதாகச் சுட்டியறிய வேண்டுவதில்லை, அசேதனங்களாகிய தத்துவங்கட்கு அறிவென்பதில்லை. இவ்விரண்டு தன்மையாயின், அவ்விடத்து இவற்றைத் தன்னுணர்வு செலுத்திப் பகுத்தறியும் உயிர்கள் சத்தும் அசத்தும் அன்றியே சதசத்தாதல் வேண்டும்; அல்லது கூடாதென்பது கருத்து.***

*உயிர்களுஞ் சித்தென்று வழங்கப்படுமாயினும் சிவனுடைய ஞானத்தினோடு ஒரு தன்மைய அல்லவென்பதாம்*

**சிவன் சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்றா மென்னிற்**
**சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்**
**பவங்கேடு புத்தி முத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்**
**படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றான்**
**அவன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டும்**
**அணைந்தாலு மொன்றாகா தனனிய மாயிருக்கும்**
**இவன்றானும் புத்தியுஞ் சித்திவ னாமோபுத்தி**
**இதுவசித்தென் றிடிலவனுக் கிவனு மசித்தாமே.**
**(சித்தியார்-சுப-320)**

*என்றருளிச் செய்தவாறு காண்க.*

***இதனால் உயிர்கள் சுத்த அறிவும் சடமும் அல்லவாதல் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *பசுவாகிய ஆன்மா, முற்றுணர்வுடைய சிவமாகிய சத்தும் ஆகாமல், உணர்வற்ற பாசமாகிய அசத்தும் ஆகாமல், சத்தைச்சார்ந்த நிலையிற் சத்தாகவும், அசத்தைச் சார்ந்த நிலையில் அசத்தாகவும் அவ்விருதிறப் பொருள்களையும் பற்றிச் சார்ந்ததன் வண்ணமாய் நின்றுணரும் தன்மைய தென்பது உணர்த்துகின்றது.*

*'சத்து அசத்தைச் சாராது அசத்து அறியாது; அங்கண் இவை உய்த்தல், சத் அசத்து ஆம் உயிர்' என மூன்று தொடராகப் பகுத்துப் பொருள்கொள்க. சத்து-தோற்றக் கேடுகள் இன்றி என்றும் மாறாதுள்ள பொருளாகிய சிவம். அசத்து-என்றும் ஒருநிலையவன்றி மாறுந் தன்மையவாகிய உலகப் பொருள்கள். சதசத்து-சத்தைச் சார்ந்த நிலையிற் சத்தெனவும் அசத்தைச் சார்ந்த நிலையில் அசத்தெனவும் கூறுமாறு சத்தையும் அசத்தையும் சார்ந்து சார்ந்ததன் வண்ணமாய் நிற்கும் உயிர்.*

*முற்றுணர்வுடையதாய் என்றும் உள்ள மெய்ப்பொருளாகிய சிவத்துக்குப் பாசத்தைப் பொருந்தி அறிந்து இவை பொய்யென்று நீங்கவேண்டிய இன்றியமையாமை யில்லை. அசத்தாகிய பாசமோ அறிவில்லாத சடம் ஆதலால் எதனையும் அறியக்கூடியதன்று.*

ஆகவே அந்நிலைமைக்கண் சத்தாகிய சிவம், அசத்தாகிய பாசம் ஆகிய இவ்விருதிறப் பொருள்களிலும் அழுந்தி அறியுந்தன்மையது, சத்தும் அசத்தும் அல்லாத சதசத்தாகிய ஆன்மாவேயாகும் என்றவாறு.

மாற்றம் மனங்கழிய நின்ற சிவத்தின் திருமுன் சுட்டியறியப் படும் உருவினவாகிய அசத்தாகிய சடப்பொருள்கள் யாவும் தம் தன்மை விளங்க முனைத்துத் தோன்றுதலின்றி வெறும் பாழாய் மறையுந்தன்மைய ஆதலால், சத்தாகிய சிவம் அசத்தாகிய பாசத்தை அறிந்து, அநுபவியாது; அசத்தாகிய பாசம் அறிவில்லாதது ஆதலால் சத்தாகிய சிவத்தை அறிந்து அனுபவியாது. ஆதலால் சத்து அசத்து என்னும் இவ்விரண்டின்கண் நின்று இவ்விரண்டினாலும் இவ்விரண்டின் திறனையும் அறியும் அறிவுளதாகிய பொருளொன்று உளதென்பது ஒழிந்து நின்றதனால் உணர்தலென்னும் பாரிசேட அளவையாற் பெறப்படுதலின், அங்ஙனம் பெறப்படும் அதுவே சத்தாதற் றன்மையும் அசத்தாதற் றன்மையும் இன்றிச் சதசத்தாந் தன்மையினையுடைய ஆன்மா என்பதாம். ஆன்மாவுக்குரிய இவ்வியல்பினை,

> **"யாவையுஞ் சூனியம் சத்தெதிர் ஆகலின்,**
> **சத்தே அறியாது; அசத்து இலது அறியாது;**
> **இருதிறன் அறிவுளது, இரண்டலா ஆன்மா"**

எனவரும் சிவஞான போத ஏழாஞ் சூத்திரத்தில் ஆசிரியர் மெய்கண்டதேவர் தெளிவாக விளக்கியருளினார். அவரருளிய இச் சூத்திரத்தை அடியொற்றி அமைந்தது, திருவருட் பயனிலுள்ள இப்பதினேழாங் குறளாகும். ஈண்டு அறிதல் என்றது, அழுந்தி யறிதலாகிய அனுபவித்தலை. உய்த்தல் என்றதும் அது.

சார்ந்ததன் வண்ணமாந் தன்மையதாகிய ஆன்மாவின் சிறப்பியல்பு குறித்த இம்முடிபு,

> **"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்**
> **கினத்தியல்ப தாகும் அறிவு"      (திருக்குறள்-452)**

*எனத் தெய்வப்புலவர், 'மாந்தர்க்கு அறிவு இனத்தியல்பதாகும்' எனக்குறித்த பொதுவகை முடிபிலிருந்து உய்த் துணர்ந்து கூறிய சிறப்புவகை முடிபாகும். ஆகவே, உயிர்கள் முற்றுணர்வுடைய இறைவனைப்போன்று எல்லாம் அறிந்தனவுமாகாமல், ஏனைய அறிவில்பொருள்களை யொத்து ஒன்றும் அறியமுடியாதனவு மாகாமல், இரண்டுங்கெட்ட நிலையினவாய் அதுவதுவாய்ச், சார்ந்ததன் வண்ணமாந் தன்மையன என்பது பெற்றாம். சத்தும் அசத்தும் ஆகிய இவ்விரு தன்மையு மின்றிச் சதசத்தாய் நிற்றல் உயிரின் இயல்பென்பதனை,*

**"இரண்டுமிலித்தனியனேற்கே"** **(திருவாசகம்-30)**

*எனத் திருவாதவூரடிகள் தம்மியல்புபற்றிக் கூறுமிடத்துத் தெளிவாகக் குறித்துள்ளமை இங்கு நினைக்கத் தகுவதாகும்.*

*இவ்வாறு ஆன்மா சத்து-அசத்து என்பவற்றுள் ஒரு பாற்படாது இருதிறனறிவுளதாய் நிற்கும் என்பதற்கு இவ்வுலகில் உவமையாக எடுத்துக்காட்டத்தக்கபொருளுண்டோ? என வினவியமாணாக்கர்க்கு உவமை கூறி விளக்குவதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பா வாகும்.*

**18. இருளில் இருளாகி எல்லிடத்தில் எல்ஆம்**
**பொருள்கள் இலதோ புவி.**

***இ-ள்:* இருள் வந்து இறுத்தகாலை மறைந்தும், ஒளிவந்து இறுத்தகாலை விளங்கியும் நிற்கும் பொருள்களை யுடைய தன்றோ உலகம் என்க.**

***பொருள்கள் என்ற பன்மையால், அவை கண்ணும் ஆடியும் விண்ணும் முதலாயின. ஓகாரம் எதிர்மறை. இதுவும் ஒட்டென்பதோர் அலங்காரம்.***

***இதனால், சுத்தவுணர்வும் சடமும் அன்றி இடைப் பட்டதொன்று இல்லையென்பாரை, உண்டென மறுத்து, மேலது வலியுறுத்தப்பட்டது.***

***விளக்கம்:*** *சதசத்தாகிய உயிரைப்போலவே தன் தன்மை யதின்றிச் சார்ந்ததன் தன்மையனவாயுள்ள பொருள்கள் இவ்வுலகில் வேறு உள்ளன என்பது உணர்த்துகின்றது.*

*இருளில் இருள் ஆதல்-இருளுடன் கூடி அதுவாய் மறைதல் எல்-ஒளி. எல்லிடத்தில் எல் ஆதல்-ஒளியுடன் கூடித் தன்தன்மை விளங்கித் தோன்றுதல். இருள் ஆகி, எல் ஆம் பொருள்களைப் புவி (பெற்று) இலதோ என உருபும் வினையும் விரித்துரைக்க. இலதோ என்புழி ஓகாரம் உளது என எதிர்மறைப் பொருள் தந்து நின்றது. இருளுடன் கூடி இருளாகியும் ஒளியுடன் கூடி ஒளியாகியும் இங்ஙனம் சார்ந்ததன் வண்ணமாந் தன்மைக்கு இவ்வுலகில் கண், படிகம், ஆகாசம் என்பவற்றை உவமையாக எடுத்துக் காட்டுவர் சான்றோர். நிரம்ப அழகிய தேசிகர் உரையில் ஆடி என்றது, படிகத்தினை. விண்-ஆகாசம். 'ஆணவ இருளோடுகூடி அறியாமையுற்றும் சிவஞானமாகிய ஒளியுடன் கூடி நல்லுணர்வு விளங்கியும் இவ்வாறு சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது ஆன்மா' என்னும் பொருள் தோன்ற நின்றமையின், இக் குறள்வெண்பா ஒட்டென்னும் அணியமைந்ததாகும்.*

*ஒளியிலும் இருளிலும் சார்ந்து அதுவதுவாந் தன்மையுடையது ஆன்மாவாயின், அஃது இதுகாறும் தோன்றாத் துணையாய் நிற்கும் ஒளிப்பொருளாகிய சிவத்தை அறிந்து அடையாதிருத்தல் எதனால்? என வினவிய மாணாக்கர்க்கு அவ்வாறு அறிந்து அடைய இயலாமைக்குத் தடையாகவுள்ளதனை அறிவுறுத்துவது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**19. ஊமன்கண் போல ஒளியும் மிகவிருளே**
**யாமன்கண் காணா தவை.**

***போ—ள்:** உதயஞ் செய்து விளங்காநின்ற சூரியனைக் காணாத கூகையினது கண்போல, முற்கூறிய உயிர்களும், கருத்தாவாகிய சிவனுடைய ஞானத்தினைக் காணமாட்டா. அந்த ஞானமும் அந்தக் கூகையினது கண்ணுக்குச் சூரியன் சிறிதுந்தோன்றாது நின்றாற்போல உயிர்களுக்குத் தோன்றாது நின்றதாம் என்க.*

உம்மை சிறப்பு. எதாரம் தேற்றம்

*இதனால் உயிர்கள், தமக்கு உயிராகி விளங்கி நின்ற ஞானத்தினைக் காணாமைக்கு உவமனொடு படுத்திக் கூறப் பட்டது.*

**விளக்கம்:** ஊமன் - கூகை; கோட்டான் என்னும் பறவை. இப்பறவைக்கு ஒளிமிக்க பகற்காலத்தில் கண் தெரியாது. 'மன் கண் காணாத அவை(க்கு) ஊமன்கண் போல ஒளியும் மிக இருளேயாம்' என இயையும். 'காணாத' என்புழிப் பெயரெச்சத்து அகரமும், "அவைக்கு" என்புழி நான்காம் வேற்றுமையுருபும் விகாரத்தால் தொக்கன. 'கூகையின் கண்ணுக்கு ஞாயிற்றினொளி இருளானாற் போல, நிலைபெற்ற ஞானக்கண்ணினாலே காணாத ஆன்மாக்களுக்கு ஞானமும் அஞ்ஞானமாயிருக்கும்' என்றவாறு.

இறைவனது திருவருளாகிய ஒளி, ஆன்மாவோடும் அநாதியே கூடியிருக்கச் செய்தேயும், மலபாகம் வாராத உயிர்களுக்குச் சிவஞானம் பிரகாசியாதென்பதாம்.

எங்குமாய் விரிந்து பரவிய இறைவனது அருளொளியினாற் சூழப்பட்டிருந்தும் அதனியல்பினை உள்ளவாறு உணரமுடியாது ஆணவ இருளிற் சிக்குண்டு அலமரும் ஆன்மாக்களின் துன்ப நிலையினை,

> **"மாயத்தை யுணரமாட்டேன் மையல்கொள் மனத்தனாகிப்**
> **பேயொத்துக் கூகையானேன்"** (4-31-7)

எனத் தம்மேல் வைத்துப் புலப்படுத்தியருளினார் திருநாவுக்கரசர். கூகைக்குப் பகற் காலத்திற் கண்தெரியா தென்பதனை,

'பகல் வெல்லுங் கூகையைக் காக்கை' (திருக்-481) எனவரும் திருக்குறளில் திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தகுவதாகும்.

இவ்வாறு உயிர்க்குயிராகிய இறைவனை உணரவொட்டாது ஆன்மாக்களினறிவை மறைத்துள்ள அஞ்ஞானமாகிய இருள் தொலைவது என்று? என ஏக்கற்று வினவிய மாணாக்கர்க்கு, உயிர்களை அனாதியேபற்றியுள்ள அறியாமைப் பிணிப்பின் தொன்மையினை அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.

**20. அன்றளவும் ஆற்றுமுயிர் அந்தோ அருள்தெரிவ**
**தென்றளவொன் றில்லா இடர்.**

பொ—ள்: **அனாதியே தொடங்கி இற்றைவரையும் எண்ணிறந்த துன்பத்தினைத் தாங்கி நிற்கும், உயிர்கள்.**

**அந்தோ! எந்த நாளோ திருவருளாகிய ஞானத்தினைக் கண்டு இடும்பை தீர்ந்து பேரின்பத்தை எய்தும் நாள்? என்க.**

**அந்தோ என்பது, இரக்கத்தின்கட் குறிப்பு. இதனால் உயிர்படும் துன்ப மிகுதிக்கு இரங்கிக் கூறப்பட்டது.**

**விளக்கம்:** *ஆன்மாக்கள் அனாதியே தம்மைப்பற்றியுள்ள பாசப் பிணிப்பினால் எண்ணில்லாத நெடுங்காலம் பிறவியுட்பட்டு வருந்துமாறு கூறுகின்றது.*

*'உயிர், அன்று (முதல் இன்று) அளவும் அளவொன்று இல்லா இடர் ஆற்றும். அந்தோ! அருள் தெரிவது என்று' என இயைத்துப் பொருள் கொள்க. அன்று என்றது, ஆணவ இருளிற்பட்டுள்ள தொன்மைநிலையாகிய கேவலத்தை. இன்று என்றது, அவ்விருள் நிலையின் நீங்கிப் பலவகைப் பிறவியுட்பட்டு ஓரளவு அறிவு விளங்கப்பெற்ற சகல நிலையினை. அளவு ஒன்று இல்லா இடர்- எல்லையற்ற பெருந்துன்பம். ஆற்றுதல்- பொறுத்து அனுபவித்தல்.*

*'உயிர்கள் அனாதிதொடங்கி ஒரு சிறிது அறிவுவிளங்கப் பெற்ற இன்றுவரை எல்லையற்ற பெருந்துன்பங்களை அனுபவிக் கின்றன. (இவற்றின் துயர் நீங்க) இறைவனது அருளாகிய கண் விளங்கப்பெறுவது எந்நாளோ? என உயிர்களின் துன்பங்கண்டு ஆற்றாவுள்ளத்தினராகிய அருளுடை யாரொருவர் இரங்கிக்கூறும் முறையில் அமைந்தது இக்குறட்பாவாகும்.*

**'இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பா னுடம்பு' (திருக்குறள்-1029)**

*என ஆசிரியர் திருவள்ளுவர் உடம்பொடு புணர்த்துக்கூறிய உயிர்களின் பிறவித்துன்பத்தை இந்நூலாசிரியராய உமாபதி தேவர் உயிர்கட்கு உரிமையுடையதாக இயைத்துக் கூறிய திறம் உய்த்துணர்ந்து உளங்கொளத்தக்கதாகும்.*

*'அருள்தெரிவது என்று' என இரங்கியக் குறிப்பினால், உயிர்கள் அளவிலா இடருட்பட்டு வருந்துவதற்கு உயிரறிவைத் தொன்மையே மறைத்துள்ள அகவிருளாகிய ஆணவமலமே காரணம் என்பதனை உய்த்துணரவைத்து, அடுத்த அதிகாரத்திற்குத் தோற்றுவாய் செய்தாராயிற்று.*

## *3.* இருண்மலநிலை

*அஃதாவது,அறியாமையே வடிவாகிய ஆணவமலத்தினது தன்மை. உயிரவை நிலையென்பதுபோலப் பொதுப்படப் பாசங்களதுநிலை யென்னாது இருண்மலநிலை யென்றதனால், ஒழிந்த மாயை கன்மங்கள் எவ்வாறடங்குமோ வெனின், 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே' (நன்னூல்- 399)என்பதனால்அடங்கும். முற்கிளந்தஉயிர்களாற் புணரப்பட்ட பாசத்தின் இயல்புகூறுதலின், மேலை அதிகாரத்தினோடு இதற்கு இயைபுடைத்தெனக் கொள்க.*

**21. துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும்**
**இன்றென்ப தெவ்வாறும் இல்.**

*இ-ள்: தொன்றுதொட்டு இடைவிடாது வரும் பிறவித் துன்பமும், மேலாய வீட்டின்பமும், இவற்றைக் கூட்டி முடிப்பதாய முதல் துணை நிமித்தங்களும் இல்லையென்று அறுதியிட்டுக் கூறுதல், காண்டல் முதலிய அளவைகள் எல்லாவற்றானும் இல்லை என்க.*

***விளக்கம்:*** *மேலை அதிகாரத்தால் பசுவிலக்கணம் கூறிய ஆசிரியர் ஆன்மாக்களோடும் அனாதியே கூடியுள்ள மலம் மாயை கன்மம் ஆகிய பாச இலக்கணம் கூறுபவர், ஏனை இரு மலங்கட்கும் மூலமாய் உயிரை முற்படப்பிணித்துள்ள ஆணவமாகிய இருள் மலத்தின் இயல்பினை விரித்துரைத்தலின் இவ்வதிகாரம் இருள்மல நிலை யென்னும் பெயர்த்தாயிற்று.*

*இறைவனது பொருள் சேர்ந்த புகழை விரும்பினார்க்கு அகவிருளாகிய ஆணவமலத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இருவினைகளும் உளவாகா என்பது*

**"இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"** *(திருக்- **5**)*

*எனவரும் திருக்குறளிற் கூறப்பட்டது. இதன்கண் 'இருள்' என்றது மயக்கத்தை எனவும், 'பொருள்' என்றது மெய்ம்மையை எனவும்*

கொண்டு, "மயக்கத்தைப்பற்றி வரும் நல்வினை தீவினை யென்னும் இரண்டு வினையும் உளவாகா இறைவனது மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து' எனப் பரிமேலழகர் உரை வரைந்துள்ளார்.

**"இருள்நீங்கி யின்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு"** ***(352)***

என்ற குறளில் மயக்கத்தினை 'மருள்' என வேறோர் சொல்லால் ஆசிரியர் திருவள்ளுவர் வழங்கியிருத்தலால், அம் மருளின் வேறாக 'இருள்' என்ற சொல்லாற் குறிக்கப்பட்டது, மயக்கமாக இருத்தல் இயலாது. இவ்வுலகிற் புறத்தே காணப்படும் பூத இருளானது, ஒரு பொருளையும் கண்ணாற் காணமுடியாத படி மறைத்து நிற்பது. இவ்வாறே உயிர்களின் அகத்தே அறிவுக்கண்களை மறைத்து நிற்பதாகிய இருளொன்று உண்டெனவும், அகவிருளாகிய அது, தன்தன்மையிதுவென உயிர்கள் உணராதவாறு உயிர்களின் அறிவினை மறைத்து நிற்றலால், ஆன்மாவாகிய பொருளையுங் காட்டாது அதனை மறைத்துள்ள தன்னையுங் காட்டாது நிற்குந் தனித்தன்மையுடைய தெனவும் ஆன்றோர் கூறுவர்.

உயிர்கட்கு ஊனத்தை விளைவிக்கும் 'இருள்' என்பதொரு மலம் உண்டென்பதும், அவ்விருள் நீக்கத்திற்கு இறைவன் அறிவுறுத்தும் சிவஞானமாகிய பொருளையே துணையாகக் கொண்டு இறைவனது திருவருளைப் புகழ்ந்து போற்றி வழிபடுதல் இன்றியமையாதென்பதும்

**"ஊனத் திருள் நீங்கிட வேண்டில்**
**ஞானப் பொருள்கொண் டடிபேணும்"** ***(1-38-3)***

**"ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்ல அடியார்மேல்**
**ஊனத்திரளைநீக்கும் அதுவும் உண்மைப்பொருள் போலும்"**
**(1-69-3)**

எனத் திருஞானசம்பந்தப் பிள்ளையார் அருளிய தேவாரத்தால் நன்கு புலப்படுத்தப் பெற்றமை காணலாம். ஆணவமாகிய இருள்நீங்க நோக்கும் ஞானநாட்டம், ஆன்மாக்கட்கு இயல்பாக அமைந்ததன்று என்பதும், இருளை நீக்கி உயிர்கட்கு இன்பமளிக்கவல்ல பேரருளும் பேரறிவும் பேராற்றலும் ஒருங்குடைய முதல்வன் இறைவன்

ஒருவனேயென்பதும் திருமுறையாசிரியர்களாகிய சிவநெறிச் செல்வர்களது துணிபாகும். இந்நுட்பம்,

**"இருளற நோக்கமாட்டார்க் கொத்தையேன்"** (4-69-1)

**'இருளறுத்து நின்று, ஈசனென்பார்க் கெலாம்
அருள்கொடுத்திடும் ஆனைக்கா அண்ணலே'** (6-41-8)

**'இருளாய வுள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவங் கெடுத்து'** (6-54-4)

என வரும் அப்பர் அருள்மொழிகளால் இனிது விளங்கும். இங்ஙனம் உயிர்களின் அறிவினை அனாதியே மறைத்து நிற்பதாய் உயிர்களை அணுத்தன்மைப்படுத்தி நிற்கும் ஆணவமலமாகிய உள்மாசினையே தெய்வப்புலவர் திருவள்ளுவரும் சைவத்திரு முறையாசிரியர்களும் 'இருள்' என்ற சொல்லால் வழங்கியிருத்தல் வேண்டும் எனத் தெளியவுணர்ந்த உமாபதி சிவாசாரியார், சைவசித்தாந்த ஆசிரியர்களால் ஆணவம் என்ற பெயரால் வழங்கப்படும் மூலமலத்தின் இயல்பினை விரித்துக் கூறும் இவ்வதிகாரத்திற்கு 'இருள்மலநிலை' எனப் பெயரிட்டுள்ளார்.

ஆணவமலம் என்பது, எண்ணிறந்த உயிர்களோடும் கூடி நின்று மறைத்தும் தான் ஒன்றாயிருப்பது; உயிர்களின் பக்குவம், பக்குவமின்மை ஆகியவற்றுக்கு ஏற்ப அவரவர் இடங்களிலே மறைத்து நின்று அந்தந்த ஆன்மபோதங்களின் மீட்சியிலே நீங்குவதாயிருக்கிற தன் செயல்வகையாகிய எண்ணிறந்த சத்திகளையுடையது; செறிந்த இருளும் வெளியென்று சொல்லும்படி நின்று உயிர்களுக்கு மிக்க மறைப்பினைச் செய்வது; செம்பினுடன் கூடியுள்ள களிம்பானது அந்தச் செம்பு உள்ள அன்றே அதனை மறைத்து உள்ளும் புறம்புங் கலந்து வெட்டுவாய்தோறும் நின்றாற்போல, உயிரறிவோடுங் கலந்து மறைந்து நிற்கிற அழியாத அனாதிமலமாய் உயிர்களின் விழைவு அறிவு செயல் என்னும் மூவகையாற்றல்களும் சிறிதும் நிகழாதபடி மறைத்து நிற்பது இதன் இயல்பினை,

**‘ஏகமாய்த் தம்கால எல்லைகளின் மீளும்**
**எண்ணரிய சத்தியதாய் இருளொளிர இருண்ட**
**மோகமாய்ச் செம்பினுறு களிம்பேய்ந்து நித்த**
**மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்’**
**(சிவப். 20)**

எனவரும் சிவப்பிரகாசத் திருவிருத்தத்துள் இந்நூலாசிரியர் சுருக்கமும் தெளிவும் பொருந்த விளக்கியுள்ளார். இச்சிவப்பிரகாசத் தொடருக்கு அமைந்த விரிவுரை போன்று திருவருட்பயனின் மூன்றாமதிகாரமாகிய இப்பகுதி அமைந்துள்ளமை ஒப்புநோக்கி யுணர்தற்குரியதாகும்.

இவ்வதிகாரத்தின் முதற்குறள், ஆணவமலத்துண்மையினை அறிவுறுத்துவதாகும்.

துன்றுதல்-நெருங்கிச்செறிதல்; தொன்றுதொட்டு இடைவிடாது தொடர்தல். பவத்துயர்-பிறவித்துன்பம். இன்பு-அத்துன்பம் நீங்கியவழி யுளதாம் பேரின்பம். துணைப் பொருள்-உயிர்கட்குத் தோன்றாத்துணையாய் நின்று அருள் புரியும் மெய்ப்பொருளாகிய கடவுள். ‘துணைப்பொருள்’ என்பதற்கு ‘இவற்றைக்கூட்டி முடிப்பதாய முதல் துணை நிமித்தங்கள்’ என்றும், ‘இன்றென்பது’ என்பதற்கு ‘இல்லையென்று அறுதியிட்டுக்கூறுதல்’ என்றும், ‘எவ்வாறும் இல்’ என்பதற்குக் ‘காண்டல் முதலிய அளவைகள் எல்லாவற்றானும் இல்லை’ என்றும் நிரம்ப அழகிய தேசிகர் பொருள் வரைந்துள்ளார். ‘துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப்பொருளும், இன்று எவ்வாறும் இல் என்பது (இருள்) என இயைத்து, “நெருங்கிவாராநின்ற சனன மரணத் துக்கத்தையும், அது நீங்கினவிடத்துண்டான சுகத்தையும் இப்போது உண்டென்பதை யெல்லாம் எந்த முறைமையினாலும் ஆணவமலமானது இல்லையெனப்பண்ணிக்கொண்டு நிற்கும்” என எடுத்துக் கொண்ட அதிகாரத்துக்கு இயையப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர். ‘நல்லவையெல்லாம்’ (திருக்குறள்-***375***) என்புழிப்போல ஈண்டு இருள் என்பது அதிகாரத்தால் வந்தியைந்தது. இனி துன்றும் பவத்துயரும் இன்பும் துணைப் பொருளும் (ஆகிய உள்பொருள்களை யெல்லாம் அறியாமையால்) இல்லையெனச் சொல்லுதற்கு (இருள்மலத்தை யன்றிப் பிறிது காரணம் இல்லை’ என இக்குறட்

*பாவுக்குச் சொற்கிடக்கை முறையே பொருளுரைப்பினும் அமையும். இங்ஙனம் பொருளுரைக்குமிடத்து 'இன்றென்பது' என்புழி, 'ஐந்தவித்தான் ஆற்றல்' (திருக்குறள்-**25**) என்புழிப்போல நான்காம் வேற்றுமையுருபு செய்யுள் விகாரத்தால் தொக்கதாகக் கொள்ளுதல் வேண்டும். ஆன்மாக்கள் தம் அனுபவ நிலையில் அறிந்துணரத்தக்க பிறவித்துன்பத்தையும், பிறவிப் பிணிப்பையகற்றி அடைதற்குரிய பேரின்ப நிலையையும் அப்பேரின் பத்தினை வழங்குதற்குத் தோன்றாத்துணையாயுள்ள கடவுளையும் உள்ளவாறு அறிந்துகொள்ள முடியாமலிருத்தற்கு அவ்வுயிர்களை அனாதியே மறைத்துள்ள இருள்மலமே காரணமாம் எனக் கருதலளவையால் ஆணவ மலத்துண்மை கூறியவாறு.*

*இருள்மலம் ஆன்மாக்களை எவ்வாறு மறைத்துள்ளது? என வினவிய மாணாக்கர்க்கு இருள்மலத்தின் மறைப்பு இத்தன்மையதென அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**22. இருளான தன்றி இலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்.**

***இ-ள்:** உலகத்து வெவ்வேறு பலவகைப்பட்ட குணங்களையுடைய பொருள்கள் எல்லாவற்றினையும் ஒரு பொருளாக வேற்றுமை தோன்றாது மறைத்துக்கொண்டு நிற்பது இருளுருவானதற்கன்றிப் பிறிதொரு பொருட்கில்லை என்க.*

***ஆதலால் பிறப்பிறப்புக்களும், வீட்டுநெறியும், காரணங்களும் பகுத்தறியாதபடி மறைத்தது ஆணவம் என்பதாயிற்று.***

***இவை இரண்டுபாட்டானும் ஆணவத்தினது உண்மையும் அஃது இருள்போல மருள்விளைவிற்றென்பதூஉம் கூறப் பட்டன.***

***விளக்கம்:** ஆன்மாக்களின் அறிவினை மறைத்து நிற்றல் ஆணவமலத்தின் இயல்பென்பது உணர்த்துகின்றது.*

*'எவையும் ஏகப்பொருள் ஆகி நிற்கும் பொருள், இருளானது அன்றி இலது' என மாற்றிப் பொருள் கொள்க. இருளானது-*

*இருள்வடிவாய பொருள்; என்றது, இருள் மலமாகிய ஆணவத்தை. ஏகப்பொருளாகி நிற்றலாவது பலவகைப்பட்ட குணங்களையுடைய எல்லாப்பொருள்களையும் அவற்றின் வேற்றுமை தோன்றாது தான் ஒருபொருளாகவே மறைத்துக்கொண்டு நிற்றல்.*

*இனி 'இருளானது' என்றது, புறத்தே காணப்படும் பூதஇருளைக் குறித்ததாகக்கொண்டு, "பூதஇருளானது சர்வ பதார்த்தங்களையும் தனக்குள்ளே கவளீகரித்துக்கொண்டு இருள்தானாய் நின்றதுபோல, ஆணவமலமானது சர்வான் மாக்களையும் தன்னுள்ளே மறைத்துக்கொண்டு ஆணவமலந்தானாய் நிற்கும்" எனப்பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்.*

*புறத்தே காணப்படும் இருளாகிய பூதஇருள், உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் அகத்திட்டு மறைத்துக் கொண்டு தான் ஒருபொருளேயாய் மறைத்து நின்றாற்போல, அகவிருளாகிய ஆணவமலமும் எல்லாவுயிர்களையுந் தன்னுள்ளே மறைத்துக் கொண்டு எல்லாந்தானேயாய் நிற்கும் தன்மையது என்பதாம். இஃது எடுத்துக்காட்டுவமை.*

*அகவிருளாகிய ஆணவம் மறைக்குந் திறத்திற் பூத இருளை ஒத்ததுதானோ என வினவிய மாணாக்கர்க்கு அதனின் மிக்கதாதலைப் புலப்படுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**23. ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்;**
**இருபொருளுங் காட்டா திது.**

***இ-ள்: அந்தகாரமானது, வேறொரு பொருளையுங் காணாமல் மறைத்துத் தன்னுருவம் காட்டி நிற்கும்; ஆணவ மானது தன்னுருவத்தையும் ஞானத்தையும் காட்டாமல் நிற்கும் என்க.***

***இதனால், இவ்விருளினும் மிகக் கொடியது ஆணவ மென்று கூறப்பட்டது.***

***விளக்கம்:** ஆணவமல மறைப்பின் கொடுமையினை உணர்த்து கின்றது.*

*'இருள் ஒரு பொருளும் காட்டாது, உருவம் காட்டும்; இது, இரு பொருளும் காட்டாது' என இயைத்துப் பொருள் கொள்க.*

*'இருள்' என்றது பூத இருளை. உருவம் என்றது இருளாகிய தன்சொரூபத்தை. 'இது' என்றது அகவிருளாகிய ஆணவமலத்தை. இருபொருள் என்றது, ஆணவமலமாகிய தன்னையும் அதனால் மறைக்கப்படுவதாகிய உயிரறிவையும். புற இருளாகிய பூத இருளும் அகவிருளாகிய ஆணவமலமும் மறைத்தற்றொழிலால் தம்முள் ஒக்குமாயினும், பூத இருளானது பண்டபதார்த்தங்கள் எல்லாவற்றையும் மறைத்தும் மறைத்து நிற்பதாகிய தான் இதுவெனத்தோன்றி நிற்கும்; அகவிருளாகிய ஆணவமலமோ பொருள்களை மறைத்தலொடு இன்ன தன்மைத்தென ஒருவருமுணராதவாறு தன்னையும் மறைக்கும் திண்மையுடையது-என்பதனைத் தெளிவாக விளக்குதலால், இது, வெளிப்படையாக வந்த வேற்றுமையணியின் பாற்படும். இவ்வாறு தன்னால் மறைக்கப்படுவதாகிய உயிரையும் மறைத்து நிற்பதாகிய தன்னையும் காட்டாத திணிந்த இருளாதல்பற்றி இவ்வாணவமலத்தினை 'இருளாயவுள்ளத்தின் இருள்' என ஏனைய இருளின் வேறுபடுத்துரைப்பர் திருநாவுக்கரசர்.*

*ஆணவம் எனப்படும் இவ்விருள்மலம் ஆதியோ அனாதியோ எனவினவிய மாணாக்கர்க்கு அஃது அனாதியாதலை விளக்குவது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**24. அன்றளவி யுள்ளொளியோ டாவி யிடையடங்கி**
**இன்றளவு நின்ற திருள்.**

***இ-ள்:* *அக விளக்காகிய ஞானத்தினோடே தானும் அனாதியே கலந்துகொண்டு, அந்த ஞானத்தின்மேற் படராது உயிரளவிலே அமைவுற்று, இதுநாள் வரையும் நீங்காது நின்றது ஆணவமாகிய அந்தகாரம் என்க.***

***உள்ளொளியோடென்பது, உயர்வின்கண் வந்தது; 'ஒருவினையொடுச்சொ லுயர்பின் வழித்தே' (தொல்-575) என்பது இலக்கணமாதலின்.***

***இதனால், ஆணவமாகிய அந்தகாரம் அனாதியென்பதூஉம், மாயை கன்மம் போல நீங்கிப் புணர்ந்த தன்றென்பதூஉம் கூறப்பட்டன.***

***விளக்கம்:*** *இருள்மலமாகிய ஆணவம் அனாதியே உயிரைப் பிணித்துள்ளது என்பது உணர்த்துகின்றது.*

*'உள்ளொளியோடு அன்று அளவி ஆவியிடை அடங்கி இன்றளவும் நின்றது இருள்' என இயைத்துரைக்க. உள்ளொளி, ஆவியிடை அன்று அளவி நிற்றல்போல் ஆவியிடை அன்று அளவி இன்றளவும் இருள் நின்றது-என்க. உயர்ந்த ஒளியினைச்சார்த்தி இருளினை யுடன் கூறினாராதலின் ஒடுவுருபு உயர்பின் வழித்தாயிற்று. அன்று-அனாதியே. அளவுதல். கலத்தல். உள்ளொளி-அகவிளக்காகிய ஞானம்; என்றது, உயிர்க்குயிராய்க் கலந்து நிற்கும் சிவபரம் பொருளை. ஊனினை யுருக்கி உள்ளொளிபெருக்கி' (திருவாசகம்- **544**) எனவும், 'ஓராதார் உள்ளத்தொளிக்கும் ஒளியானே' (மேற்படி சிவபுராணம்) எனவும் வரும் திருவாதவூரடிகள் வாய்மொழிகளை யுளத்துட் கொண்டு 'உள்ளொளி' எனக்குறித்தார். ஆவி-உயிர். உயிர்களை அனாதியே பற்றியுள்ள ஆணவ இருளானது, உயிர்க்குள் ஒளியாய்க்கலந்து நிற்கும் சிவஞானத்தின்மேற் படரும் வலியின்றி உயிரளவிலேயே அமைந்து நின்றது என்பார், 'ஆவியிடை அடங்கி நின்றது' என்றார். இன்றளவும்- (இருவினையும் நேராதல் வேண்டும் என எண்ணும்) இந்நாள் அளவும்.*

*உயிர்கள்தோறும் உள்ளொளியாய்த்திகழும் சிவஞானத்துடன் உயிர்கள் பொருந்த ஒட்டாமல் அனாதியே உடனிருப்பதால் உயிர்களிடத்திலே பொருந்திநின்று, இறையருளால் இருவினை யொப்பு ஏற்பட்டுத் தான் கழலும் பக்குவத்தினையுற்ற இந்நாள்வரையிலும் ஆன்மாவை மறைத்து நிற்பது ஆணவமலம் என்பதாம்.*

*ஆணவமலம் ஒன்றே உயிர்களை அனாதியே பிணித்து நிற்பதாயின் அதனை ஆன்மாக்கள் அறியாதிருப்பானேன்? என வினவிய மாணாக்கர்க்கு இருள்மலத்தின் மறைப்பாற்றலை அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**25. பலரைப் புணர்ந்துமிருட் பாவைக்குண் டென்றும்
கணவர்க்குந் தோன்றாத கற்பு.**

***இ-ள்:* *எண்ணிலராகிய ஆன்மாக்களைப் பேதமறக் கலந்து இடையறாது நின்றாலும், இருள்மலமாகிய மகளுக்கு ஒருநாளுந் தனது தலைவராகிய ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாது நிற்பதோர் நியமமுண்டு என்க.***

***பாவை எனவும் கணவர் எனவும் கூட்டம் பற்றி உருவகஞ் செய்ததன்றி ஆண்குறி பெண்குறி அவ்விடத் தில்லையெனக் கொள்க. என்றும் என்றதனால் கேவல சகல சுத்தம் மூன்றினும் என்பதூஉம் பெற்றாம். சிறப்பும்மை இரண்டனுள் பின்னது இழிவு குறித்து நின்றது; இடை நின்ற உம்மை முற்றும்மை.***

***இதனால் ஆணவத்தினது தன்மை கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இருள்மலம் ஒன்றே எண்ணிறந்த ஆன் மாக்களையும் பற்றி மறைத்து நிற்குமாறு கூறுகின்றது.*

*பலர் என்றது எண்ணிலவாகிய உயிர்களை. இருட்பாவை என்றது, இருள்மலமாகிய ஆணவத்தை. கூடி நின்று மயக்குதல் பற்றி இருளைப் பெண்ணாகவும், கலந்து ஒன்றாய் மயங்குதல் பற்றி உயிர்களை ஆணாகவும் உருவகஞ் செய்தார். 'மோகமிக உயிர்கள்தொறும் உடனாய் நிற்கும் மூல ஆணவம்' (சிவப்-**32**) என இந்நூலாசிரியர் முன்னர்க் கூறியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத்தகு வதாகும். 'கணவர்க்கும்' என நிரம்ப அழகிய தேசிகரும், 'கணவற்கும்' எனச் சிந்தனையுரையாசிரியரும் பாடங்கொண்டு பொருள் வரைந்துள்ளார்கள். கற்பு என்பது, ஆணவமலத்திற்குக் கொள்ளுங்கால் நியமம் என்ற பொருளையும், பெண்ணுக்குக் கொள்ளுங்கால் கற்பின்மை என்ற குறிப்புப்பொருளையும் தருவதாகும்.*

*புறத்தே தோன்றும் இருளானது, தான் ஒன்றாயிருந்தும் பல கண்களையும் மறைத்தாற்போல, ஆணவமலம் தான் ஒன்றாயிருந்தும் எண்ணிறந்த ஆன்மாக்களையும் கூடி நின்று மறைக்கும் என்பதாம்.*

*ஆணவம், உயிரறிவை மறைத்துள்ளது என்பது உண்மையாயின், அதன் தன்மையினை விளங்க அறிவுறுத்தல் வேண்டும் என்ற மாணாக்கர்க்கு, உயிரியல்பின்வைத்து இருள்மலத்துண்மையினை வற்புறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**26. பன்மொழிக ளென்னுணரும் பான்மை தெரியாத**
**தன்மையிரு ளார்தந் தது.**

**இ-ள்: பற்பல வார்த்தைகளாற் பயனென்னை? அறிய வேண்டும் பொருள்களை யறியும்பகுதி தோன்றாது நின்ற இயல்பெல்லாம் கருமைநிறத்தினையுடைய மூலமலமாயினார் கொடுத்தது என்க.**

**அறிய வேண்டும் பொருள்களாவன, பதி, பசு, பாசம் என மூவகைப் பொருள்களும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற நால்வகை ஒழுக்கமுமாம். இருளார் என்பது செறலின்கண் வந்த அஃறிணை வழுவமைதி.**

**இதனால், மூலமலத்தினால் வந்த அறியாமை வலியுறுத்தப் பட்டது.**

***விளக்கம்:*** *வியாபகமாகிய உயிரறிவை அணுத்தன்மைப் படுத்து மறைத்து நிற்பது ஆணவமலம் என்பது உணர்த்துகின்றது.*

*பல் மொழிகள் என்-பல சொற்களால் பாரித்து உரைப்பது எதற்கு? உணரும் பான்மை தெரியாத தன்மையாவது', தானே அறியும் முறைமையை மேற்கொண்டு அறியமுடியாத படி இருளோடொன்றாம் தனிநிலையாகிய கேவலத்திலும், உடல் கருவி உலகு நுகர்பொருள்களைப் பெற்றுள்ள கலப்புநிலையாகிய சகலத்திலும் உயிராகிய தன்னையும், தன்னைப்பிணித்துள்ள பாசங்களையும், உடனின்றுதவும் தலைவனையும் அறியாதவாறு அறிவு மறைக்கப்பட்டிருத்தல். இத்தன்மை இருள் மலத்தால் விளைந்தது என்பார். 'உணரும் பான்மை தெரியாத தன்மை இருளார் தந்தது' என்றார். இருள் என்னும் அஃறிணையை 'இருளார்' என ஆர்விகுதி கொடுத்து உயர்திணை போற் கூறியது, எல்லையற்ற துன்பங்களுக்கு மூலமாகிய அம்மலத்தின் கொடுமை பற்றித் தோன்றிய வெகுளியால் வந்த திணைவழுவமைதியாகும்.*

*இருள்மலத்தினைக் குறித்துப் பல சொற்களால் விரித்துக் கூறுவது எதற்கு? அறியுந்தன்மையினவாகிய ஆன்மாக்கள், பசுவாகிய தம்மைப்பற்றியும், தம்மைப் பிணித்துள்ள பாசங்களைப் பற்றியும், உயிர்க்குயிராய் உடனின்றுதவும் தலைவனைப் பற்றியும் தாமே உணரும் வன்மையின்றிப் பிறர் உணர்த்த உணரும் நிலையில் அறிவு மறைக்கப்பட்டிருத்தலாகிய இத்தன்மையானது, உயிர்களை அனாதியே பற்றியுள்ள ஆணவ இருளால் விளைந்ததேயாகும் என்க.*

உணருந்தன்மையினவாகிய உயிர்கள் அனாதியே இருள் மலத்தால் மறைக்கப்பட்டமையால் எவற்றையும் தாமே அறியவல்ல அறிவுக்கண்ணிழந்து அல்லற்படும் தன்மையின வாதலை,

**"இருள்தரு துன்பப்படலம் மறைப்ப மெய்ஞ்ஞானமென்னும்**
**பொருள்தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த**
**குருடரும்" (4-92-4)**

என உலகின்மேல் வைத்தும்,

**'இருளற நோக்கமாட்டாக் கொத்தையேன்' (4-69-1)**

எனத் தம்மேல்வைத்தும் அப்பரடிகளார் உயிரைமறைத்துள்ள இருள்மலத்தின் உண்மையினை அறிவுறுத்தியுள்ளமை இங்கு ஒப்புநோக்கியுணரத்தகுவதாகும்.

ஆணவமலம் என்பதொன்று இல்லை என்றால் வரும் குற்றம்யாது? என வினவிய மாணாக்கர்க்கு, உயிரியல்பின் வேறாக இருள்மலம் என்பதொன்று உண்டு என அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**27. இருளின்றேற் றுன்பென் உயிரியல்பேற் போக்கும்**
**பொருளுண்டேல் ஒன்றாகப் போம்.**

***இ-ள்:* இருளாகிய அவிச்சை இல்லையாயின், இந்திரியங்கட்கு ஏவல் செய்யும் பிறவித் துன்பம் படற்குக் காரணம் என்னை? அஃது ஆன்மாவினது சுபாவமாயின் நீங்காது; நீக்குஞ் சிவஞானம் உண்டாயின் அதனுடனே உயிருங் கெட்டுப்போம் ஆதலால். எனவே பிறவித் துன்பத்திற்கு நிமித்தம் அவிச்சை என்பதாயிற்று.**

***இதனால், அவிச்சையில்லை யென்பாரை உண்டென்று மறுத்துக் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** உயிர்கள்படும் எல்லாத் துன்பங்கட்கும் காரணமாய் உயிர்களைப்பற்றியுள்ள குற்றம் ஆணவமலம் என்பது உணர்த்துகின்றது.

ஆணவமலம் என்பதொன்று உயிர்களைப்பிணித்து நிற்க வில்லை என்று அதன் உண்மையை மறுத்துரைப்பாயாயின் ஒரு

குற்றமுமில்லாத உயிர்களுக்குச் சுகதுக்கங்களாகிய வேதனை வருவானேன்? அங்ஙனம் வேதனையுறுதல் ஆன்மாவுக்கு இயற்கை என்று நீ சொல்வாயாயின் அவ்வேதனையைப் போக்க வல்ல பொருளாகிய சிவஞானம் தோன்றுங்கால் அவ்வேதனைக் குணமுடைய குணியாகிய ஆன்மாவும் கெட்டொழியும் எனக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறன்றித் துன்பத்திற்குக் காரணமாகிய இருள்மலத்தின் வலிகெட்டொழிய, என்றும் நிலைபேறுடைய உயிர்கள் பேரின்பத்தைத் தலைப்படுதலால், ஆணவமலத்தினை உயிரின் இயல்பாகக் கூறுதல் ஒரு சிறிதும் அடாதென்பதாம்.

இவ்விருள்மலம், உயிர்களை அனாதியே பற்றியுள்ள தென்பதனைவிட இடையில் வந்தேறியது எனக் கூறலாகாதோ என வினவிய மாணாக்கர்க்கு, மலம் அனாதி என அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**28. ஆசாதி யேலணைவ காரணமென் முத்திநிலை
பேசா தகவும் பிணி.**

***இ-ள்: அவிச்சை இடையிட்டு வந்ததாயின், அஃதோர் காரணமில்லாமல் வந்து பொருந்திய தென்னை? அன்றி முத்தியினும் உரையாடாது வந்து கவர்ந்து கொள்ளுமன்றோ என்க.***

***உரையாடாது கவர்தல், தோன்றாது விரைவிற் கவர்தல் இதனால், அவிச்சை ஆதி என்பாரை மறுத்துக் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இருள்மலம் அனாதி என்பது உணர்த்துகின்றது.*

*ஆசு ஆதியேல் அணைவகாரணம் என்? முத்திநிலை(யினும் பிணி பேசாது அகவும் என இயைத்துரைக்க. ஆசு-(ஆணவமலமாகிய) அழுக்கு; அவிச்சை. ஆதி-முன் ஒருகாலத்தில் இல்லாதிருந்து இடையே ஒருகாலத்தில் வந்து தோன்றியது. இடையே தோன்றிய தன்றி முன்னமேயுள்ளதனை அனாதி என வழங்குவர். முத்தி நிலையினும் என உருபும் உம்மையும் விரித்துப் பொருளுரைக்கப் பட்டது. பேசாது அகவுதல்- உரையாடாது கவர்தல்; என்றது எத்தகைய முன்னறிவிப்பு மின்றி விரைவில் வந்து பற்றிக்கொள்ளுதல். இனி முத்தி நிலை பேசாது எனவும் பணி அகவும் எனவும் இயைத்து,*

*'மோட்ச நிலையுண்டென்று சொல்ல வேண்டுவதில்லை; பிணி மீளவும் வந்து பொருந்தும்' எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்.*

*உயிர்களைப்பற்றியுள்ள இருள்மலமானது, இடையில் ஒரு காலத்தே வந்து தோன்றியதெனக் கூறுவாயானால் முன்னமே தூயதாயிருந்த ஆன்மாவின்கண்ணே அக்குற்றம் வந்து பொருந்துதற்குக் காரணம் யாது? ஒரு காரணமுமின்றி அது தானே வந்து பொருந்தும் என்பாயாயின், காரணமின்றி வந்து பொருந்தும் அக்குற்றம் உயிர் பாசப்பிணிப்பினின்றும் நீங்கித் தூய்மைநிலை பெற்ற முத்திக்காலத்திலும் வந்து பொருந்துதல் கூடுமன்றோ? அங்ஙனமின்றி ஆணவமலம் முத்திக்காலத்தே தன் வலிகெட்டு அடங்குதலின் அதனை அனாதியென்றலே ஏற்புடையதென்பதாம்.*

*அங்ஙனமாயின், இருள்மலமாகிய ஆணவம் உயிரை விட்டு என்றும் நீங்குவதில்லையோ! என வினவிய மாணாக்கர்க்கு. அது தன் வலிகெட்டுச் சிதையும் முறையினை உவமையில் வைத்து விளக்குவது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**29. ஒன்று மிகினும் ஒளிகவரா தேலுள்ளம்**
**என்றும் அகலா திருள்.**

***இ-ள்:*** ***மல மாயை யென்னும் இரண்டினுள் மலமாகிய இருள், வியாபகம் எல்லாம் மறைத்த தாயினும், ஏகதேச விளக்கமாகிய மாயாகாரியத்தினை உயிர்கள் கவர்ந்து கொள்ளாதாயின், எந்த ஞான்றும் அவ் அவிச்சை அவைகளை விட்டு நீங்குவதில்லை என்க.***

***கவரும் தன்மை உயிர்களுக்கு உண்டாக வேண்டும் என்பது கருத்து. என்றும் என்பது, அருள் உதயமான காலத்தினும் என்பது காட்டி நின்றது.***

***இதனால் உயிர்கள் அவிச்சை நீங்கி முத்தியடைவதற்கு ஓர் நிமித்தம் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *அனாதியே உயிரைப்பற்றியுள்ள இருள்மலம் உயிர்க்குயிராகவுள்ள ஒளியாகிய சிவஞானம் மேலிடுங்கால் தன் வலியழிந்து சிதையுமாறு கூறுகின்றது.*

இதன்கண் 'ஒன்று' என்றது ஆணவ இருளையென்றும். 'ஒளி, என்றது மாயாகாரியத்தினை என்றும் நிரம்ப அழகிய தேசிகர் பொருள்கொண்டார். ஒன்று என்றது பூதஇருளை எனவும் ஒளி என்றது விளக்கு மின்மினி முதலிய ஒளியுடைப் பொருள்களை எனவும் கொண்டு, "பூத இருளானது மேலிட்ட காலத்து விளக்கு மின்மினிக்கு இடங்கொடாதிருந்ததேயானால் ஆன்மாவை ஆணவமலமானது ஒருகாலமும் விட்டு நீங்காது" எனப் பொருளுரைத் தார் சிந்தனையுரையாசிரியர். எனவே பூத இருள் விளக்கு முதலியவற்றின் ஒளிக்கு விலகியிடந்தருதல் போன்று, ஆணவஇருளும் மாயாதநு விளக்குக்கு இடந்தந்து ஓரளவு விலகக் கூடியதே என்பது கருத்தாயிற்று. மிகுதல்-மேற்படுதல். கவர்தல் என்றது கட்புலனாதலை உள்ளம்-ஆன்மா.

ஆணவத்தினை 'இருள்' என வழங்கினாற்போன்று ஆணவ வல்லிருளால் அடரப்படாது மேற்பட்டு விளங்கும் சிவஞானத்தை 'ஒளி' என வழங்குதல் இந்நூலாசிரியர் மேற்கொண்ட சொல்மரபாகும். இந்நுட்பம்,

> **"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றேயிடம், ஒன்று**
> **மேலிடின் ஒன்று**
> **ஒளிக்கும், எனினும் இருள் அடராது"** *(1)*

என வரும் கொடிக்கவியால் இனிது புலனாதல் காணலாம். சிவஞானமாகிய ஒளிக்கும் ஆணவமாகிய இருளுக்கும் இடம் ஒன்றே. உயிரின்கண் ஒன்று மேலிட்ட காலத்திலே ஒன்று ஒளித்து நின்றாலும் ஒளியாகிய சிவஞானத்தினை ஆணவமாகிய இருள் மீதூர்ந்து மறைத்தல் இயலாது" என்பது மேற்காட்டிய தொடரின் பொருளாகும். ஆகவே உயிரின் கண் நீங்காதுறையும் ஒளியாகிய சிவஞானம் மேற்பட்ட நிலையிலே ஆணவமாகிய இருள் தன்வலி குன்றிச் சிதையும் என்பது ஆசிரியர் கருத்தாயிற்று. எனவே, ஒன்றுமிகினும் ஒளிகவராதேல் உள்ளம் என்றும் அகலாதிருள்' என்னும் இக்குறள் வெண்பாவுக்கு "பூத இருளானது மேலிட்ட காலத்தில் ஞாயிற்றின் ஒளி, கட்புலனாற் கவரப்படாது அடங்கியிருக்கு மாயின், ஆணவ இருளும் ஆன்மாவைவிட்டு என்றும் நீங்குதல் இல்லை" எனப்பொருள்கொண்டு, எங்கும் பரவியுள்ள பூத

இருளானது, ஞாயிற்றினொளி மேற்பட்டுக் கட்புலனாய் விளங்கித் தோன்றிய காலத்துத் தான் இருந்த இடந்தெரியாது தேய்ந்து சிதையுமாறுபோல. உயிரின் வியாபகத்தை மறைத்துள்ள ஆணவ இருளும் உயிரின் கண்ணே சிவஞானமாகிய ஒளி மேற்பட்டுத் தோன்றிய பொழுது தன்வலி குன்றித் தான் இருந்த இடந்தெரியாமல் மறைந்தொழியும்' என விளக்கங் கூறுதல் ஏற்புடையதாகும். புறவிருள்கடியும் ஞாயிறே போன்று ஆணவ இருள் கடிதற்கு நிமித்தமாவது சிவஞானப் பேரொளி ஒன்றே என்னும் இவ்வுண்மையினை,

**'இன்றெனக் கருளி இருள்கடிந்துள்ளத்**
**தெழுகின்ற ஞர்ஞயிறே போன்று**
**நின்ற நின் தன்மை நினைப்பற நினைந்தேன்.**

*(திருவாசகம்-394)*

எனத் திருவாதவூரடிகள் தெளிய விளக்கியுள்ளமை இங்கு ஒப்பு நோக்கியுணரத் தகுவதாகும்.

உயிரினது அறிவை மறைத்து நிற்பது இருள்மலம் என வேறொன்றுளதாகக் கூறுவது ஏன்? உயிரின் அறிவை மறைத்து நிற்பது மாயையே யெனக்கொண்டால் வரும் குற்றம்யாது? என வினவிய மாணாக்கர்க்கு, 'மாயை உயிரின் அறிவை ஒரளவு விளங்கச்செய்யும் பொருளேயன்றி மறைக்கும் பொருளன்று' என அறிவுறுத்துவது, அடுத்து வரும் குறள் வெண்பாவாகும்.

30. **விடிவா மளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து.**

*இ-ள்:* **சிவனுடைய ஞானமாகிய கிரணந்தோன்றி ஆணவ இருள் நீங்குமளவும் மாயையினிடத்திலே நின்றும் தனு கரண புவன போகங்கள் தத்தம் புண்ணிய பாவங்களுக்கு ஈடாகத் தோன்றிச் சிறிதே மல இருளினை நீக்கி விடய வின்பங்களைக் காட்டும் விளக்குகள் போலவாம் என்க.**

**மலமும் மாயையும், இருளும் ஒளியும் போலத் தம்முள் மாறுடைய என்பதாயிற்று. சிறிதே நீக்குதல் விளக்கனைய என்பதனாற் பெற்றாம். விடிவாமளவும் என்பதனால், மாயா**

**காரியங்கள் சங்கார காலத்தில் தமது காரணத்திலே யடங்கினும், உயிர்களை விட்டு நீங்கினவன் றென்பதாம். "இருளிரி சுடரிரண்டா நின்ற முழுமல மாயை" என்றருளிச் செய்தவாறு காண்க.**

**இதனால், அவ்வவிச்சையால் நீங்காது தொடர்ந்து நின்ற மாயை கருமம், இரண்டின் முறைமையுங் கூறப்பட்டது.**

***விளக்கம்:*** *இருள்மலமும் மாயையும் தம்முள் மாறாதலை உணர்த்துகின்றது.*

*மாயை வடிவு ஆதி, கன்மத்து வந்து, விடிவு ஆம் அளவும் விளக்கு அனைய என முடிக்க, விடிதல்-இருள் நீங்கிப் பொழுது புலர்தல் மாயையினின்றும் என ஐந்தாமுருபு விரித்துரைக்க, வடிவு ஆதி- உடம்பு முதலியன; தனுகரண புவனபோகங்கள். மாயையின் காரியமாகிய இவை மாயேயம் என வழங்கப்படும். கன்மம்-வினை. கன்மத்து-வினையால்; புண்ணிய பாவங்களாகிய இருவினைக்கு ஈடாக, 'வந்து' என்னும் செய்தெனெச்சம் விளக்கனைய என்புழி 'அனைய' என்னும் தன்கருத்தாவின் வினைகொண்டு முடிந்தது 'வடிவு ஆதி' என்னும் எழுவாய், 'அனைய' என்னும் பயனிலை கொண்டு முடிந்தது.*

*ஞாயிறு தோன்றிப் பொழுது புலருமளவும் விளக்கானது பூதஇருளை ஓரளவு நீக்கிக் கண்ணுக்குப் பொருள்களைக் காட்டிக்கொண்டு நிற்பதுபோல, உயிர்கட்குச் சிவம் பிரகாசித்து ஆணவ இருள் பொன்றக்கெடும் தூய நிலை தோன்றுமளவும் ஆணவஇருளை ஓரளவுவிலக்கி உயிரறிவுக்குத் துணைநின்று உதவுவன தனுகரண புவன போகங்களாகிய மாயேயங்களாகும். ஆகவே, இவ்வாறு உயிர்கட்குச் சிறிது அறிவுவிளக்கத்தை யுண்டு பண்ணும் மாயையும், இவ்வாறன்றி உயிரறிவை அனாதியே மறைத்து நிற்கும் ஆணவமும் தம்முள் மாறுபட்ட இருவேறு தன்மையன என்றவாறு.*

**'கலையாதி மண்ணந்தங் காணில் அவை மாயை**
**நிலையாவாந் தீபமே போல' (சிவஞானபோதம்8.7)**

**'மாயா தனு விளக்காம்' (மேற்படி 4, 5)**

*என மெய்கண்டாரும்,*

**'மலமென வேறொன்றில்லை மாயாகாரியம தென்னின்**
**இலகுயிர்க் கிச்சா ஞானக் கிரியைகள் எழுப்பும் மாயை;**
**விலகிடும் மலம் இவற்றை, வேறுமன் றதுவேறாகி**
**உலகுடல் கரணமாகி உதித்திடும் உணர்ந்துகொள்ளே'**
**(சித்தியார் சுபக்கம்-171)**

*என அருணந்தி சிவனாரும் கூறிய விளக்கங்களை அடியொற்றி இந்நூலாசிரியாராகிய உமாபதி சிவனார் உலகு உடல் கருவி நுகர்பொருள்களாகிய மாயேயங்களுக்கு விளக்கினை உவமை கூறிய திறம் கூர்ந்துணரத் தக்கதாகும்.*

*இருளை நீக்குந் திறத்தில் துணையாய் நின்றுதவும் விளக்கு, காற்றால் அலைப்புண்டு தளரும் நிலையில், இருள் அவ்விளக்கினை மீதூர்தல் உண்டென்பது, 'விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல்' (திருக்குறள்-**1186**) எனத் திருவள்ளுவர் காட்டிய உவமையால் உய்த்துணரப்படும். 'விளக்கு அனைய' என்னாது, விடிவாம் அளவும் விளக்கு அனைய' என விதந்து கூறியதனால் ஞாயிறு தோன்றிப் பொழுது புலர்ந்த நிலையில் விளக்குத் தன்னொளி மழுங்கி யடங்குதல் போன்று, உயிர்கட்குச் சிவஞானம் பிரகாசித்த அளவில் இருவினைக் கீடான மாயேயங்களாகிய இவையும் பாசங்களென விலக்கப்பட்டு ஒளி மழுங்கி மறைவன என, ஒழிந்த மாயை கன்மங்களது இயல்பும் உடன் கூறியவாறு.*

### *4.* அருளதுநிலை

***அஃதாவது, கருணையுருவாகிய ஞானத்தின் முறைமை. இத்தன்மையவாகிய அவிச்சையைத் துறந்து வீட்டு நெறி காட்டுதற்பொருட்டு, அதற்கு (அவ்வவிச்சைக்கு) மாறாகிய அருளினது முறைமை கூறலின், மேலை அதிகாரத்தினோடு இதற்கு இயைபுண்மையறிக,***

**31. அருளிற் பெரிய தகிலத்தில் வேண்டும்**
**பொருளிற் றலையிலது போல்.**

***இ-ள்: ஒருவர்க்கு எல்லாப் பொருள்களுள்ளும் தாம் விரும்பிய பொருளின் மேலாய பொருள் இல்லாதவாறு போலத் திருவருளின் மிக்கதாகிய பொருள். உலகத்தில்லை என்க.***

**இதனால் அருளது உயர்வு கூறப்பட்டது.**

***விளக்கம்:*** *உயிர்க்குயிராய் நின்று உலகினை இயக்கியருளும் இறைவனோடு பிரிப்பின்றி நிற்கும் அருளின் பெருமையினை விளக்குவது, அருளதுநிலை என்னும் இவ்வதிகாரமாகும். அருள் என்பது, தொடர்பு பற்றாது எல்லாவுயிர்கள் மேலும் செல்வ தாகிய கருணையாகும். அன்பு அருள் என்னும் இப்பண்புகள் உயிர்களுக்குரிய குணமெனப் பொதுவாகப் பேசப்பட்டாலும், வேண்டுதல் வேண்டாமையின்றி எல்லா உயிர்கள்மேலும் செல்வதாகிய கருணை அறவாழியந்தணனாகிய இறைவனொருவனுக் கேயுரிய சிறப்பியல்பென்பதும், இவ்வியல்பு இறைவனை விட்டுப் பிரிக்கவொண்ணாத இயற்கைப் பண்பென்பதும், தன்னிற் பிரிவிலா இவ்வருட் பண்பினையே இறைவனுக்குச் சத்தியெனச் சான்றோர் உருவகஞ் செய்து போற்றியுள்ளார்கள் என்பதும் சைவத்திருமுறைகளிலும் அத்திருமுறைகளின் பயனாக விளங்கும் மெய்கண்ட நூல்களிலும் நன்கு புலப்படுத்தப் பெற்றுள்ளன.*

**"அருளே யுலகெலாம் ஆள்விப்ப தீசன்**
**அருளே பிறப்பறுப்ப தானால்-அருளாலே**
**மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்**
**எப்பொருளும் ஆவ தெனக்கு"   (அற்புதத்திருவந்தாதி 9.)**

*எனக் காரைக்காலம்மையாரும்*

**'அருளது சத்தியாகும் அரன்தனக் கருளையின்றித்**
**தெருள் சிவமில்லை அந்தச் சிவமின்றிச் சத்தியில்லை**
**மருளினை அருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன்**
**கண்கட்கு**
**இருளினை ஒளியால் ஓட்டும் இரவியைப் போல ஈசன்.**
**(சித்தியார்- சுபக் 239)**

*என அருணந்தி சிவனாரும் முதல்வனது அருளைப்பற்றிக் கூறும் விளக்கங்கள் இங்கு நினைக்கத் தக்கனவாகும்.*

*அனாதியே இருள்மலத்தில் அழுந்தி அறிவுக் கண்களையிழந்து உண்பொருள் நாடிப் புகலிழந்து குருட்டு நிலையில் நின்று அல்லற்படும் உயிர்த் தொகுதிகளை இருட்குழியினின்று தன்*

அருளாகிய கைகொடுத்துக் கரையேற்றி உய்வித்தருளுதல் இறைவனது திருவடியெனப் போற்றப்பெறும் திருவருளின் செயல் என்பதனை,

**'இருள்தரு துன்பப் படல மறைப்ப மெய்ஞ்ஞானமென்னும்**
**பொருள் தரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த**
**குருடரும் தம்மைப் பரவக் கொடுநரகக் குழிநின்**
**றருள் தரு கைகொடுத் தேற்றும் ஐயாற னடித்தலமே'.**

எனவரும் திருவிருத்தத்தில் திருநாவுக்கரசர் தெளிவாக விளக்கியுள்ளார். உயிர்கள் மேலே குறித்தவாறு அனாதியே பற்றியுள்ள இருள்மலப் பிணிப்பினின்று நீங்கி உய்தற்குத் துணைசெய்து உடன் நிற்பது இறைவனது திருவருளே யாதலின், இருள்மல நிலை என்னும் அதிகாரத்தையடுத்து அருளினது பெருமை கூறும் அருளதுநிலை என்னும் இவ்வதிகாரம் வைக்கப் பெறுவதாயிற்று.

எல்லா அறங்களுக்கும் மூலமாவது அருள் எனவும், அறத்திற்கும் அருளுக்கும் நிலைக்களமாகத் திகழ்வோன் அறவாழி அந்தணனாகிய இறைவன் எனவும் அறிவுறுத்திய திருவள்ளுவர், இல்லறத்தின் வழுவாதொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு இன்றியமையாத பண்புகளுள் அருளுடைமையினை முதற்கண் வைத்தோதினார். தெய்வப் புலவரால் எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராகிய துறவிகள் மேல்வைத்துப் பொதுவகையால் உணர்த்தப்பட்ட அருள் என்பது, அவ் அந்தணராகிய அறவோரால் வணங்கப்பெறும் அறவாழி யந்தணனாகிய இறைவனுடன் பிரிப்பின்றி விளங்கும் சத்தியே என்னும் உண்மையைச் சிறப்புவகையால் அறிவுறுத்த எண்ணிய உமாபதிசிவாசாரியார். திருக்குறளிலமைந்த அருளுடைமை என்னும் அதிகாரத்தை யடியொற்றி அருளது நிலை என்னும் இவ்வதிகாரத்தை அமைத்துள்ளார். இந்நுட்பம் இவ்விரண்டு அதிகாரங்களையும் ஒப்பு நோக்கிப் பயில்வார்க்கு இனிது விளங்கும்.

அருளது நிலை என்னும் இவ்வதிகாரத்தின் முதற் குறள், மக்கள் பெறுதற்குரிய செல்வங்கள் அருளின்மிக்கது வேறொன்றுமில்லை என அறிவுறுத்துகின்றது.

'வேண்டும் பொருளின் தலையிலதுபோல், அருளின் பெரியது அகிலத்து இல்' என நிரம்பவழகிய தேசிகரும், அகிலத்து வேண்டும் பொருளின் தலையிலது போல், அருளின் பெரியது இல்' எனச் சிந்தனையுரையாசிரியரும் இக்குறள் வெண்பாவை இயைத்துப் பொருள் உரைப்பர். இவ்விருவரும் 'அகிலத்தில்' என்றே பாடங் கொண்டு பொருள் வரைந்திருத்தலால் அதுவே இங்கு மூல பாடமாகக் கொள்ளப்பெற்றது.

'அகிலம்' என்பது உலகெலாம் என்னும் பொருளுடைய வடசொல். தலையாயதனைத் தலை எனக்குறித்தார். தலையாயது-மேலானது. இம்மை யின்பத்திற்கு ஏதுவாக மக்களால் விரும்பப்படும் பொருட்செல்வத்திற்குமேலாகச் சிறப்புடைய தொன்று இவ்வுலகில் இல்லாதவாறுபோல, வீடுபேற்றின்பத்திற்குத் துணையாகிய அருட் செல்வத்தினும் மேலான தொரு பொருள் எவ்வுலகத்தும் இல்லை என்பதாம். இவ்வுலக இன்பங்கட்குப் பொருள்காரணமானாற்போல, இம்மை மறுமை அம்மையாகிய மும்மையின்பங்கட்கும் அருளே காரணம் என்றாயிற்று. எனவே செல்வங்கள் எல்லாவற்றுள்ளும் தலைசிறந்த செல்வம் அருளால் வரும் செல்வமே என்பதும் உடன் உணர்த்தியவாறு. இக்குறள்.

> **'அருட்செல்வம் செல்வத்துட் செல்வம், பொருட்செல்வம்**
> **பூரியார் கண்ணும் உள'** (241)

எனவும்,

> **'அருளில்லார்க் கவ்வுலக மில்லை, பொருளில்லார்க்**
> **கிவ்வுலகம் இல்லாகி யாங்கு'** (247)

எனவும் வரும் திருக்குறள்களின் சொற்பொருள்களை அவ்வாறே அடியொற்றியமைந்திருத்தல் காண்க.

மேற்குறித்த திருவருள் உயிர்கட்குச் செய்யும் உதவியாது? என வினவிய மாணாக்கருக்கு அத்திருவருள் செய்யும் பேருதவியினை விரித்துரைப்பதாக அமைந்தது அடுத்துவரும் குறள்வெண்பா வாகும்.

**32. பெருக்க நுகரவினை பேரொளியாய் எங்கும்**
**அருக்கனென நிற்கும் அருள்.**

**இ-ள்:** *உலகத்து மக்கட் டொகுதிகள் பொருளினை யீட்டவும் துய்க்கவும் நிமித்தமாய் நின்ற சூரியனைப்போல அருளும், உயிர்களெல்லாம் புண்ணிய பாவங்களை வளர்க்கவும் அவற்றின் பயனாகிய சுக துக்கங்களை அருந்தவும் காரணமாய் மிகுந்த ஒளியாகி எவ்விடத்தும் நிறைந்து நிற்கும் என்க.*

*'அருக்கன் என' என்றதனால், அவ்வாறு காரணமாதல் ஒருவராற் செய்து கொள்ளப்பட்டதல்லவாம். பொதுப்பட 'வினை' என்றதனால், புண்ணிய பாவம் இரண்டுமாம். சூரியனைப்போல ஓரிடத்து உண்டாய காலை ஒரிடத்து இன்றாயிருப்பது இல்லை என்பார், எங்கும்' என்று அருளிச் செய்தார்.*

*இதனால் அருள் காரணமாதல் கூறப்பட்டது.*

**விளக்கம்:** *வினைபெருக்க, வினைநுகர, என வினை என்பது ஈரிடத்தும் சென்றியைந்தது. வினை- புண்ணிய பாவம் ஆகிய இருவினைகள். பெருக்குதல்- ஆன்மாக்கள் இருவினைகளைச் செய்து ஈட்டுதல். நுகர்தல்-செய்தல் வினைப்பயன்களாகிய இன்பதுன்பங்களை அநுபவித்தல். அருக்கன்-சூரியன். என- உவமவுருபு. அருக்கன் என, அருள் (ஆன்மாக்கள்) வினைபெருக்க, வினைநுகர. பேரொளியாய் எங்கும் நிற்கும் என இயைத்துரைக்க.*

*மக்கள் தொழில்செய்து பொருள்களை ஈட்டவும் ஈட்டிய பொருள்களை நுகரவும் துணையாய்நின்று இருள் நீக்கி ஒளி வழங்கும் கதிரவனைப்போன்று, திருவருளும் உயிர்கள் புண்ணிய பாவங்களாகிய இருவினைகளைச் செய்தற்கும் செய்த வினைப் பயன்களை நுகர்தற்கும் பேரொளியாய்த் துணைசெய்து எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நிற்கும் என்பதாம்.*

*உயிர்கட்கு அருள் துணைசெய்ய வேண்டுமோ? உயிர்கள் தாமே அறிந்து வினைசெய்து பயன்களை நுகரும் எனக்கொண்டால் வரும் குற்றம் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அருளின் உதவி இன்றியமையாதென்பதனை அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

33. **ஊனறியாதென்றும் உயிரறியா தொன்றுமிவை**
**தானறியா தாரறிவார் தான்.**

***இ-ள்:*** ***அசேதனங்களாகிய தத்துவங்கட்கு எஞ்ஞான்றும் அறிவுண்டாவதில்லை. உயிர்கள் யாதொன்றும் தாமாய் அறியமாட்டார். ஆதலால் அந்த அருள்தான் அறிந்து அறிவியாமல் உலகத்தின்கண் அறிவினைப் பெறுவார் யாவர். எனவே அருளறிந்தறிவித்தே அறிய வேண்டும் என்க.***

***இதனால் அருளிற்கு அறியவேண்டுவதில்லையென் பாரை உயிர்கட்கு அறிவித்தற்பொருட்டு அறியவேண்டும் என மறுத்துக் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *யாதொன்றையும் தாமாக அறியமாட்டாத சிற்றறிவினவாகிய உயிர்கட்கு, எல்லாவற்றையும் அறிந்து அறிவிக்கும் உதவியைச்செய்து துணை நிற்பது திருவருளே என்பது உணர்த்துகின்றது.*

*ஊன்-உடம்பு; என்றது அறிவற்ற சடப்பொருளாகிய தத்துவத்தொகுதியை. ஊன் என்றும் அறியாது என்க. என்றும்-எக்காலத்தும். உயிர்-ஆன்மா. உயிர் ஒன்றும் அறியாது-ஆன்மாவானது ஒரு பொருளையும் தானாக அறிந்துணரும் வன்மையுடையதன்று. தான் அறியாது, இவை அறிவார் ஆர் என இயையும். தான் இரண்டினுள், முன்னது திருவருள். பின்னது அசை.*

*உடம்பு முதலிய கருவிகள் அறிவில் பொருள்களாதலால் அவை தாமாக ஆன்மாவைக்கூடி அறியமாட்டா என்றும் ஆன்மாவுக்குப் பிறர் அறிவித்தாலன்றித் தனக்கெனத் தானே யுணரும் அறிவில்லாமையால் தானாகத் தத்துவங்களைக் கூடி அறியமாட்டாதென்றும், இவையிரண்டையுங் கூட்டிச் செயற்படுத்துவது இறைவனது திருவருளேயென்றும் கூறியவாறு "என்னவே, சிற்றறிவாயுள்ள ஆன்மாவைப் பேரறிவாயுள்ள சிவன் அறிவிக்க அந்த அறிவே ஆதாரமாக ஆன்மா அறிவன் என்றதெனக் கொள்க. இதற்குப் பிரமாணம் திருவாசகத்தில் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' (சிவபுராணம்) எனவும், தேவாரத்தில், 'காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே'* ***(6-95-3)*** *எனவும்*

*வரும் ஏதுக்களைக் கண்டுகொள்க" (சிவப்பிரகாசம்-**65**) என மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கம் இக்குறட்பாவுக்கு மிகவும் ஏற்புடையதாகும்.*

*இவ்வாறு இறைவனது திருவருள் உடனின்று அறிவித்து உபகரித்து வரவும் அதனையுணராது ஆன்மா 'நான் செய்தேன், பிறர்செய்தார்' என்று கூறி நின்று அத்திருவருளை இகழ்ந்து நிற்றல் ஏன்? எனவினவிய மாணாக்கரை நோக்கி, எடுத்துக் காட்டுமுகமாக அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**34. பாலாழி மீன்ஆளும் பான்மைத் தருளுயிர்கள்**
**மாலாழி ஆளும் மறித்து.**

***இ-ள்:** மேலாய அருளின்கட்பட்ட உயிர்கள் அதனோடு பொருந்தி நின்று பேரின்பத்தை நுகராமல் மாயாபோகமாகிய மயக்க வேலையுள் ஆழ்ந்து அழுந்துந் தன்மை. திருப்பாற்கடலின் கண் வைகிய மீன்கள் பாலைப் பருகாது அதனுள் சிறியதாம் பிராணிகளை வருந்தித் தேடியுண்ணும் முறைமையினை யுடைத்து என்க.*

***மீன்களும் பாலைப் பருகுமாயின், செந்துக்களைத் தேடி ஒருகாற் கிடைத்துங் கிடையாதும் உழலாமல், நின்ற நிலையிலேயே வேண்டுமளவும் பருகும். உயிர்களும் அருளினோடு கலந்து நிற்குமாயின், சிற்றின்பங்களைத் தேடி அவ்வாறுழலாமல் பேரின்பத்தினைத் தாமும் அந்நிலையிலே இடையறாது அனுபவிக்கும் என்பதாம்.***

***இதனால், அருளோடு கூடி நின்றும் உயிர்கள் துன்புறும் இழிபு கூறப்பட்டது.***

***விளக்கம்:** உயிர்கள் மருள்விளைக்கும் பிறவிப்பிணிப் யுட்பட்டமையால் தமக்கு ஆதாரமாகிய அருளை அறியாவாயின என்பது உணர்த்துகின்றது.*

*அருள் உயிர்கள். மறித்து மால் ஆழி ஆளும் (தன்மை) பால் ஆழி மீன் ஆளும் பான்மைத்து என முடிக்க. அருள் உயிர்கள்- அருளை ஆதாரமாகக்கொண்டு வாழும் ஆன்மாக்கள். மால் ஆழி- மாயாபோகமாகிய மயக்கக்கடல். திருவருளை இடமாகக்கொண்டு*

வாழும் ஆன்மாக்கள் திருவருளால் வரும் மேலாகிய பேரின்பத்தை நுகர்ந்து இன்புறாமல் மீளவும் மயக்கத்தை விளைவிக்கும் சிறுமையுடைய மாயாபோகங்களிலேயே அழுந்திக்கிடத்தல், தூய பாற் கடலில் வாழும் மீன்கள் தமக்கு ஆதாரமாகிய பாற்கடலின் இனிய பாலைப்பருகி மகிழ நினையாமல் தம்மைப்பற்றிய பிறப்பின் பயிற்சியால் அழுக்குடைய சிறிய பிராணிகளையே தமக்கு உணவாகத்தேடித் துன்புறுவதனை ஒக்கும் என்றவாறு.

இறைவனது திருவருள், எல்லையற்ற கடல்போன்று எங்கும் பாவி உயிர்களுக்கு ஆதாரமாய் விளங்குமியல்பினதென்பதும், அருளாரமுதத்தை வழங்கும் அத்திருவருளின் இடமாக வாழ்ந்தும் உயிர்கள் அதனைப்பருகி மகிழும் வாய்ப்பினைப் பெறாது உலக நுகர்ச்சிகளில் அழுந்தித் துன்புறுதற்கு அவ்வுயிர்களைத் தொடர்ந்து வரும் மருளானாம் மாணாப்பிறப்பே காரணமென்பதும்,

**"கடலினுள் நாய் நக்கியாங்குன் கருணைக்கடலினுள்ளம்**
**விடலரியேனை"** **(நீத்தல் விண்ணப்பம்-13)**

எனவும்,

**"வெள்ளத்துள் நாவற்றியாங்குன் அருள் பெற்றுத் துன்**
**விள்ளக்கிலேனை"** **(மேற்படி 14) [பத்தினின்றும்**

எனவும் வரும் திருவாசகத் தொடர்களால் இனிது புலனாம்.

ஆன்மாக்கள், திருவருள் இடமாகக் காரியப்பட்டும் தாம் அத்திருவருளை அறியாதிருத்தல் எவ்வாறு? என வினவிய மாணாக்கர்க்கு உவம அளவையால் எடுத்துக்காட்டுத் தந்து அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

## 35. அணுகு துணையறியா வாற்றோனி லைந்தும்
## உணர்வை யுணரா வுயிர்.

***இ-ள்:*** ***தமக்கு மருங்காக உடன் வருந் துணையினைத் துணையென நாடாது வழிச்செல்வான் போலவும், தமக்கு முதலாய் நின்று உணர்த்தந்துன்மையறியாத இந்திரியங்கள் போலவும், உயிர்கள் தாமும் தமக்குயிராய் நின்றுணர்த்தும் அருளினை அறியமாட்டா என்க.***

***இவை துணைமையும் தலைமையும்பற்றி வந்த எடுத்துக் காட்டுவமை.***

***விளக்கம்:*** *ஆன்மாவின் துணைகொண்டு அறியுந் தன்மை யவாகிய இந்திரியங்கள் ஐந்தும், தாம் ஆன்மாவினாற் காரியப்படுதலை அறியாதவாறுபோல, உயிர்க்குயிராகிய முதல்வன் துணைக்கொண்டு அறியுந்தன்மையவாகிய ஆன்மாக்களும், தாம் முதல்வனருளாற் காரியப்படுதலை அறியமாட்டா என்பது உணர்த்துகின்றது.*

*ஐந்தும் ஆற்றோனில் அணுகுதுணை அறியா; (அதுபோல) உயிர், உணர்வை உணரா-என இயையும். ஐந்தும் என்றது, ஐம்பொறிகளை; இனைத்தெனவறிந்த பொருளின் கண் வந்தமையின் உம்மை முற்றும்மை. அணுகுதுணை-அகலாது தன் பக்கத்தில் நெருங்கிவரும் துணை. ஆற்றோன்- வழிச்செல்வோன். 'ஆற்றோனில்' என்புழி, இல் என்பது உவமவுருபு. உயிர்-ஆன்மாக்கள்; சாதியொருமை. 'உணர்வு' என்றது, உயிர்க்குயிராய் நின்றுணர்த்தும் திருவருளை.*

*உயிர்களின் வழிநின்று காரியப்படும் பொறிகள் ஐந்தும் (நெருங்கித் தொடரும் துணைவனை அறியமாட்டாத) வழிச் செல்வோன்போலத் தமக்கு முதலாய் நின்றுணர்த்தும் ஆன்மாவை அறியமாட்டா; அதுபோலவே ஆன்மாக்களும் தமக்கு உயிர்க்குயிராய் நின்றுணர்த்தும் திருவருளை அறிய மாட்டா என்பதாம்.*

*வழிச்செல்வோன் தனக்குத் தோன்றாத்துணையாய் உடன்வரும் தன்துணைவனை உணராதவாறுபோலவும், ஐம்பொறிகள் தமக்கு முதலாய் நின்றுணர்த்தும் ஆன்மாவை உணராதவாறு போலவும், ஆன்மாக்களும் தமக்குத் தோன்றாத்துணையாகவும் முதலாகவும் உள்ள திருவருளின் உண்மையினை உணரமாட்டாதனவாயின என எடுத்துக்காட்டினமையால், இவை துணைமையுந் தலைமையும் பற்றிவந்த எடுத்துக் காட்டுவமை' எனக்குறித்தார் நிரம்ப அழகிய தேசிகர். 'ஐந்தின்' என்பது, அவர்கொண்ட பாடமெனத் தெரிகிறது.*

*வழிப்போக்கன் தன்பின் தோன்றாத் துணையாய்த் தொடர்ந்து வரும் தன் துணைவனை அறியாதிருத்தலும், தனக் கென்று அறிவில்லாத ஐம்பொறிகள் தம்மை இயக்கிநிற்கும் ஆன்மாவை அறியாதிருத்தலும் இயல்பே. அவைபோலன்றித் திருவருளையே*

தமக்கு ஆதாரமாகக்கொண்டு வாழும் உயிர்கள், அத்திருவருளை அறியாதிருத்தல் எவ்வாறு? என மீண்டும் வினவிய மாணாக்கரை நோக்கி மற்றோர் எடுத்துக் காட்டுத்தந்து விளக்குவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

36. **தரையை யறியாது தாமே திரிவார்**
**புரையை யுணராப் புவி.**

***இ-ள்:*** **பூமியைத் தமக்கு ஆதாரமென்றறியச் செய்யாது, தாமே தமக்கு ஆதாரமாகப் போக்குவரவு செய்வாரைப்போல, அருளினைத் தமக்கு ஆதாரமென்றறியா; உயிர்களும் என்க.**

**புவி என்பது, ஈண்டு உயிர்கள்மேல் நின்றது.**

***விளக்கம்:*** *ஆன்மாக்கள் தமக்குப் பற்றுக்கோடாகிய திருவருளை அறியாமைக்கு மக்களது அனுபவத்தில் வைத்து ஓர் எடுத்துக்காட்டுத்தந்து விளக்குகின்றது.*

*தரையை (த்தமக்கு ஆதாரம் என்று) அறியாது தாமே (தமக்கு ஆதாரம் எண்ணித்) திரிவாரைப்போல், புவியும் புரையை உணரா என வேண்டும் சொற்பெய்து விரித்துப் பொருள்கொள்க.*

*தரை என்றது நிலமாகிய இடத்தையும், புவி என்றது பூமியில்வாழும் உயிர்த்தொகுதிகளையும் உணர்த்தி நின்றன. உயர்பு என்னும் பொருளுடைய 'புரை' என்னும் உரிச்சொல், எல்லாவற்றுக்கும் மேலாய் உயர்ந்ததாகிய திருவருளைக் குறித்தது. 'புரையுயர்பாகும்' (உரி-**4**) என்பது தொல்காப்பியம். நிலத்திற் போக்குவரவுபுரிவோர், தம் செயல் நிகழ்ச்சிக்கு ஆதாரமாய் விளங்குவது பூமி என்னும் உணர்ச்சியின்றித் தம்முடைய சாமர்த்தியத்தினால் நடப்பதாக நினைத்துத் திரியுமாறுபோல, ஆன்மாக்களும் தமக்குத் தாரகமாவது திருவருள் என்னும் உண்மையினை உணராது தாமே எல்லாம் அறிந்து செய்வதாக எண்ணுகின்றன என்றவாறு.*

*அருள் என்பது, உயிர்க்கு ஆதாரமாயிருப்பின் அதனை ஆன்மாவாகிய யானே தேடி அறிவேன் என்பாரை நோக்கி, அத்திருவருள் உனக்குப்புறம்பாக உன்னால் தேடிக்காணத்தக்க எளிமையுடைய ஏகதேசப் பொருளன்று என அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பா வாகும்.*

**37. மலைகெடுத்தோர் மண்கெடுத்தோர் வான்கெடுத்தோர்
தலைகெடுத்தோர் தற்கேடர் தாம் [ஞானந்**

*இ-ள்:* *மலையினை யிழந்தோரும், மண்ணினை யிழந்தோரும், ஆகாயத்தினை யிழந்தோரும், எங்கணும் நிறைந்த பேரறிவினை யிழந்தோரும் தம்மில் தாம் ஒப்பர் என்க.*

*மலை நிலம் ஆகாயம் தான் என்பவற்றைக் கெடுத்தோர் உலகின்கண் இல்லை. உளராயின், அவர்போல அருளினை யிழந்தோரும் பேதையர் என்பதாம்.*

*ஈண்டுத் தற்கேடர் என்பது யாக்கைமேல் நின்றது,*

***விளக்கம்:*** *அருளிடமாக வாழும் ஆன்மாக்கள் அருள் எங்கே என்று புறத்தே தேடியறிய முயல்வது, தான் எங்கே என்று தன்னைத்தேட முயலும் பித்தர் செயலோடொக்கும் என்பது உணர்த்துகின்றது.*

*கெடுத்தல்-இழத்தல்; காணமுடியாதவாறு இழந்துவிடுதல். ஞானந்தலை-ஞானத்துக்குள். ஞானம்-திருவருள். தலை-ஏழாமுருபு. தற்கேடர்-தன்உடம்பினை மறந்து தேடும்பித்தர்.*

*மலைமேல் இருந்துகொண்டே மலையைத்தேடினவர் போலவும், பூமியிலேயிருந்து பூமியைத்தேடினவர்போலவும், ஞானமாகிய அறிவை (த்திருவருளை) க்கெடுத்துத் தேடுபவர்கள் தம்முடம்பினைக் காணாதுதேடும் பித்தரோடொப்பர் என்பதாம்.*

**'எங்ங் கிறைவனுளன் என்பாய் மனனேயான்
எங்ங் கெனத்திரிவா ரின்'**

**(நன்னூல் சங்கர நமச்சிவாயருரைமேற்கோள்)**

*எனவரும் பழம்பாடல் இங்கு ஒப்புநோக்கி யுணரத்தக்கதாகும்.*

*உயிர்கள் திருவருளாகிய ஞானத்துள்ளேயிருந்தும் ஞானத்தை அறியாதிருப்பதற்குக் காரணம் ஞானத்தின் குறையோ? அன்றி உயிரின் குறையோ? என வினவிய மாணாக்கர்க்கு அதனை அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**38. வெள்ளத்துள் நாவற்றி யெங்கும் விடிந்திருளாம்**
**கள்ளத் தலைவர் கடன்.**

*இ-ள்: நிறைந்த நறுநீரின்கண்ணே நின்றும் அதனைப் பருகாது நா வறண்டும், எவ்விடத்தும் இருள் நீங்கி விடிந் திருக்கவும் மயங்கி நிற்கும் மடவோரது தன்மையே, தாம் நிறைந்த அருளோடு கலந்துநின்றும் அதனால் வரும் பேரின்பத்தை நுகராத வஞ்சத் தலைமையுடைய ஆன்மாக்களது முறைமை. எனவே உயிர்கண்மாட் டுளதாய குறையேயன்றி அருளின் குறையன்றென்பதாம் என்க.*

*வஞ்சத்தலைமையாவது, தாம் ஒன்றிற்குங் கருத்தா அல்லவாயிருக்கவும், யான் எனது என்று அகங்கரித்தல்.*

*விளக்கம்:* ஆன்மாக்கள் தமக்கு ஆதாரமாயுள்ள அருளை அறியாதிருப்பதற்கு அவை ஐம்பொறிகளோடு கூடி வஞ்சிக்கப் பட்டிருத்தலே காரணம் என்கின்றது.

வெள்ளத்துள் நின்று நாவற்றி (இருத்தலும்) எங்கும் விடிந்து இருள் (ஆதலும்) போன்று, கள்ளத்தலைவர் கடன் ஆம் என முடிக்க. கள்ளத்தலைவர்-வஞ்சிக்கும் இந்திரியங்களுடனே கூடிய ஆன்மாக்கள்.

மார்பளவு தண்ணீரிலே போகிறவன் தனக்குத் தண்ணீர் வேட்கை இருக்கவும் மற்றொன்றிற் கருத்துடையனாய்ச் செல்லுங்கால் அவனால் அத்தண்ணீரை அள்ளிப்பருக வாராதது போலவும், பொழுது புலர்ந்து எவ்விடத்திலும் ஞாயிற்றின் ஒளிவீசவும் பிறவிக்குருடனுக்கு எல்லாம் இருளாய்த்தோன்றுவது போலவும் எங்கும் திருவருள் பிரகாசித்திருக்கவும் வஞ்சனையைச் செய்யும் இந்திரியங்களுடனே கூடிய ஆன்மாக்களுக்கு அதன் உண்மை புலப்படத் தோன்றுதல் இல்லை என்பதாம்.

இக்குறள் வெண்பா,

**‘வெள்ளத்துள் நாவற்றியாங்குன் னருள் பெற்றுக்**
**[துன்பத்தினின்றும்**
**விள்ளக்கிலேனை விடுதி கண்டாய்’**
**(நீத்தல்விண்ணப்பம் - 14)**

என வரும் திருவாசகச் செழும்பாடற் பொருளை அடியொற்றி அமைந்திருத்தல் உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

இவ்வாறு தமக்கு ஆதாரமாய் நின்று அறியாமை இருள் நீக்கி ஒளிவழங்கும் திருவருளை உயிர்கள் இதுகாறும் அறியா திருந்தது எப்படி? என வினவிய மாணாக்கர்க்கு, அதனை ஓர் உவமை வாயிலாக விளக்குவது அடுத்து வரும் குறள் வெண்பாவாகும்.

39. **பரப்பமைந்து கேண்மினிது பாற்கலன்மேற் பூசை**
**கரப்பருந்த நாடுங் கடன்.**

*இ-ள்: சஞ்சல மனத்தாற்படும் விரைவினை யடக்கி அருளின் தன்மையே யினிதாகக் கேட்டு மனங்கொள்வீராக. அதனை நாடாது சிற்றின்பங்கண்மேற் படரும் இப் புல்லறி வாண்மை, உறியின் மேல் வைகும் இனிய பாற்குடத்தின்மீது இருக்கும் பூஞையானது, சுவர்த்தலையில் ஓடும் கரப்பினைத் தாவிப் பற்றி நுகர விசாரிக்கும் முறைமையினை ஒக்குமாகலான் என்க.*

*பூசையும் உறியின்கட் பாற் குடத்தின்மேல் இருந்தவாறே அதனைப் பருகாதே காப்பினைப் பற்ற விசை கொண்டு வாவுங்கால், அது கைப்படின், சிறிதின்மையில்லாத யுணவாதலே யன்றித் தாவலான் மிக்க வருத்தமும் எய்தும். கைப்படாக்கால் வருத்தத்தோடு, கரப்பினையும் போக்கிப் பாற் குடத்தினையும் உடைத்து மிக்க துன்பமெய்தும், உயிர்களும் அனாதியே கூடிநின்ற அருளகத் தடங்கிப் பேரின்பத்தினை யெய்தாது சிற்றின்பங்கண்மேற் படருமாயின், அதுபோல ஒருகா லெய்துஞ் சிற்றின்பத்துக்கு மன மொழி மெய்களால் துன்ப முற்றும், அஃது எய்தாக்கால் இருமையின்பமும் இழந்தும் மிக்க இடர்ப்படுமென்பதாம்.*

*இவை ஐந்து பாட்டானும், அருள் துணையும் இறை மையுமாகியும் ஆதாரமாகியும் நிற்றலை அறியாதிருத்தலும், எவ்விடத்தும் இருப்பதனைக் காணாது மயங்கலும், அதனால் வரும் இன்பமெய்தாமையும், அதன்மேற் பற்றுச் செய்யாமையும் ஆன உயிரின் குற்றங் கூறப்பட்டன.*

**விளக்கம்:** உயிர்கள் திருவருளை நோக்காமைக்குக் காரணம், சஞ்சல மனத்தாற்படும் விரைவினையடக்காது ஐம்பொறி வாயிலாக நுகர்தற்குரிய இழிந்த சிற்றின்பங்களை அவாவி அலைதலாகிய இப் புல்லறிவாண்மையே என்பது உணர்த்துகின்றது.

பரப்பு சஞ்சலமனத்தாற்படும் விரைவு; வேகம் என்பதும் அது, அமைதல்-அடங்குதல். மனத்தின் வேகமாகிய விரைவு அடங்கப்பெற்ற நல்லுயிர்கட்கே திருவருளின் இயல்பு இனிது புலனாகும் என்பார் 'பரப்பு அமைந்து கேண்மின்' என்றார். 'வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க' (சிவபுராணம்) எனவும், 'பப்பற வீட்டிருந்துணரும் நின்னடியார், பந்தனை வந்தறுத்தார்' (திருப்பள்ளியெழுச்சி) எனவும் வரும் திருவாசகத்தொடர்கள், மனத்தின் விரைவு அடங்கிய உள்ளமுடையார்க்கே திருவருள் இனிது புலனாகும் என்னும் உண்மையினைப் புலப்படுத்துதல் காணலாம். 'இது' என்றது, திருவருளை நாடாது சிற்றின்பங்களையே நாடித்திரிதற்குக் காரணமாய் உயிர்களிடத்தே யமைந்த இப்புல்லறிவாண்மையினை. பாற்கலன்-பாலுள்ள பாண்டம். பூசை-பூஞை; பூனை. கரப்பு-எலி.

உறியிற் பாலிருக்கிற பாண்டத்தின்மேல் ஏறியமர்ந்த பூனையானது, தனக்கு ஆதாரமாயிருந்த பாண்டத்திலுள்ள இனியபாலைப் பருகிமகிழ எண்ணாமல், தன் கண்ணெதிரே கூரையின்கண்ணே ஓடும் எலியைத் தின்னவிரும்பித் தாவிப் பாயுந் தன்மைபோல, திருவருளிடமாக வாழும் உயிர்களும் அதனால் வரும் அருளாரமுதத்தைப்பருகி மகிழ எண்ணாமல் ஐம்பொறிகளால் ஈர்க்கப்பட்டு இழிந்தபோகங்களை விரும்பி இருமையின்பங்களையும் இழப்பனவாயின. உயிர்கள் இவ்வாறு தமக்கு ஆதாரமாகிய திருவருளை மறந்து புறத்தே தாவிச் செல்லுதலாகிய மனத்தின் விரைவு அடங்கப்பெறின். திருவருளுண்மையினைத் தெளிந்து இன்புறுதல் கூடும் என்றவாறு.

அருளையே ஆதாரமாகக்கொண்டு வாழும் ஆன்மாக்கள் தமக்கு ஆதாரமாவது அருளே என்பதனைத் தம் மனத்தின் வேகந்தணிந்தாலன்றி அறிதல் இயலாதோ? என வினவிய மாணாக்கர்க்குப் பரப்பு அடங்கி அத்திருவருளைச் சிந்தையில் இடைவிடாது நினைத்தலே உயிர்கள் பெறுதற்குரிய வீடு பேற்றுக்குச் சாதனமாம் என அறிவுறுத்துவது அடுத்து வரும் குறட்பாவாகும்.

**40. இற்றை வரையியைந்தும் ஏதும் பழக்கமிலா வெற்றுயிர்க்கு வீடு மிகை.**

இ-ள்: அனாதியே தொடங்கி இன்றளவும் அருளோடு இரண்டற நின்றும், சிறிதும் அதில் தோய்ந்து பழமை தோற்றுதல் இல்லாத வெறிய உயிர்கட்கு வீடு சேர்தல் என்பது மிகுதி. எனவே தகாதென்பதாம் என்க.

வெறுமை-பயன் கொள்ளாமை, பழமை தோற்றுதல், உலகவெறுப்புத் தோன்றுதல்.

இதனால் அருளோடு கலந்து நின்றும் வீடுகூட நினையாத உயிரினைப் பழித்துக் கூறப்பட்டது.

***விளக்கம்:*** *தனக்கு ஆதாரமாயுள்ள திருவருளைச் சிந்தையில் இடைவிடாது நினைத்துப் பழகுதலே உயிர்கள் வீடு பெறுதற்குச் சாதனமாம் என்பதனை எதிர்மறைமுகத்தால் உணர்த்துகின்றது.*

*இற்றைவரை-அனாதியே இருளில் தனித்துக்கிடந்த நிலை முதலாக. உலகு உடல் கருவி நுகர்பொருள்களைப்பெற்றுள்ள இந்நாள் அளவும். இயைதல்-அருளின் எல்லைக்குள் அடங்கிப் பொருந்தி உடனாதல். ஏதும்-சிறிதும். பழக்கம்-என்றது, உடனாய காலத்துத் தமக்குச்செய்த உபகாரமாகிய பழைமையினை எண்ணி நன்றிபாராட்டும் பயிற்சியினை. இத்தகைய பயிற்சியினைப் பெறாத உயிர்கள் வாழ்க்கையின் பயனைப்பெறா தனவாதலால் 'வெற்றுயிர்' எனப்பட்டன. திருவருள் தமக்குச் செய்துவரும் இப்பேருதவியை உணர்ந்து போற்றுந் தெளிவு பெறாதார், ஒருகால் மெய்ப்பொருளைத் தலைப்பட்டு வீடுபேற்றின்பத்தை நுகரும் வாய்ப்பும் பெற்றாலும், அவ்வாய்ப்பு நிலைபெற்ற ஞானமில்லாமையால் இடையில் தானே மறைந்து விடும் ஆதலால் திருவருளையுணராத வெறுமையுடைய உயிர்கட்கு 'வீடு மிகை' என்றார். எல்லா அறங்கட்கும் மூலமாகிய திருவருளையும் அதனைச் சிந்தையிற்கொண்டு பழகும் தெளிவுடைமையையும் சிறப்புமுறையிற் குறித்த இக்குறள்வெண்பா,*

**'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற் றேரின்**
**அருளாதான் செய்யும் அறம்' (திருக்குறள்-249)**

*எனத் தெய்வப்புலவர் பொதுமுறையிற் குறித்த அருளுடைமை யினையும் மெய்ப்பொருளுணர்வையும் ஒருங்கே புலப்படுத்தி நிற்றல் அறிந்து மகிழ்தற்குரியதாகும்.*

## 5. அருளுருநிலை

***அஃதாவது, ஞான வடிவாகிய குரவனது தன்மை. அருளது நிலை கூறி, அருளான் ஆம் வடிவினது நிலை கூறுதலின் மேலை அதிகாரத்தினோடு இதற்கு இயைபுடைத்தெனக் கொள்க.***

**41. அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்**
**குறியாகி நீங்காத கோ.**

***இ-ள்: தோன்றாத் துணையாய்க் கலந்து நின்று காத்து நடத்தின அருளே, கண்ணாற் காணப்படும் வடிவினை யுடையதாக விட்டு நீங்காத குரிசில் என்க.***

***இதனால், அருள் குருவடிவுகொண்டு வந்தமை கூறப் பட்டது.***

***விளக்கம்:*** *உயிர்க்குயிராய் உள்நின்றுணர்த்திய இறைவன், அருளே திருமேனியாகப் புறத்தே ஆசிரியத்திருமேனி தாங்கி எழுந்தருளிவந்து ஆன்மாக்களை ஆட்கொண்டருள் புரியும் முறைமையினை அறிவிப்பது, அருளுருநிலை என்னும் இவ்வதி காரமாகும். அருளுருநிலை என்பது அருள், தான் மேற்கொள்ளும் திருவுருவின் நிலை என விரியும். இறைவனது அருட் சத்தியானது உயிர்கட்கு ஆதாரமாய் விளங்குந்திறத்தினை மேலை அதிகாரத்திற் கூறிய ஆசிரியர், அத்திருவருளே உயிர்களின் பாசப்பிணிப்பினை நீக்கி மெய்யுணர்வு அளித்தற் பொருட்டு ஆசிரியத்திருமேனி தாங்கி வெளிப்பட்டு அருள் புரியுந்திறத்தினை இவ்வதிகாரத்தில் விரித்துக் கூறுகின்றார். ஆதலால் இது மேலையதிகாரத்தோடு இயைபுடைய தாயிற்று.*

*இவ்வதிகாரத்தின் முதற்குறள், முதல்வனே குருவாக எழுந்தருளும் முறைமையினை உணர்த்துகின்றது.*

காணும் குறியாகி நீங்காத கோ, அறியாமை, உள்நின்று அளித்ததே என முடிக்க. அறியாமை-அறியாமல்; கண்ணுக்குத் தோன்றாதவாறு. உள்நின்று அறித்தல்-உயிர்க்குயிராய்க் கலந்துநின்று அருள்சுரத்தல். அளித்தது என்றது, உபகரித்ததாகிய திருவருளை. அளித்தது, வினையாலணையும் பெயர். காணும் குறியாகி-கட்புலனாற்காணுதற்குரிய வடிவினை யுடையதாகி. கோ-தலைவன்: என்றது, இங்குக் குருவடிவு கொண்டு எழுந்தருளிய இறைவனை. 'அறியாமையுள்' என இயைத்து, 'தற்சொரூபத்தை யறியாத பெத்தகாலத்திலே எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்.

முதல்வனே குருவாக எழுந்தருளி வரவேண்டுமோ? கல்வி கேள்விகளையுடைய ஏனையோர் குருவாக வந்து உயிர்களின் மனமாசினைத்தீர்ந்து மெய்யுணர்வளித்தல் ஆகாதோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**42. அகத்துறுநோய்க் குள்ளின ரன்றி யதனைச்
சகத்தவருங் காண்பரோ தான்.**

***இ-ள்: ஓர் இல்லின்கண் ஒருவர் கொண்ட பிணியை அவ்வில்லின்கண் வாழ்வார் அறிவதன்றி, அதனைச் சேய்மைக் கண்ணராகிய உலகத்தார் அறியவல்லரோ தாம்.***

***தான் என்பது, அசைநிலை. ஓகாரம், எதிர்மறை இதனால், இங்ஙனம் வடிவு, கோடற்கு அருளாதல் வேண்டுமோ வென்னும் ஐயத்தினையகற்றி வலியுறுத்தப்பட்டது.***

***விளக்கம்:*** ஆன்மாக்களின் அகவிருளை நீக்கி மெய்யுணர் வளிக்க எழுந்தருளும் ஆசிரியன், உயிர்க்குயிராய் உள் நின்றுணர்த்தும் முதல்வனையன்றி உலகில் வேறொருவராக இருத்தல் இயலாது என அறிவுறுத்துவது இக்குறட்பாவாகும்.

அகம்-வீடு. நோய்க்கு-நோயை; உருபுமயக்கம். உள்ளினர்-வீட்டினுள்ளே வாழும் அன்பினால் நெருங்கிய உறவினர் முதலியோர். சகத்தவர்-உலகத்தார்; என்றது, அவ் வீட்டினுள்ளேயின்றி அதற்குப்புறம்பாகச் சேய்மைக் கண்ணே வாழ்வாராகிய அயலாரை. காண்பரோ என்புழி ஓகாரம், காணமாட்டார் என எதிர்மறைப்

பொருள்தந்து நின்றது. ஒருவீட்டிலே ஒருவர் நோயுற்று வருந்தினால் அவர் தம் நோயின் வருத்தத்தை அவருடன் அவ்வீட்டினுள்ளே வாழும் நெருங்கிய உறவினர் உள்ளவாறு அறிந்து அந்நோயினைத் தீர்க்கமுயல்வார்களேயன்றி, அவ்வீட்டிற்குப் புறம்பே சேய்மைக்கண்ணே வாழும் அயலாராகிய ஏனையோர் அறிந்து ஆவனசெய்தல் இயலாது. அதுபோலவே, உயிர்களின் உள்ளத்தில் அனாதியேபற்றியுள்ள ஆணவமலத் துன்பத்தை, உயிர்க்குயிராய் உள்நின் றுணர்த்தும் இறைவனே அறிந்து குருவாக எழுந்தருளிவந்து தீர்ப்பதன்றிப் புறம்பேயுள்ள உலகத்தார் அறிந்து தீர்த்தல் இயலாது என அறிவுறுத்தலின். இக்குறட்பா பிறிதுமொழிதல் (ஒட்டு) என்னும் அணி தழுவியதாகும்.

இனி, அகத்துறுநோய் என்றது, சரீரத்தினுள்ளே பற்றிய நோய் என்றும், உள்ளினர் என்றது, உடம்பினுள்ளே தங்கிய ஆன்மாவை என்றும், சகத்தவர் என்றது, தனக்கு வேறாகிய பெண்டாட்டி பிள்ளை பிதா மாதா முதலியோர் என்றும் கொண்டு, 'சரீரத்திலே ஒரு வியாதி வந்து பொருந்தினால் சரீரத்துக்கு உடனாயிருக்கிற ஆன்மா அறிகிறதேயல்லாமல், பெண்டாட்டி பிள்ளை பிதா மாதா சுற்றத்தார் அறிவார்களோ; அப்படிப்போல ஆன்மாவினிடத்திலே யிருக்கிற அறியாமையை உயிர்க்குயிராய் இருக்கிற பரமசிவனே ஆசாரியமூர்த்தமாய் எழுந்தருளிவந்து நீக்குகிறதேயல்லாமல் கற்றபேர் கேட்ட பேராலே ஆகாது" எனப் பொருளுரைப்பர் சிந்தனை யுரையாசிரியர். உயிர்களின் அகத்தே பற்றியுள்ள ஆணவமலமாகிய நோயினையறிந்து புறத்தே குருவாய் எழுந்தருளி வந்து அகற்றுவதற்கு, உயிர்க்குயிராயுள்ள முதல்வனாலன்றி உலகத்தாராகிய ஏனையோரால் இயலாது என்பதாம்.

இப்படிப்பட்ட ஞானாசிரியனை நம்மால் அறிதல் கூடுமோ என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**43. அருளா வகையா லருள்புரிய வந்த**
**பொருளா ரறிவார் புவி.**

**இ-ள்: படைப்பு நிலை ஈறு மறைப்பு என்னும் நான்கினையுந் தோன்றாது செய்தவாறு போல, அருளென்னுந்**

***தொழிலினையும் தான் பண்ணாததுபோலப் பண்ணும்படி, மானுடவடிவென்னும் அங்கியால் மறைத்துக்கொடு வந்த உண்மைப் பொருளே இக் குருவடிவு என்பதனை அறிய மாட்டாது உலகு.***

*தம்போல் ஒரு மானிடமாக நினைக்கும் என்பதாம்.*

***விளக்கம்:*** *சிந்தையாலும் அறிவரும் செல்வன் சிவனாதலின், அவனே குருவாக எழுந்தருளினான் என்ற உண்மையை அறிந்துணரும் அறிவுமதுகை உலகத்தார்க்கு இல்லை என்பது உணர்த்துகின்றது.*

*'அருளாவகையால் அருள்புரியவந்த பொருளைப் புவிக்கண் ஆர் அறிவார்' என வேண்டும் உருபுகளை விரித்துரைக்க. இறைவன், இறப்பு நிகழ்வு எதிர்வு முதலியனவாய் வேறுபட்டு எல்லாத்தொழிலுஞ் செய்தும் தனக்கு விகாரமின்றி நிற்கும் காலதத்துவத்தினைப்போன்று, தான் சிறிதும் விகாரப்படாது நின்று, பிரபஞ்சத்தைக் கரணத்தாற் படைத்தல் காத்தல் அழித்தலைச் செய்யாது தன் நினைவளவானே படைத் தளித்தழித்து மறைத்தருளுதலைச் செய்கின்றான் என்பது செம்புலச் செல்வர்கள் துணிபாதலின், "அருளாவகையால் அருள்புரியவந்த பொருள்" என அம்முதல்வனைப் போற்றினார் இந்நூலாசிரியர். "நோக்காதே யாதொன்றும் நோக்கினானை, நுணுகாதே யாதொன்றும் நுணுகினானை, ஆக்காதே யாதொன்றும் ஆக்கினானை"* ***(6-11-5)*** *என வரும் திருத்தாண்டகமும், இதற்கு விளக்கமாக,*

> **'நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்**
> **றாக்காது நின்றுளத்திற் கண்டிறைவன்-ஆக்காதே**
> **கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்**
> **கண்டவனில் இற்றின்றாங் கட்டு'**
>
> **(சிவஞான போதம் சூ. 1, வெ-4)**

*என மெய்கண்டார் அருளிய வெண்பாவும் ஈண்டு ஒப்பு நோக்கியுணரத்தக்கனவாம், நோக்குதல்-அருளாற் பாதுகாத்தல். 'அம்மானே நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே'* ***(6-25-1).*** *என்புழி இச்சொல் இப்பொருளிற் பயின்றமை காண்க. நுணுகுதல்-பொடியாக்குதல்; அழித்தல், நொடித்தல் என்றதும் அது.*

*அருளாவகையால் அருள்புரிதலாவது, இறைவன் 'யான் இன்னதற்கு இதுபயனாக இவ்வுயிர்க்கு அருள்புரிகின்றேன்' என்னும் தனிக்குறிப்பின்றித் தன்னருளின் காரணங்கள் புறத்தார்க்குப் புலனாகாதவாறு தன்னியல்பில் நின்று அருள் புரிதல் இங்ஙனம், இறைவன் குருவாகவந்து உயிர்கட்கு அருள்புரியுந் திறத்தினை உள்ளவாறு அறியவல்லார் இவ்வுலகின்கண் ஒருவரும் இலர் என்பார், 'ஆர் அறிவார் புவி' என்றார். 'அடிகள் செய்வன ஆர்க்கறி வொண்ணுமே' என்றார் ஆளுடையபிள்ளையாரும். புவி என்புழிக் கண்ணுருபு இறுதிக் கண் தொக்குநின்றது.*

*இனி, 'இலனென்னும் எவ்வம் உரையாமையீதல்' (திருக்குறள்-* ***223****) என்புழிப்போன்று, 'அருளாவகையால் அருள் புரியவந்த பொருள்' என்பதற்கு, 'தன்னால் தலையளிக்கப் பெறும் நல்லுயிர், பின்னும் ஒருவர்பாற்சென்று அருள்பெற வேண்டிய நிலைமை ஏற்படாதவாறு தன்னருளைக் குறைவின்றி நிறையப்பெற்றுத் தன்னைப்போன்று மன்னுயிர்கட்கு அருள்வழங்கும் நிலையில் தானேயாய் ஒற்றித்து உடனாகும் முதல்வன்' என இரட்டுற மொழிதலாற் பொருள் கூறுதலும் பொருந்தும்.*

**"விளிவின்று**
**இருள்நிறமுந்நீர் வளைஇய வுலகத்து**
**ஒருநீ யாகித் தோன்ற விழுமிய**
**பெறலரும் பரிசில் நல்கும்"**

**(திருமுருகாற்றுப்படை-292-294)**

*எனவரும் நக்கீரர் வாய்மொழியும், "இருண்ட நிறத்தை யுடைய கடல்சூழ்ந்த உலகத்திடத்தே நீ ஒருவனுமே பிறர்க்கு வீடளித்தற்கு உரியையாய்க் கேடின்றித் தோன்றும்படி, சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடுபேற்றினைத் தருவன்" என வரும் நச்சினார்க்கினியர் உரையும்,*

**"தம்மைப்போலத் தம்மடியார்க்கும் இன்பளிப்பவர்"**

*எனவரும் ஆளுடையபிள்ளையார் அருளிச்செயலும் இங்குக் கூர்ந்துணரத்தக்கனவாகும். மேற்குறித்த தேவாரத் தொடரில் இறைவனுக்குரியதாகக் குறிக்கப்பட்ட 'இன்பு' என்றது, உயிர்கட்குரிய நுகர்ச்சியாகிய இன்பத்தினைக் குறியாது ஈத்துவத்தலாகிய இன்பத்தினைக் குறித்ததாகும்.*

*இறைவன், ஆசிரியத்திருமேனி தாங்கிக் கட்புலனாக எழுந்தருளிய நிலையிலும் அம்முதல்வனை உலகத்தார் அறியாதிருத்தல் எவ்வாறு என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**44. பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய்யிரண்டுங் காணார் மிக.**

***இ-ள்:* *நிலையாத காய வாழ்க்கையினையும், ஆணவ மலத்தால் மறைந்த வுணர்வினையும் உடையராய், ஞான மென்னுஞ் செல்வத்தினையும் எய்துதல் இல்லாதார், அறிவு மயமாகிய அருளும் அவ்வருளான் ஆகிய தேசிக வடிவும் என்னும் உண்மைப் பொருள் இரண்டினையும் சிறிதும் அறியமாட்டார்.***

***இத்தன்மையவாகிய ஆசாரிய வடிவினை, அருள்கொண்ட வடிவமாக வுணரார். ஆகவே, நின்மலமாய், அகண்டமாய், சின்மயமாய், ஒழிவற நிறைந்த அவ்வருளினையும் உணர மாட்டார் என்பது கருத்து.***

***விளக்கம்:*** *கட்புலனாக எழுந்தருளிய ஆசிரியத்திரு மேனியை வழிபடுமாறு அறியாதார், சிந்தையாலும் சிந்தித் துணர்தற்கரிய சிவனருளின் திறமுணர்ந்து திருவருளும் குரு வடிவும் ஆகிய அவ்விரண்டும் ஒன்றேயெனத் தொடர்பு படுத்தியுணரும் உண்மையினை உணரமாட்டார் என்பது உணர்த்துகின்றது.*

*பொய்யையும் இருண்ட சிந்தையையும் பொறியின்மையையும் ஒருங்கேயுடையார் என்பது புலப்படுத்துவார். 'பொய் இருண்ட சிந்தைப் பொறியிலார்' எனக்குறித்தார். 'பொய்' என்றது, நிலையில்லாத உடம்பில் வாழும் வாழ்க்கையை. 'இருண்டசிந்தை' என்றது இருள்மலமாகிய ஆணவமலத்தால் மறைந்த உணர்வினை. 'பொறி' என்றது ஈண்டு ஞானமாகிய நற்பேற்றினை. போதம்-அறிவுமயமாகிய திருவருள். போதம் ஆம்மெய்-அத்திருவருளாலாகிய ஆசிரியத்திருமேனி. தமக்குக் கட்புலனாக் காட்சிதந்து எழுந்தருளிய ஆசிரியத்திருமேனியை வழிபட்டு அதன் இயல்பினையுணர்ந்து உய்யும் உணர்வு பெறாத உலகத்தார் அத்திருமேனிக்குக் காரணமாய்த்*

*தோன்றாத் துணையாய் யாண்டும் நீக்கமறக்கலந்து மாற்றமனங் கடந்து நிற்கும் திருவருளை உணரும் வன்மையினை ஒருசிறிதும் உடையரல்லர் என்பார், 'போதம்-ஆம்மெய்-இரண்டும் மிகக்காணார்' என்றார்.*

*இனி, இங்ஙனம் போதம் ஆம் மெய்யுடன் எழுந்தருளிய இறைவனை உள்ளவாறு உணர்தற்குரிய உபாயம் யாது என வினவிய மாணாக்கர்க்கு உணருமாறிதுவென எடுத்துக் காட்டுத் தந்து உணர்த்துவது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**45. பார்வையென மாக்களைப்*பற்றிப் பிடித்தற்காம்**
**போர்வையெனக் காணார் ‖ புவி.**

***இ-ள்: விலங்குகள் பறவைகளைப் பிடித்தற்கு அவ்வவற் றின் வடிவாற் செய்த தீவகம்போல, மிக்க தெய்வவடிவங். கண்டு அஞ்சி வெருளாது, மனிதரைத் தன் வயத்தாக்கிக் கோடற்பொருட்டு அருள் போர்த்துக்கொண்ட மானுட வுருவாகிய குருவடிவினைப் போர்வையாக அறிய மாட்டா வாம் இவ்வுலகு.***

***இவை மூன்று பாட்டானும் அகளமாய் நிறைந்த அருளே குருவுருவுதரிந்து வந்ததென்பதனை அறியாதார் இழிபு கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *குருவடிவாகிய திருமேனி, இறைவன் உயிர்களைத் தன்வசப்படுத்தி ஆட்கொள்ளுதற் பொருட்டுக் கொண்ட போர்வையென்பது உணர்த்துகின்றது.*

*பார்வை என்றது, வேட்டுவர்கள், மான் முதலிய விலங்குகளைப் பற்றிப் பிடித்தற்பொருட்டு அவ்வவ்வினத்தில் முன்பே பற்றிப்பழக்கி நிறுத்திய மான் முதலிய பார்வை மிருகங்களை. இவை தீவகம் எனவும் வழங்கப்படும். என-உவமவுருபு. தாமே ஆராய்ந்துணரும் அறிவுவன்மையில்லாத ஆன்மாக்களை மாக்கள் எனக் குறித்தார் ஆசிரியர். மாக்களைப் பார்வை யெனப் பற்றிப் பிடித்தற்கு ஆம் போர்வை (குருமேனியாகிய அருளுரு) எனப் புவி(யோர்) காணார்*

* மாக்களை முன் என்பது சிந்தனையுரையாசிரியர் கொண்ட பாடம்.

‖ காணாபுவி என்பது, நிரம்ப அழகிய தேசிகர் கொண்ட பாடம்

*என இயைத்துப் பொருள் கொள்க. போர்வை-சட்டை. அருளுரு என்பது, அதிகாரத்தால் வந்தியைந்தது. புவி யென்றது, புவியில் வாழ்வாரை காணார்- காணும் வன்மையுடையாரல்லர்.*

*'மானைக்காட்டி மானைப்பிடித்தாற்போல பக்குவப்பட்ட ஆன்மாக்களை முன்நிற்கப்படுத்தித் தன் வசமாக்கிக் கொள்வதற்காக மானிடச்சட்டை சாத்திக்கொண்டு ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி வந்ததென்று ஆன்மாக்கள் அறியச்செய்யார்கள்" என்பது சிந்தனையுரை. ஆன்மாக்களை உய்யக்கொள்ளுதற்கு இறைவன் மேற்கொண்ட போர்வையே குருவடிவு எனக்கொண்டு,குருவே சிவன் எனத் தெளிந்து வழிபடுதலே அருளைத் தலைப்படுதற்கு உபாயமாம் என்றவாறு.*

**"அகளமா யாரும் அறிவரி தப்பொருள்**
**சகளமாய் வந்ததென் றுந்தீ பற**
**தானாகத் தந்ததென் றுந்தீ பற"**

**(திருவுந்தியார்)**

*எனவரும் உயவந்ததேவ நாயனார் வாய்மொழிப் பொருளை இந்நூலாசிரியர் இவ்வதிகாரத்தில் **3, 4, 5** ஆம் குறள்களால் விளக்கிய திறம் உய்த்துணர்தற்குரியதாகும்.*

*இறைவனே குருவாக எழுந்தருள வேண்டுமோ? நம்மினத் தாராகிய மக்களுள் அறிவின் மிக்கார் ஒருவரே ஆசிரியராக வந்து மெய்ப்பொருளை உணர்த்துகின்றார் எனக்கொண்டால் வரும் குற்றம் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**46. எமக்கெ னெவனுக் கெவைதெரியு மவ்வத்**
**தமக்கவனை வேண்டத் தவிர்**

***இ-ள் நீ குருவுண்மை கொண்டமையால் எமக்கு வரும் பயனென்ன? யாவனொருவனுக்கு யாவை சில நூற்பொருள்கள் குரவனையின்றி யுணர முன்னொடுபின் மலைவறத் தோன்றும், அந்நூற்பொருள்கள் அவனைத் தமக்குக் குரவனாக அவாவி நிற்கும்பொழுது இம்மறுதலை யினை ஒழிவாயாக என்க.***

***குருவுண்மை கொள்ளாயாயின் என்பது எஞ்சி நின்றது, இதனால் யாதொரு நூற்பொருளுங் குரவனையின்றி யுணரப் படா வென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *உயிர்களின் பக்குவமுணர்ந்து மெய்யுணர் வினை அறிவுறுத்தவல்ல குருவாவான் இறைவன் ஒருவனே என்பது உணர்த்துகின்றது.*

*ஆன்மாக்களின் பக்குவமுணர்ந்து மெய்யுணர்வருளிப் பாசத்தினை நீக்கும்பணியில் எம்மையொத்த பாசப்பிணிப்புடைய பசுக்களால் ஆவதென்ன? பரிபாகம் இல்லாதானுக்கு அறிவிக்கப்புகின் அவனுக்கு எவைதான் விளங்கும்? ஆகவே அவ்வவ்வுயிர் தமக்கு உயிர்க்குயிராயுள்ள அம்முதல்வனையே ஆசிரியனாகத் தெளிந்து விரும்பி வழிபட (யாவும் நன்கு விளங்கும்; எனவே இறைவன் வேறு ஆசிரியன் வேறு எனப் பிரித்துணரும் இம்முரண்பாட்டினைத்) தவிர்வாயாக என்பதாம். எமக்கு என்- எம்மால் ஆவது என்ன; உருபு மயக்கம். அவ்வத்தமக்கு அவன்- அவ்வவ்வுயிர்கட்கு உயிர்க்குயிராய்ப் பிரிவின்றி நிற்கும் அம்முதல்வன். அவ்வத்தமக்கவனை வேண்டயாவும் தெரியும். ஆகவே இறைவன் வேறு குருவேறு எனக்கருதும் இம்முரண்பாட்டினைத் தவிர்வாயாக என வேண்டுஞ் சொற்கள் வருவித்துரைக்கப்பட்டன.*

*"திருவருளிலே சற்றும் பழக்கமில்லாதவனுடைய அறிவைத் திருப்ப நமக்கென்ன? பரிபாகமில்லாதவனுக்கு அறிவித்தால் அவனுக்கு என்ன தெரியும்? அவரவர் பக்குவத்துக் கீடாக, பரிபாகமில்லாதவனை விரும்பவேண்டுவதில்லை; அறியாமையை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று தேடிவந்தவனுக்கே அறியாமையை நீக்கலாம்" என்பது, இக்குறளுக்கு அமைந்த சிந்தனையுரையாகும்.*

*இறைவன், அறிவுக்கறிவாய் உள் நின்றுணர்த்துவது போதாதோ? புறம்பேயும் திருமேனிகொண்டு குருவாக வந்து உபதேசித்தல் வேண்டுமோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**47. விடநகுலம் மேவினுமெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதிவன் கண்.**

***இ-ள்: விடமானது, கீரி தானே வந்து தீண்டினும் மீளாது; அதன் வடிவினைப் பாவிப்பான் ஒருவனால் மீளுமாறு போலவே, இவனுடைய திரு நோக்கினால் ஆணவ இருள் நீங்கும் உனக்கு.***

***இறைவன், அனாதியே, உயிரோடு கலந்து நிற்பினும், குருவுருக்கொடு வந்தல்லது பாசம் நீங்காதென்பதாயிற்று. இது சகலரைக் குறித்து நின்றது.***

***இதனால் ஆசாரியனால் பாசம் நீங்கவேண்டும் என்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இது குருவினாலன்றி ஆன்மாக்கட்குப் பாசம் நீங்காதெனக் கூறுகின்றது.*

*பாம்பு தீண்டினமையால் தலைக்கேறிய விடமானது அப் பாம்புக்குப் பகையாகிய கீரிப்பிள்ளை தானேவந்து தீண்டினாலும், தீராமல் கீரியின் வடிவினைப் பாவிப்பானொருவனால் நீங்கும் முறைமைபோல, இருள்மலம் உயிர்களைவிட்டு நீங்குவது குருவாகிய இவனது அருள்நோக்கினாலேயே யாம் என்றவாறு விடம்-பாம்பின் நஞ்சு. நகுலம்-கீரி. மெய்ப்பாவகன்-மந்திரத்தால் கீரியின் வடிவாகத் தன்னைப் பாவிக்கவல்லான். கடனில்-முறைமைபோலே. இருள் போவது இவன் கண்ணாலேயே என மூன்றா முருபும் ஏகாரமும் விரித்துரைக்க. இவன் என்றது, அவன் எனச் சேயனாய் நில்லாது, "இது அவன் திருவுரு. இவன் அவன் எனவே" குருவடிவினை மேற்கொண்டு அணிமைக்கண் எழுந்தருளிய இறைவனை. கண் என்றது, குருவினது அருள் நோக்கினை.*

**"அத்தாவுன் னடியேனை அன்பா லார்த்தாய்**
**அருள்நோக்கில் தீர்த்தநீ ராட்டிக் கொண்டாய்**
**எத்தனையும் அரிய நீ எளியையானாய்**
**எனையாண்டு கொண்டிரங்கி யேன்றுகொண்டாய்"**

*எனவும்,*

*அம்மானே, நின் அருட்கண்ணால் நோக்காதார் அல்லாதாரே' எனவும் வரும் அப்பர் அருள்மொழிகள் அருட்கண்ணின் தன்மையினை விரித்துப் போற்றுதல் காணலாம்.*

உயிர்க்குயிராகிய இறைவன் இவ்வாறு குருமேனி தாங்கி வந்து அருள்செய்யவேண்டிய இன்றியமையாமை எல்லாவுயிர்கட்கும் ஒருபடித்தாய் உரியதோ என வினவிய மாணாக்கர்க்கு வகைப்படுத் துரைப்பதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

**48. அகலர்த் தருமருளை யாக்கும்வினை நீக்குஞ்**
**சகலர்க்கு வந்தருளுந் தான்**

***இ-ள் கலையினின்றும் நீங்கின விஞ்ஞானா கலர்க்கும் பிரளையாகலர்க்கும் நிராதாரமாய் நின்று அருளை விளக்கும். கன்மமலச் சேதனம் பண்ணுதற்குப் பக்குவராகிய சகலர்க்கும் குருவினை ஆதாரமாகக் கொண்டு அவர்போலத் தானே வந்து அனுக்கிரகம்பண்ணும். அவ்வாறு அருள் புரிதல் சகலர்க்குக் கூடாதென்பதாம்.***

***பிரளையாகலர்க்குக் கலைநீங்கலாவது, அதன் வயத்தாகா திருத்தல். குவ்வுருபு விகாரத்தால் தொக்கது முதலிருவர்க்கு "நிராதாரமாகிக், கரையிலருட்பரந் துவிதா சுத்திநிபாதத்தால்" (சித்தியார்-சுபக்-254) என்றருளிச் செய்தவாறு காண்க.***

***இதனால், அருள் மானிடச்சட்டை சாத்திவருதற்குக் காரணங் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இது, மூவகை ஆருயிர்கட்கும் இறைவன் மெய்ப்பொருளை அறிவுறுத்திப் பாசம் நீக்குமாறு கூறுகின்றது.*

*விஞ்ஞானாகலர், பிரளயாகலர், சகலர் என ஆன்மாக்கள் மூவகைப்படுவன. இக்குறளில் அகலர் என்றது, கலையாகிய பந்தத்தினின்றும் நீங்கிய விஞ்ஞானாகலர். பிரளயாகலர் என்னும் இருதிறத்தாரையும். விஞ்ஞானாகலர் என் போர் விசிட்ட ஞானத்தாலே மாயாகாரியமான கலைத் தொடர்பு அற்றவர்கள். பிரளயாகலர் என்போர், மலபரி பாகத்தின் மிகுதியாலே பிரளயத்தில் மாயா காரியமான கலைத்தொடர்பு அற்றவர்கள். சகலர் என்பார், மாயா காரியமான கலைப்பிணிப்போடு கூடியவர்கள். 'அகலர்த்தரும் அருளை' என்பதே நிரம்ப அழகிய தேசிகர் கொண்டபாடம் என்பது, 'கலையினின்றும் நீங்கின விஞ்ஞானாகலர்க்கும் பிரளயாகலர்க்கும் நிராதாரமாய் நின்று அருளை விளக்கும்' என இத்தொடர்க்கு எழுதிய உரையாலும், 'குவ்வுருபு விகாரத்தால்*

தொக்கது' என இத்தொடர்க்கு வரைந்த இலக்கணக் குறிப்பாலும் இனிது விளங்கும்.

அகலர்க்கு (அவருள் விஞ்ஞானாகலர்க்கு) அருளைத்தரும்; (பிரளயாகலர்க்கு அருளை) ஆக்கும்; சகலர்க்கும் வந்து அருளும் என உருபும் உம்மையும் விரித்துப் பொருள்கொள்வர். ஈண்டு, தருதல் என்றது, உயிர்களின் அறிவுக்கறிவாய் உள்நின்று தன்மைக்கண் அருள் சுரத்தலை. ஆக்குதல் என்றது, தனக்கேயுரிய தெய்வவடிவு கொண்டு முன்னிலைக்கண் தோன்றிநின்று அருள் வழங்குதலை. வந்தருளுதல் என்றது. படர்க்கையிடத்ததாக ஆசிரியத்திருமேனி தாங்கி வந்து மெய்ப்பொருளை உபதேசித்தலை. சகலருள் எல்லார்க்கும் அன்றி அவருள் கன்மமலப் பிணிப்பினை அறவே அகற்று தற்கேற்ற பக்குவமுடையார்க்கே இறைவன் குருவாய்வந்து மெய்ப்பொருளை உபதேசிப்பன் என்பது புலப்படுத்துவார், 'வினைநீக்குஞ் சகலர்க்கு' என அடைமொழிபுணர்த்துக் கூறினார்.

"ஆணவமலத்தினையுடைய விஞ்ஞானாகலர்க்கு ஆணவ மலத்தை நீக்கி அறிவுக்கறிவாய் அனுக்கிரகம்பண்ணி மோட்சத்தை அடைவிப்பன். ஆணவமலத்தினையுங் கன்மமலத் தினையுமுடைய பிரளையாகலர்க்கு அவர்களைப்போல மானும் மழுவும் சதுர்ப்புயமும் காளகண்டமும் திரிநேத்திரமுமாக எழுந்தருளி வந்து ஆணவ மலத்தினையுங் கன்மமலத்தினையும் நீக்கி அனுக்கிரகம் பண்ணி மோட்சத்தை அடைவிப்பன். ஆணவம் காமியம் மாயை என்கிற மூன்றுமலத்தினையும் உடைய சகலர்க்கு அவர்களைப்போல மானிடச்சட்டை சாத்திக்கொண்டு ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி வந்து ஆணவம் காமியம் மாயை என்கிற மூன்று மலங்களையும் நீக்கி அனுக்கிரகம்பண்ணி மோட்சத்தை அடைவிப்பான்" என்பது இக்குறளுக்கு அமைந்த சிந்தனையுரையாகும்

இறைவன், மூவகை ஆன்மாக்களுக்கும் அருள்வழங்கும் முறைமையினை,

**"மெய்ஞ்ஞானந் தானே விளையும்விஞ் ஞானகலர்க்**
**கஞ்ஞான அச்சகலர்க் கக்குருவாய்-மெய்ஞ்ஞானம்**
**பின்னுணர்த்து மன்றிப் பிரளயா கலருக்கு**
**முன்னுணர்த்தும் தான்குருவாய் முன்"**

**(சிவஞானபோதம் சூத்திரம்-8. வெ. 47)**

*எனவரும் வெண்பாவில் ஆசிரியர் மெய்கண்டார் விரித்துக் கூறியுள்ளமையும்,*

**"நன்னெறிவிஞ் ஞானகலர் நாடுமலம் ஒன்றினையும்**
**அந்நிலையே உள்நின் றறுத்தருளிப்-பின்னன்பு**
**மேவா விளங்கும் பிரளயா கலருக்குத்**
**தேவாய் மலகன்மந் தீர்த்தருளிப்-பூவலயந்**
**தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல**
**முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள்கை அன்னவனுக்**
**காதிகுணம் ஆதலினால்"** **(போற்றிப் பஃறொடை)**

*என இந்நூலாசிரியர் விரித்துக்கூறியுள்ளமையும் இங்கு ஒப்பு நோக்கியுணர்தற்குரியனவாகும்.*

*எல்லாம்வல்ல இறைவன் ஆசிரியனாகத்திருவுருத்தாங்கி அலையும் முயற்சியினைவிட்டு, அருவாய்நின்று ஆன்மாக்களுக்கு அருள்வழங்கலாகாதோ என வினவிய மாணாக்கர்க்கு, குருவாக வருதலின் இன்றியமையாமையை அறிவுறுத்துவது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**49. ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறியருளும்**
**பேரறிவான் வாராத பின்**

***இ-ள்:*** ***மந்திரமுதல் கலையீறாகிய மூவிரண்டு அத்துவாவுங் கடந்த வீட்டு நெறியினை வெளிப்படுத்தும் நிறைந்த ஞானத்தினையுடைய இறைவனே, குருவுருக் கொண்டு வாராதவிடத்து, அதனை அறிய வல்லார் யார்? ஒருவரும் இல்லையென்பதாம்.***

***இதனால், நிறைந்த அறிவனாகிய இறைவனே உருக் கொடுவரினல்லது உண்மையை யுணர்தல் கூடாதென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இறைவன் குருவாய் வந்துணர்த்தினல்லது உயிர்கள் உண்மைப் பொருளை யுணர்தல் இயலாதென்பது உணர்த்துகின்றது.*

எல்லாம் அகன்றநெறி அருளும் பேரறிவான், வாராத பின் அறிவார் ஆர் என இயையும் எல்லாம் அகன்றநெறி என்றது, மந்தரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை எனப்படும் அறுவகை வழிகளையும் நீங்கி வீடுபேற்றினை அடைதற்குரிய மெய்ந்நெறியாகிய ஞானத்தை. "மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங்கள் தத்துவங்கள் கலைகள்..............பரந்தநெறி அறுவகையும் ஒருவி நினைவரிதாம் பரபதத்துள் உயிர்விரவப் பயிற்றுமன்றே" (சிவப்பிரகாசம்-**9**) என வரும்பகுதி, 'எல்லாம் அகன்றநெறி அருளும்' என்பதற்குரிய விளக்கமாக அமைந்துள்ளமை இங்கு நினைக்கத்தகுவதாகும். பேரறிவான்- நிறைந்தஞானவுருவினனாகிய இறைவன். வருதல்-குருமேனிதாங்கி எழுந்தருளுதல். வாராதபின்- வாரானாயின்; பின் என்பது வினையெச்சவிகுதி. அறிவார் ஆர்- கட்புலனுக்குப் புலப்படத் தோன்றாது அருவாய் மறைந்துள்ள அம்முதல்வனை உய்த்துணர்ந்து அறியும் அறிவுவன்மையுடை யார் யாருளர்? ஒருவரும் இலர் என்பதாம். 'எல்லாம் அகன்ற நெறி' என்பதற்கு, 'மனவாக்குக்காயங்கட்கு எட்டாத பொருள்' எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்

'பெற்றதாய்க்குத் தன் பிள்ளையின்பால் உளதாம் அருவாகிய அன்பினைப் பிறர் அறியும்படி வெளிப்படுத்தும் முலைப்பாலும் கண்ணீரும், அவள்பால் குழந்தையைக் காணுதற்கு முன்னே இல்லாதனவாய்க் கண்டபின் உளவாய்த் தோன்றுதல்போல, நீரின்கண் நிழல்போல உயிர்களிடத்துப் புலப்படுதலின்றி அருவமாய் நின்ற இறைவனை, அவனே குருவடிவாய் வந்து தோன்றி நின்று உணர்த்தானாயினான், யார்தாம் அறிவார்? அறிவார் ஒருவருமிலர் என எடுத்துக்காட்டுத் தந்து விளக்குவது,

**"இல்லா முலைப்பாலுங் கண்ணீரும் ஏந்திழைபால்**
**நல்லாய் உளவாமால் நீர்நிழல்போல் — இல்லா**
**அருவாகித் தோன்றானை யாரறிவார் தானே**
**உருவாகித் தோன்றானேல் உற்று"**

**(சிவஞானபோதம்-சூத்திரம்-8. வெ. 49)**

எனவரும் வெண்பாவாகும். மெய்கண்டார் வாய்மொழியாகிய இதனைப் பொன்னேபோற் போற்று முறையில் அமைந்தது இக்குறட்பாவாகும்.

*'இறைவனே குருவாக வந்து உணர்த்தல் வேண்டுமோ? உயிராகிய யான்தானே எல்லாவற்றையும் உள்ளவாறு அறிய வல்லேன்' என்பாரை நோக்கி மறுத்துரைப்பதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

## 50. ஞானம் இவனொழிய நண்ணியிடும் நற்கலனற்
## பானு வொழியப் படின்.

***இ-ள்:* அருள்வடிவாகிய குரவனையன்றி ஒருவற்கு ஞானமுண்டாதல் கூடும்; ஆதித்தனாலன்றி மாசிலாச் சூரியகாந்தக் கல்லினிடத்து நெருப்புத் தோன்றுமாயின், இரண்டுமில்லையென்பதாம்.**

***இதனால், திருவடிஞானம் குரவனை யின்றியமையாச் சிறப்பிற்றென மேலது வலியுறுத்தப் பட்டது.***

***விளக்கம்:*** *இறைவன் குருவாகிவந்து உணர்த்தினாலன்றி உயிர்கள் ஒன்றையும் உணரமாட்டாவென்பது உணர்த்துகின்றது.*

*பானு ஒழிய, நற்கல்லின்கண் அனல்படின், இவன் ஒழிய உயிரின் ஞானம் நண்ணியிடும் என்க. நற்கல்-நல்ல சூரியகாந்தக்கல். பானு-சூரியன். ஒழிதல்-முன்னில்லாது நீங்குதல். அனல்-தீ. படுதல்-உண்டாதல்.*

*சூரியன் எதிர்முகமாக நில்லாது நீங்கிய நிலையில் சூரிய காந்தக்கல்லிடத்தே தீயுண்டாகாதவாறுபோல. இறைவன் குருமேனி கொண்டு எதிர்முகமாகத் தோன்றாத நிலையில் உயிர்களிடத்தே ஞானம் பிரகாசியாது என்றவாறு.*

**"சூரிய காந்தமுஞ் சூழ்பஞ்சும் போலவே**
**சூரிய காந்தஞ் சூழ்பஞ்சைச் சுட்டிடா**
**சூரியன் சந்நிதியிற் சுடுமாறு போல்**
**ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே"**

**(திருமந்திரம்-117)**

*எனவரும் திருமூலர் வாய்மொழியையும்,*

**'சூரிய காந்தக்கல்லி னிடத்தே செய்ய**
**சுடர்தோன்றியிடச் சோதி தோன்று மாபோல்**

**ஆரியனாம் ஆசான்வந் தருளால் தோன்ற**
**அடிஞானம் ஆன்மாவில் தோன்றும்'**

**(சித்தியார்-சுபக் 280)**

*எனவரும் அருணந்திசிவாசாரியார் வாய்மொழிப்பொருளையும் அடியொற்றியமைந்தது இக்குறட்பாவாகும்.*

## 6. அறியும் நெறி

***அஃதாவது, உண்மைப் பொருளை உணரும் முறைமை, அருளுருநிலைகூறி, அதனால் அறியும் பொருளுண்மை கூறுதலின், மேலை அதிகாரத்தினோடு இதற்கு இயைபுண்மை யறிக.***

**51. நீடும் இருவினைகள் நேராக நேராதல்**
**கூடுமிறை சத்தி கொளல்.**

***இ-ள்:** ஒன்றையொன் றொவ்வாது மிக்கு வளர்ந்து வரும் புண்ணிய பாவங்கள் இரண்டும் தம்மில் ஒப்பாக வரும் பருவத்திலே யுண்டாகும், சிவனுடைய சத்தி பதிதல்,*

***நேராக நேராதல், ஓர் புண்ணியத்திற்கு ஓர் பாவம் ஓர் வகையான் ஒத்திருத்தலாம். அதுவன்றி, வாக்கு மனங்காய மென்னும் மூவகையால் இயற்றப்பட்ட புண்ணியங்கள் முழுவதும் ஓர் பங்கும், பாவங்கள் முழுவதும் ஓர் பங்குமாகப் பொன்னும் இரும்புங் கன்மத்தால் துலையொக்கத் தூங்குதல் போலப் பலத்தாற் சமனாதல். சத்திபதிதலாவது, நிலையாத இயல்பினையுடைய உலக நடையினை அஞ்சி வீட்டு நெறியினை விரும்பும் வண்ணம் உயிர்களது உணர்வினைத் திருந்தச்செய்தல். ஒன்றை யொன்று ஏற்றத்தாழ்வுபடில் அவையவை இகல் செய்து இழுக்கு மென்பதாம்***

***இதனால், உண்மையுணர்தற்கு ஏதுவான சத்தி பதியும் எல்லை கூறப்பட்டது.***

***விளக்கம்:** இறைவன் குருவாகத் திருமேனிகொண்டு எழுந்தருளிவந்து மெய்ப்பொருளை உணர்த்தியருள அதனால் உயிர்கள் தம்மையும் தலைவனையும் உலகப்பொருள்களையும் உள்ளவாறு அறியும் முறைமையறிவுறுத்துவது 'அறியும்*

நெறி' என்னும் இவ்வதிகாரமாகும். மேலை அதிகாரத்திற்குறித்த அருளுருவாகிய குருவின் துணைகொண்டு உயிர்கள் தம்மையும் தலைவனையும் அறியும் முறைமையினைக் கூறுதலின் இதுமேலை அதிகாரத்தோடு இயைபுடையதாயிற்று. இவ்வதிகாரம் ஆன்ம தெரிசனம் உணர்த்துகின்றது.

இவ்வதிகாரத்தின் முதற்குறள், மேலையதிகாரத்திற் கூறியவாறு இறைவன் குருவாக வந்தருள்புரிதற்கு ஏதுவாக உயிர்களிடத்து அம்முதல்வனது திருவருள் பதியும் எல்லையினை உணர்த்துகின்றது.

நீடும் இருவினைகள் நேராக நேராதற்கண் இறைசத்தி கொளல் கூடும் என இயைத்துப் பொருள்கொள்க. இருவினை- புண்ணிய பாவங்கள். உயிர்கள் இருவினைப்பயன்களை நுகருங்கால், இன்பத்தின்கண் விருப்பும், துன்பத்தின்கண் வெறுப்பும்கொள்ளுதல் இயல்பாதலின் அவ்விருப்பு வெறுப்புக் காரணமாக அவ்வினைகள் மேலும் கிளைத்து வளர்தலின், 'நீடும் இருவினைகள்' என அடைகொடுத்தோதினார். நீடுதல்-மிக்குவளர்தல். இருவினையும் நேராக நேராதல் என்றது, இருவினைப்பயன்களும் சமமாக ஒத்திருத்தலாகிய இருவினை யொப்பினை. இருவினையொப்பு என்பது, ஆன்மா தான் நுகர்தற்குரிய இருவினைப்பயன்களாகிய இன்பதுன்பங்கள் இரண் டினையும் விரும்புதலும் வெறுத்தலுமின்றி ஒப்பக்கருதும் நல்லுணர்வு. 'நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே இதற்கு நாயகமே' (குழைத்தபத்து) எனவரும் திருவாசகத் தொடர் ஆன்ம அறிவின்கண் நிலைபெறுதற்குரிய இருவினை யொப்பினைப் புலப்படுத்தும் முறையில் அமைந்திருத்தல் காணலாம்.

இனி, நல்வினையுள் மிக்கதாகிய வேள்வி முதலிய புண்ணியமும் தீவினையுள் மிக்கதாகிய கொலை முதலிய பாவமும் ஒருங்கே பக்குவம் எய்திப் பயன்படுதற்கண் ஒத்தனவாயின், அவை தம்முள் ஒன்றால் ஒன்று அழிக்கப்பட்டுச் சுந்தோபசுந்தர் ஒருவர் மற்றவரால் அடிக்கப்பட்டு இருவரும் இறந்தாற் போன்று கெட்டொழியுமாதலின், அவ்வாறு அவ்விருவினையும் அழியும் நிலையில் தம்முள் ஒத்தலே இருவினையொப்பென்பர் ஒருசாரார். சஞ்சிதமாய்க்கிடந்த புண்ணியங்களும் பாவங்களும் மிகுதி குறைவின்றித் தம்முள் ஒத்தலே இரு வினையொப்பென்பர் மற்றொருசாரார். இவ்விருசாரார் கொள்கைகளையே இந்நூலுரையாசிரியர் நிரம்ப அழகிய தேசிகர் இக் குறளுரையில் எடுத்துக் காட்டுகின்றார்.

*உயிர்கள் செய்த புண்ணிய பாவங்களுள் மிக்கன இரண்டும் தம்முள் ஒத்துக்கெட்டனவாயினும், அவைநீங்க அவற்றிற் குறைந்தனவாய்க் கெடாது எஞ்சியுள்ள புண்ணிய பாவங்கள் தத்தம் பயனைத்தருதற்குத் தடையில்லை. இனி உயிர்கள் செய்யும் இருவினைகள் முழுவதும் அளவாலும் பயனாலும் தம்முள் ஒக்கும் நிலையடைதல் இயலாது. அங்ஙனம் ஒருகால் ஒக்குமாயினும் அவை உயிரால் நுகர்ந்து கழிக்கப்படாமையால் ஆணவமலம் நீங்குமாறின்மையின் அதுபற்றி ஆன்மா முத்தியடைதல் என்பதும் இயலாததொன்றாகும். எனவே மேற்கூறியவை 'இருவினையொப்பு' என்பதற்குப் பொருளல்ல எனமறுத்து, "ஒன்றில் விருப்பும் ஒன்றில் வெறுப்புமாதலின்றிப் புண்ணிய பாவம் இரண்டினும் அவற்றின் பயன்களினும் ஒப்ப உவர்ப்புநிகழ்ந்து விடுவோனது அறிவின்கண் அவ்விரு வினையும் அவ்வாறு ஒப்பநிகழ்தலே ஈண்டு இருவினை யொப் பென்பதற்குப் பொருள்" (சிவஞானபாடியம் **8**-ஆம் சூத்திரவுரை) என விளக்குவர் மாதவச் சிவஞானமுனிவர்.*

*உயிர்கட்கு இருவினையொப்பு உளதாகவே, ஆணவமலம் தனது ஆற்றல் தேய்தற்குரிய: துணைக்காரணங்கள் எல்லாவற் றோடுங் கூடுதலாகிய மலபரிபாகமும், மலபரிபாகம் காரணமாகச் சத்திநிபாதமும் உளவாம். மலத்திற்கு அநுகூலமாய் நின்று நடத்திய திரோதான சத்தி, அம்மலம் பரிபாகம் எய்தியவழி அக் கருணைமறமாகிய செய்கைமாறிக் கருணை யெனப்படும் முன்னைப் பராசத்தி ரூபமாய் உயிர்கள்மாட்டுப் பதிதலே சத்தி நிபாதம் எனப்படும். சத்தி-திருவருள். நிபாதம்-வீழ்ச்சி; என்றது வீழ்ந்து ஆழப்பதிதலை. ஒரு கூட்டத்தின் நடுவே கல் வந்து வீழ்ந்தால் அதன் வீழ்ச்சி, அங்குள்ளவர்களை அவ்விடத்தினின்றும் விரைந்து அகலும்படி செய்யும். அதுபோல ஆன்மாவின்கண் சத்திநிபாதம் நிகழ்ந்த அளவிலேயே அஃது அவ் ஆன்மாவையே மனைவி மக்கள் முதலிய உலகத்துழனியின் அச்சம் நிகழ்ந்து, அவ்வுலக வாழ்க்கையினின்று அஞ்சிப்போந்து உண்மைக் குரவனை நாடிச்செல்லுமாறு செய்வித்தலின், அவ்வொப்புமை தோன்ற சத்திநிகழ்ச்சி என்னாது சத்திவீழ்ச்சி என்று ஓதப்பட்டது.*

*ஆன்மாவின்கண் இருவினையொப்பு மலபரிபாகம் சத்தி நிபாதம் என்பவை முறையே நிகழ்ந்த நிலையில் இறைவன் குருவாகி எழுந்தருளி வருவான் என்பது,*

"சத்திநிபாதம் தருதற் கிருவினையும்
ஒத்துவருங் காலம் உளவாகிப்-பெத்த
மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி-உலவா
தறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்-பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு"

(கந்தர்கலிவெண்பா, கண்ணி-22-24)

*எனவரும் குமரகுருபர அடிகள் வாய்மொழியால் நன்கு புலப்படுத்தப் பெற்றிருத்தல் அறியத்தக்கதாகும்.*

*குருமேனிதாங்கி எழுந்தருளிய இறைவனால் அறிவுறுத்தப்படும் பொருள்கள் யாவை என வினவிய மாணாக்கர்க்கு அப்பொருள்களை வகைப்படுத்துரைப்பது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

52. **ஏகன் அனேகன் இருள்கரும மாயையிரண்
டாகவிவை யாறாதி யில்.**

***இ-ள்:* ஒருவனாகிய இறைவனும், அளவில வாகிய உயிர்களும், இருள்வடிவாகிய ஆணவ மலமும், கன்ம மலமும், சுத்தம், அசுத்தம் என்னும் இருவகை மாயைகளும் ஆகிய இப்பொருள்கள் ஆறும் அனாதியாகிய பொருள்கள் என்க.**

***அனேகன் என்பதில் ஈற்று மகரம் னகரமாய்த் திரிந்து நின்றது. இவை ஆறும் என அஃறிணை வாசகங்கொண்டு மிகவினால் முடிந்த திணைவழுவமைதி ஆறும் என்னும் முற்றும்மை செய்யுள் விகாரத்தால் தொக்கது.***

***இதனால், நித்தியப் பொருள்கள் இவையெனத் தொகுத்துக் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இது, பதி, பசு பாசம் என்னும் முப்பொருளையும் ஒருதிறத்தால் ஆறாகப் பகுத்துரைக்கின்றது,*

வேதத்துள் கூறப்படும் ஏகம் (ஒன்று) என்னுஞ்சொற்கு, 'இறைவன் ஒருவன்' என்பதே பொருள் என உணர்த்துவார், இறைவனை 'ஏகன்' எனக்குறித்தார். 'ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்' (திருமந்திரம்-**2104**) எனத் திருமூல நாயனாரும், 'ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க' (சிவபுராணம்) எனவும் ஒருவன் என்னும் ஒருவன் காண்க' (திருவண்டப்பகுதி) எனவும் திருவாதவூரடிகளும், ஒன்றென்ற தொன்றேகாண் ஒன்றேபதி' (சிவஞான போதம்-வெ.**7**) என மெய்கண்டதேவரும் தனி முதல்வனாகிய இறைவனைக் குறித்துக்கூறும் தொடர்கள் இங்கு உளங்கொளத்தக்கனவாம். எண்ணிலவாய்ப் பலவாகிய உயிர்த் தொகுதியினை 'அநேகன்' என்ற சொல்லாற்குறித்தார் ஆசிரியர். அநேகம்-பல. பலவாகிய உயிர்த்தொகுதியினைக் குறித்து வழங்கும் அநேகன் என்றசொல், 'ஏகன்' என்ற சொற்போன்று ஆண்பாலுணர்த்து வதன்றென விளக்குவார், நிலம் நிலன் என்றாற் போன்று ஏகம் என்பதன் மகரம் ஏகன் என னகரமாய்த் திரிந்து நின்றது எனக் குறித்தார் உரையாசிரியர். இருள்வடிவாகிய ஆணவமலத்தினை இருள் எனக்குறித்தார். கருமம்-கன்மமலம். உலகத்திற்கு முதற்காரணமாகிய மாயை என்பது, சுத்தம், அசுத்தம் என இருதிறப்படுதலின் மாயை இரண்டு' என எண்ணினார். இவ்வாறு உயர்திணையும் அஃறிணையும் விரவி எண்ணி 'ஆக இவை ஆறு' என அஃறிணை முடிபுகூறியது, பெரும்பான்மையாகிய மிகுதிபற்றியதாகும். இவை ஆறும் இன்னகாலத்தில் தோன்றின என்பதின்றிக் காலங்கடந்து முன்னமேயுள்ள பொருள்களாம் என்பார், 'இவை ஆறும்' ஆதி இல், என்றார். ஆதி-ஒருகாலத்திற் றோன்றியது. ஆதி இல் என்றதொடர், அனாதி என்னும் பொருளைத் தந்தது அனாதி-காலங்கடந்து என்றும் உள்ளபொருள்.

இவை ஆறும் அனாதியேயுள்ளனவாயின், இப்பொருள்களை அடிப்படையாகக்கொண்டு மக்கள் உணர்ந்துகொள்ளுதற்குரிய உண்மைகள் யாவை என வினவிய மாணாக்கர்க்கு, அவ்வுண்மைகளை வகைப்படுத்துணர்த்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**53. செய்வானுஞ் செய்வினையுஞ் சேர்பயனுஞ் [சேர்ப்பவனும்**
**உய்வா னுளனென் றுணர்.**

***இ-ள்: புண்ணிய பாவங்களைப் பண்ணும் புருடனும், அவனாற் செய்யப்படும் வினைகளும், அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்களும், அவற்றைக்கூட்டி அருத்தும் இறைவனும் என்னும் இந்நான்கு திறத்தினையுடையனாக உன்னை அறிவாயாக; மாணவகனே! நீ கதிசேர்தற் பொருட்டு.***

***இவை யுணராதிருக்கவே. யான் எனது என்னுஞ் செருக்கு அறாது பிறவித் துன்பம் உறும் என்பதாம். உடை யனாதல், இருவினைகளைச் செய்து இறைவனால் அவற்றின் பயனை நுகர்தற்குத் தான் உரியனாதல்.***

***விளக்கம்:*** *இது, சைவசித்தாந்திகள் சிறப்பாக உணர்ந்து கொள்ளுதற்குரிய பொருள்கள் இவையென உணர்த்துகின்றது.*

*செய்வான், செய்வினை, சேர்பயன், சேர்ப்பவன், உளன் என்று உய்வான் உணர் என்று இயைக்க. உம்மை எண்ணும்மை. செய்வான் என்றது இருவினைகளைச் செய்துழல்வான் ஆகிய புருடனை. செய்வான் என ஒருமையாற் கூறினும் இச்சொல் உயிர்த்தொகுதிகள் அனைத்தையும் குறித்து நின்றது. செய்வினை- உயிர்களாற் செய்யப்படும் நன்றும் தீதுமாகிய வினைகள். சேர்பயன்- தாம்செய்த நல்வினை தீவினைகள் காரணமாக உயிர்களைச் சேர்தற்குரிய இன்பதுன்பங்களாகிய நுகர்ச்சிகள். சேர்ப்பவன்- உயிர்கள் செய்த இருவினைப்பயன்களைச் செய்த உயிர்களே நுகரும்படி நியமித்து நுகரச்செய்பவனாகிய இறைவன். இந்நால் வகைப்பொருளையும் உள்ளவாறு அறிந்து உள்ளவனாக ஆன்மாவாகிய உன்னைக் குருமுகத்தால் அறிந்து உய்திபெறுக என அறிவுறுத்துவார், 'உளன் என்று உய்வான் உணர்' என்றார். தாம் செய்த நல்வினை தீவினைகளின் பயனைத் தாமே அறிந்து எடுத்துக்கொண்டு நுகரும் உணர்வுவன்மையும் வினைப்பயன்களாய இன்ப துன்பங்களில் விருப்பு வெறுப்பற்ற தன்மையும் ஆன்மாக்கட்கு இன்மையானும், செய்த வினைப்பயன்களைச் செய்த உயிர்களே நுகருமாறு சென்று சேரும் உணர்வு வினைகட்கு இன்மையானும், உயிர்கள் செய்த வினைப்பயன்களைச் செய்த உயிர்களே நுகருமாறு சென்று சேரும் உணர்வு வினைகட்கு இன்மையானும், உயிர்கள் செய்த வினைப்பயன் களை அவ்வுயிர்களே நுகர்ந்து கழிக்குமாறு வரை யறுத்து நுகர்விப்பவன் இறைவன் ஒருவனே என்பது சைவ*

*சமயச் சான்றோர்களின் துணிபு என்பார் 'சேர்ப்பவன்' என அம் முதல்வனைக் குறித்தார். ஆன்மா உளனாதலாவது, இரு வினை களைச்செய்து அவற்றின் பயன்களை இறைவன் நுகர்விக்கத் தான் நுகர்தற்கு உரியனாதல்.*

**"செய்வினையுஞ் செய்வானும் அதன் பயனுஞ் சேர்ப்பானும்**
**மெய்வகையால் நான்காகும் விதித்தபொருள் எனக்கொண்டே**
**இவ்வியல்பு சைவநெறி அல்லவற்றுக் கில்லை" என**
**உய்வகையாற் பொருள் சிவன் என்றருளாலே உணர்ந்திருந்தார்'**
**(பெரிய புராணம்-சாக்கிய-5)**

*எனச் சாக்கிய நாயனார் உணர்ந்ததாகச் சேக்கிழார் பெருமான் அறிவுறுத்திய சைவசமயச் செம்பொருளை அவ்வாறே எடுத்துரைக்கும் முறையில் உமாபதிசிவம் இக்குறட்பாவை அருளிச் செய்துள்ளமை அறிந்து போற்றத்தகுவதாகும்.*

*இனி, 'உய்வானும் உளனென் றுணர்' எனப் பாடங் கொண்டு 'மோட்சத்தையடைகிறவனும் உண்டு என்றறிவாயாக' எனச் சிந்தனையுரையிற் காணப்படும் உரை வெண்டளை பிழைத்தலானும் 'மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள்' என்றாங்கு நான்கென்னுந் தொகையினைத் தெளிவாக உணர்த்தாமையானும் இந்நூலாசிரியர் கருத்துக்கு ஏற்புடையதாகத் தோன்றவில்லை.*

**"செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை**
**உள்ளறிவான் உள்ளங் கொளல்" (677)**

*எனவருந் திருக்குறள் ஈண்டு நினைவுகூரத்தகுவதாகும்.*

*இங்குக் கூறப்படும் நால்வகைப் பொருளையும் உய்தி பெறுவானாகிய ஆன்மா தானே அறிவனோ என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

## 54. ஊனுயிரால் வாழும் ஒருமைத்தே ஊனொடுயிர் தானுணர்வோ டொன்றாந் தரம்.

*இ-ள்:* ***உடம்பானது உயிரோடு கூடிப் பிரிப்பின்றி நடைபெறும் ஒற்றுமையினையுடைத்து, அவ்வுடம்போடுயிர்கள்***

***நிறைந்த ஞானத்தோடு கூடி ஒன்றுபட்டு வேறறநிலை பெறுந் தகுதியன. எனவே உடலகத்து உயிர்போலக் கலந்து நின்று நடத்தும் என்பதாம்.***

***உடம்பென்ற பொது வகையால் ஐவகையுடம்பும் அடங்கும். அவையடங்கவே நிலமுதல் நாதமீறாகிய தத்துவம் எல்லாம் அடங்கும் எனக்கொள்க.***

***விளக்கம்:*** *இஃது, இறைவன் உயிர்க்குயிராய் நின்றுணர்த்த உணருந்தன்மையது ஆன்மா வென்பதுணர்த்துகின்றது.*

*ஊனொடு உயிர் தான், உணர்வோடு ஒன்று ஆம் தரம், ஊன் உயிரால் வாழும் ஒருமைத்து-என முடிக்க. உடம்போடு கூடிய உயிர். நிறைந்த ஞானமாகிப திருவருள் வேறற நின்று உணர்த்த(ப் பொருள்களை) உணரும் முறைமை, உடம்பானது உயிர் வேறற நின்று (தன்னைச்) செலுத்த அதனால் நடைபெறுவதனையொத்த ஒற்றுமைத் தன்மையினை யுடைத்து என்றவாறு. ஊன் என்றது, உடம்பினை ஈண்டு ‘உணர்வு’ என்றது, நிறைந்த ஞானவுருவினதாகிய முழு முதற்பொருளை.*

*ஐவகையுடம்பாவன, தூலசரீரம், சூக்குமசரீரம், குணசரீரம், கஞ்சுகசரீரம், காரணசரீரம் என்பன. இவை முறையே அன்னம யகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமய கோசம், ஆனந்தமயகோசம் எனப் பெயர் பெறுவன என்பர். (சித்தியார்-சுபக்கம் **211-215**)*

*உடம்புடன் கூடிப் பிரிப்பின்றி வாழும் ஆன்மா உடம்பின் கண் நிகழும் நுகர்ச்சிகளால் விகற்பமுறுதல் போன்று, உயிர்க்கு யிராய் வேறற விளங்கும் முதல்வனும் உயிர்க்கண் நிகழும் இன்பதுன்பங்களால் விகற்பமுறுவானோ என வினவிய மாணாக்கர்க்கு எடுத்துக்காட்டுத்தந்து அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

55. **தன்னிறமும் பன்னிறமுந் தானாங்கற் றன்மைதரும்
பொன்னிறம்போன் மன்னிறமிப் பூ.**

***இ-ள்: அடுத்த பல வன்னங்களையும் கவர்தலும், அவையடுத் திருக்கினுந் தன்னிறமே காட்டி நிற்றலும் ஆகிய***

***படிகத்தினது தன்மை யிரண்டிற்கும் தான் காரணமாகி நின்று பண்ணும் சூரியன் கிரணம் போலாம், இவ்வுலகிற்கு இறைவனது சுடராகிய ஞானசத்தி.***

***கட்டு, வீடு என்னும் இரண்டிற்கும் தானொன்றே காரணம் என்பதாம்.***

***இவை மூன்று பாட்டானும் இறைவன் உலகினை நடத்துமாறு கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இஃது, இறைவனது திருவருள், உயிரினது உணர்வின்கண் தோய்வின்றி நின்று காரியப்படுத்துமாறு உணர்த்துகின்றது.*

*தானாம்கல் பன்னிறமும் தன்னிறமும் தன்மைதரும் பொன்னிறம்போல், இப்பூவுக்கு மன்நிறம் (ஆம்) என முடிக்க. தான் ஆம் கல் என்றது, தனக்கொன்றொரு நிறமின்றிச் சார்ந்த பொருளின் நிறத்தினையடையுந் தன்மையதாகிய படிகக்கல்லினை, பொன்னிறம்-பொன்னிறம்-சூரியனது கிரணம். பொன்-சூரியன். நிறம்-ஒளி. மன் என்றது, இறைவனை. நிறம்-அம்முதல்வனது திருவருளாகிய பிரகாசம். இப்பூ-இவ்வுலகுக்கு; செய்யுளாதலின் குவ்வுருபுதொக்கது. பூ-உலகு; என்றது, ஆகுபெயராய் உயிர்த்தொகுதியைக் குறித்தது.*

*படிகமானது, தனது நிறத்தையும் தன்னைச் சார்ந்த பல நிறத்தையும் பெற்றுத் திகழ்தற்குக் கதிரவனொளி காரணமானாற் போல, உயிர், தத்துவங்களிற் கட்டுப்படுதற்கும் அவற்றின் நீங்கி வீடடைதற்கும் காரணமாய் விளங்குவது, இறைவனது திருவருள் என்றவாறு.*

**“பந்தம் வீடிவை பண்ணினீர்”** **(7-88-4)**

*என நம்பியாரூரரும்,*

**“பந்தம் வீடு தரும் பரமன் கழல்”**

**(பெரியபுராணம்-300)**

*எனச் சேக்கிழாரடிகளும் இறைவனைக் குறித்துக் கூறுவன இங்கு நோக்கத்தக்கனவாகும்.*

*இறைவனது திருவருள் நின்று ஆன்மாக்களுக்கு அறிவுறுத்த வேண்டுவதில்லை; ஆன்மாக்கள் தாமே அறிந்து செயற்படுவார்கள் எனக்கொண்டால் வரும் குற்றம் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அநுபவங்காட்டி அறிவுறுத்துவது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**57. கண்டொல்லை காணுநெறி கண்ணுயிர் நாப்பணொளி யுண்டில்லை யல்ல தொளி.**

***இ-ள்: நினைவினையுடைய உயிரினது நடுவாக ஞானவொளிக்கு நிலையுண்டாதல் வேண்டும்; அன்றாயின் வாயில் வழியாற் புலன்களை யுற்றுப் பார்த்து விரைவில் உணரும் முறைமையில்லை யென்க.***

***நடுவாக நிற்றல், கலந்து நிற்றல். இதனால் ஞானம் முன்னிற்பினல்லது அறிதல் கூடாதென்பது ஓர் அநுபவவகை யால் விளங்கக் கூறப்பட்டது. குரவனாலன்றி யுரை கொண்டுணர் தல் அரிதெனக் கொள்க.***

***விளக்கம்:*** *இது, திருவருள் உள்நின்றுணர்த்தினல்லது உயிர்கள் ஒன்றையும் உணரமாட்டா என்பது உணர்த்துகின்றது.*

*கண்ணுயிர் நாப்பண் ஒளி உண்டு; அல்லது ஒளிகண்டு ஒல்லைகாணும் நெறி இல்லை-என இயைத்துப் பொருள் கொள்வர் நிரம்ப அழகிய தேசிகர். கண்ணுயிர்-கருதி யுணர்தலையுடைய ஆன்மா. கண்ணுதல்-கருதியுணர்தல். கண்டு பொறிகளாகிய வாயில்வழியாற் புலன்களை உற்றுப் பார்த்து. ஒல்லைகாணும் நெறி-விரைவில் உணரும் முறைமை. நாப்பண்-நடு. உயிரின்கண்ணே முதல்வனது திருவருளாகிய ஒளி கலந்து நின்று உணர்த்தினாலல்லது, ஆன்மா பொறி வாயிலாக ஒன்றையும் கண்டுணர்தல் இயலாது என்பதாம்.*

*கண் ஒருபொருளைக் காணுங்கால், உயிரினது உணர்வு கண்ணொளியோடு வேற்றுமையின்றிக் கலந்து நின்று கண்டு காட்டுமாறுபோல, உயிர் ஒருபொருளை யுணருங்கால், முதல்வனும் உயிருணர்வுடன் வேற்றுமையின்றிக் கலந்து நின்று கண்டு காட்டும் உபகாரத்தினைச் செய்தருளுவன் என்பது,*

**"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போல்**
**காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்"**

*எனவரும் சிவஞானபோதம் பதினோராஞ்சூத்திரத் தொடரால் அறிவுறுத்தப்பட்டது. இத்தொடர்ப்பொருளை அடியொற்றி யமைந்தது; திருவருட்பயனாகிய இக்குறட்பாவாகும். இதன் முதலடியிலுள்ள முதற்சீரினை, 'கண்டு ஒல்லை' எனப்பிரிக்காது 'கண்தொல்லை' எனப்பிரித்து, "கண்ணுக்கு அநாதியே காண்கிற முறைமை உண்டு; கண்ணுக்கும் ஆன்மாவுக்கும் நடுவே ஒளி உண்டோ கண்ணுக்குத் தெரிவு உண்டு. ஒளி இல்லையோ கண்ணுக்குத் தெரிவில்லை" எனப்பொருளுரைப்பர் சிந்தனை யுரையாசிரியர். "கண்ணிலே ஒளி இல்லாமற்போனால், கதிரவனொளி பொருந்திக்காட்டிய பொருளைக் கண் காணாமைபோல, இறைவனது அறிவாற்றல் எங்கும் 'விளங்கினும் அது உயிரினுள்ளாகக் கலந்து நின்றாலன்றி ஒன்றையும் உயிர் அறிய மாட்டாது" எனக் கருத்துரை வரைவர் கா. சுப்பிரமணியப் பிள்ளையவர்கள். 'கண்ணுயிர் நாப்பணிலை' என்றும் பாடம்.*

*உயிர், அருளினாலே காரியப்படுதல் எவ்வாறு? என வினவிய மாணாக்கர்க்கு அதனை விளக்குவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**57. புன்செயலி னோடு புலன்செயல்போல் நின்செயலை**
**மன்செயல தாக மதி.**

***இ-ள்:* *பருடனது சிறு தொழிலின் வழியே திரிபின்றி நடக்கும் இந்திரியங்களது செயல்போல, மாணவகனே! நின்னுடைய செய்தியையும் இறைவனது கிரியா சத்தி வழியே அவ்வாறு நடப்பதாகக் கருதுவாயாக.***

***அவ்வாறு கருதவே வினைத் தொடர்பின்றிப் பிறவி நீங்கி நிற்பர் என்பதாம்.***

***இதனால், இறைவனது செயல்வழி நிற்றல் கூறப் பட்டது.***

***விளக்கம்:*** *இது, முதல்வனது அருளாற்றலின் வழி ஆன்மா செயற்படுமாறு உணர்த்துகின்றது.*

*புன்செயல் சிறுதொழில்; என்றது, ஓர் எல்லையுட்பட்டு இயங்கும் ஆன்மாவின் செயலை. செயலின் ஓடுதல்-செயல்வழி மாறாது செல்லுதல். புலன் செயல், இந்திரியங்களின் இயக்கம். நின் என்றது, இந் நூற் பொருளைக் கேட்டுணரும் மாணவனாகிய ஆன்மாவை நோக்கியது. மன் செயல்-இறைவனது கிரியா சத்தி. செயலதுஆக-செயலின் வழிப்பட்டு அவ்வாறு நிகழ்வதாக. மதி-கருதுக; முன்னிலை ஏவலொருமை.*

*ஐம்பொறிகள் ஆன்மாவினாலே அறிந்து காரியப்பட்டு வருமாறுபோலவே, ஆன்மாவும் முதல்வனது அருளாலே அறிந்து செயற்படுகின்றது என்றவாறு.*

*ஆன்மாவின் செயலுக்கு முதல்வனது செயல் துணையாதலை அறிதல் எவ்வாறு எனவினவிய மாணாக்கர்க்கு, அறியும் உபாயங்கூறுவது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**58. ஓராதே யொன்றையுமுற் றுன்னாதே நீமுந்திப்
பாராதே பார்த்ததனைப் பார்.**

***இ-ள்:* *ஞானம் எவ்வண்ணம் இருக்குமோ என்று ஆராயாமல், அதனையும் விடயங்கள் போலக் குறிக்கொண்டு ஊன்றி நினையாமல், நீயாக முன்சென்று மேற்கொண்டு காண்டலுஞ் செய்யாமல், உன்னைக்கண்ட ஞானத்தினைக் காண்பாயாக.***

***இவ்வாறு அசைவின்றி நிற்கவே, அவ் அகண்டமாகிய ஞானம் தானே தோன்றும் என்பது கருத்து.***

***விளக்கம்:*** *இது, முதல்வனது அருளாகிய ஞானத்தினைக் காணுமாறு உணர்த்துகின்றது.*

*ஓர்தல் - ஆராய்தல். உற்று உன்னுதல் - பொருந்திச்சுட்டியறிதல். முந்திப் பார்த்தல் - ஆன்ம போதத்தால் முற்பட்டுக் காணத்துணிதல். பார்த்தது. அருள் நோக்கால் தன்னைக் கண்டுகொண்டிருப்பதாகிய திருவருள்.*

*சிற்றறிவினையுடைய உயிர், முற்றறிவினனாகிய இறைவனது ஞானத்தைத் தன் சிற்றறிவால் ஆராயாமலும், அதனைச் சுட்டியறிய முயலாமலும், தன் முனைப்பினாலே அதனை முற்பட்டுக் காணத்*

துணியாமலும் அவ் அருளின் வழி அடங்கி நிற்றலே அதனைக் காணுதற்குரிய உபாயமாம் என்றவாறு.

**"ஓராமல் மந்திரமு முன்னாமல் நம்பரனைப்**
**பாராமற் பார்த்துப் பழகுநாள் எந்நாளோ"**

என்றார் தாயுமானாரும்

அவ்வாறு உயிர்க்குயிராய் உபகரித்து நிற்கும் திருவருளைக் கண்டபின் செய்யத்தக்கது யாது? என வினவிய மாணாக்கர்க்குச் செய்யத்தக்கது இது என அறிவுறுத்துவது அடுத்து வரும் குறட்பாவாகும்.

**59. களியே மிகுபுல னாக்கருதி ஞான**
**வொளியே யொளியா வொளி.**

***இ-ள்:* இத்தன்மையவாகிய ஞானத்தினைக் காணப் பெற்றமையால் வருமகிழ்ச்சியைப் பெரிய விடயமாக நினைந்து, ஞானமாகிய வொளியன்றி வேறு உனக்கு ஓர் ஒளியின்றாகும்படி அதனுட்புக்குக் கரந்து நிற்பாயாக**

***கரந்து நிற்றல், விகற்பமறக் கூடி நிற்றல்.***

***விளக்கம்:*** ஞானத்தினைக் காணப்பெற்றால் அதனுட் கலக்குமாறு உணர்த்துகின்றது.

களி - ஞானத்தினைக் காணப் பெற்றமையா லுளதாகிய பேரின்பமாகிய மகிழ்ச்சி. மிகு புலன் - உயிரினது உணர்வு அழுந்தி நுகர்தற்குரிய பெரிய விடயம். ஞானவொளியே ஒளியாக ஒளித்தலாவது, மெய்யுணர்வாகிய அவ்வொளியையன்றி வேறு எந்த உணர்வும் ஒளியாகத் தோன்றாதவாறு அம்மெய்யுணர்வுட்புக்குத் தான் என்னும் உணர்வு தோன்றாது ஒடுங்கி நிற்றல், திருவருள் ஞானத்தாற் பெறுதற்குரியதாகிய பேரின்பம் ஒன்றையே விரும்பி, ஆன்மாவாகிய உன்னறிவு முனைத்துத் தோன்றாது முதல்வனது பேரறிவே யாண்டும் மேற்பட்டு விளங்கும் வண்ணம் அதன்கண் அடங்குக என்றவாறு.

திருவருள் ஞானத்தினைக் கண்டு கூடிய உயிர், அத் திருவருளின் வயத்ததாய் ஒழுகுமாறு எவ்வாறு? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**60. கண்டபடி யேகண்டு காணாமை காணாமை**
**கொண்டபடி யேகொண் டிரு.**

***இ-ள்:* ஞானமானது உனக்கு யாதொரு படியே வெளிப்பட்டது, அப்படியே நீயும் கண்டு, அறியாமையாகிய அதீதாவத்தை வந்து தோன்றாமல், யாதொருபடி உன்னை விழுங்கிற்று. அப்படியே நீயும் விழுங்கக் கொடுத்திருப் பாயாக.**

***இம்மூன்று பாட்டானும் ஞானத்தினைக் காணுமாறும், கண்டால், அதனுட் கலக்குமாறும், அவ்வழித் தன்னை அதன் வயத்தன் ஆக்குமாறும் கூறப்பட்டன. 'மாணவகனே' என்பது, இம் மூன்றிற்குங் கூட்டியுரைக்கப்பட்டது.***

***விளக்கம்:*** *இஃது அருள் ஞானத்திற் கலக்கும்போது பெற்ற ஆன்மா, அவ் அருளின் வயத்ததாய் ஒழுகும் முறைமையினை உணர்த்துகின்றது.*

*கண்டபடி-கட்புலனாக வெளிப்பட்ட முறைமை. கண்டபடியே காணுதலாவது, தன்னுணர்வு புறத்தே செல்லாது அக்காட்சியிலேயே கருத்து ஒன்றியிருத்தல். 'காணாமை காணாமை' என்பவற்றுள் முன்னது, பெயர்; பின்னதுமையீற்று வினையெச்சம் காணாமை- அறியாமையாகிய அதீதாவத்தை காணாமை-காணாமல்; தோன்றாமல். கொண்டபடி ஆன்மாவை அகத்திட்டுக்கொண்ட முறைமை 'கொண்டு என்றது, அவ்வாறு கொள்ளுதற்குத் தான் இசைந்து கொடுத்தலை உன்னை அகத்திட்டுக்கொண்ட திருவருள் செலுத்திய வழியே நின்று உனக்கெனச் செயலின்றி அடங்கியிருப்பாயாக என்பார், 'கொண்டபடியே கொண்டு இரு' என்றார்.*

*"கேவல சகலத்தைநீக்கி உன்னைக்காட்டின திருவருளையே கண்டு, காணாமையாகிய தேகாதி பிரபஞ்சத்தைக் காணாமல் நீங்கி, திருவருள் உன்னை எந்தப்படிகொண்டிருந்தது அந்தப்படி இரு" என்பது, இக்குறட்பாவுக்கு அமைந்த சிந்தனையுரை.*

*கொண்டபடியே கொள்வதெவ்வாறு என வினவிய மாணாக் கர்க்கு விடைகூறும் முறையில் அமைந்தது அடுத்த அதிகாரத்தின் முதற் குறட்பாவாகும்.*

## 7. உயிர் விளக்கம்

***அஃதாவது, ஆன்ம சுத்தி பண்ணும்படி அறியு நெறியிற் கூறிய வாற்றான் அறிந்தபடி நின்று யான் எனது என்னுஞ் செருக்கறுத்தல் கூறினமையின், மேலை அதிகாரத்தினோடு இதற்கு இயைபுடைத்தெனக் கொள்க.***

**61. தூநிழலார் தற்காருஞ் சொல்லார் தொகுமிதுபோற்**
**றானாதுவாய் நிற்குந் தரம்.**

***இ-ள்: கோடையான் வெதும்பினோன் குளிர்ந்த நிழலையடைதற்கு 'அடைதி'என ஒருவருஞ் சொல்லார்; தானே விரைவின் அடையுந் தன்மையினை யொக்கும்; மாயாவிகார வெம்மையான் வருந்தினோன் ஒருவன் தான் அவ்வருளினை யடைந்து அதுவாய் நிற்கும் முறைமை. எனவே உலக வெறுப்பினல்லது அருளினையடைதல் கூடா தென்பதாம் என்க.***

***இதனால் அருளினையடைதற்கு ஏது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *குறையுணர்வாகிய பசு அறிவாலும் பாச அறிவாலும் உணரப்படாத முதல்வன், அருளுருக்கொண்டு குருவாகி எழுந்தருளி வந்து மெய்ப்பொருளை அறிவுறுத்த, அம்முதல்வனது திருவடிஞானத்தால் தன்னையும் தலைவனையும் தத்துவப் பிரபஞ்சத்தையும் தன் அறிவின்கண்ணே ஆராய்ந்தறிந்த நல்லுயிர், நிலமுதல் நாதமீறாகிய பாசத்தொகுதி பேய்த்தேரின் இயல்பினதாய் நிலையின்றிக் கழிவது என்று அறிந்து நீங்கவே, இறைவனது திருவருள்ஞானம் பிறவித்துயராகிய வெப்பத்துக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்க, அதனால் தானும் விளக்கமுற்றுத் திகழுமாறு கூறுதலின், இவ்வதிகாரம் உயிர்விளக்கம் என்னும் பெயர்த்தாயிற்று. மேலை அதிகாரத்தால் ஆன்மசுத்தி கூறுதலின் இது, மேலையதிகாரத்தோடு இயைபுடையதாயிற்று.*

*இவ்வதிகாரத்தின் முதற்குறள், பிறப்புத் துன்பமாதல் உணர்ந்தார்க்கே சிறப்பென்னும் வீடுபேற்றினையருளும் செம்பொருளையடைதற்குரிய வேட்கை தோன்றும் என்பது உணர்த்துகின்றது.*

தூநிழல் ஆர்தற்கு ஆரும் ('அடைதி' எனச்) சொல்லார்; தொகும் இதுபோல்வதே தான் அதுவாய் நிற்கும் தரம் என இயைத்துப் பொருள்கொள்க.

தூநிழல்-தூய்மையுடைய குளிர்ந்தநிழல், ஆர்தல்- வந்து பொருந்துதல். சொல்லுதல் என்றது, ஈண்டு வருக என வேண்டியழைத்தலை. தொகுதல்-வந்து அடைதல். தான் என்றது உயிரினை. அதுவாய் நிற்றல். அத்திருவருளைச்சார்ந்து அதன்வழி அடங்கி நிற்றல். நிற்குந்தரம்- நிற்கும் முறைமை.

கடுங்கோடையாகிய வெயில் வெம்மையினால் வருந்துவோர். குளிர்ந்த நல்ல நிழலைக்கண்ட பொழுது. யாரேனும் தம்மைநோக்கி வருக என அழைத்தல்வேண்டும் என்பதின்றித் தாமே விரைந்து அந்நிழலையடைந்தாற்போல, பிறவி வெப்பத்தால் வருந்திய உயிரும் தனக்குக் குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டு விளங்கும் திருவருளின்வழி தானேயடங்கி நின்று விளக்கமுற்றுத்திகழும் என்பதாம்.

'தூநிழல் ஆர்தற்கு ஆரும் சொல்லார் தொகும்' என்றதனால், அவ்வாறு தொகுதற்குமுன்னே அன்னோர் கடுவெயிலால் வருந்தினமை குறித்தவாறு. இதனால் பிறவிப்பாசம் கடுங் கோடையின் இயல்பிற்றாய் உயிர்க்கு வெம்மையை விளைப்பதென்பதும், முதல்வனது திருவருள் அக்கோடையை நீக்கும் குளிர்ந்த நிழலையொத்து உயிர்களுக்குத் தண்ணருள் வழங்குவதென்பதும் உடன் புலப்படுத்திய வாறு. ''உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி'' என வரும் சிவஞானபோதத் தொடர்பொருளை அடியொற்றி யமைந்தது. இவ்வதிகாரத்தின் முதற்குறளாகும். இதன்கண் 'தூநிழல்' என்றது, ஆதித்தனது ஒளியையெனக்கொண்டு, ''ஆதித்தன் உச்சியிலே வந்த காலத்துப் பவித்திரமாகிய ஆதித்தனுடைய நிழல் அதற்குள்ளே (அப்பளிங்கினுள்ளே) அடங்குகிறதற்கு ஒருவரும் உபசாரம் சொல்லவேண்டுவதில்லை. இந்தமுறையைப்போல இருவினையொப்பு வந்தகாலத்துத் திருவருள்வந்து அவனைக் கவளீகரித்துக்கொள்ளுதற்கு ஒருவர் சொல்லவேண்டுவதில்லை'' எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்.

**'பளிங்கினிழலுட் பதித்த சோதியானை'** **(6-91-2)**

எனவரும் அப்பர் அருள்மொழி நோக்குக. 'தூணிழல்' என்றும் பாடம்.

இறைவனது திருவருள் எல்லார்க்கும் ஒக்க நில்லாதது ஏன்? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**62. தித்திக்கும் பால்தானும் கைக்கும் திருந்திடுநாப்**
**பித்தத்தின் தான்தவிர்ந்த பின்.**

**இ-ள்:** குற்றந்தீர்ந்த நாவானது, பித்தநோயினின்றும் தான் நீங்கியபின்னர் முன் கைத்த பாலும் தித்திக்கும் அதனைத் தானுங் கண்டறியும்.

மலவிருள் தீர்ந்தபின்னர், முன்னந் திரோபவித்து நின்ற மருளும் அருள் வடிவாகி வெளிப்படும், அதனை உயிர்களும் காணும் என்பது பொருள். மாசுதீரின் விளங்கித் தோன்றும் தன்மையினையுடையது உயிர் என்பதற்கு உவமித்து, இதனைத் "திருந்திடுநா" என்று அருளிச் செய்தார். இதுவும் ஒட்டென்னும் அலங்காரம்

இதனால், அருள்வெளிப்படுங் காலமும், உயிர் அதனைத் திருந்திக்காணுங் காலமும் ஒன்றென்பது கூறப்பட்டது.

**விளக்கம்:** இருள்மலத்தாற் பற்றப்பட்ட உயிர்களது அறிவின்கண் முதல்வனது அருள் விளங்கித் தோன்றாதென்பதும், இருள்மலந் தவிரும் நிலையில் அருள் வெளிப்பட்டுத் தோன்று மென்பதும் உணர்த்துகின்றது.

திருந்திடு நாப் பித்தத்தின் தான் தவிர்ந்தபின் (முன்) கைக்கும் பாலும் தித்திக்கும்; தான் (அறியும்)-எனப் பெத்த முத்திக்கேற்ப முன்பின்னாகச் சொற்களை மாற்றிப் பொருளுரைப்பர் நிரம்பவழகிய தேசிகர்.

திருந்திடு நாப் பித்தத்தின் பால்தானும் கைக்கும்; தவிர்ந்தபின் தான் தித்திக்கும் என இயைத்து, "திருத்தத்தையுடைய நாவிலே பித்தம் மேலிட்ட காலத்து, (தித்திக்கும்) பாலும் கசக்கும்; பித்தம்

நீங்கினகாலத்துப் பால் தித்திக்கும். அப்படிப்போல, ஆன்மாவிடத்திலே மலம் மேலிட்டால் சிவானுபவம் தோன்றாது. மலம் நீங்கினால் சிவானுபவம் தோன்றும்" எனப் பொருள் கொள்வர் சிந்தனை யுரையாசிரியர்.

'உயிர் இருள்மலத்தினாற் பிணிப்புற்றகாலை மறைப்பாய் நின்ற இறைவனது அருளாற்றல், மலம்நீங்கிய காலை இனிய அருளாய் விளங்கும்' என்னும் பொருள் தோன்ற நின்றமையின் இக்குறட்பா, ஒட்டென்னும் அணியாகும்.

இறைவனது அருள் எதற்கு? உயிராகிய நானே அறிவேன் என்றாற்படும் இழுக்கென்னை? என்றார்க்கு, அவர்தம் அறியாமை யினையெண்ணி இரங்குவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**63. காண்பான் ஒளியிருளிற் காட்டிடவுந் தான்கண்ட**
**வீண்பாவம் எந்நாள் விடும்.**

***இ-ள்:*** ***ஒளிவடிவாகிய ஞானம், தன்னைக்கண்டறிதற் பொருட்டு, மலவிருளிலே மருண்டு கிடக்கின்ற உயிர்கட்குத் தன்னை வெளிப்படுத்தவும், அதனை நாடாது, உயிர் தானே காண்பதாகக் கண்டமையாலே வறிதே வரும் பாவம் என்ன பயனைச் செய்ததாய் வந்து முற்றும்.***

***ஓர் புலனுணர்வான் வரும் பாவம் போலாது வாளாவருதலின் வீண்பாவம் என்றருளிச் செய்தார்.***

***பித்தம் பாலானன்றி மற்றொன்றானுந் தீராதவாறு போல, மலமும் அருளாலன்றிப் பிறிதொன்றால் தீராதென்பதூஉம், அருள் மறைந்து நில்லாது வெளிப்பட்டு நிற்பினும், அந்நாக்குச் சுவைகாண்டல் போலத் தானே காண்டல் கூடாதென்பதூஉம் இதனுட் கொண்டு கிடந்தவாறு கண்டு கொள்க.***

***இதனால் அருளை முன்கொண்டு காணாக்கால் குற்றமுடைத் தென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *அருளின் உதவியின்றி ஒன்றையும் அறிய வியலாத உயிர், அருளின் உதவியை மறந்து நானே அறிந்தேன் என்று எண்ணுதல் அறியாமையின்மேலும் ஓரறியாமை யாதல் உணர்த்துகின்றது.*

*ஒளி, காண்பான் இருளிற் காட்டிடவும், தான்கண்ட வீண்பாவம் எந்நாள் விடும் என இயையும். 'ஒளி' என்றது ஒளிவடிவாகிய திருவருளை. காண்பான் - (உயிர்) தன்னைக் காணும்பொருட்டு; பானீற்று வினையெச்சம். இருள் என்றது, மலஇருளை. தான்கண்ட வீண்பாவம்-ஆன்மா (திருவருளின் உதவியை மறந்து) தானே காண்பதாகக் கருதினமையால் வீணேவரும் தீவினை. 'வறிதேவரும் பாவம் என்னபயனைச் செய்ததாய் வந்து முற்றும்' என நிரம்ப அழகிய தேசிகர் உரை கூறுதலால் 'வீண்பாவம் என்னாய் விடும்' என்பது அவர்கொண்ட பாடமாதல்கூடும். 'வீண் பாவமென்னாய் விழும்' என்ற பாடமும் உண்டு. ஒரு செயலும் செய்யாத நிலையில் வறிதேயுளதாம் பாவம் என்பார் 'வீண்பாவம்' என்றார்.*

*இனி, இக்குறளிற் 'காண்பான்' என்றது, காணுந்தன்மையை யுடைய கண்ணையும், ஒளி என்றது, கதிரவன் ஒளியையும், இருள் என்றது, பூத இருளையும் குறிக்கும் எனக் கொண்டு "காணுந் தன்மையையுடைய கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசமானது பூதஇருளை நீக்கிப் பதார்த்தங்களைக் காட்டக்கண்டும். நான்தானே கண்டேன் என்கிற விருதாவாகிய பாவம் எந்தக்காலம் தீரும். அதுபோல, அறியுந் தன்மையை உடைய ஆன்மாக்களுக்குத் திருவருளானது பாசத்தை நீக்கித் தன்னைக் காட்டத்தக்கதாகக் கண்டும், தானேகண்டேன் என்கிறது எந்தச் செனனத்திலே நீங்கும்" எனப் பதப்பொருளும் விளக்கமும் கூறுவர் சிந்தனையுரையாசிரியர். இவ்வாறு பொருள் கூறுங்கால், இக்குறட்பா ஒட்டு என்னும் அணிதழுவியதாகக் கொள்ளுதல் வேண்டும்.*

*இருள்மலத்தில் அழுந்திக்கிடக்கிற ஆன்மா தன்னைக் கண்டறிதற் பொருட்டு இறைவனது திருவருள், காட்டும் உதவியைச் செய்கின்றது என்பது,*

**"வஞ்சனையார் ஆர்பாடுஞ் சாராத மைந்தனைத்**
**துஞ்சிருளில் ஆடல் உகந்தானைத் தன்தொண்டர்**
**நெஞ்சிருள் கூரும்பொழுது நிலாப் பாரித்து**
**அஞ்சுடராய் நின்றானை நான்கண்--டாரூரே' (4-19-8)**

எனவும்,

**"காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே**
**காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" (6-95-3)**

எனவும் வரும் அப்பர் அருள்மொழிகளால் நன்கு விளங்கும்.

திருவருள் செய்யும் உதவியைத் தெளிந்தார்க்கும் தெளியா தார்க்கும் உள்ள வேற்றுமை யாது? என வினவிய மாணாக்கர்க்கு அதனை விளங்க அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**64. ஒளியும் இருளும் ஒருமைத்துப் பன்மை**
**தெளிவு தெளியார் செயல்.**

**இ-ள். பலவாய பொருள்கள் தம் பன்மை தோன்றாது ஒரு படித்தாயிருத்தல், ஒளியின்கண்ணும் இருளின்கண்ணும் ஒக்கத், தெளிந்து நிற்றலும் மருண்டு நிற்றலுமாய செயல்கள் அவ்விடத்துப் பேதம்.**

**இதனால், அருளோடு கூடிநிற்றல் ஒருவகையால் இருளோடு கூடிநிற்றல்போலும் என்பது கூறப்பட்டது. பிறிதொன்றுந் தோன்றாதென்பது கருத்து.**

**விளக்கம்:** ஆன்மா, திருவருளோடு பிரிவறக்கூடி யுணருமாறு கூறுகின்றது.

பன்மை-பலவாய பொருள்களின் தன்மை. ஒருமைத்து ஒருபடித்தாயிருத்தல். தெளிவு-தெளிந்த மெய்யுணர்வுடன் கூடியிருத்தல். தெளியார்-இருளின்கண்ணே மருண்டு நிற்போர். ஒளியுடன் கூடித் தெளிந்து நிற்றலும், இருளுடன் கூடி மருண்டு நிற்றலுமாகத் தம்தம் செயலால் வேறுபடுவதன்றி, உலகப் பொருள்கள் யாவும் ஒரு நிகரனவாதல் ஒளியின் கண்ணும் இருளின் கண்ணும் ஒக்கும் என்பதாம்.

"அந்தகர்கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசமும் அந்தகாரமும் ஒருபடித்தாயிருக்கும்; பதி பசு பாசங்களுடைய தன்மையை விளங்க அறியாதவர்களுடைய செய்தியும் அப்படிப்போல" என இதற்குப் பொருள் உரைப்பர் சிந்தனையுரையாசிரியர். இங்ஙனம் பொருள் கூறுங்கால் இக்குறட்பா எடுத்துக் காட்டுவமை யணியமைந்ததாகக் கொள்க. ஆன்மா ஆணவ இருளிற்கூடி அதன் தன்மையதாய் ஒற்றித்து நின்றவாறு போல, அருளிற் கூடியநிலையில் அவ்வருளொளியின் தன்மையாய் ஒற்றித்து நிற்கும் என்பது,

**'ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்**
**தாணுவினோ டத்துவிதஞ் சாருநாள் எந்நாளோ'**

எனவரும் தாயுமான அடிகள் வாய்மொழியால் இனிது உணரப்படும்.

அருளைத்தெரிந்தறிந்து கூடுதல் எல்லாவுயிர்க்கும் ஒரு சேரக் கிடைக்காதோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**65. கிடைக்கத் தகுமேநற் கேண்மையார்க் கல்லால்**
**எடுத்துச் சுமப்பானை யின்று.**

இ-ள்: நல்ல கேளிரையுடையார்க்கு அல்லால் தம் மேல் பாரமுழுதுஞ் சுமத்தச் சுமக்கும் ஒருவனை இப்பொழுதே கிட்டுதல் கூடுமோ.

"நற்கேண்மை" என்று அருளிச் செய்தார், அருளோடு கூடியதென்பதற்கு.

இதனால், அருளாகுங் கேண்மையினையுடையார்க்குத் தன்னை அடைந்தார் வினைகளெல்லாம் அவரைத் தொடராது தன் செயலாகக் கொள்ளும் ஞேயம் வெளிப்படுதல் எளிது என்பது கூறப்பட்டது.

**"சிவனும் இவன் செய்தியெலாம் என்செய்தி யென்றும்**
**செய்ததெனக் கிவனுக்குச் செய்த தென்றும்**
**பவமகல உடனாகி நின்றுகொள்வன் பரிவாற்**
**பாதகத்தைச் செய்திடினும் பணியாக்கி விடுமே"**

என்றருளிச் செய்தவாறு காண்க **(சித்தியார் -சுபக்-304)**

***விளக்கம்:*** *முற்செய் தவமுடையார்க்கன்றி இப்பிறப்பில் இறைவனருளைத் தலைப்படுதல் எளிதன்று என்பது உணர்த்துகின்றது.*

*நற்கேண்மையார்க்கு அல்லால், எடுத்துச் சுமப்பானை இன்று கிடைக்கத்தகுமே-என இயைத்துப் பொருள்கொள்க.*

*நற்கேண்மையார் என்றது, சரியை கிரியை யோக நெறிகளைப் பின்பற்றி ஒழுகிமுடித்து ஞானநெறியை மேற் கொள்ளும் நிலையில் இறைவனிடத்து மெய்யன்புடையராகிய பெருமக்களை. எடுத்துச் சுமப்பான் என்றது,*

**'அன்றேஎன்றன் ஆவியும் உடலும் உடைமையெல்லாமுங்**
**குன்றேயனையாய் என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ**
**இன்றோர் இடையூறெனக்குண்டோ எண்டோள் முக்கண் எம்மானே**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே' (திருவாசகம்)**

*என ஆளுடைய அடிகள் அருளியவாறு தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் எம் தலைவனாகிய நீயே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என அடியார்கள் கொடுக்க, அவ்வாறே ஏற்று அவர்க்குவரும் நலந் தீங்குகளையெல்லாம் தானே ஏற்றுக் கொண்டருளும் முதல்வனை. கிடைத்தல்-தமக்குரிய நிலையிற் பெறுதல். தகுமே-தகுமோ? இன்று-இப்பிறவியில்.*

*"சரியை கிரியா யோக பாதங்களை அனுட்டித்து முடித்து ஞானபாதக் கேள்வியையுடைய பேர்களுக்கல்லாது, உடல் பொருள் ஆவி மூன்றும் கொடுக்கச் சுமக்கிறவனை இப்போது உனக்குக் கிடைக்கத்தகுமோ" என்பது சிந்தனையுரை.*

*எடுக்கிறவன் ஒருத்தன் சுமக்கிறவன் ஒருத்தன் என வேறு வேறு கூறவேண்டுமோ? சுமக்கிற பிரமமும் நானே என்றால் வரும் குற்றம் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது. அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**66. வஞ்ச முடனொருவன் வைத்த நிதிகவரத்
துஞ்சினனோ போயினனோ சொல்.**

***இ-ள்:*** ***ஒருவன் சேமித்த பொருளினை ஒருவன் கரவினால் கவர்ந்துகொண்டு ஏக, மற்றவன் உறங்குதல் செய்தானோ, அவ்விடம் விட்டு நீங்குதல் செய்தானோ, மாணவகனே சொல்வாயாக.***

***இதனால், அதுபோலக் கேடின்றி நிரம்பிநிற்கும் ஞானசத்தியினை வஞ்சித்து அதன் முதலாய ஞேயத்தினை யுடைத்தாதல் அரிதென்பது கூறப்பட்டது.***

***இதுவும் முன்னதுவும் ஒட்டென்னும் அலங்காரம்.***

***விளக்கம்:*** *விழிப்பு நிலையாகிய நனவுக்காலத்திலேயே பிறனது வஞ்சனையாற் பொருளையிழந்து வருந்தும் ஆன்மா முற்றுணர்வுடைய பிரமமாதல் இயலாது என்பது உணர்த்துகின்றது.*

*ஒருவன் வைத்தநிதி, 'ஒருவன்' வஞ்சமுடன் கவர, (மற்றவன்) துஞ்சினனோ (அன்றி அவ்விடத்தைவிட்டுப்) போயினனோ சொல்-என இயைத்துரைக்க. துஞ்சுதல்-உறங்குதல். போதல்-அவ்விடத்தைவிட்டுநீங்குதல். துஞ்சுதலுமின்றிப் போதலும் இன்றி விழிப்புடன் அவ்விடத்தில் இருக்கும் நிலையிலேயே தன்பொருளை வஞ்சத்தால் ஒருவன் கவர்ந்துசெல்ல அதனை அறிந்துகொள்ள மாட்டாத அறிவுக் குறைபாடுடைய ஆன்மா, முற்றுணர்வுடைய முதல்வன் நானே யெனக்கூறுதல் யாவராலும் இகழ்ந்து நகைத்தற்குரிய பெரும் பேதைமையாம் என்பது கருத்து. "வஞ்சகமாக ஒருவன் ஒரு பதார்த்தத்தைக் கொண்டுவந்து வைத்து அவனை அறியாமல் எடுத்துக்கொண்டுபோய்த் திரும்பவந்து கேட்டவிடத்து, நீ எடுத்துப்போனாய் என்று சொல்லமாட்டாமல் அவத்தைப்பட்டானோ அவ்விடத்தைவிட்டு எங்கேயானாலும் போயினானோ சொல்" எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர். இதன்கண் 'துஞ்சினனோ போயினனோ' என்பதனை, 'துஞ்சினையோ போயினையோ எனப்பாடம் கொண்டு,*

*"வஞ்சகமாக ஒருவன் வைத்த திரவியத்தை யெடுத்துக் கொள்ள, வைத்தவன் வந்துகேட்க இல்லையென்னத் தூங்கித் தான்*

*கிடந்தாயோ? இவ்விடம் விட்டுத்தான் போனாயோ? அப்படிப்போலச் சிவன் தனு கரண புவன போகங்களைக் கொடுத்திருக்கவும், கொடுத்தவன் தானே குரு லிங்க சங்கமமாய் வந்து என்னுடைமையைத் தாவென்று கேட்க. இல்லையென்று சொல்லிக் கொடுத்தவனை மறைக்கையினாலே நீ பிரமமல்ல அடிமை" எனப்பொருளுரைத்தலும் உண்டு.*

*நனவிலும் இவ்வாறு உயிர்களை மறைத்து நிற்பதாகிய ஆணவவல்லிருள், அருள்வழி நிற்பார்க்கு இல்லையோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**67. தனக்குநிழ லின்றா மொளிகவருந் தம்ப**
**மெனக்கவர நில்லா திருள்.**

***இ-ள்:* தனக்கென வேறோரொளி தோன்றாத வண்ணம் சூரிய கிரணத்தாற் கவர்ந்துகொள்ளும் படிகத் தூண்போல் ஆன்மா தன்னுடைய போதம் தோன்றாது நிற்கும் வண்ணம் அருள் கவர்தலைச் செய்யுமாயின், அந்நிலையே இருளானது தன்பால் நிலைபெறாது நீங்கும்.**

***சூரிய கிரணத்துள்ளே தன்னைக் கொடுத்து நிற்கும் படிகம் போல, ஆன்மாவும் தன்னை அருளினுள்ளே கொடுத்து நிற்றல்வேண்டும் என்பதாம்.***

***இதனால், ஆன்மாவை அருள் தன்வயத்ததாக்குமாறு கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *ஆன்மா, தன்னகத்து இருள்கெட, அருளினுள்ளே அடங்கி நிற்குமாறு கூறுகின்றது.*

*தனக்கு நிழல் இன்றாம் தம்பம், ஒளிகவரும் தம்பம் எனத் தனித்தனி இயையும். தம்பம்-தூண்; என்றது, இங்குப் பளிங்கினாலாகிய தூணினை. ஒளி-சூரியகிரணம். கவர்தல்-அதனாற் கவர்ந்துகொள்ளப்பட்டு அதனுள்ளேயடங்குதல் தம்பம் என-தூண்போல; என, உவம உருபு. கவர-அருள் ஆன்மாவைத் தன்னுள் அடங்குமாறு கவர்ந்து கொள்ளுமாயின். இருள் நில்லாது-ஆணவ இருள் ஆன்மாவின்கண் நிலைபெறாது நீங்கும்.*

*"மத்தியான காலத்துப் படிகமானது, ஆதித்தப் பிரகாசத்தைக் கவர்ந்து பஞ்சவன்னங்களையும் பற்றாமல், தன்னிடத்திலே களங்கம் அற நின்றாற்போல, ஆன்மா சிவஞானத்துடனே கூடி அதுவாய் நிற்கவே பாசம் நில்லாது" என்பது இக்குறளுக்கு அமைந்த சிந்தனையுரையாகும்.*

*"சுத்த படிகமானது, இருள்வந்து மேலிட்ட அவதரத்து அந்த இருளோடுங்கூடி இருளின் நிறமாயிருந்தும், பஞ்ச வன்னங்களோடுங் கூடின அவதரத்து அந்தப் பஞ்சவன்னங்களின் நிறமாயிருந்தும், ஒளிமேலிட்டபொழுது அந்த ஒளியோடுங்கூடி ஒளிதானாய் இருந்தும் வரும். அதுபோல, ஆன்மாவும், ஆணவமலம் மேலிட்டு மறைத்த அவதரத்து அந்த மலத்தோடுங்கூடி அறியாமையாய்க் கிடந்தும், அப்படிக் கிடக்கச்செய்தே கலையாதி தத்துவங்களோடுங் கூடிப் பிரபஞ்ச காரியப்பட்டுச் சகலனாகியும், இவை இரண்டு பகுதியும் நீங்குவதாக அருள் மேலிட்ட அவதரத்து அந்த அருளோடுங்கூடி அறிவாய் நின்றும், இங்ஙனம் கேவலனாகியும், சகலனாகியும், சுத்தனாகியும் கூடினதன் தன்மையாய் நிற்கையாலே படிகத்தை உவமை சொன்னதென அறிக" (சிவப்பிரகாசம்-**59**) எனவும்.*

*"ஆதித்தப் பிரகாசத்தினாலே படிகத்திலே வன்னங்கள் பிரதிபிம்பஞ் செய்யுமிடத்து அந்த ஆதித்தன் சாய ஓடும் பொழுது அதிலே பிரதிபிம்பஞ் செய்தும், அந்த ஆதித்தன் மத்தியானமான பொழுது அந்தப்படிகத்தின் உச்சியிலே நேர்பட்ட அவதரத்து அந்தவன்னங்கள் கூடியிருக்கச் செய்தே அந்தப்படிகம் வன்னங்களிற் பற்றாமல் ஆதித்தப் பிரகாசத்தைக் கவர்ந்துகொண்டு நின்றாற்போல, அந்தத் திருவருள் ஞானமும், ஆன்மாக்களுக்கு மலபாகம் வாராத நாளெல்லாம் பிரபஞ்சத்திலே புசிப்பித்து, மலபாகம் வந்த அவதரத்து அந்தப் பிரபஞ்சப் பற்றறும்படி நேர்பட்டுத் திருவருளைக் கடாக்ஷித்து நிற்கையால் அப்படிச் சொன்னதென அறிக. இதற்குப் பிரமாணம் திருவருட்பயனில் "தனக்கு நிழலின்றாம் ஒளி கவருந் தம்ப-மெனக்கவர நில்லாதிருள்' (**67**) என்பது கண்டுகொள்க". (சிவப்பிரகாசம்-**69**)*

*எனவும், மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கங்கள் இங்கு மனங்கொள்ளத் தக்கனவாகும்.*

*ஆன்மா, தன்கண் ஆணவமலந் தோன்றாமல் அருளே நிகழ நிற்பது எவ்வாறு? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**68. உற்கைதரும் பொற்கை யுடையவர்போல்**
**நிற்கை யருளார் நிலை. [உண்மைப்பின்**

**இ-ள்: தழற்கொள்ளியினைப் பிடித்திருக்கும் அழகிய கையினை யுடையோர், தாம் வேண்டிய பொருள்களைக் காணுமளவும் அதனை முன்னிட்டுத் தாம் பின்னிற்குமாறு போல, ஞேயமானது வெளிப்படுமளவும் அருளைத்தமக்கு முன்னாக்கித்தாம் அதன் பின்னிற்றலே அருளோடு பொருந்தி நிற்கும் நிலையாவது என்க.**

**இதனால், அருளோடு பொருந்தி நிற்கும் உபாயங் கூறப் பட்டது.**

***விளக்கம்:*** *ஆன்மா அருளை முன்னிட்டுக்கொண்டு நிற்கும் முறைமையினை உணர்த்துகின்றது.*

*அருளார்நிலை, உற்கை தரும் பொற்கையுடையவர்போல் உண்மைப்பின் நிற்கை-என இயையும். அருள் ஆர்நிலை-அருளோடு பொருந்திநிற்கும் நிலை. ஆர்தல்-பொருந்துதல் உற்கை-தழற்கொள்ளி; கொள்ளிக்கட்டை; இச்சொல் தீவட்டி, கைவிளக்கு என்ற பொருளில் இங்கு ஆளப்பட்டது. பொன்+ கை=பொற்கை என னகரம் றகரமாகத்திரிந்தது. பொன்கை-அழகியகை. உண்மை-மெய்ப்பொருள்; என்றது, அதனின் வேறாகாத திருவருளை. உண்மைப்பின் நிற்கையாவது, ஆன்மா திருவருளை முன்னிட்டுத் தற்போதம் அடங்கி அவ்வருளின்வழி ஒழுகுதல்.*

*"அழகிய உள்ளங்கையிலே விளக்கை முன்னிட்டுப் பதார்த்தங்களைக் காண்கிறவர்களைப்போல, தற்போதஞ்சீவியாமல் சிவஞானத்தை முன்னிட்டு நிற்கிறதே அருளையடைந்தவர்கள் முறைமை" எனப் பொருள் உரைப்பர் சிந்தனையுரையாசிரியர். இவ்வுரையில் அருளர்' என்பது, அருளையடைந்தவர்கள் என்ற பொருளில் ஒருசொல்லாகக் கொள்ளப்பட்டது.*

*ஆன்மா, ஐம்புலன்களாகிய கருவிகளின் துணைகொண்டு எதனையும் அறியும் முறையில் திருவருளின் துணையின்றிப் பேரின்பத்தைத் தானே அடைதல் இயலாதோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**69. ஐம்புலனாற் றாங்கண்ட தன்றா லதுவொழிய**
**ஐம்புலனார் தாமார் அதற்கு.**

***இ-ள்:* மெய், வாய், கண் மூக்குச் செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்லவாயின், அவ்வருளானே யன்றிப் பேரின்பமாகிய நேயத்தினையடைதற்கு அவ் ஐம் பொறிகள்தான் ஆர்? உயிர்கள்தாம் ஆர்? என்க**

***சுட்டிறந்து நின்றமையால் இவர்க்கு அடைதல் உரிமையில்லை என்பார், 'ஆர்?' என்றருளிச் செய்தார்,***

***விளக்கம்:*** *பேரின்பமாகிய மெய்ப்பொருள், கரணங் களாலும் ஆன்ம அறிவினாலும் அறிந்து அடையத்தக்கது அன்று என்பது உணர்த்துகின்றது.*

*ஐம்புலனால் தாம் கண்டது அன்று (ஆயின்) அது ஒழிய, அதற்கு ஐம்புலன் ஆர்? தாம் ஆர்?-என இயைத்துரைக்க. ஐம்புலனால் தாம் கண்டது அன்று-(மெய்ப்பொருளாகிய அது) மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் தாம் கண்டறிந்த விடயங்களுள் ஒன்றல்ல. அது ஒழிய-அவ்வருளாலேயன்றி. அதற்கு- பேரின்பமாகிய நேயத்தினை அடைதற்கு. ஆர் என்னும் வினா இரண்டும், அறிதற்குரிய கருவிகளும் இல்லை; அறியவல்ல முற்றறிவுடையாரும் இல்லை என இன்மைப்பொருள் குறித்துநின்றன. 'நானார் என்னுள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார். வானோர் பிரானென்னை யாண்டிலனேல்' எனவரும் திருவாசகம் இங்கு நினைத்தற்குரியதாகும்.*

*இனி 'ஐம்புலனாற் றாம்கண்ட தென்றல்' எனப்பாடம் உரைத்து 'அதுவொழிய' என்புழி அது' என்னுஞ்சுட்டு பஞ்சேந்திரியத்தினைச் சுட்டியதாகக்கொண்டு, 'பஞ்சேந்திரியங் களினாலே ஆன்மா ஒருவிடயத்தை யறிந்ததல்லாமல், அந்தப்*

*பஞ்சேந்திரியங்கள் நீங்கின விடத்துப் பஞ்சேந்திரியங்கள் தான்ஆர்? ஆன்மாத்தான் ஆர்? அந்த ஞேயத்தைப் பொருந்துதற்கு' எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர். சுட்டுணர்வுடைய பிரபஞ்சத்தையே ஐம்பொறிகளின் துணைகொண்டன்றிக் காண முடியாத ஆன்மா, சுட்டுணர்வுக்கு எட்டாது அப்பாற்பட்டுள்ள அம்மெய்ப்பொருளைத் திருவருளின் துணையின்றிக்காணும் வன்மையுடையதன்று என்றவாறு.*

*'அருள் காட்டவேண்டுவதில்லை என்னறிவினாலே நானே சிந்தித்துக்கண்டறிவேன்' என்பாரை நோக்கி அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**70. தாமே தருமவரைத் தம்வலி யினாற்கருத
லாமே யிவனா ரதற்கு.**

***இ-ள்:*** ***ஒரு பொருளினை ஒருவற்குத் தாமே கருத்தாவாக நின்று விரும்பித்தருதற்கு உரியாரைத் தம் வலியால் தந்தவராக நினைத்தல் முறைமையன்றே. ஆதலால், அவ் வருளாற்பெறும் பேரின்பத்திற்கு, அப்பெற்றியினையடைய நிற்கும் இவன்யார்? என்க.***

***இவை இரண்டு பாட்டானும், பேரின்பமாவது அருளாலேயன்றிக் கரணங்களோடு கூடியும் தனித்தும் உயிர்களால் அடையப்படாதென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இறைவனருளும் பேரின்பம், உயிர்களது முயற்சி யாற் சென்றடைய வொண்ணாத திரு என்பது உணர்த்துகின்றது.*

*வறுமையால் வருந்தும் இரவலர், தம் வறுமைத்துயர்களைய வல்ல வள்ளலாவார் இவர் எனக் கேட்டறிந்து, தாம் இருக்குமிடந் தேடிவந்து குறையிரந்து நிற்க, அன்னோர்க்கு வேண்டுவன அளித்தல் உலகத்து வண்மையுடையோர் செயலாகவும், பேரருட்கடலாகிய முதல்வன் அவர்களைப் போலன்றி உயிர்கள் ஒன்றையறிந்து வேண்டும் உணர்வினைப் பெறாது அறியாமையிருளிற் பட்டு உண்பொருள்நாடிப் புகழிழந்து நிற்கும் அல்லற்காலத்திலேயே உயிர்கட்குத் தனு கரண புவன போகங்களைத் தந்து, வேண்டத்தக்கது இதுவெனவுணர்த்தி, வேண்ட முழுதும் தரும் பேரருளாளன்*

என்பது அறிவுறுத்துவார், 'தாமேதருமவர்' என அம்முதல்வனைக் குறித்தார். 'தானேவந்தெம்மைத் தலையளித்தாட்கொண்டருளும் வான் வார்கழல்பாடி' என்பது திருவெம்பாவை. தாமே தருதல் என்றது, பிறருடைய அதிகார எல்லையுட்பட்டுத் தருவதன்றித் தன் சுதந்தர நிலையில் எல்லார்க்கும் மேலாக நின்று தான் விரும்பியவண்ணம் கொடுத்தல். தம் வலியினாற் கருதலாவது, தமக்கு மேலாய் நின்று அருளால் உளமிரங்கிக் கொடுத்தவர்களை, அவர்கள் அவ்வாறு கொடுத்ததற்கு அவர் தம் அருளுடைமையே காரணம் எனக்கொள்ளாது தம் வன்மை தகுதி முதலியனபற்றிக் கொடுத்ததாக மாறுபடக் கொள்ளுதல். ஆமே-முறையாகுமா? முறையன்று என்பது கருத்து. பிறர்க்கு ஒருபொருளைக் கொடுக்கத்தக்க உடைமை எதுவும் இன்றி, எதனையும் பிறர்தரப்பெறுதற்குரிய வறுமை நிலையினையும் ஒன்றையும் முயன்று பெறுதற்கு இயலாத எளிமை நிலையினையும் உடைய ஆன்மாவாகிய இவன், சென்றடையாத திருவெனப்படும் அப்பேரின்பத்தினைத் தானே முயன்று பெறுதற்குரிய தகுதி தனக்கிருப்பதாக எண்ணுவது மிகவும் பேதைமையுடைய செயலாம் எனக்கடிந்து கூறுவார், 'அதற்கு இவன் யார்? என வெகுண்டு வினவினார் ஆசிரியர். இதனால், முதல்வன் அருள்வழியடங்கி நின்று, அவ்வருளே துணையாகப் பேரின்பத்தினைப்பெற எண்ணுதலே சிவஞானம் பெற்ற நல்லுயிர்களின் செயலாம் என்பது அறிவுறுத்தியவாறு.

## 8. இன்புறு நிலை.

***அஃதாவது, ஆன்மலாபம் அடையும் முறைமை, ஆன்ம சுத்தி கூறிப் பின்னர் அதனால் எய்தும் பயன் கூறினமையின், மேலையதிகாரத்தினோடு இதற்கு இயைபுண்மையறிக.***

**71. இன்புறுவார் துன்பார் இருளின் எழுஞ்சுடரின்**
**பின்புகுவார் முன்புகுவார் பின்.**

***இ-ள்: முன்னர் ஞானத்தைப் பின்னிட்டுத் தாம் அதற்கு முன் செல்வராகில் துன்புற்றவரே; மிக்க துன்பினைச் செய்யும் மலவிருளிலே நின்றும் எழுந்த ஞான விளக்கினை முன்னிட்டுத் தாம் அதன்பின் செல்வராகில் பேரின்பத்தினை யடைவார் என்க.***

**துன்பவின்பம் அடைதற்குக் காரணம், ஞானத்திற்கு முன் பின் சேறலாயிற்று. கட்டுற்று நின்றவர்க்கும் வீடடைபவர்க்கும் தம்முள் வேற்றுமை இதுவென்பதுமாம்.**

**இதனால், பேரின்பத்தை எய்துவார் இவரென்பது கூறப்பட்டது.**

**விளக்கம்:** பசுத்துவம் நீங்கி ஞானத்தைப் பெற்ற நிலையில் வியாபகமாய் நிகழும் ஆன்ம விளக்கத்தைப் பெற்ற நல்லுயிர், முதல்வன் திருவடிகளை அணைந்து இன்புறும் முறைமையினை அறிவிப்பது இவ்வதிகாரமாதலின், இன்புறுநிலை என்னும் பெயர்த்தாயிற்று.

இவ்வதிகாரத்தின் முதற்குறள், முதல்வனருளாற் பேரின்பத்தினை எய்துதற்குரியார் இவர் என்பது உணர்த்துகின்றது.

பின், முன்புகுவார் துன்பார், இருளின் எழுஞ்சுடரின் பின் புகுவார் இன்புறுவார்-என இயைத்துப் பொருள்கொண்டார் நிரம்ப அழகிய தேசிகர். பின், முன் புகுதலாவது, முன்னிருத்தற்குரிய ஞானத்தைப் பின்னிட்டுத் தாம் அதற்கு முன் செல்லுதல். உயிர்கள் ஆணவ இருளிற்பட்டு அழுந்திய இருள்நிலையிலும் உயிர்களின் உள்ளத்தே சோதியாய்த் தோன்றி நல்லுணர்வு வழங்குதல் உயிர்க்குயிராய் விளங்கும் முதல்வனது அருளியல்பு என்பது அறிவுறுத்துவார், 'இருளின் எழுஞ்சுடர்' என அடைமொழி புணர்த்துக் கூறினார் என்பது, நிரம்ப அழகிய தேசிகர் கருத்தாகும்.

**"நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே"**
**(திருவாசகம்-சிவபுராணம்)**

எனவும்,

**'சிந்தைதனை மயக்கந் தீர்க்கும் ஏரொளியை' (6-1-10**

எனவும்,

**'இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்'**
**(திருவாசகம்-பிடித்தபத்து)**

*எனவும் வரும் திருமுறைத்தொடர்கள் இங்கு ஒப்புநோக்கத் தக்கனவாகும். இனி, 'எழுஞ்சுடரின் பின்புகுவார் இன்புறுவார்; பின், இருளின் முன்புகுவார் துன்பார்' என இயைத்து, "விளக்கை முன்னிட்டுக்கொண்டு பின்னே செல்லுகிறவர்களைப் போல்வார், இன்பத்தைப் பொருந்தினவர்கள்; விளக்கைப் பின்னிட்டு இருட்டை முன்னிட்டுக்கொண்டு செல்லுகிறவர்களைப்போல்வார், துன்பத்தைப் பொருந்துவார்கள்" எனப்பொருள் கூறுவர் சிந்தனை யுரையாசிரியர்.*

*இறைவனது அருளை முன்னிட்டு அதன்வழியொழுகாது, சுடர்விளக்காகிய அதனைப்பின்னிட்டு, மின்மினியையொத்து நிலையில்லாத தம் ஆன்ம போதத்தை முன்னிட்டு மெய்ப் பொருளைக்கண்டறிய முயல்வார் அறியாமையாகிய இருளிற்பட்டு அல்லலுறுவர் என்பதாம்.*

**"அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன்"**
**(அற்புத-9)**

*எனவரும் அம்மையார் வாக்கும்,*

**"மதிதந்த ஆரூரில் வார்தேனை வாய்மடுத்துப் பருகியுய்யும்**
**வதியின்றி மதியிலியேன் விளக்கிருக்க மின்மினித்தீக்**
**காய்ந்தவாறே" (4-5-7)**

*எனவரும் அப்பரருள்மொழியும்,*

**"அருளால் எவையும்பார்' என்றான்—அத்தை**
**அறியாதே சுட்டி என்னறிவாலே பார்த்தேன்**
**இருளான பொருள்கண்ட தல்லால்—கண்ட**
**என்னையும் கண்டிலேன் என்னேடி தோழி"**

*எனவரும் தாயுமான அடிகள் வாய்மொழியும் ஈண்டு ஒப்பு நோக்கியுணரத் தக்கனவாம்.*

*அருளாற்பெறும் ஞானம் ஒன்றே போதும், அதனைத் துணையாகக் கொண்டு முதல்வனையடைதல் எற்றுக்கு? என்பாரை நோக்கி அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்து வரும் குறட்பா வாகும்.*

**72. இருவர் மடந்தையருக் கென்பயன்இன் புண்டாம்**
**ஒருவன் ஒருத்தி யுறின்.**

***இ-ள்:*** ***இரண்டுபேர் மகளிர்க்குத் தம்புணர்ச்சியால் வரும்பயன் என்னை? ஓர் புருடனும் ஓர்மகளும் தம்மிற் புணர்வாராயினன்றே இன்பமுண்டாவது என்க.***

***உயிர்க்கும், அருட்கு முதலாய நேயம் வெளிப்படின் அல்லது இன்பம் உண்டாகாது என்பது பொருள்.***

***ஒருவன் ஒருத்தி என்னும் உவமம், தலைமையும் தன்மையும் பற்றி வந்தது. இதற்கு இவ்வாறன்றி, உயிரினைப் பெண்ணியல்பினதாகவும் இறைவனை ஆணியல் பினதாகவும் அறிவில்லார் கூறுமது பொருளன்று! அன்ன இயற்கை அசேதன வடிவிற்கன்றிச் சேதன வடிவிற்கு இன்று ஆதலான்.***

***இதனால், பேரின்பத்தினை எய்தும் எல்லை கூறப் பட்டது.***

***விளக்கம்:*** *அருளாற்பெறும் ஞானம், இன்பத்திற்குச் சாதனமாம் அத்துணையல்லது, சிவப்பேறாகிய இன்பமாகாது என்பது உணர்த்துகின்றது.*

*இறைவனை ஆணாகவும் அவனருளைப் பெண்ணாகவும் உருவகஞ்செய்யும் மரபுண்மை,*

**'இறையவன் முதல், அவன்றன் இலங்கொளி சத்தியாமே'**
**(சிவப்பிரகாசம் 74)**

*என இவ்வாசிரியர் முன்னுங் கூறியிருத்தலாற் புலனாகும். இங்ஙனம் ஆணாகவும் பெண்ணாகவும் உருவகித்தது, எவ்வுயிர்க்குந் தந்தைபோன்று எல்லாவற்றையும் தனி நின்று ஆளும் தலைமை பற்றியும், அப்பன்வழி நின்று தம்மக்களைப் புரக்கும் அன்புடைய தாய்போன்று பல்லுயிர்க்கும் எளிவந்து அருள்சுரந்தூட்டும் தன்மைபற்றியுமேயல்லாது, ஆண், பெண் ஆகிய வடிவுபற்றியதன்று எனவும், ஆண், பெண் என்னும் இவ் அவயவப் பாகுபாடு அறிவற்ற சடப்பொருளாகிய உடம்புக்கன்றி அறிவேயுருவாகிய சேதனப் பொருளுக்கு இல்லையெனவும் நிரம்ப அழகிய தேசிகர் கூறிய விளக்கம் இங்கு ஊன்றி நினைக்கத்தக்கதாகும். அன்றியும்,*

இக்குறட்பா பிறிதுமொழிதலாகிய ஒட்டலங்காரம் அமைய வந்ததாகலின் , இதனை உவமம் எனக்கொண்டு, இவ்வாறு ஆண் பெண் என்பதனை வடிவுபற்றியதாகப் பொருள்கூறுதற்குரிய இன்றியமையாமையும் இங்கு நேர்தற்கு இடனில்லை. இந் நுட்பம், "இரண்டு பெண்கள் கூடினால் அவர்களுக்கு என்ன பிரயோசனம்? ஒருவனும் ஒருத்தியுங் கூடினவிடத்துச் சுகம் உண்டாம்; அப்படிப் போல, அருளும் ஆன்மாவும் கூடின விடத்துச் சுகமில்லை, ஆன்மாவுஞ் சிவமும் கூடினவிடத்துச் சுகம் உண்டாம்" என இதற்குச் சிந்தனையுரையாசிரியர் கூறிய, உரையால் இனிது புலனாதல் அறிக. ஆன்மாவைப் பெண்ணாக உருவகிக்கும் மரபுண்டென்பதற்கு

> **"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்......**
> **தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்**
> **தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே".** (6-65-7)

எனவரும் திருப்பாட்டினைப் பிரமாணமாக எடுத்துக் காட்டுவர் மதுரைச் சிவப்பிரகாசர்.

'ஒருவன் ஒருத்தியுறின் இன்புண்டாம்' என்னும் உவமையை நோக்கி, இறைவனாலே ஆன்மாச் சுகம்பெறுவது போன்று ஆன்மாவினாலே இறைவனுக்குச் சுகமுண்டோ? என ஐயுற்ற மாணாக்கர்க்கு ஐயமறுப்பதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

**73. இன்பதனை எய்துவார்க் கீயும் அவற்குருவம்**
**இன்பகன மாதலினா லில்.**

*இ-ள்:* ***தன்னை வந்தடையுமவர்க்குப் பேரின்பத்தினை வழங்கும் அவ்விறைவன் தனக்கு வடிவம் ஆனந்த மயமாதலால், தான் தன்னை நுகர்வதில்லை என்க.***

***அனாதியே ஆணவமலத்தால் மறைப்புண்டு அது நீங்கி இப்பொழுது நவமாக வந்ததுபோலக் கருதும் உயிர்கள் போலாது இறைவன் அனாதிமல முத்தனாதலான் அவற்கு இல்லையென்றருளிச் செய்தார். புதிதாக வந்ததன்றென்பது கருத்து.***

**இதனால், உயிர்களுக்குக் கொடுப்பதன்றி இறைவன் தானும் அவ்வின்பத்தினை நுகர்வனோ என்னுஞ் சங்கையினை அகற்றிக் கூறப்பட்டது.**

***விளக்கம்:*** *இறைவனால் ஆன்மாவுக்கு இன்பமேயன்றி ஆன்மாவினால் இறைவனுக்கு எய்தக் கடவ இன்பம் எதவுமில்லை என்பது உணர்த்துகின்றது.*

*எய்துவார்க்கு இன்பதனை ஈயும் அவர்க்கு உருவம் இன்ப கனம்; ஆதலினால் (அவர்க்குப் பிறர்தரும் இன்பம் ஏதும்) இல்-என வேண்டுஞ் சொற்களை விரித்துப் பொருள்கொள்க.*

*"பொருந்துகிற பெயர்களுக்கு இன்பத்தைக் கொடுப்பன்; கர்த்தாவுக்குத் திருமேனி இன்பக்கட்டி; அதென்போலவென்னில், சர்க்கரையைப் புசிக்கிறவன் இரசம் பெறுவதொழிந்து அவன் சர்க்கரைக்குக் கொடுக்கும் இரசமில்லை-ஆகையினாலே ஆன்மாக் கர்த்தாவுக்கு இன்பத்தைக்கொடுக்க வேண்டுவதில்லை" என்பது, சிந்தனையுரை. இன்பகனம்-இன்பக்கட்டி தன்னை அடைந்தார் எல்லார்க்கும் இன்பம் நல்குதல் இறைவனதியல்பென்பது,*

**'சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும் வண்ணம் நேர்ந்தவன்'**
**(1-113-5)**

**'தன்னடைந்தார்க் கின்பங்கள் தருவானை' (2-40-11)**

**'இனியன் தன்னடைந்தார்க் கிடைமருதனே' (5-14-10)**

**'இறைவா எம்பெருமான் எனக்கின்னமுதாயவனே' (7-27-2)**

*எனவரும் திருமுறைத் தொடர்களால் இனிதுணரப்படும், இறைவனால் ஆன்மாவுக்கு இன்பமேயன்றி, இறைவனுக்கு ஆன்மாவினால் அடைதற்குரிய இன்பம் எதுவும் இல்லையென்பது,*

**"தந்ததுன் றன்னைக் கொண்ட தென்றன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்**
**அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாதுநீ பெற்றதொன் றென்பால்"**
**(கோயிற்றிருப்பதிகம்-10)**

*என அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப்பெருந்தகையார் தம்மையாட்கொண்டருளிய இறைவனை நோக்கி வினவு முறையில் அருளிய திருவாசகத்தால் நன்கு தெளியப்படும்.*

*உயிர்கள் நுகர்தற்குரிய சிவாநுபவம், சர்க்கரையும் அதனைப் புசிக்கிறவனும்போல வேறுபிரித்துணர நிற்குமோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்தும் முறையிலமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**74. தாடலைபோற் கூடிஅவை தான்நிகழா வேற்றின்பக்**
**கூடலைநீ ஏகமெனக் கொள்.**

***இ-ள்:* தாள் தலை என்னுஞ் சொல்லிரண்டும் தம் பொருள் பிரிந்து தோன்றாது பொருந்தியவாறு போல், புணர்ச்சிக்கண் ஒருகாலும் உண்டாகாத வேற்றுமையினையும் இன்பத்தினையுமுடைய கலப்பினை இறைவனோடு ஒன்றாத லெனக் கொள்வாயாக மாணவகனே!**

***அச்சொற்கள் ஒரொருகாற் பிரிதலும், புணர்வால் தாம் பெறும் பயனின்மையுங் கருதி, இவை அன்ன அல்ல என்பதற்கு நிகழா வேற்றின்பக்கூடல் என்று அருளிச் செய்தார். தாளுந் தலையுமென்னுஞ் சொற்களாற் கூறியது, உயிரினது தாழ்வும் இறைவனது உயர்வும் காட்டுதற்காம்.***

***இதனால், ஞேயத்தழுந்தி ஒன்றுபட்டு நிற்கும் நிலை கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *ஆன்மா, சிவத்தோடு வேறறக்கூடியின்புறு மாறு கூறுகின்றது.*

*'தாள்' என்னும் நிலைமொழியின் முன் 'தலை' என்னும் சொல் வருமொழியாக வருமிடத்து, வருமொழி முதலிலுள்ள தகரம் டகரமாகத் திரிய, நிலைமொழியீற்று ளகரம் கெட, 'தாடலை' எனப் புணரும் என்பது,*

**'குறில் செறியா லள அல்வழிவந்த**
**தகரந் திரிந்தபிற் கேடும்' (எழுத்ததிகாரம்-229)**

எனவரும் நன்னூற் சூத்திரத்திற் கூறப்படும் புணர்ச்சிவிதி யாகும். தாள்+தலை என்னும் இவ்விரு சொற்களும் புணருங்கால் நிலைமொழியீற்றில் நின்ற ளகரமும் வருமொழி முதலில் வந்த தகரமும் தம்மிற் பிரித்தறிய ஒண்ணாதவாறு டகரமாகிய ஒரெழுத்தாக ஒன்றுபட்டு நிற்றல்போல, ஆன்மாவும் சிவமும், அவையெனவும் தான் எனவும் வேறு பிரிவற ஒன்றாகிய நிலையில் ஆன்மாவின்கண் நிகழ்வதே சிவாநுபவம் என்பது அறிவுறுத்துவார், 'தாடலைபோல்கூடி, அவை, தான் நிகழா வேற்றின்பக் கூடல்' எனக் குறித்தார் ஆசிரியர். அவை (என) தான் (என) வேறு நிகழா இன்பக் கூடல் என இயைத்துப் பொருள்கொள்க. 'அவை' என்றது, உயிர்த்தொகுதியை, 'தான்' என்றது, தனி முதற்பொருளாகிய சிவத்தினை. கூடல்-கலத்தல். ஏகம்-ஒன்று. 'அவை தான் நிகழ வேற்றின்பக்கூடல்' எனவரும் இத்தொடர், 'அவையே தானேயாய்' (சிவஞானபோதம்-2-ம் சூத்திரம்) எனவரும் மெய் கண்டார் வாக்கை அடியொற்றியமைந்ததாகும்,

> **'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்**
> **தாளை வணங்காத் தலை'**

எனத் தெய்வப்புலவர் அருளிய தாள், தலை என்னும் இரு சொற்களையும் பொருட் பொருத்தமும் சொற் பொருத்தமும் ஒருங்கமையப் புணர்த்தமைத்துக்கொண்ட தொடர், 'தாடலை' என்பதாகும். இதன்கண், 'தாள்' என்பது, எண்குணத்தானாகிய இறைவனது திருவடியையும், 'தலை' என்பது, அத்திருவடியினைச் சேர்ந்து வணங்கிச் சிவானந்தமாகிய பயனைப் பெற்றின்புறும் அடியார்களின் தலையினையும் குறிப்பன. சிவ பெருமான் தன் திருவருளாகிய திருவடி ஞானத்தால் பக்குவமுடைய உயிர்களின் மலமாயா கன்மங்களை நீக்கித் தன்னுடைய திருவடியிலே பிரிவறக் கூட்டிக்கொள்வன் என்பதே சைவ சித்தாந்த சமயத்தினர் கூறும் முத்தியாகும். இவ் உண்மையை அறிவுறுத்தும் முறையில் அமைந்தது, 'தாடலை' என வழங்கும் இத்தொடராகும்.

"தாள்+தலை என்று நின்ற விடத்து ளவ்வும் தவ்வும் கெடாமல் 'தாடலை' என்றே சீவித்து ஒன்றாய் நின்ற முறைமை போல, ஆன்மாவுஞ் சிவமும் வேறறக்கலந்து இன்பமாய் நிற்கிறதை ஒன்றெனக்கொள்" எனவரும் சிந்தனையுரை, 'தாடலை' என்பதன்

பொருள் நுட்பத்தினை இனிது புலப்படுத்தும் முறையில் அமைந் துள்ளமை உணர்ந்து மகிழத்தக்கதாகும்.

**"தாள் தந்தபோதே தலைதந்த எம்மிறை"** **(திருமந்திரம்)**

எனவும்,

**"தாழ்த்தச் சென்னியுந் தந்ததலைவனை"**

**(திருக்குறுந்தொகை)**

எனவும் வரும் திருமுறைத் தொடர்கள் இங்குக்கருதத்தக்கன.

ஆன்மா சிவத்தைக்கூடிய நிலையில், அக்கூட்டம் ஏகம் எனக்கொள்ளின், அக்கூட்டத்தில் ஆன்மாவும் சிவமும் ஒரு பொருளேயாய் விடுமோ, அன்றித் தம் தன்மைகெடாதே இரண்டாய் நிற்குமோ என வினவிய மாணாக்கர்க்கு விளங்கவுணர்த்தும் முறையில் அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

**75. ஒன்றாலும் ஒன்றா திரண்டாலும் ஓசையெழா**
**தென்றாலொன் றன்றிரண்டும் இல்.**

**இ-ள்:** **இறைவனையும் உயிரினையும் ஒன்றென் போம் ஆயினும் பின்னர்ப் பொருந்தவேண்டுவதில்லை, இரண்டென்போம் ஆயினும் தம்முள் தாக்கிய ஒலியெழுதலைச் செய்யாது, ஆதலால் ஒருபொருளும் அல்ல, இரண்டு ஆவதும் இல்லை என்க.**

**இதனால், இறைவனையும் உயிரினையும் ஏகம் என்பாரையும் இரண்டென்பாரையும் மறுத்து அத்துவிதம் கூறப்பட்டது. அத்துவிதமாவது தம்மிற் கலப்பால் அநந்நியமா யிருத்தல்.**

**விளக்கம்:** ஆன்மா, சிவத்துடன் கூடும் நிலையில் தன் முதல் கெடுவதுமின்றி, வேறுபட்டு நீங்குவதுமின்றிச் சிவத்துடன் இரண்டறக்கலந்து நிற்கும் என்பது உணர்த்துகின்றது.

ஒன்றாலும் இரண்டாலும் என்புழி 'ஆலும்' என்பது 'ஆயின்' என்னும் பொருள்தந்து நின்றது. ஓசை-ஒலி; சொல் என்றால்-எனின். "ஆன்மாவுஞ் சிவமும் ஒருபொருளாகில், ஒருவருங் கூடவேண்டு வதில்லை; பெறுவானும் பேறுமில்லை; இரண்டாய் நிற்குமென்று

*சொல்லுவாயானால் அங்கே சாயுச்சியமென்று சொல்லவேண்டு வதில்லை; ஒன்றுமல்ல இரண்டுமல்லவென்று வேதாகமங்கள் சொல்லுகையினாலே அத்துவிதமாயிருக்கும்" என்பது சிந்தனையுரை.*

*"ஆன்மா சிவத்தோடுங் கூடி ஒன்றுபட்டழிவதுமில்லை, இரண்டுபட்டு நீங்குவதுமில்லை என்றதென அறிக. இதற்குப் பிரமாணம் இந்நூலிலே, 'உடலுயிர்கண்ணருக்கன் அறிவொளிபோற் பிறிவரும் அத்துவிதம்'* ***(7)*** *என்றதும் இப்பொருள் பற்றியென அறிக. அன்றியும் திருவருட்பயனில், 'ஒன்றாலும் .. இல்'* ***(75)*** *எனவும், 'தாடலைபோற்...கொள்'* ***(74)*** *எனவும், இந்நூல்களன்றித் திருவருளைப்பெற்று அநுபவித்த அடியார்கள் திருவாக்குகளிலும் உண்டான கருத்து. சிவாநந்தமாலையில்,*

> **'தாணுவினோ டத்துவிதஞ் சாதிக்கு மாணவுனை**
> **ஆணவத்தோ டத்துவித மாக்கினரார் - கோணறவே**
> **என்னாணை என்னாணை என்னாணை ஏகமிரண்**
> **டென்னாமற் சும்மாவிரு'** (276)

*என்னும் வகைகளில் இப்பொருளைக் கண்டுகொள்க. ஆகையால், திருஷ்டாந்தத்தினாலும் அநுபவத்தினாலும் சிவனைப் பெற்ற ஆன்மாக்கள் முத்தியால் ஒன்றுபட்டு அழிவதுஞ் செய்யாமல் இரண்டுபட்டு நீங்குவதுஞ் செய்யாமல் அத்துவிதமாய்நின்றே அநுபவிப்பார்கள் என்பது கருத்து" (சிவப்பிரகாசம்* ***87****-ம் செய்யுளுரை) என மதுரைச்சிவப் பிரகாசர் கூறும் விளக்கம் இங்கு உணரற்பாலதாகும்.*

*பிறவி நீங்கிச் சிவனைக்கூடிப் பொருந்துமாறு யாதென வினவிய மாணாக்கர்க்கு உணர்த்தும் முறையில் அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**76. உற்றாரும் பெற்றாரும் ஓவா துரையொழியப்**
**பற்றாரும் அற்றார் பவம்**

***இ-ள்: பேரின்பமாகிய முத்தியினை யடைந்தாரும், அதற்கு நேரே காரணமாகிய சமாதியையடைந்தாரும் மெய்ப் பொருளினை ஒருகாலும் நீங்குதல் செய்யார். அவ்வாறு வாக்கிறக்கும்படி அதனைப்பற்றி நில்லாதாரும் பிறப் பினையற்றவர்.***

**உரையொழியப் பற்றாரென்றதனால் கேட்டல் சிந்தித்தல் தெளிதலாகிய நிலையின்கண் நிற்பரென்பதாம். பிறப்பற்றார் என்பது பதமுத்திகளை யடைவாரென்பது கருத்து.**

**இதனால் வீட்டினையடைவாரது வகைமை கூறப் பட்டது.**

***விளக்கம்:*** *பிறவித்துன்பத்தினீங்கிச் சிவனைக் கூடி இன்புறுவார் இவரென உணர்த்துகின்றது.*

*உற்றாரும் பற்றாரும் ஓவாது, உரை ஒழியப் பற்றாரும் பவம் அற்றார் - எனப்பிரித்துப் பொருள் கொள்வர் நிரம்ப அழகிய தேசிகர். ஈண்டு உறுதல் என்றது, பேரின்பமாகிய முத்தியினை அடைதலை. பெறுதல் என்றது, முத்திக்கு நேரே காரணமாகிய சமாதியினை அடைதலை. 'ஓவாது' என்பதற்கு 'மெய்ப்பொருளினை ஒருகாலும் நீங்குதல் செய்யார்' என உரையிற்காணப்படுதலால் அப்பொருளுக்கேற்ப 'ஓவார்' என்பது இவ்வுரையாசிரியர்கொண்ட பாடமாதலால் கூடும் எனக் கருத இடமுண்டு. 'உரை ஒழியப்பற்றார்' என்பதற்கு, 'வாக்கிறக்கும்படி அதனைப் பற்றிநில்லார்; எனவே, கேட்டல், சிந்தித்தல், தெளிதல் ஆகிய நிலையின்கண் நிற்பார்' எனப் பொருள்கொள்வர் நிரம்பவழகியர்.*

*இனி, உற்றாரும் பெற்றாரும் (பவம்) ஓவாது; உரை ஒழியப் பற்றாரே பவம் அற்றார்-எனப்பிரித்து, "அந்தப் பொருளைப் பொருந்தின பேர்களும், தெளியப்பெற்ற பேர்களும் நிட்டையைப் பொருந்தாவிடில் செனனம் ஒழியாது. எல்லாப்பற்றையும்விட்டு நிட்டையைப் பொருந்தினவர்களே பின்பு செனனம் அற்றவர்கள்" எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்.*

*உரையொழியப் பற்றுதலாவது, எல்லாப் பற்றினையும் விட்டு நிட்டையைப் பொருந்துதல். பற்றார்-பற்றுதலைப் பொருந்தி நிற்பார்.*

*நிட்டை கூடுதல் எவ்வாறு என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**77. பேயொன்றுந் தன்மை பிறக்கு மளவுமினி**
**நீயொன்றுஞ் செய்யாம னில்**

*இ-ள்:* பேய் பிடியுண்டோரது தன்மை உனக்கு உண்டாமளவும் நீ மேல் யாதொரு செயலுஞ் செய்யாது அசைவற நிற்பாயாக.

பேய் பிடியுண்டாரது செயலெல்லாம் பேயின் செயலா மாறுபோல உன் செயலனைத்தும் இறைவன் செயலாமளவும் என்பது கருத்து. பின்னர் அச்சாதனை இன்று என்பதாம். இனி என்றதனான் முன்னர்ச் செய்ய வேண்டுவ அனைத்தும் செய்து முற்றியதென்பதூஉம். பின்னிலைக்குச் செயலின் மையே வேண்டுவதென்பதூஉம் கண்டு கொள்க.

இதனால் சமாதிசெய்வார்க்கு அதுமுதிர்ந்து கைவருமாறு கூறப்பட்டது,

**விளக்கம்:** *நிட்டை கூடுவார்க்கு அது முதிர்ந்து கைவரு மாறு உணர்த்துகின்றது.*

*"ஒருவனைப் பிசாசுபிடித்தபோது அவன் அதன் வசமானாற் போல, சிவானுபூதியான நிட்டை கூடுமளவும் உன் போதஞ் சீவியாமல் நில்" என்பது சிந்தனையுரை.*

**'பெண்டிர் பிடிபோல ஆண்மக்கள் பேய்போலக்**
**கண்டாரே கண்டாரென் றுந்தீபற**
**காணாதார் காணாரென் றுந்தீபற'** (திருவுந்தியார்-35)

*என்பது இங்கு ஒப்புநோக்கற்பாலதாகும்.*

*இங்ஙனம் தம் செயல் அற நிட்டை கூடினோர், தாம் முன்பு செய்துவந்த நியமங்களாயுள்ளவையெல்லாம் செய்து வருவார்களோ? அன்றி வேண்டாமென்று விட்டுவிடுவார்களோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**78. ஒண்பொருட்க ணுற்றார்க் குறுபயனே யல்லாது**
**கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்.**

*இ-ள்:* ஒள்ளிதாய மெய்ப் பொருளினது எல்லையைத் தலைப்பட்டார்க்கு அவ்விடத்து ஏயும் பேரின்பமேபன்றி, மற்றுள்ள யோக முதலிய தொழில்கள் யாவும் உறங்கு

***வோர்கையிற் பண்டம் போல, மெல்லெனத் தன் வயத்திலே நீங்குவதாக அறிதி, தாமே வலிது நீப்பதன்று என்பதாம்.***

***இதனால் அவர் சமயாசாரம் நீங்கு முறைமை கூறப் பட்டது.***

***விளக்கம்:*** *நிட்டை கூடினோர்க்குச் சங்கற்ப விகற்பங்கள் தாமே நீங்குமாறு கூறுகின்றது.*

*ஒண்பொருள் என்றது, உயிர்களின் அகத்தே சோதியாகவும் உலகின்புறத்தே சுடராகவும் திகழும் ஞானத்திரளாகிய முழுமுதற் பொருளை.*

**'சுடர் விட்டுளன் எங்கள் சோதி' (3-54-5)**

*எனவும்,*

**'காரொளிய திருமேனிச் செங்கண் மாலும்**
**கடிக் கமலத் திருந்தயனுங்காணா வண்ணஞ்**
**சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்**
**திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்**
**ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்**
**ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற**
**பேரொளியைப் பெரும் பற்றப் புலியூரானைப்**
**பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' (6-1-10)**

*எனவும்,*

**'ஒளியே யுன்னையல்லால் இனியொன்று முணரேனே'**
**(7-26-9)**

*எனவும்,*

**'அழிதரும் ஆக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்'**
**(திருவாசகம்-திருவண்டப்பகுதி)**

**'சோதியே சுடரே சூழொளிவிளக்கே' (மேற்படி-458)**

*எனவும்வரும் திருமுறைத் தொடர்கள் இங்கு உற்றுணரத்தக்கன வாகும்.*

*ஒண்பொருட்கண் உறுதலாவது, உயிர் தன் செயல்தவிர்ந்து, சிவத்தின் செயலில் அடங்குதல். உறுபயன் அங்ஙனம் பொருந்துதலால் வரும் பேரின்பம். அவ் இன்பம் ஒன்றுமே நிற்க, யோகம் முதலிய உயிரின் முயற்சிகள் எல்லாம் உறங்குவோர் கையிலுள்ள பொருள், உறக்கத்தில் அவரது கைப்பிடிதளரத் தானே நழுவுவதுபோல மெல்ல மெல்லத் தாமே நீங்கிவிடும் என அறிவாயாக என்பார், 'கண்படுப்போர் கைப்பொருள்போற் காண்' என்றார் கண்படுப்போர்- உறங்குவோர். 'உறங்கினோன்கை வெறும்பாக் கெனவும்' என்றார் சங்கற்ப நிராகரணத்துள்.*

*"உண்மை ஞானத்தைப் பெற்ற சீவன் முத்தர்கள் முன்பு செய்துவந்த நியமங்களெல்லாம் வேண்டாமென்று விட்டு விடுவதுமில்லை; செய்துவரவேண்டுமென்று நியமித்துச் செய்வது மில்லை; உறங்குவார் கையிற் பதார்த்தங்கள் அவர்களை அறியாமல் தானே போனாற்போல, அந்த உண்மை ஞான மொழிய மற்றுள்ள நியமங்கள் தானே போம் என்னும் முறைமையை அறிவித்தது" (சிவப்பிரகாசம்-**94**ஆம் செய்யுள் உரை) என மதுரைச் சிவப்பிரகாசர் கூறிய விளக்கம் இங்கு மனங்கொள்ளத் தக்கதாகும்.*

*ஒண்பொருளாகிய சிவத்தினையுற்றார்க்கு ஞான ஞேயங்களை யன்றி வேறொன்றுந் தோன்றாதோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**79. மூன்றாய தன்மையவர் தம்மின் மிகமுயங்கித்
தோன்றாத வின்பமதென் சொல்.**

***இ-ள்.*** ***ஞாதுரு ஞான ஞேயம் என்னும் மூன்று வகைப் பட்டதன்மையும் சிவ சீவ பாவங்கள் இரண்டும் தம் மின் மிகவும் கூடிய கலப்பினாற் றோன்றுதலைச் செய்யாத இன்பம்; அவ்விடத்து வார்த்தை யாது? என்க.***

***இதனால், அவ் ஆனந்த மிகுதியின் அதிசயங் கூறப் பட்டது.***

***விளக்கம்:*** *சிவானுபவமாகிய பேரின்பத்தின் மிகுதியினை உணர்த்துகின்றது.*

*மூன்றாய தன்மை தோன்றாத இன்பம் எனவும், அவர் தம்மின் மிகமுயங்கித் தோன்றாத இன்பம் எனவும் இன்பத்திற்குத் தனித்தனி அடையாக்கி, இன்பம் அது, சொல் என்? என இயைத்துப் பொருள்கொள்க. மூன்றாய தன்மையாவது காண்பானாகிய உயிர், காணுதற்குக் கருவியாகிய உணர்வு, காணப்படுபொருளாகிய சிவம் எனப் பகுத்துணருந் தன்மை. அவர் தம்மின் மிக முயங்கித் தோன்றாமையாவது, சிவன் என்றும் சீவனென்றும் பிரித்துணர வொண்ணாதவாறு இரண்டறக்கூடிய கலப்பினால் அவன் என்றும் தானென்றும் அறியவாராத அத்துவிதமாகிய இயல்பு. இப்பேரின்பம் நுகர்வார் தாமேயுணருந் தன்மையதன்றிப் பிறர்க்கு இன்ன தன்மைத் தெனச் சொல்லால் வெளியிட்டுரைக்குந் தன்மையதன்று என்பார், 'சொல் என்' என்றார்.*

**'தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்**
**சொல்லுவ தறியேன் வாழி'(திருவாசகம்-திருவண்டப்பகுதி)**

*எனவும்,*

**'எனைநானென்ப தறியேன் பகலிரவாவதும் அறியேன்**
**மனவாசகங் கடந்தான் எனைமத்தோன் மத்தனாக்கிச்**
**சினமால் விடையுடையான் மன்னுதிருப்பெருந் துறையுறையும்**
**பனவன் எனைச் செய்தபடிறறியேன் பரஞ்சுடரே'**

**(திருவாசகம்-508)**

*எனவும் அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப்பெருமான் அருளிய அனுபவமொழிகள் சிவானந்தமாகிய பேரின்பம் சொல்லால் வெளியிட்டுரைக்க வொண்ணாத தென்பதனை அறிவித்தலறிக.*

*இத்தகைய பேரின்பத்தினை ஆன்மா இப்பிறப்பிலேயே அறிதல் இயலுமோ? என வினவிய மாணக்கர்க்கு அறிவு றுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**80. இன்பி லினிதென்றல் இன்றுண்டேல் இன்றுண்டாம்**
**அன்பு நிலையே யது.**

***இ-ள்:* *எல்லா இன்பங்களினும் இனிமையுடைத்தென்று சிறப்பித்துச்சொல்லப்படும் பேரின்பமாவது ஒருவற்கு அன்பென்பது இப்பொழுதுண்டாயின் இப்பொழுதேயுளதாம்;***

**அது மிக்க அன்பினது நிலையே தனக்கு நிலையாகவுடையது ஆகலான் என்க.**

**இன்பு என்ற பொதுமையால் அமிர்த நுகர்ச்சி முதலாயின வெல்லாம் அடங்கும்.**

**இதனால், அன்புடையார்க்கு அப்பேரின்பம் எளிதின் எய்தும் என்பது கூறப்பட்டது.**

***விளக்கம்:*** *இறைவன்பால் மெய்யன்புடையோர் இப் பிறப்பிலேயே வீடுபேற்றின்பத்தை அடைந்தின்புறுவர் என்பது உணர்த்துகின்றது.*

*(அன்பு) இன்றுண்டேல்; இன்பில் இனிதென்றல் இன்று உண்டாம்; அன்பு நிலையே அது ஆகலான் - என இயைத்துரைக்க. இன்புண்டேல் இன்புண்டாம் என்ற பாடம் உரைக்குப் பொருந்தவில்லை.*

*இன்பில் இனிது என்றல்-இன்பங்கள் எல்லாவற்றினும் இனிமையுடைத்தெனச் சிறப்பிக்கப்படும் பேரின்பம். சிவ பரம் பொருளையடைந்தின் புறுதலாகிய பேரின்பம் உயிர்களால் நுகரப்படும் எல்லாவின்பங்களினும் மிக்கதாய் இனிமை யுடைத் தென்பதும் அதனை இம்மையிலே பெறுதற்குச் சாதனம் மெய்யன்பே என்பதும்,*

**'கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்**
**பனிமலர்க் குழற் பாவைநல் லாரினும்**
**தனிமுடி கவித் தாளும் அரசினும்**
**இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே' (5-14-10)**

*என ஆளுடைய அரசரும்,*

**'ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த**
**இன்பமே என்னுடை யன்பே' (திருவாசகம்-389)**

**'பெறவேவேண்டும் மெய்யன்பு பேராவொழியாப் பிரிவில்லா**
**மறவா நினையா அளவிலா மாளா இன்பமாகடலே'**
**(திருவாசகம்-490)**

*என ஆளுடைய அடிகளும் அருளிய அனுபவமொழிகளையும்,*

**'இன்பம் இடையறாது ஈண்டும்; அவா என்னும்**
**துன்பத்துள் துன்பங் கெடின்' (திருக்குறள்-369)**

*என்னும் தெய்வப் புலவர் பொருளுரையையும் அடியொற்றி யமைந்தது, இவ்வதிகாரத்துப் பத்தாங்குறளாகும். பேரின்பத்திற்குத் தடையாகவுள்ள அவாவினைத் 'துன்பத்துள் துன்பம்' என அடைகொடுத்தோதியதனை யுளங்கொண்ட உமாபதி சிவாசாரியார், அத்துன்பத்திற்கு மறுதலையாகிய பேரின்பத்தினை 'இன்பிலினிது' என அடைகொடுத்தோதிய திறம் கூர்ந்து நோக்கத் தக்கதாகும். 'துன்பத்துள் துன்பம்' என்பதற்கு, 'ஏனைத்துன்பங்களெல்லாம் இன்பமாகவரும் துன்பம்' என, விளக்கங்கூறினார் பரிமேலழகர். அவர் கருத்தினையடியொற்றி 'ஏனை இன்பங்களெல்லாம் துன்பம் என உவர்த்து ஒதுக்கும் நிலையில் வரும் சிவானந்தமாகிய பேரின்பத்தினை, இன்பில் இனிது' என இந்நூலாசிரியர் குறித்ததிறம் உணர்ந்து மகிழத் தக்கதாகும்.*

*இத்தகைய பேரின்பத்தினை இம்மையிலேயே அடைதல் இயலும் என்னும் உண்மையினை,*

**சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு**
**நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்**
**செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்**
**நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப**
**இன்னே பெறுதி நீ முன்னிய வினையே'**
**(திருமுருகாற்றுப்படை---62-66)**

*எனவரும் நக்கீரர் வாய்மொழியால் நன்குணரலாம்.*

*இத்தகைய பேரின்பத்தை அடைதற்கு ஆன்மா இறைவன்பாற் செலுத்தும் இடையறாப் பேரன்பே சாதனமாகும் என்பது,*

**'அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே' (திருமந்திரம்-270)**

*எனவரும் திருமூலர் வாய்மொழியாலும்,*

'அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க் கசிந்துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலனொர் கைம்மாறு' (திருவாசகம்-389)

*என வரும் திருவாதவூரடிகள் மணிமொழியாலும் நன்கு தெளியப் படும்.*

## 9. ஐந்தெழுந்தருள்நிலை

***அஃதாவது ஐவகைப்பட்ட திருவெழுத்தாகிய அருளினது முறைமை, இதனையும் ஓர் திருவருளாகக் கூறியருளினார், வீட்டு நெறி காட்டுதலால்; அவ்வாறே சமாதியினையடைதல் கூடாதார்க்கு இதனை விதிப்படி ஓதவே அந்நிலை கூடுமாதலின், மேலையதிகாரத்தினோடு இயைபுடைத்தெனக் கொள்க.***

**81. அருணூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்**
**பொருணூல் தெரியப் புகின்.**

***இ-ள்: சைவாகமங்களினது கருத்தினையும், வேதங் களினது கருத்தினையும், இவையிரண்டுமல்லாத கலைகளினது கருத்தினையும், கற்று வல்லோர் ஆராயப் புகுவாராயின், அவையெல்லாம் திருவெழுத்தைந்தின் பொருளாகிய பதி பசு பாசுங்களைச் சொல்லும் நூல்களாம்.***

***இதனால், எல்லா நூற்பொருள்களும் இவ்வைந்தெழுத் தினுள்ளேயடங்கும் என்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *உயிர்கள் பாசம் நீங்கி முதல்வனைக்கண்டு இன்புறும் தன்மையினை உணர்ந்த நிலையிலும் வேம்புதின்ற புழுப் போலத் தான் முன் நுகர்ந்த பொருளையே நோக்கிச் செல்லும் பழைய வாசனை அறவே நீங்கும்படி ஸ்ரீபஞ்சாக்கரத்தினை விதிப்படி ஓதுதலால் உளதாம் திருவருட் பேற்றினை விளக்குவது இவ்வதிகாரமாதலின் ஐந்தெழுந்தருள் நிலையென்னும் பெயர்த்தாயிற்று. முதனூலாகிய சிவஞானபோதத்தில், 'ஊனக்கண் பாசமுணராப் பதியை' எனவரும் ஒன்பதாஞ் சூத்திரத்தில் 'பாசம் ஒருவத் தண்ணிழலாம் பதி, விதி யெண்ணும் அஞ்செழுத்தே' என அருளிச்செய்திருத்தலையும் வழிநூலாகிய சிவஞானசித்தியாரில்,*

'பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும்' எனவரும் ஒன்பதாஞ் சூத்திரமாகிய விருத்தத்துள், 'ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி யுச்சரிக்க' என விதித்தலையும் அடியொற்றிச் சார்பு நூலாசிரியராகிய உமாபதி சிவாசாரியார், இந்நூலில் ஐந்தெழுத்தருள் நிலையாகிய இதனை ஒன்பதாம் அதிகாரமாக அமைத்துள்ள முறைமை கூர்ந்துணரத்தகுவதாகும். மேல், 'இன்புறுநிலை' என்னும் அதிகாரத்திற்குறித்த உரையிறந்த இன்பம் கூடாதாயின், அது கூடுதற்கு ஓர் உபாயங்கூறுவதாக அமைந்தது இவ்வதிகாரமாதலின் மேலதிகாரத்தோடு இயைபுடைய தாயிற்று. இதன் முதற்குறள், எல்லாநூற்பொருள்களும் தன் பொருளேயாகத் திரண்டு கூடிய சிறப்புடையது திருவைந்தெழுத்தென்பது உணர்த்துகின்றது.

தெரியப்புகின், அருள்நூலும் ஆரணமும் அல்லாததும் ஐந்தின்பொருள் நூல் என இயையும். அருள்நூல்-இறைவன் உயிர்கள்மேல்வைத்த பேரருளால் அருளிச்செய்த சிவாகமங்கள். ஆரணம்-வேதம். அல்லாதும்-அவையல்லாதனவும்; மேற்குறித்தவாறு இறைவனாலன்றி அவனருள்பெற்ற பெரியோர்களால் இயற்றப்பட்ட பல சாத்திரங்கள். ஐந்தின் பொருளாவன, பதி பசு பாசங்கள்.

**"வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது**
**நாதன் நாமம் நமச்சி வாயவே"** **(3-49-1)**

என ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்துள்ளமையும்,

**" அருமுறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்,**
**வருமுறை யெழுத்தின் மந்திரம் இரண்டு"**
**(சிலப்-காடுகாண் 128-9)**

எனவரும் தொடரில், பஞ்சாக்கரமாகிய திருவைந்தெழுத்தினை இளங்கோவடிகள் சிறப்புடைய மந்திரங்கள் இரண்டினுள் முன்வைத்து ஓதியுள்ளமையும், எல்லாநூற்பொருள்களும் தன் பொருளேயாகத்திரண்ட இத்திருவைந்தெழுத்தின் பெருமையினை நன்கு புலப்படுத்துவனவாகும்.

**"அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்**
**அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும்-அஞ்செழுத்தே**
**ஆனந்த தாண்டவமும் ஆறாறுக் கப்பாலாம்**
**மோனந்த மாமுத்தி யும்"** **(உண்மைவிளக்கம்-44)**

எனவரும் திருவதிகை மனவாசகங்கடந்தார் வாய்மொழிப் பொருளைச் சுருங்க விளக்கும் முறையில் அமைந்தது இக் குறட்பாவாதலறிக.

இத் திருவைந்தெழுத்தினால் அறிவுறுத்தப்பெறும் பொருள்கள் யாவை என வினவிய மாணாக்கர்க்கு அவற்றை முறைப்பட மொழிவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**82. இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி**
**உறநிற்கும் ஓங்காரத் துள்.**

***இ-ள்:*** ***சிவனும், சத்தியும், ஆணவமும், அழகுடைத் தாய மாயையும், ஆன்மாவும் ஆகிய ஐந்தும் ஐந்தெழுத்து ஓரெழுத்தாகிய பிரணவத்துள்ளே அமைந்து நிற்கும்.***

***இதனால், பிரணவம் என்று பேர்பெற்று நிற்கும் நுண்ணிய ஐந்தெழுத்தினது இயல்பு கூறப்பட்டது.***

***விளக்கம்:*** திருவைந்தெழுத்தினால் உணர்த்தப்பெறும் பொருள்கள் இவையென உணர்த்துகின்றது.

ஓங்காரத்துள், இறை, சத்தி, பாசம், எழில்மாயை, ஆவி உறநிற்கும் என இயையும். பிரணவம் எனப்படும் ஓங்காரம், திருவைந்தெழுத்தின் நுண்ணிய நிலையேயன்றிப் பிறிதன்மையின் ஓங்காரத்துள் ஐந்தும் உறநிற்கும் என்றார். 'உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா' (சிவபுராணம்) என்பது திருவாசகம். இறை-சிவம். சத்தி-அருள். ஈண்டுப் பாசம் என்றது, உயிரை அனாதியே பிணித்துள்ள ஆணவ மலத்தினை. உயிர்கள் தநுகரண புவனங்களுடன் விரும்பித் தங்கிப் போகம் நுகர்தற்குரிய விருப்பத்தினை வளர்க்கும் நிலையில் பல்வகையானும் அழகுடைய தாய்த் திகழும் இயல்பு மாயையின் கண்ணது என்பார், அதனை 'எழில்மாயை' என அடைகொடுத்தோதினார். ஆவி-உயிர். உற-பொருந்த.

பதி பசு பாசம், என்று சொல்லப்பட்ட மூன்று முதலும் இறை, சத்தி, பாசம், மாயை, ஆவி என ஐந்து வகையாக நிற்றலால் அந்த ஐந்தினையும் சிவனது திருப்பெயராகிய திருவைந்தெழுத்தில் வைத்துக்காட்டியருளினார் ஆசிரியர்.

**'சிவன் அருள் ஆவி திரோத மலம் ஐந்தும்**
**அவனெழுத் தஞ்சின் அடைவாம்' (41)**

*என வரும் உண்மை விளக்கத்தினை அடியொற்றி யமைந்தது இக்குறட்பாவாகும். சிவ்விலும் வவ்விலும் நவ்விலும் பதியின் கூறாகிய சிவமும் அருளும் திரோதமும் முறையே நின்றன. யவ்விலே பசுவாகிய ஆன்மா நின்றது. மவ்விலே பாசமாகிய மலம் நின்றது. ஆன்மாவை மறைத்துள்ள ஆணவமலத்தைக் கழலும் பக்குவமுடையதாகச் செய்தல் வேண்டி இறைவனது அருட் சத்தி திரோதமாய் (மறைந்து) நின்று காரியப்படுத் துகையால் பாசத்தின் பகுதியாகப் பேசப்படும் அதனையும் பதியின் கூறாக அடக்குவர் சான்றோர்.*

**'தூயவன் தனதோர் சத்தி திரோதான கரியதென்றும்'**
**(சித்தியார்6-பக்-177)**

*எனவும்,*

**'முற்சினமருவு திரோதாயி கருணையாகி'**
**(சிவப்பிரகாசம்-48)**

*எனவும்,*

*வருதலால் அருளுக்குத் திரோத சத்தியென்பது அவதாரப் பெயர் (குறிப்பிட்ட ஒரு நிலையில் வழங்கும் பெயர்) என்பர் பெரியோர்,*

*திருவைந்தெழுத்தில் பதி பசு பாசம் மூன்றும் இவ்வாறு ஐந்தாக நின்றனவாயின், அவற்றிடையே ஆன்மா நின்ற நிலை யாது? எனவினவிய மாணாக்கர்க்கு, நிற்கும் முறையினை அறிவுறுத்துவது, அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**83. ஊன நடனம் ஒருபால் ஒருபாலா**
**ஞானநடம் தானடுவே நாடு.**

***இ-ள்:* பிறப்பினை விளைக்கும் நகார மகாரங்களாகிய கூத்து ஒருமருங்காகவும், வீட்டினையுதவும் சிகார வகாரங்களாகிய கூத்து ஒருமருங்காகவும், யகாரமாகிய ஆன்மா இவ்விருவகைக்கு நடுப்பட்டதொன்றாகவும் விசாரித்தறிவாயாக.**

**கூத்தென்றது, உயிர்களைப் பெத்த முத்தியில் உய்த்து நடத்தலை.**

**இதனால், ஐந்தெழுத்தின் பொருளியல்பு கூறப்பட்டது.**

***விளக்கம்:*** *திருவைந்தெழுத்தில் முப்பொருளும் நின்ற நிலையினைப் பகுத்துணர்த்துகின்றது.*

*"ஊன நடனம் ஒருபால் ஆக, ஞான நடம் ஒருபால் ஆக, நடுவே தான் ஆக (இவ்வாறு) நாடு" என இயைத்துப் பொருள் கொள்க. தான் என்றது, ஆன்மாவை. ஆக என்பது ஆ எனக் குறைந்து நின்றது. "ஒரு பாலா" என்பதிலுள்ள ஆ என்பதனை ஏனையீரிடத்தும் கூட்டுக. நாடு-விசாரித்து அறிவாயாக. ஊன நடனமாவது, இறைவன், திரோதான சத்தியைக்கொண்டு உயிர்களுக்கு மலபாகம் வரச்செய்தல். ஞான நடனமாவது அருட்சத்தியைக்கொண்டு தனது பேரின்பத்திற் படியச் செய்தல்.*

**"ஊனை நாடகம் ஆடுவித்தவா உருகி நானுனைப் [பருகவைத்தவா**
**ஞான நாடகம் ஆடுவித்தவா நைய வையகத்துடைய [விச்சையே"**
**(திருவாசகம். 95)**

*எனவரும் திருவாதவூரடிகள் வாய்மொழியை அடியொற்றி யமைந்தது இக் குறள் வெண்பாவாகும்.*

**'ஆசறு திரோத மேவா தகலுமா சிவமுன்னாக**
**ஓசைகொள், அதனில் நம்மேல் ஒழித்தரு ளோங்கும் மீள**
**வாசியை யருளும், மாயா, மற்றது பற்றா உற்றங்கு**
**ஈசனில் ஏகமாகும், இதுதிருவெழுத்தின் ஈடே'**
**(சிவப்-92)**

*எனவரும் சிவப்பிரகாசச் செய்யுளும், இதற்கு,*

*அஞ்ஞானமாகியமலமும் அதனோடுங் கூடியிருக்கப்பட்ட திரோதான சத்தியும் ஆன்மாவைப்பொருந்தாமல் நீங்கும்படி சிவத்தை முன்னாக உச்சரிக்க. நீயும் அப்படி உச்சரிப்பாயாகில், நவ்வாகிய திரோத சத்தியும் மவ்வாகிய மலத்தின் மேலீட்டை நீக்கி அருளாகநின்று பிரகாசிக்கும். அதுவுமன்றியே, அங்ஙனம்*

மலத்தினின்று மீளவிட்ட வவ்வாகிய அருளும் சிவ்வாகிய சிவத்தையும் தாராநிற்கும். அப்படி மலபாகம் வந்த மகத்தான ஆன்மா, முன்சொன்ன அருள் தாரகமாகச்சென்று அந்தச் சிவத்தோடுங் கூடி இரண்டற நின்று அனுபவிக்கும். இங்ஙனஞ் சொல்லப்பட்ட இது ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் முறைமையாம்" என மதுரைச் சிவப்பிரகாசர் எழுதிய உரையும், இறைவன் ஆன்மாக்கள் பொருட்டுச் செய்தருளும் இருவகை நடங்களின் இயல்பும் இத்திருவைந்தெழுத்தின் உள்ளீடாக அமைந்த முறையினைப் புலப்படுத்தி நிற்றல் உணரத்தக்கதாகும்.

பதி பாசம் ஆகிய இரண்டிற்கும் நடுவேநின்ற ஆன்மா, பதியையடையாது பாசத்துட்பட்டு வருந்துதல் ஏன்? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

**84. விரியமந மேவியவ்வை மீளவிடா சித்தம்**
**பெரியவினை தீரிற் பெறும்.**

***இ-ள்:* மகார நகாரமாகிய மலமும் திரோதமும் மிகவும் இறுகப் புணர்ந்து யகாரமாகிய உயிர்களைத் திரும்ப விடா; அவ்வுயிர்கள் தம் பெரிய பிணியாகிய மலவிருள் தீருங்கால் சிகாரமாகிய சிவத்தினை அடையும்.**

***மலம் தீரவே திரோதம் தானே நீங்கும் என்பதாம். வினை என்பது, ஈண்டுப் பிணியென்னும் பொருள் தந்து நின்றது.***

***இதனால், கட்டு வீடு என்னும் இரண்டும் ஐந்தெழுத் தினானே யமையும் என்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** மலமும் திரோதமும் இறுகப்பிணித்துள்ள மையால் உயிர்கள் முதல்வனையடைய இயலாதனவாயின என்பது உணர்த்துகின்றது.

மந, யவ்வை விரிவமேவி மீளவிடா; சித்தம், பெரியவினை தீரின் (சிவத்தைப்) பெறும்-என இருதொடராக இயைத்துப் பொருள் கொள்க. சித்தம் என்னும் சொல், உள்ளம் என்னும் பொருளதாய் ஈண்டு ஆன்மா எனப் பொருள்தந்து நின்றது. பெரியவினை என்றது, தீராத பெருநோயாகிய ஆணவ மலத்தை.

*தீர்தல்-தன்வலிகுன்றிச் சிதைதல். பெறும் என்றதனால் பெறுதற்குரிய பொருளாகிய சிகாரமாகிய செயப்படுபொருள் வருவித்துரைக்கப் பட்டது.*

*இதனால், உயிர்கள் மலமாகிய பெரும்பிணி தீர்ந்து சிவபரம் பொருளை அகத்தும் புறத்தும் காணுதற்குத் திருவைந் தெழுத்தினை விதிப்படி தம்முள்ளத்துள் எண்ணுதலே சிறந்த சாதனமாம் என அறிவுறுத்தினாராயிற்று.*

**'விண்ணி னார்மதி சூடிய வேந்தனை**
**எண்ணி நாமங்கள் ஓதி யெழுத்தஞ்சுங்**
**கண்ணினாற் கழல் காண்பிட மேதென்னிற்**
**புண்ணியன் புகலூரும் என்னெஞ்சமே'** **(5-46-5)**

*எனவும்,*

**'ஏதும் ஒன்றும் அறிவில ராயினும்**
**ஓதி அஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்**
**பேத மின்றி அவரவர் உள்ளத்தே**
**மாதுந் தாமும் மகிழ்வர் மாற்பேறரே'** **(5-59-1)**

*எனவும் வரும் திருக்குறுந்தொகைத் திருப்பாடல்கள் திருவைத் தெழுத்தினை விதிப்படி யெண்ணிய திருநாவுக்கரசர் பெற்ற சிவானுபவத்தையும் அவ்வனுபவத்தினை உலகத்தா ரனைவரும் பெறுதல்வேண்டும் எனத்திருவுளங்கொண்ட அப் பெருமானது பேரார்வத்தையும் இனிது புலப்படுத்தும் நிலையில் அமைந்திருத்தல் அறிந்து மகிழத்தக்கதாகும்.*

*உயிர்கள் தம்மைப்பிணித்துள்ள மலம் நீங்கத் திருவைந் தெழுத்தினை ஓதுமுறை எவ்வாறு என வினவிய மாணாக்கர்க்கு ஆசிரியன் அறிவுறுத்தும் முறையில் அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**85. மாலார் திரோத மலமுதலாய் மாறுமோ**
**மேலாசி மீளா விடின்.**

***இ-ள்:* மயக்கத்தினைப் பொருந்திய திரோதானமும் மலமும் ஆகிய நகார மகாரம் இரண்டும், ஆதிக்கண்ணதாக**

***உச்சரிக்கில் அவைகள் நீங்குமோ? இவற்றைக் கீழாக்கிச் சிவமாகிய சிகாரம் மேலாம்வண்ணம் மாற்றி யுச்சரியா தொழியின்.***

***இதனால், நகார மகாரங்களை முதலாக வுச்சரித்து வழங்குவது வீட்டினை யடைவோர்க்கு ஆகாதென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *திருவைந்தெழுத்தினைச் சிகாரமுதலாக ஓதுதலே வீடடைவார்க்குரிய முறையென்பது உணர்த்துகின்றது.*

*ஆணவமலத்தோடுங் கூடிநின்று அது பக்குவப்படுமளவும் ஆன்மாவைமயக்கி மறைப்பது திரோதாயி என்பது உணர்த்துவார், 'மாலார் திரோதம்' என்றார். மால்-மயக்கம். மலம்-ஆணவமலம். 'சி, மேலா மீளாவிடின், மால் ஆர் திரோதம் மலம் முதலாய் மாறுமோ - என இயையும் சிவமாகிய சிகாரம் மேலாம்வண்ணம் (திரோதம் மலம் என்பனவற்றைக் கீழாக்கி) மாறி உச்சரியாதொழியின் -மயக்கத்தினைப் பொருந்திய நகாரம், மகாரம் இரண்டும் முதற் கண்ணதாய் உச்சரிக்கில் அவைகள் நீங்குமோ? நீங்கா; ஆகவே சிவ முதலாகவே உச்சரிப்பாய் என்றவாறு. மீளாவிடின்-மாற்றி உச்சரியா தொழிந்தால்.*

**— 'இவனின்று**
**நம் முதலா ஓதிலருள் நாடாது, நாடும் அருள்**
**சிம் முதலா ஓதுநீ சென்று'**

**(உண்மைவிளக்கம்-41)**

**"ஆதி மலமிரண்டும் ஆதியாய் ஓதினால்**
**சேதியா மும்மலமும் தீர்வாகா—போதம்**
**மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம் மாறி**
**விதிப்படி ஓ(து) அஞ்செழுத்துமே"**

**(உண்மைவிளக்கம்-43)**

*எனவரும் மனவாசகங் கடந்தார் வாய்மொழிகளை உளங் கொண்டமைந்தது இக்குறட்பாவாதல் அறியத்தக்கதாம்.*

*இக்குறளுக்கு நிரம்ப அழகிய தேசிகரும், சிந்தனை யுரையாசிரியரும் கூறிய உரையினைக் கூர்ந்து நோக்குங்கால்*

'மேலாசி மீளாவிடின்' என்பதே உண்மையான பாடம் என்பதும், அதுவே 'மேலாசு மீளாவிடின்' எனவும், 'மேலாகி மீளாவிடின்' எனவும் அச்சுப் புத்தகங்களில் மாறுபடக் காணப்படுகின்றதென்பதும் இனிதுபுலனாம்.

இப்படி உச்சரித்தால் சிவனைக்கூடலாமோ என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

## 86. ஆராதி ஆதாரம் அந்தோ அதுமீண்டும்
## பாராது மேல்ஓதும் பற்று.

**இ-ள்: தமக்கு ஆதாரம் ஆறாக எண்ணி, அவ்வாறு உச்சரித்தலால் வரும் பழுதினைத் திரும்பி விசாரியாமல் அந்தோ நகார மகாரங்களை மேலாக உச்சரிக்கும் விருப்பம் என்க.**

**இதனால் அவ்வாறு ஓதுவார், துணையின்றித் துன்புறுதற்கு இரங்கிக் கூறப்பட்டது.**

**விளக்கம்:** திருவைந்தெழுத்தினைச் சிவம் முதலாக ஓதுதலே செயற்பாலதென அறிவுறுத்துகின்றது. 'ஆராதி ஆதாரம் அது மீண்டுபாராது மேல் ஓதும் பற்று அந்தோ' என இயைத்து, நிரம்ப அழகிய தேசிகர் பொருள்கொண்டாரெனக் கருத வேண்டியுளது. ஆராதி ஆதாரம்-வழிபடத்தக்க ஆதாரம்; அது அப்பழுது. மீண்டு பார்த்தல்-திரும்ப விசாரித்தல்; மேல் ஓதுதல்-நகார மகாரங்களை முதலாகக்கொண்டு உச்சரித்தல். பற்று-விருப்பம். அந்தோ-இரங்கத்தக்கது.

இனி, 'ஆராதி' என்பதற்கு, ஆராதனை பண்ணுவாய் எனவும், 'மேலோதும் பற்று' என்பதற்கு 'மேலான சிவம் முதலாக உச்சரிக்கும் உபாயம்' எனவும், கொண்டு, "ஆராதனை பண்ணுவாய், சர்வான் மாக்களுக்கும் தாரகமாய் இருக்கிற பொருள், ஐயோ, ஆன்மாக்களைச் செனன மரணத்திலே விடாது, அந்த மலமும் திரோதமும் திரும்பிப்பாராது; மேலான சிவம் முதலாக உச்சரிப்பாய்" எனப் பொருள் வரைந்தார் சிந்தனை உரையாசிரியர். நிரம்ப அழகிய தேசிகருரையில் 'ஆராதி ஆதாரம்' என்பதற்குத் 'தமக்கு ஆதாரமாறாக

*எண்ணி' எனவரும் உரைத்தொடர், மூலாதாரம் முதல் ஆறாதாரங் களிலும் பிரணவத்தை முதலாகக்கொண்டு நகராதி ஐந்தெழுத் தினையும் எண்ணிப் போற்றும் முறையினைக் குறிப்ப தென்பர்.*

*இத்திருவைந்தெழுத்திலே நிட்டை கூடத்தக்கதாக ஓதும் முறைமை யாதோ? என வினவிய மாணாக்கர்க்கு, அதனை விளங்க அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**87. சிவமுதலே ஆமாறு சேருமேல் தீரும்**
**பவமிதுநீ ஓதும் படி.**

***இ-ள்:* *சிகார வகாரம் இரண்டும் ஆதிக்கண்ணதே ஆம் வண்ணம் உச்சரித்தல் கூடுமாயின், அந்நிலையே, உனது பிறவித் துன்பம் நீங்கும்; மாணவகனே! வீட்டினைக் காமுற்ற நீ உச்சரிக்கும் முறைமை இது என்க.***

***இதனால் முத்தர் ஓதுமாறு கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *முத்தியை நாடுவோர் திருவைந்தெழுத்தினை ஓதும் முறை என உணர்த்துகிறது.*

*சி, வ, முதலே ஆமாறு-சிகார வகாரமென்ற இரண்டும் முதற்கண் அமையுமாறு.*

*சேருமேல் பவம் தீரும்; நீ ஓதும்படி இது என இயையும், நீ என்றது வீட்டினைக் காமுற்றுவந்த மாணவனை நோக்கியது. "சிவமுதலாக உச்சரித்து நிட்டையைப் பொருந்தினால் செனன மரணத் துன்பம் நீங்கும்; உச்சரிக்கும் முறைமை இது என்றறிவாயாக" என்பது சிந்தனையுரை.*

**"உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம் பயின்றேன்**
**உனதருளால். திருவாய்ப் பொலியச் சிவாயநம**
**என்று நீறணிந்தேன்"** **(4-94-6)**

**"அல்லலாக ஐம்பூதங்க ளாட்டினும்**
**வல்லவாறு சிவாயநம என்று**
**நல்லம் மேவிய நாத னடிதொழ**
**வெல்ல வந்த வினைப்பகை மாயுமே"** **(5-43-6)**

*எனத் திருநாவுக்கரசரும்,*

**"நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே"**

*எனத் திருவாதவூரடிகளும், அருளிய பொருளுரைகள், ஈண்டு எண்ணத்தக்கனவாகும்.*

*இவ்வாறு திருவைந்தெழுத்தினை ஓதினோர்க்கு வரும் பயன்யாதோ என வினவிய மாணக்கர்க்கு, அதன் அருள் நிலையை விரித்துரைப்பதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**88. வாசி அருளியவை வாழ்விக்கும் மற்றதுவே
ஆசில் உருவமும் ஆம் அங்கு.**

***இ-ள்: அவ்வாறு உச்சரிக்குங்கால், வகாரமாகிய அருள், சிகாரமாகிய சிவத்தினைக் காட்டி, யகாரமாகிய உயிரினை வீட்டின்பத்திலே இருத்தும். அன்றியும், அவ்வருளே, அந்தச் சிவத்திற்குக் குற்றம் தீர்ந்த திருமேனியாய் இருப்பது என்க.***

***இதனால் திருவைந்தெழுத்தில் வகாரமாகிய அருளினது தன்மை வகுத்துக் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *திருவைந்தெழுத்து, இறைவனது அருளின் உருவமாம் என்பது அறிவுறுத்துகின்றது.*

*வ-வகாரமாகிய அருள். சி-சிகாரமாகிய சிவம். ய-யகார மாகிய உயிர். 'வ. சி. அருளி, யவ்வை வாழ்விக்கும்' எனவும், 'மற்று அதுவே அங்கு ஆசு இல் உருவமும் ஆம்' எனவும், இரு தொடராக இயைத்துப் பொருள்கொள்க. அது என்றது, அத்திருவருளை. இனி, 'அது' என்னும் சுட்டு யகாரமாகிய ஆன்மாவைச் சுட்டியதாகக் கொண்டு, "வகாரமாகிய அருள், சிகாரமாகிய சிவத்தை ஆன்மாவிற்குக் கொடுத்து மேலாகிய பரமசுகத்தை விளையா நிற்கும். அந்த ஆன்மா, குற்றமில்லாத திருமேனியாம் அந்தச் சிவத்திற்கு" எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர்.*

**—"நண்ணி, அருளானது சிவத்தை ஆக்கும் அணுவை**
**இருளானது தீர இன்று"**
**(உண்மை விளக்கம்-42)**

*எனவரும் உண்மை விளக்கத்தொடரும்,*

**"வாசியை யருளும் மாயா மற்றது பற்றா உற்று அங்கு**
**ஈசனில் ஏகமாகும்" (சிவப்பிரகாசம்-92)**

*எனவரும் சிவப்பிரகாசத் தொடரும் ஒப்புநோக்கத் தக்கனவாகும்.*

**"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்**
**பாதத்திறம்" (திருவாசகம்- திருவெம்பாவை-14)**

*எனத் திருவாதவூரடிகள் வகரமாகிய திருவருளின் திறத்தைப் போற்றிப் பரவியுள்ளமை ஈண்டு எண்ணத்தக்கதாகும்.*

*ஆன்மா இத்திருவைந்தெழுத்தின் பொருளை உன்னி உய்தி பெறும் முறை யாது? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**89. ஆசினவா நாப்பண் அடையா தருளினால்**
**வாசிஇடை நிற்கை வழக்கு.**

***இ-ள்: குற்றந் தீர்ந்த திரோதானமும் அருளுமாகிய நகார வகாரங்கட்கு நடுப்பட்டு நில்லாது வகாரமாகிய அருளினாலே, யகாரமாகிய உயிர், அவ்வகாரத்திற்கும் சிவமாகிய சிகாரத்திற்கும் நடுப்பட்டு நிற்பது முறைமை என்க.***

***அவ்வாறு அதற்கெழுத்துக்களை மாறி உச்சரிப்பது குருமுகத்தால் தெளிந்துகொள்க. ஆன்மாவை மறைக்கும் பாசங்களைச் செலுத்துவதன்றி, திரோதான சத்தி தானாக மறையா தென்பதற்கு 'ஆசின' என்றருளிச் செய்தார்.***

***இதனால் திருவைந்தெழுத்தினைக் கூறிய முறைமையின் ஓதுவார் அடைந்து நிற்கும் நிலைகூறப்பட்டது.***

***விளக்கம்:*** *திருவைந்தெழுத்தினை ஓதுவார் அப்பொருளோடு ஒன்றி நிற்கும் முறைமையினை உணர்த்துகின்றது. 'ஆசின' என்பதனை 'ஆசில்+ந' எனப்பிரித்து, குற்றம் தீர்ந்த திரோதானம் என*

*நிரம்ப அழகிய தேசிகரும், 'ஆசின்+ந எனப்பிரித்து ஆணவ மலமாகிய குற்றத்துடன் கூடிய திரோதானமாகிய நகாரம் எனச் சிந்தனையுரையாசிரியரும் பொருள் கொண்டுள்ளமை உய்த்துணரத் தக்கதாகும். ந-வ- நாப்பண் அடைதல்- நகார வகாரங்கட்கு நடுப்பட்டு நிற்றல். அருளினால் என்பதற்கு 'வகாரமாகிய அருளினாலே' என நிரம்ப அழகிய தேசிகரும், 'ஆசாரியாருடைய அருளினாலே' எனச் சிந்தனை யரையாசிரியரும் பொருள் கூறினர். 'வாசி இடை நிற்றலாவது' அருளுக்கும் சிவத்திற்கும் நடுவே நிற்றல்; 'சிவயசிவ' எனச் சிந்தித்த ஒன்றுபடுதல்.*

**"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீ இருத்தி**
**அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால் அடியேன் உன்**
**அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்**
**முடியா முதலே என் கருத்து முடியும் வண்ணம்**
**முன்னின்றே" (திருவாசகம் கோயில் மூத்த-1)**

*எனவரும் திருப்பாடலுக்கு "சத்தியும் சிவமும் ஒத்திரு பாலுற முத்தியாகும் முறைமை அருளிய உண்மை"யை அறிவுறுத்துவதாகச் சீகாழித் தாண்டவராயர் கூறும் குறிப்பு, வாசி இடை நிற்கும் இவ்வழக்கினை இனிது புலப்படுத்தும் முறைமையில் அமைந்திருத்தல் உணர்ந்து போற்றத் தகுவதாகும்.*

*இவ்வாறு திருவைந்தெழுத்தினை நகர முதலாகவும், சிகரம் முதலாகவும், வாசியிடை நிற்பதாகவும், மூவகையாக வகுத்துச் சொல்வான் ஏன்? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**90. எல்லா வகையும் இயம்பும் இவன் அகன்று**
**நில்லா வகையை நினைந்து.**

***இ-ள்: எவ்வகைப்பட்ட உபாயங்களையும் நூல் களுரைக்கும்; இவ்வாறு ஆன்மாவானவன் சிவசத்தியினை நீங்கி நில்லாதுடனாய் நிற்கும் திறத்தினைக் கருதி என்க.***

***இதனால் அறியும் நெறி முதல் இவ்வதிகாரம் ஈறான நான்கதிகாரத்தினது கருத்துந் தொகுத்துக் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *தூலம், சூக்குமம், அதிசூக்குமம் எனப் பகுத்துரைக்கப்படும் திருவைந்தெழுத்தின் வகையெல்லாம், இவ்வான்மா எந்நிலையிலும் அருளின் துணையின்றி நிற்றற் குரியனல்லன் என்னும் உண்மையை விளக்குவனவே எனத் தொகுத் துணர்த்துகின்றது.*

*இவன் அகன்று நில்லாவகையை நினைந்து எல்லா வகையும் இயம்பும் (நூல்கள்) என இயைத்துப் பொருள் கொள்க. "ஆன்மாவாகிய இவன் கேவல சகல சுத்தமாகிய எந்நிலையிலும் அருளின் துணை இன்றி நில்லாத முறைமையை நினைந்து, (அம் முறைமையினை இத் திருவைந்தெழுத்தில் வைத்து உணரத்தக்கவாறு) திருவைந்தெழுத்தின் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் எனப்படும் எல்லா வகையினையும், வேதாகமங்கள் ஆகிய நூல்கள் இங்ஙனம் விரித்துரைப்பன ஆயின" - என இவ்வதிகாரப் பொருளை முடித்துக் கூறியதாகப் பொருள் கொள்ளுதல் இவ்வதிகார முறைமைக்கும் பெரிதும் ஏற்புடையதாகும்.*

## 10 அணைந்தோர் தன்மை

***அஃதாவது, இவ்வகைப்பட்ட சமாதியினை அடைந் தோரது தன்மை. மேலை அதிகாரங்களால் சமாதி கூடும் முறைமை கூறியது. கூடினோரது தன்மை இதனால் கூறுதலின், அவற்றோடு இயைபுடைத்தெனக் கொள்க.***

**91. ஓங்குணர்வின் உள்ளடங்கி உள்ளத்துள் இன்பொடுங்கத் தூங்குவர்மற் றேதுண்டு சொல்.**

***இ-ள்:* நிறைந்த ஞானத்தினுள்ளே தாம் அடங்கித் தம் அறிவினுள்ளே பேரின்பம் அடங்கும்படி ஆநந்த நித்திரை பண்ணாநிற்பர்; மற்ற வார்த்தை யாதுளதாம் என்க.**

***அவ்வின்பம் இறைவற்கின்றி, உயிர்கள் தாமே நுகர்தலின், "உள்ளத்தில் இன்பொடுங்க" என்றும், ஞேயத் தழுந்தினும் ஞானத்தின் மிக்கார் அன்று என்பதற்கு "ஓங்குணர் வினுள் அடங்கி" என்றும் அருளிச் செய்தார்.***

***இதனால் அவர் ஞேயத்தழுந்தி நிற்கும் இயல்பு கூறப்பட்டது,***

***விளக்கம்:*** *திருவைத்தெழுத்தினை முறைப்படி ஓதி அயரா அன்பின் அரன் கழலணைந்தோராகிய சீவன் முத்தர்களது இயல்பினை விளக்குவது 'அணைந்தோர் தன்மை' என்னும் இவ்வதிகாரமாகும்.*

*முன் அருளிச் செய்யப்பட்ட உண்மை நிட்டையாலும், உபாய நிட்டையாலும், இப்பொழுதருளிச்செய்த ஐந்தெழுத் தருள் நிலையாலும், பாச நீக்கம் எய்திய சீவன் முத்தர்களது தன்மை உணர்த்துவான் எடுத்துக்கொண்ட ஆசிரியர். சிவஞானபோதத்தில் பரமேசுவரன் சீபாதங்களில் அணையுமாறு உணர்த்துதல் நுதலிய பதினோராஞ் சூத்திரக் கருத்தினையும், அசிந்திதனாய் நின்ற பதியைச், சிந்திதனாகக்கண்டு வழி படுகைக்கருளிய பன்னிரண்டாஞ் சூத்திரக் கருத்தினையுஞ் இவ்வதிகாரத்தில் இயைத்துக் கூறுகின்றார். இவ்வதிகாரத்தின் முதற்குறள், வினை ஒழிபு பெற்ற நல்லுயிர்கள், பழைய வாசனைத் தொடர்பால் மலமாயா கன்மங்கள் மேலிடாதபடி, உயிர்க்குயிராய் நிற்கின்ற திருவருள் ஞானத்தோடுங்கூடி, இரண்டற நிற்கும் முறைமையை உணர்த்துகின்றது. ஆன்மாவை ஒருகாலத்தும் விட்டு நீங்காமல் அனாதியே மறைத்துள்ள அறியாமையாகிய ஆணவ இருள் விட்டுநீங்கத்தக்கதாக உயிர்களின் உள்ளத்திலே பேரொளியாய் விரிந்து பரவி மேலிட்ட சிவஞானத்தினை 'ஓங்குணர்வு' எனக் குறித்தார். அத்தகைய சிவஞானமாகிய பேரறிவுக்குள்ளே அடங்கித் தற்போதம் சீவியாமல் நிற்றல் சீவன் முத்தரது இயல்பென்பார், 'ஓங்குணர்வின் உள் அடங்கி' என்றார். சிவஞானம் பதிந்த சீவன் முத்தராயுள்ளவர்கள் தங்கள் உள்ளத்திலே சிவனைத் தியானிக்குமிடத்துச் சிவன் அங்கே பதிந்து நிற்கையால் தங்களிடத்திலே பேரின்பம் விளையுமாறு நிற்பார்களென்பார், "உள்ளத்துள் இன்பொடுங்கத் தூங்குவர்" என்றாம். "மற்றுச்சொல் ஏதுண்டு" என இயையும். சித்தியாரில்,*

**"இந்தனத்தி னெரிபாலின் நெய்பழத்தின் இரதம்**
**எள்ளின்க ணெண்ணெயும்போல் எங்குமுளன் இறைவன்**
**வந்தனைசெய் தெவ்விடத்தும் வழிபடவே அருளும்**

**மலமறுப்போ ரான்மாவின் மலரடிஞா னத்தால்**
**சிந்தனைசெய் தர்ச்சிக்கச் சிவன் உளத்தே தோன்றித்**
**தீ இரும்பைச் செய்வதுபோல் சீவன் தன்னைப்**
**பந்தனையை அறுத்துத்தா னாக்கித்தன் உருவப்**
**பரப்பெல்லாம் கொடுபோந்து பதிப்பனிவன் பாலே"**
**(சித்தியார் சுபக்கம்-303)**

*என்றதும். திருச்சிற்றம்பலக் கோவையாரில், "நினைவித்துத் தன்னை என் நெஞ்சத்திருந்து அம்பலத்து நின்று புனைவித்த ஈசன்"* ***(140)*** *என்றதும் இப் பொருள்பற்றி அமைந்தன. தூங்குதல் = மயக்க விகற்பங்களில் படாமல் உறங்காது உறங்கி இருத்தல்; என்றது, புண்ணிய பாவங்களைப்பயக்கும் விருப்பு வெறுப்புக்களாய்ப் பொருந்தும் கன்மமும், மண்முதல் மாயா தத்துவம் ஈறாய்க் காணப்படுகின்ற மாயையும், சுட்டி யறிவதாகிய விபரீதவுணர்வைப் பயக்கும் ஆணவமும் ஆகிய இம்மும்மலங்களும் சிவஞானிகட்கு ஆகா எனவுணர்ந்து தற்போதம் முளையாவாறு பரிகரித்துச் சிவஞானத்துள் அடங்கிச் 'சிவாநுபவம் சுவாநுபூதிகம்' ஆமாறு ஞான நிலையில் உறைத்து நிற்றல். அருளோடுஒன்றி உறங்குதலாகிய இதனியல்பினை.*

**"சொற்பாவும் பொருள்தெரிந்து தூய்மை நோக்கித்**
**தூங்காதார் மனத்திருளை வாங்காதானை"** **(6-67-2)**

*எனவரும் திருத்தாண்டகத் தொடராலும்.*

**"அந்தக் கரணங்களோடே கூடாதே வாடாதே**
**குழைந் திருப்பையாகில்"** **(சித்தியார்-282)**

*எனவரும் தொடராலும் சான்றோர் அறிவுறுத்தியுள்ளார்கள்.*

**"ஆரமுதா நீரருந்தி எச்சிலச்ச மகற்றி**
**அடைக்காய்நற் கடுக்காய்சுக் கடுத்த தொன்றைமென்று**
**கூரியபே ருணர்வுடனே தூங்கிக் கங்குல்**
**குளிர் வெம்மைக் கிசைபூசை கொள்ள நல்கி**
**ஒருணர்வு நிவேதியா துண்ணா வாய்மை**
**யுடையையாய் உயர்ஞான போக முற்றுச்**

**சாருமருள் நித்திரையு முற்றுணர்க ஞானச்**
**சரியை இது மெய்கண்டான் சந்தானத்தே"**

**(போசனவிதி)**

*எனவரும் செய்யுள் அருள் நித்திரையின் இயல்பினையும் அதனை அடையும் உபாயங்களையும் பயனையும் நன்கு விரித் துரைப்பதாம். இவ்வதிகாரத்தின் முதற்குறளாகிய இது,*

**"தீங்குறு மாயை சேரா வகைவினை திரிவி தத்தால்**
**நீங்கிட நீங்கா மூல நிறைஇருள் இரிய நேயத்(து)**
**ஓங்குணர் வகத்த டக்கி உளத்துளின் பொடுங்க நேரே**
**தூங்குவர் தாங்கி ஏகத்தொன்மையில் துகளிலோரே.**

**(சிவப்-93)**

*எனவரும் சிவப்பிரகாசச் செய்யுட்பொருளைத் தொகுத்துரைக்கும் முறையி லமைந்திருத்தல் அறிந்தின்புறற்குரியது.*

*சிவபரம்பொருளை அடைந்தவர்கள் அம்முதல்வன்போல் ஐந்தொழிலையும் செய்வார்களோ? என ஐயுற்ற மாணாக்கர்க்கு ஐயமகற்றுவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**92. ஐந்தொழிலும் காரணர்க ளாந்தொழிலும் போகநுகர்**
**வெந்தொழிலும் மேவார் மிக.**

***இ-ள்:* *பரமசிவனால் செய்யப்படும் படைப்பு, நிலை, ஈறு, மறைப்பு, அருள் என்னும் ஐந்து தொழில்களையும் ஒருங்கே செய்தலும், அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னும் இவரில் ஒருவற்கும் ஒரோ ஒரு தொழிலைச் செய்தலும் மாயா போகத்தினை அருந்தும் பிறப்பிற்கு ஏதுவாய வெய்ய தொழிலினைச் செய்தலும் சிறிதும் பொருந்தார் அவர்.***

***'அசஞ்சலராய் அகண்டமாய் ஒழிவற நிறைந்த ஞானவடிவினராய் நின்றும், பரமானந்தத்தினை அனுபவித் திருக்கும் ஒன்றிற்குமே உரியார் என்பது கருத்து. மிக என்பது குறிப்பு மொழியாய்ச் சிறிதும் என்னும் பொருள் விளங்க நின்றது. "உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கு முரித்தே', (சித்தியார் சுபக்கம் 319) என்றருளிச் செய்தவாறு காண்க.***

***இதனால், அவர் மற்றொரு தொழிற்கும் உரியரல்லர் என்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *தற்சேட்டைகெட நிற்பதே சிவாநுபவம் என்பது உணர்த்துகின்றது.*

*ஐந்தொழில்: இறைவனுக்கே உரிய படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல் அருளல் என்பன.*

*காரணர்களாவர்: அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன் எனப் படைப்பு முதலிய ஐந்தொழில்களுக்கு முறையே கருத்தாக்களாக விளங்குவோர்.*

*போகம் நுகர் வெந்தொழில்- சுவர்க்காதி போகங்களை விரும்பி நுகர்தலாகிய செயல்.*

*மிகமேவார்-சிறிதும் பொருந்தார். தத்துவங்களும் தத்துவ கருத்தாக்களும் நீங்கிய நிலையே முத்திநிலையாம் என்பது.*

**“பாரணவும் புலனந்தக் கரணம் ஒன்றும்**
**படராமே நடுநாடி பயிலும் நாதம்**
**காரண பங்கயன் முதலாம் ஐவர் வாழ்வும்**
**கழியும் நெறி வழிபடவும் கருதி மேலைப்**
**பூரண மெய்ப் பரஞ்சோதி பொலிவு நோக்கி” (65)**

*எனவரும் திருத்தொண்டர் புராண சாரத்தாலும்,*

**“ஆட்டுத்தேவர்தம் விதிஒழித்தன்பால் ஐயனே என்றுன்**
**அருள் வழி இருப்பேன்” (திருவாசகம்-402)**

*எனவும்*

**“கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு” (மேற்படி 6)**

*எனவும் வரும் திருவாதவூரடிகள் வாய்மொழியாலும் இனிது புலனாம். ஆன்மா தன்செயலற நிற்பதே சிவானுபவமாம் என்பது,*

**“தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே” (6-25-7)**

*எனவரும் திருத்தாண்டகத்தாலும்,*

**"ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டெனுள்ளமும் போய்**
**நான் கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ"**
**(திருவாசகம்-252)**

*எனவரும் திருவாசகத்தாலும் அறியப்படும். "அன்றியும் திருவள்ளுவர்,*

**யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு**
**உயர்ந்த உலகம் புகும். (குறள்-346)**

*என்பதும் அறிக"* **(சிவப். 80 உரை)**

*என அறிவுறுத்துவர் மதுரைச் சிவப்பிரகாசர்.*

*தெய்வப்புலவர் திருவள்ளுவர் 'யான்' எனச் சுட்டிய செருக்கினை 'ஐந்தொழிலும் காரணர்களாம் தொழிலும்' என்ற தொடராலும், 'எனது' எனச்சுட்டிய செருக்கினை 'போக நுகர்வெந் தொழிலும்' என்ற தொடராலும் இந்நூலாசிரியராகிய உமாபதி தேவர் விரித்துரைத்த நயம் உணர்ந்து போற்றத் தக்கதாகும்.*

*முற்றுணர்வினனாகிய இறைவனுடனே பொருந்தியவர்கள், அவன் செய்யும் செயல்களைச் செய்யாரோ? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**93. எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கிவரொன்**
**றல்லா தறியார் அற.**

***இ-ள்:* இயல்பினான் முழுவதூஉம் உணரும் ஞான மானது வெளிப்பட்டுத் தம்மை இரண்டறக் கலந்து நிற்பினும் இவ்விடத்து இந்தச் சீவன் முத்தரானவர் ஆனந்த ஞானம் ஒன்றுமேயன்றிப் பிறிதொரு பொருளினையும் சிறிதும் அறிதல் செய்யார்.**

***அற என்பது, மிக என்பது போலக் குறிப்பு மொழியாய் நின்றது. சீவன்முத்தர் சிவம் ஒன்றுமேயன்றிப் பிறிதொன்றுமறி யார் ஆகவே, பரமுத்தரும் அவ்வாறாதல் கூறவேண்டாவாறா யிற்று.***

***இதனால், அவர் பிறிதொன்றும் அறியாது எவ்விடத்தும் சிவமே கண்டிருத்தல் கூறப்பட்டது. "பரஞானத்தால்" (சித்தியார் சுபக்கம் 311) என்பதனுள், சீவன் முத்தர் "பரமே பார்த்திருப்பார்" என்றருளிச் செய்தவாறு காண்க.***

***விளக்கம்:*** *சிவபரம்பொருளை அடைந்தோர் அம் முதல்வனை அன்றி வேறொன்றையும் அறியச்செய்யார் என்பது உணர்த்து கின்றது.*

*எல்லாம் அறியும் அறிவு-இயல்பினால் முழுவதும் உணரும் சிவஞானம்.*

*உறுதல்-வெளிப்படுதல்; பொருந்துதல்.*

*ஈங்கிவர் என்றது-இவ்வுலகில் உடம்போடு கூடியுள்ள பொழுதே பாசத்தைவிட்டு நீங்கிப் பசு கரணங்களெல்லாம் பதி கரணங்களாகப் பெற்ற சீவன் முத்தர்களை.*

*ஒன்று அல்லாது அற அறியார்:- 'ஏகம்' எனப்படும் சிவபரம்பொருளையன்றி வேறொன்றையும் சிறிதும் அறிதலைச் செய்யமாட்டார்கள்.*

**ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன்**
**ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன்-ஒன்றே காண்**
**கங்கையான் திங்கட் கதிர்முடியான் பொங்கொளிசேர்**
**அங்கையாற் காளாம் அது. (அற்புதத்திருவந்தாதி-11)**

*எனக் காரைக்காலம்மையாரும்,*

**"செப்பவரிய சிவங்கண்டு தான் தெளிந்து**
**அப்பரிசாக அமர்ந்திருந்தாரே" (திருமந்திரம்-126)**

*எனத் திருமூலநாயனாரும்,*

**"அறிவே உன்னையல்லால் அறிந்தேத்த மாட்டேனே"**

*என நம்பியாரூரரும் அருளிய பொருளுரைகள் ஈண்டு நினைக்கத் தக்கனவாம்.*

*சீவன் முத்தராயினோர் உடம்பொடு கூடியிருந்தும் பழைய பிரபஞ்ச வாதனையோடும் கூடிச் சத்தாதி விடயங்களில் சீவியாமல் தற்போதத்தை மீட்டு, அருளிலே ஒடுங்குதல் எவ்வாறு? என*

வினவிய மாணாக்கர்க்கு, எடுத்துக் காட்டுத்தந்து அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.

**94. புலனடக்கித் தம்முதற்கண் புக்குறுவார் போதார்**
**தலம்நடக்கும் ஆமை தக.**

**இ-ள்:** ஓர் விடயம் எதிரிடுங்கால் அதற்கஞ்சி அதன் மேற் செல்லும் தம் உணர்வினை மாற்றித் தமது முதலாகிய ஞேயத்தினிடத்திலே புக்குப் பொருந்தி, மறித்து நீங்குதல் செய்யார்; அவர் பூமியின் கண்ணே நடந்து செல்லுங்கால் ஒருவர் எதிர்ப்படில் அவரை அஞ்சித் தன் தலையினைச் சுரித்து உள்ளே வாங்கி, அசைவறக் கிடக்கும் ஆமையினை ஒப்ப.

ஆமை, பின்னர் எதிர்ந்தோர் அகலுங்கால், தன் தலையினை வெளிப்படுத்திச் செல்லும். அதுபோல் இவர் விரைவில் திரிபு படாமையின், போதாரென்றருளிச்செய்தார். இதனால் அவர் புலனுணர்வுக்குஞ்சி அகலுமாறு கூறப் பட்டது.

**விளக்கம்:** செம்புலச் செல்வர்களாகிய சீவன் முத்தர்கள் தம் உள்ளம் ஐம்புலன்களைக்கண்டு அஞ்சி அகலுமாறு கூறுகின்றது.

'புலன் அடக்கித் தம் முதற்கண் புக்குறுவார், தலம் நடக்கும் ஆமைதக, போதார்' என இயையும்; ஆமைதக-ஆமையைப் போன்று. ஆமை தக, புலனடக்கிப் புக்கவர்கள் ஆமை தகப் புறம்போதார் என ஈரிடத்தும் சென்றியைந்தது.

புறம்போதல்;- உள்ளத்தைப் புலன்வழியே புறத்திற் செல்லவிடல். போதார்-அவ்வாறு புறத்தே செல்லவிடார். புலனடக்கத்திற்கு ஆமை உவமையாதலை,

**"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்**
**எழுமையும் ஏமாப் புடைத்து"** (திருக்குறள்-126)

என்புழி, திருவள்ளுவர் எடுத்தாண்டுள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாகும். இவ்வாறு புலன்களில் செல்லும் போதத்தை மீட்டு, அருளிலே திளைத்திருத்தல் யானென தென்னுஞ் செருக்கற்ற பெரியோர்களது இயல்பென்பதனை,

**"உரனென்னும் தோட்டியா னோரைந்துங் காப்பான்,**
**வரனென்னும் வைப்பிற்கோர் வித்து" (திருக்-24)**

*எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,*

**"மாண, வருதார் தாங்கிய கிளர்தா ரகலத்து,**
**எறிவேல் இளைஞர் போலப் பொறிவாழ்,**
**புலப்பகை தாங்கிப் பிறப்பற எறியும்,**
**அறப்போர் வாழ்க்கை" (ஞானாமிர்தம் அகவல்-5)**

*என ஞானாமிர்த ஆசிரியரும் இனிது புலப்படுத்தியுள்ளமை இங்கு எண்ணத்தகுவதாகும்.*

*சீவன் முத்தராவார் உடம்பொடுகூடி விடயம் மேலிட்ட போது, சிவனுக்கு வேறாவார்களோ என வினவிய மாணாக்கர்க்கு, அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**95. அவனையகன் றெங்கின்றாம் ஆங்கவனாம் எங்கும்**
**இவனைஒழிந் துண்டாத லில்.**

***இ-ள்: இறைவனை நீங்கி எவ்வுலகமும் நிற்பதில்லை; அதுபோல, இறைவனால் அடைந்த இம் முத்தான்மாவையன்றி எவ்விடமும் உளதாய் நிற்றலில்லை.***

***இவனும் இறைவனைப்போல வியாபகனாய் நிற்கும் என்பதாம். "காயங்கழிந்தக்கால் எங்குமாய்க் கருத்தாப்போல் நிற்பன்" (சித்தியார் சுபக்கம்.) என்றருளிச் செய்தவாறு காண்க.***

***இதனால் அவர் சிற்றறிவு நீங்கிப் பேரறிவுடையரென்பது கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *சீவன் முத்தராவார். பசுகரணங்களெல்லாம் பதிகரணங்களாகிப் பராவுசிவராய்த் திகழ்வர் என்பது அறிவுறுத்துகின்றது.*

*அவனை அகன்று எங்கும் இன்றாம்; ஆங்கு அவனாம் இவனையொழிந்து எங்கும் உண்டாதல் இல்-என இயையும். அவன் என்றது, அப்பாலைக்கப்பாலாய் மாற்றமனங் கழிய நின்ற சிவனாகிய*

அம்முதல்வனை. எல்லாவுலகமும் அவனை ஆதாரமாகக் கொண்டு அவனது வியாபகத்துள் அடங்கி நிற்பதன்றி அவனுக்கு வேறாய் நிற்பதில்லை என்பார், அவனை அகன்று எங்கும் இன்றாம் என்றார். எங்கும். எவ்வுலகமும். முற்றும்மை வருவித்துரைக்கப்பட்டது. ஆங்கு-அவ்வாறே. ‘அவனாம் இவன் என்றது, சிவத்தோடுங் கூடிச் சிவமாய் நிற்கும் ஆன்மாவை. ஆன்மா தத்துவம் முப்பத்தாறோடும் கூடி நிற்கும் நிலையிலேயே அத் தத்துவங்களோடும் கூடி ஒன்றுபட்டு நிற்பதும் செய்யாமல், வேறுபட்டுப் பிரிந்து அறிவு கெடுவதுஞ் செய்யாமல் நின்ற இடம், சாக்கிராதீதம் என்பர்.

**“சாக்கிரத்தே அதீதத்தைப் புரிந்தவர்கள் உலகிற்**
**சர்வசங்க நிவர்த்திவந்த தபோதனர்கள் இவர்கள்**
**பாக்கியத்தைப் பகர்வது என் இம்மையிலே உயிரின்**
**பற்ற றுத்துப் பரத்தையடை பராவுசிவ ரன்றோ”**

**(சித்தியார்-சுபக்)**

எனவரும் சிவஞானசித்தியார் திருவிருத்தம் சிவமாந் தன்மையராகிய செம்புலச் செல்வர்களது இயல்பினை விரித்துரைப்பதாகும். ஆன்மா சிவத்தோடுங் கூடிச் சிவமாய் நிற்கும் என்பது,

**“அவமாய தேவர் அவகதியி லழுந்தாமே**
**பவமாயங் கெடுத்தென்னை ஆண்டு கொண்ட பரஞ்சோதி**
**நவமாய செஞ்சுடர் நல்குதலும் நாம் ஒழிந்து**
**சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ”**

**(திருவாசகம்)**

என அறிவினாற் சிவனேயாகிய மணிவாசகப் பெருமான் அருளிச் செய்தலால் இனிது புலனாம். சிவமாதல் என்றது, ஆன்மா தற்போதமாய் நிற்பதுஞ் செய்யாமல் தானென்கிறமுதல் கெடுவதுஞ் செய்யாமல் தற்போதங்கெட்டு அந்தச் சிவத்தொடுங் கூடி இரண்டற நின்று அனுபவித்தலை. ‘அவனாம் இவன்’ என்புழி ஆக்கச் சொல், சிவனும் ஆன்மாவும் கலப்பினால் ஒன்றாகியபோதும் பொருட்டன்மையால் வேறாதலைப் புலப்படுத்துவதாகும். இந்நுட்பத்தினை,

**"ஆனாய் என்பதனைத்தும் அவ்வவை**
**தானாகாமையைச் சாற்றிடும் என்க.**
**தாமே எனுமித் தனியேகாரம்**
**அழிந்திலர் அதுவே யாய்த்திலர் அதுவிட்**
**டொழிந்திலர் பிறிவிலர் எனுமிவை யுணர்த்தும்"**
**(சங்கற்ப-12-80-84)**

*எனச் சங்கற்ப நிராகரணத்தில் இந்நூலாசிரியர் விளக்கிய திறம் இங்கு நினைவுகூரத்தகுவதாகும்.*

*சீவன்முத்தராகிய அவர்கள், தமக்குப் பேரின்பம் வழங்கியருளிய சிவபரம்பொருளைத் தம் அகத்திற் கண்டிருப் பார்களோ அன்றிப் புறத்தேயும் காண்பார்களோ என வினவிய மாணாக்கர்க்கு, அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**96. உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்**
**கெள்ளுந் திறமேதும் இல்.**

***இ-ள்:* அகமும் புறமும் ஒரு தன்மைத்தாய் நிற்கும் ஞானத்தினை அடைந்தோருக்கு ஒன்றனை இகழ்ந்திடும் வண்ணம் எவ்வாற்றானும் இல்லை.**

***இதனால், அவர்க்கு எல்லாப் பொருள்களும் ஞான மயமாயே தோன்றுதல் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *சிவபரம்பொருளை உள்ளும் புறமும் ஒரு தன்மையாகக் காணுதலே சிவஞானிகளது செயலென்பது உணர்த்துகின்றது.*

*பூரண கருத்தாவாய் உயிர்க்குயிராய் நின்று அறிவிக்கிற சிவமானது, குருலிங்க சங்கமமாகப் புறம்பே கொள்ளப்பட்ட திருமேனியிலும் உண்டென்று வழிபடுகையால்,*

**"தொண்டர்களிடத்தும் வானோர் தொழுந்திரு மேனிதானும்**
**அண்டருங் கண்டிலாத அண்ணலே எனவணங்கி**
**வெண்டரளங்கள் சிந்த விழி மொழிகுழற மெய்யே**
**கண்டுகொண் டிருப்பர் ஞானக் கடலமு தருந்தினோரே"**
**(சிவப்-98)**

*என்றார் இதற்குப் பிரமாணம், தேவாரத்தில்,*

**"என்னிலாரும் எனக்கினி யாரில்லை**
**என்னிலும் இனியான் ஒருவன் உளன்**
**என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்**
**கென்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"**

**(5-21-1)**

*எனவும், திருமந்திரத்தில்,*

**"உள்ளத்து முள்ளன் புறத்துள்ளன் என்றவர்க்**
**குள்ளத்து முள்ளன் புறத்துள்ளன் எம்மிறை"**

**(திருமந் 1532)**

*எனவும், திருவருட்பயனில்,*

**"உள்ளும் புறம்பும் ஒருதன்மைக் காட்சியருக்கு**
**எள்ளுந் திறமேதும் இல்" (96)**

*எனவும், இப்பொருள்பற்றி நின்றதென அறிக. அன்றியும் பூசா கரணத்திலும் இதுவேபொருள் என்பதைப்பற்றி,*

**' ஆருயிர் சிவத்தைவிட்டுப் புறச்சிவம் அர்ச்சிப்பானேல்**
**ஈருயிர்ச் சிவமுண்டாகில் இசைவதன் றெங்குமுள்ள**
**தோருயிர்ச் சிவமே மற்றுப் புறச்சிவ முருச்சிவத்திற்**
**பேருயிர்ச் சிவமே தென்னிற் பெறாததுப் பிணக்குநூலே'(16)**

*என்பதனாலும்' அந்தச் சிவமுதலை உள்ளும் புறம்பும் ஒரு தன்மையாகக் கண்டவர்களே சிவஞானிகள் என்பதனைக் குருமுகாந்தரமாகக் கண்டு கொள்க" (சிவப்பிரகாசம்-**98**) ஆம் செய்யுள் உரை) என மதுரைச் சிவப்பிரகாசர் கூறும் விளக்கம், இக்குறட்பாவுக்கும் ஏற்புடையதாய் அமைந்திருத்தல் ஈண்டு அறியத்தக்கதாகும்.*

*"உயிர்க்குயிராயிருக்கிற கர்த்தாவென்றும் அது தானே ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளி வந்ததென்றும் ஒருதன்மையாய்க் காண்கிற பெயர்களுக்கு இகழ்கிற முறைமை சற்றும் இல்லை" என்பது இக்குறளுக்கமைந்த சிந்தனையுரையாகும். எனவே, உயிர்க்குயிராயிருக்கிற சிவம் என்றும், அதுவே மாலறநேயம்*

*மலிந்தவர் வேடமாகப் புறத்தே எழுந்தருளிய தென்றும் இறைவனையும் அவனடியார்களையும் ஒரு தன்மையாகக்காணும் மெய்யுணர்வுடைய சிவஞானிகளுக்குச் சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுக் குலம் குற்றம் முதலியன பற்றி இகழும்முறை சிறிதும் இல்லையென்றாராயிற்று.*

**"எவரேனுந் தாமாக இலாடத் திட்ட**
**திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்கி**
**உவராத அவரவரைக் கண்டபோது**
**உகந்தடிமைத் திறம் நினைந்தங் குருகிநோக்கி**
**'இவர்தேவர், அவர்தேவர்' என்று சொல்லி**
**இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்**
**கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே**
**கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே"** **(6-61-3)**

*எனவும்,*

**"நலமிலராக நலமதுண்டாக நாடவர் நாடறிகின்ற**
**குலமிலராகக் குலமதுண்டாகத் தவம்பணி குலச்சிறை"**
**(3-120-6)**

*எனவும்,*

**'சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு**
**பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்**
**கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே'**
**(திருவாசகம்)**

*எனவும்,*

**"பல்லுயிரனைத்தையும் ஒக்கப் பார்க்கும் நின்**
**செல்வக் கடவுட் டொண்டர் வாழ்வும்"**
**(பதினோராந்திருமுறை)**

*எனவும் வரும் அருளாசிரியர் அனுபவ மொழிகள் இங்கு ஒப்ப வைத்து உணரத்தக்கனவாகும்.*

**"உள்ளும் புறம்பும் நினைப்பறின் உன்னுள்ளே**
**மொள்ளா அமுதாமென் றுந்தீபற**
**முளையாது பந்தமென் றுந்தீபற"** **(26)**

எனவரும் திருவுந்தியாரின் சொல்லமைப்பினை அடியொற்றி இக்குறள் வெண்பா அமைந்துள்ளமை அறியத்தக்கதாகும்.

இவ்வாறு அகத்தும் புறத்தும் சிவமே காணும் தன்மையினராய்ச் செயலற்றிருப்பர் தம் செயலறுதியால் எய்தும் பயன் யாது? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவதாக அமைந்தது அடுத்துவரும் குறட்பாவாகும்.

**97. உறுந்தொழிற்குத் தக்க பயன்உலகம் தத்தம்**
**வறுந்தொழிற்கு வாய்மை பயன்.**

***இ-ள்:*** ***தன்னையாற்றிய தலைவரைப் பின்தொடர்ந்து சூழும் யான் எனது என்னுஞ் செருக்காற் செய்யப்பட்ட வினைக்கு ஏற்ற பயனாவது உலக வாழ்க்கைகள். செருக்கினை நீங்கித் தம்மை யிகழ்ந்தோர் செய்யுந் தானந் தவ முதலிய தொழிற்கு வரும் பயனாவது அழிவில்லாத வீட்டின்பமே என்க.***

***தக்க பயன் என்றதனால் பயன் பலவாயிற்று. வறுந் தொழில் என்று அருளிச் செய்தார், தொடர்ந்து பயன் வழங்காமையின்.***

***இதனால் அவர் ஓர் தொழிலினைச் செய்யினும் பிறிதொரு காமியத்தினைக் கருதிச்செய்யார் என்பது கூறப் பட்டது.***

***விளக்கம்:*** *ஆன்மா தன் செயலறுதல் சிவத்தினை யடைதலாகிய பயனைத்தரும் என்பது உணர்த்துகின்றது.*

*உறுந்தொழிற்குப் பயன் உலகம்; அதுபோல, வறுந்தொழிற்கு வாய்மை பயன்-என இயைக்க. இஃது எடுத்துக் காட்டுவமை. உறுந்தொழில்-ஆன்மா யான் எனது என்னும் செருக்குற்று முனைத்துச் செய்யும் வினை. வறுந்தொழில்-தான் என்னும் முனைப்பின்றி அருளின்வழி நின்று செய்யும் தானம் தவம் முதலிய செயல்கள். உலகம்-உலக வாழ்க்கையாகிய நுகர்ச்சி வாய்மை-*

அழிவில்லாத வீட்டின்பம். இனி, உறுந்தொழில் என்பது சரியை கிரியா யோகங்களையும், வறுந்தொழில் என்பது செயலறுதியையும், உலகம் என்பது பதமுத்தியினையும், வாய்மை என்பது நேயமாகிய சிவத்தையும் குறிப்பனவாகக்கொண்டு, "சரியை கிரியா யோகங்களுக்குப் பிரயோசனம் சாலோகாதிபதம்; செயலறுதி வந்த ஞாதாக்களுக்கு ஞேயம்ஒன்றுமே பிரயோசனம்" எனப் பொருளுரைப்பர் சிந்தனையுரையாசிரியர். மெய்ம்மையுடைய பரம் பொருளை வாய்மையென்றார்.

**'தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது**
**வாஅய்மை வேண்ட வரும்'** **(திருக்குறள்-364)**

எனத்தெய்வப்புலவர் பரம்பொருளை 'வாய்மை' என்ற சொல்லால் வழங்கியுள்ளமை இங்கு நினைக்கத்தகுவதாகும்.

தன்செயலற்று மெய்ப்பொருளைத் தரிசித்தோர் தம்மைப் பிணித்துள்ள மூவகை வினைத்தொடர்களினின்றும் நீங்குமாறெங் ஙனம்? என வினவிய மாணாக்கர்க்கு அறிவுறுத்துவது அடுத்து வரும் குறட்பாவாகும்.

**98. ஏன்ற வினையுடலோ டேகுமிடை யேறும்வினை**
**தோன்றில் அருளே சுடும்.**

***இ-ள்:*** ***பக்குவப்பட்டு அமைந்த வினையானது, உடம்பிற்கு அமைத்த காலவரையறையிலே தொலையும்; இடைப் பட்ட காலத்தில் வந்து பொருந்தும் வினைகள் உளவாயின் அருளென்னும் நெருப்பினாலே வெந்துபோம் என்க.***

***சஞ்சிதம் நீங்காமல் ஞானம் வெளிப்படாது, வெளிப்படா தாகவே ஆகாமியம் தீர்வதில்லை. அதனை அருளே சுடும் என்பதனாற் சஞ்சிதமும் நீங்கிற்றென்பது தானே போதருமெனக் கொள்க. தோன்றில் என்பதனால், அது தோன்றாவண்ணம் இடையறாது அருளோடு நிற்பர் என்பது கருத்து.***

***இதனால், அவர்க்கு வினைத்தொடர்பு இன்றாமாறு கூறப்பட்டது.***

**விளக்கம்:** சிவஞானிகளுக்கு ஒருகன்மமும் இல்லை என்பது உணர்த்துகின்றது,

உயிர்களால் முன்னர் ஈட்டடப்பட்டு நுகர்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படாது சேர்ந்துள்ள பழவினையைச் சஞ்சிதம் எனவும், அவற்றுள் இப்பிறப்பில் நுகர்தற்கென உடம்பினால் முகந்துகொள்ளப் பட்ட நுகர்வினையைப் பிராரத்தம் எனவும், பிராரத்தம் நுகரும்பொழுது அவற்றின்கண் விருப்பு வெறுப் புக்காரணமாகப் புதியனவாய் வந்து ஏறும் வினையினை ஆகாமியம் எனவும் வழங்குவர். அவற்றுள், ஏன்றவினை-எடுத்துள்ள இவ்வுடம்பினால் முகந்துகொள்ளப்பட்ட பிராரத்தவினை. இடை ஏறும்வினை-உயிர் பிராரத்த வினையை நுகரும் பொழுதே நுகர்ச்சியிற்கொண்ட விருப்பு வெறுப்புக் காரணமாக வந்து ஏறும்வினை. வலிதாயவினை (சிவப்-) என்றதும் இதனையே.

சஞ்சிதகன்மம் தீக்ஷையினால்போம், பிராரத்தம் உடலூழாய்க் கழியும், ஆகாமியம் சிவஞானத்திலே வெந்தொழியும் என்பர். இப்பிறவியில் எடுத்தவுடம்பால் நுகர்தற்குரிய பிராரத்தமும், அதுகாரணமாக வந்தேறும் ஆகாமியமும் அற்றொழியப் பிறவாநிலை வந்தெய்தும், எனவே இனிவரும் பிறவிக்குரியனவாகிய சஞ்சிதம் கெட்டொழியும் என்பது சொல்ல வேண்டாதாயிற்று. சிவனருளைத் தலைப்பட்ட மெய்யடியார்கட்கு இம்மூவகை வினைத்தொடர்பும் அறவே கெட்டொழியும் என்பது.

**‘அல்லல் என்செயும் அருவினை என்செயும்**
**தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்**
**தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்**
**கெல்லை யில்லதோர்அடிமை பூண்டேனுக்கே’** (5-1-2)

எனவரும் அப்பரருள்மொழியால் இனிது விளங்கும்.

அல்லல்-பிராரத்தம். அருவினை-ஆகாமியம். தொல்லை வினை-சஞ்சிதம்.

“எடுத்த தேகத்துக்கு அடுத்த பிராரத்தம் சரீரம் உள்ளளவும் புசித்துத்தொலையும். நடுவே ஆகாமியம் உண்டாமே யானால் சிவஞானஞ் சுட்டுப்போடும்” என்பது இக்குறளுக்கமைந்த சிந்தனை யுரையாகும்.

*பிராரத்தவினை எடுத்த உடம்பால் புசித்துக் கழித்தற்குரிய தாயின், அங்ஙனம் புசிக்குமிடத்து மனமொழிமெய்களால் மேலும் கன்மம் வந்து ஏறுமன்றோ? என வினவிய மாணாக்கர்க்கு, அறிவுறுத்துவதாக அமைந்தது. அடுத்துவரும் குறட்பாவாகும்.*

**99. மும்மை தரும்வினைகள் மூளாவாம் மூதறிவார்க்**
**கம்மையும் இம்மையே யாம்.**

***இ-ள்:* இம்மை அம்மை மறுமை யென்னும் மூவகைப் பயனையுந் தரும் வினைகள் யாவும் தொடரா. தம்மேலாய அறிவினையுடையார்க்கு உடம்பிறந்தெய்தும் இன்பமும் அதனோடு கூடிநிற்கவேயுளதாம் ஆகலான் என்க.**

**இம்மை-இப்பிறப்பு. அம்மை-மேலுலகினையடைதல். மறுமை-மறித்துவரும் பிறப்பு. உடம்பு இறந்த காலத்து நிலை வேறுபடுதல் இன்மை நோக்கி அம்மையும் இம்மையே யாம் என்று அருளிச்செய்தார்.**

**இதனால், அவர்க்குச் சிறிதும் வினைத்தொடர்பு இன்று என்பது வலியுறுத்தப்பட்டது.**

***விளக்கம்:*** *சிவஞானச் செல்வராகிய பெரியோர்கள், இப்பிறவியிலேயே வினையொழிந்து வீடுபேற்றின்பத்தினை நுகர்வார்கள் என்பது உணர்த்துகின்றது.*

*மூதறிவார்க்கு மும்மைதரும் வினைகள் மூளாவாம்; இம்மையே அம்மையும் ஆம் என இயையும். மூதறிவார்-மேலாகிய சிவ ஞானத்தைப் பெற்ற சிவஞானிகள். மூளுதல்-மீண்டும்கிளர்ந்தெழுதல். இப்பிறப்பிலேயே மேலாகிய வீடுபேற்றின் பத்தினை அடைந்து இன்புறுவர் என்பார், இம்மையே அம்மையும் ஆம் என்றார். இம்மை-இப்பிறப்பு. அம்மை-மேலாகிய வீடுபேறு. மும்மைதரும் வினைகள் என்பதற்கு, மன வாக்குக் காயங்களாகிய முக் கரணங்களாலும் செய்யப்படும்வினைகள் எனப்பொருள் கொள்வர் சிந்தனையுரையாசிரியர். இறைவன் திருவருளால் இப்பிறப்பிலேயே வினைத் தொடர்பறுத்து உய்திபெறலாம் என்பது,*

**"இம்மை அம்மை எனவிரண்டும் இவை**
**மெய்ம்மை தானறியாது விளம்புவர்**
**மெய்மையால் நினைவார்கள் தம் வல்வினை**
**வம்மின் தீர்ப்பர் கண்டீர் வன்னியூரரே'** (5-26-4)

எனவரும் திருக்குறுந்தொகையால் இனிது விளங்கும்.

*சீவன்முத்தராயினார்க்கு ஏனைய உயிர்களைப்பற்றிய கவலையுண்டோ என வினவுவாரை நோக்கி அறிவுறுத்துவதாக அமைந்தது, அடுத்து வரும் குறட்பாவாகும்.*

**100. கள்ளத் தலைவர் துயர்கருதித் தங்கருணை**
**வெள்ளத் தலைவர் மிக.**

***இ-ள்:* யான் எனது என்னும் வஞ்சத் தலைமை யினையுடைய ஆன்மாக்கள்படுந் துன்பத்தினை எண்ணித் தம்மிடத் தெழுந்த கருணையாகிய கடலினுள்ளே மிகவும் அலைதலைச் செய்வர் என்க.**

***அலைதல் - இரக்கத்தால் தளர்தல். இதனால் அவர், வீட்டினை விரும்பாத உயிர்கள்மாட்டு இறைவன்போல் அருளுடையராதல் கூறப்பட்டது.***

***விளக்கம்:*** *இப்பிறப்பிலேயே முதல்வனை அணைந் தோராகிய சீவன்முத்தர்கள் தம் முதல்வனையொப்ப எல்லா வுயிர்களிடத்தும் அருளுடையராய்த் திகழ்வர் என்பது உணர்த்து கின்றது.*

*'கள்ளத்தலைவர்' என்பதற்கு 'யான் எனது என்னும் வஞ்சத்தலைமையினையுடைய ஆன்மாக்கள்' என நிரம்ப அழகிய தேசிகரும், 'இந்திரியங்களோடே கூடி நிற்கிற ஆன்மாக்கள்' எனச் சிந்தனையுரையாசிரியரும் பொருள்கொள்வர். துயர்-உயிர்கள்படும் துன்பம். 'துயரிலங்கும் உலகில்'* ***(1-1-8)*** *என்ற தொடரால், துன்பமே பெருகித் தோன்றுதற்குரியது இவ்வுலகம் என்பதனை அறிவுறுத்திய ஆளுடைய பிள்ளையார், எல்லாவுயிர்களும் தாமுறும் துன்பம் நீங்க இன்புருவாகிய இறைவனை நினைந்து போற்றும் மெய்யுணர்வு பெறாமையை நினைந்து.*

**“கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை**
**கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்**
**அனைய தன்மையை யாதலின் நின்னை**
**நினைய வல்லவர் இல்லை நீணிலத்தே”**

**(திருவெழுகூற்றிருக்கை)**

*என இரங்கி நின்று முறையிட்டருளியதும்,*

**“ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்**
**ஆல வாயில் உறையும் எம் ஆதியே”**

*என இறைவனை வேண்டிப் போற்றியருளினமையும், ஐம்புல வேடர்களால் ஆன்மாக்கள் எய்தும் எல்லையற்ற துயரத்தினையும் அவற்றை நீக்கும் உபாயத்தினையும்,*

**‘புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்திடைப் புகுந்துநின்று**
**துள்ளுவர் சூறைகொள்வர் தூநெறி விளையவொட்டார்**
**முள்ளுடை யவர்கள்தம்மை முக்கணான் பாதநீழல்**
**உள்ளிடை மறைந்து நின்றங் குணர்வினா லெய்யலாமே’**

*எனவரும் திருவிருத்தத்தால் அப்பரடிகள் அறிவுறுத்தியுள் ளமையும், உலகத்தார்படும் துன்பங்களைக்கண்டு ஆற்றாத நம்பியாரூரர்,*

**‘கலியேன் மானுட வாழ்க்கை யொன்றாகக்**
**கருதிடிற் கண்கள் நீர்பில்கும்’ (7-15-8)**

*எனக் கண்ணீர்மல்கி நாட்டியத்தான்குடி நம்பியை உளமுருகிப் போற்றியுள்ளமையும்,*

**“நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே”**

**(திருமந்திரம்-85)**

*எனத்திருமூலர் தாம்பெற்ற பெருநலத்தினை யாவரும் பெறு தற்குரிய உபாயத்தினை அறிவுறுத்தியருளினமையும், ஐம்புலன் கையிகந்து சிவபரம்பொருளைச் சிந்திக்கும் செம்புலச் செல்வராகிய சிவஞானிகள், பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும் நல்லருளாளராய் அறவாழியந்தணனாகிய இறைவனை இடை*

*விடாது போற்றிப் பரவுதலையே தம்மியல்பாகக் கொண்டு விளங்குவார்கள் என்பதனை நன்கு புலப்படுத்துவனவாகும்.*

**குறைவிலருள் ஞானமுதல் கொற்றங் குடியார்**
**நறைமலர்த்தாட் கன்புசெய்வாம் நாம்.**

**சிற்றம் பலவன் திருவடிகள் பூசிக்கப்**
**பெற்ற பெருஞ்செல்வப் பேறுடையார்—கொற்றங்**
**குடியார் உமாபதிசீர் கூறும் அடியார்**
**அடியென் தலைமே லன.**

*திருவருட்பயன் மூலமும்,*

*நிரம்ப அழகிய தேசிகர் உரையும்.*

*திரு* **க. வெள்ளைவாரணனார்** *எழுதிய*
*உரை விளக்கமும் முற்றும்.*

*திருச்சிற்றம்பலம்.*

Q Q Q

## செய்யுள் முதற் குறிப்பு


| | பக்க எண் |
|---|---|
| அகத்துறு | 88 |
| அகரவுயிர் | 19 |
| அகலர்த்தரு | 97 |
| அணுகு | 79 |
| அருணூலு | 147 |
| அருவுமுருவு | 30 |
| அருளாவகை | 89 |
| அருளிற் | 72 |
| அவனையகன் | 168 |
| அறியாமை | 87 |
| அன்றளவி | 66 |
| அன்றளவு | 54 |
| ஆக்கியெவை | 27 |
| ஆசாதி | 67 |
| ஆசினவா | 158 |
| ஆரறிவா | 99 |
| ஆராதி | 155 |
| ஆனாவறி | 32 |
| இருவர் | 133 |
| இருளான | 60 |
| இருளிலிரு | 52 |
| இருளின்றேற் | 66 |
| இறைசத்தி | 149 |
| இற்றை | 86 |
| இன்பதனை | 134 |
| இன்பிலினி | 144 |
| இன்புறுவார் | 130 |
| உள்ளும் | 170 |
| உறுந்தொழிற் | 173 |
| உற்கை | 127 |
| உற்றாரும் | 139 |
| உன்னுமுளதை | 38 |
| ஊமன்கண் | 53 |
| ஊன நடனம் | 150 |
| ஊனறியா | 77 |
| ஊனுயிரால் | 108 |
| எங்கும் | 34 |
| எமக்கெ | 94 |
| எல்லாமறி | 165 |
| எல்லாவகை | 159 |
| ஏகன் | 105 |
| ஏன்றவினை | 174 |
| ஐந்தொழி | 163 |
| ஐம்புலனாற் | 128 |
| ஒண்பொருட் | 141 |
| ஒருபொரு | 61 |
| ஓளியு.. முலகு | 48 |
| ஓளியு..ள்மொரு | 121 |
| ஒன்றாலும் | 138 |
| ஒன்றுமிகினு | 68 |
| ஓங்குணர்வி | 160 |
| ஓராதே | 113 |
| கண்டவற்றை | 46 |
| கண்டபடி | 115 |
| கண்டொல்லை | 111 |
| களியே | 114 |
| கள்ளத் | 177 |
| காண்பான் | 119 |

| | பக்க எண் | | பக்க எண் |
|---|---|---|---|
| கிடைக்கத் | 122 | பன்மொழி | 64 |
| சத்தசத்தைச் | 49 | பார்வையென | 93 |
| சிவமுதலே | 156 | பாலாழி | 78 |
| செய்வானுஞ் | 106 | பிறந்த | 40 |
| ஞானம் | 101 | புலனடக்கி | 167 |
| தரையை | 81 | புன்செயலி | 112 |
| தனக்குநிழ | 125 | பெருக்க | 75 |
| தன்னிலைமை | 24 | பெருமைக்கும் | 26 |
| தன்னிறமு | 109 | பேயொன்றுந் | 140 |
| தாடலை | 136 | பொய்யிருண்ட | 92 |
| தாமே | 129 | பொறியின்றி | 47 |
| தித்திக்கும் | 118 | மலைகெடுத்தோர் | 82 |
| திரிமலத்தார் | 43 | மாலார் | 153 |
| துன்றும் | 56 | மும்மைதரும் | 176 |
| தூநிழலார் | 116 | மூன்றாய | 143 |
| நலமிலன் | 36 | மூன்றுதிறத் | 44 |
| நற்குஞ் | 18 | வஞ்சமுட | 124 |
| நீடுமிருவினை | 102 | வாசியருளி | 157 |
| பரப்பமைந்து | 84 | விடநகுல | 95 |
| பலரைப் | 63 | விடிவா | 70 |
| பல்லாருயி | 31 | விரியமந | 152 |
| | | வெள்ளத்து | 83 |

## *பேராசிரியர் க.வெள்ளைவாரணனார் வாழ்க்கைக் குறிப்பு*

| | |
|---|---|
| பிறப்பு | : 14.01.1917 |
| மறைவு | : 13.06.1988 |
| பெற்றோர் | : கந்தசாமி, அமிர்தம் |
| ஊர் | : தஞ்சை மாவட்டம் - திருநாகேச்சரம் |
| குடும்பம் | : மனைவி திருமதி பொற்றடங்கண்ணி, மகள் திருமதி மங்கையர்க்கரசி திருநாவுக்கரசு |
| கல்வி | : திருப்பெருந்துறை தேவாரப்பாடசாலை (1928 - 1930). |
| | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வித்துவான் - (1930 - 1935); அறிஞர் கா.சுப்பிர மணிய பிள்ளை, சுவாமி விபுலானந்தர், நாவலர் சோமசுந்தர பாரதியார் ஆகியோர் ஆசிரியர்கள். ஆய்வு மாணவர். |
| | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - நாவலர் சோமசுந்தர பாரதியார் வழி காட்டி (1933 - 37) தொல்காப்பியம் - நன்னூல் எழுத்ததிகாரம் ஒப்பாய்வு. |
| கல்விப்பணி | : கரந்தைத் தமிழ்ச்சங்கம் - விரிவுரையாளர் (1938 - 1943) |
| | அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - விரிவுரை யாளர் (1943 - 1962) |
| | அண்ணாமலைப் பல்கலைக் கழகம் - இணைப் பேராசிரியர் (1962 -77) |
| | அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர், துறைத் தலைவர் புலமுதன்மையர் (1977 - 79) |
| | மதுரை காமராசர் பல்கலைக் கழகம் - சிறப்பு நிலைப் பேராசிரியர் (1979 - 1982) |
| | தமிழ்ப் பல்கலைக் கழகம் - இலக்கியத் துறைத் தலைவர், சிறப்பு நிலைப் பேராசிரியர், புல முதன்மையர் (1982 - 87) |

எழுத்துப்பணி : **கவிதை:**

*1. காக்கை விடுதூது -*

*(இந்திமொழி கட்டாய பாட எதிர்ப்பு, 1939)*

*2. விபுலானந்தர் யாழ் நூலுக்குச் சிறப்புப் பாயிரம்*

உரைநடை : *சங்ககாலத் தமிழ் மக்கள்- (1948) சென்னை*

*குறிஞ்சிப் பாட்டாராய்ச்சி - பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள் (கழகப் பதிப்பு) திருநெல்வேலி தமிழிலக்கிய வரலாறு - (தொல்காப்பியம் 1957)*

*தொல்காப்பியம் நன்னூல் - எழுத்ததிகாரம் (1962) (அ.நகர்)*

*சேக்கிழார் நூல் நயம் - (1970) சென்னை*

*பன்னிரு திருமுறை வரலாறு -1ஆம் பகுதி (1961)*

*பன்னிரு திருமுறை வரலாறு -2ஆம் பகுதி (1969) (தமிழக அரசு பரிசு பெற்றது)*

*தில்லைப்பெருங் கோயில் வரலாறு (1984) சிதம்பரம் மணிவாசகர் பதிப்பகம்*

*திருவருட்பாச் சிந்தனை - (1986) சிதம்பரம்*

*(தமிழக அரசு பரிசு பெற்றது)*

*தொல்காப்பியம் - நன்னூல் சொல்லதிகாரம் (1971). இசைத்தமிழ் 1979, சிதம்பரம்.*

*திருத்தொண்டர் வரலாறு (சுருக்கம்) 1986, அரிமழும்.*

*தொல்காப்பியம் பொருளதிகார ஆய்வு, 1987 தஞ்சாவூர்*

*சைவசித்தாந்த சாத்திர வரலாறு 2002*

*சைவசித்தாந்த தத்துவத்தின் வேர்கள்.*

உரை : *1) அற்புதத் திருவந்தாதி, (1970) சிதம்பரம்*

*2) திருவுந்தியார், திருக்களிற்றுப் பாடியார் (1982) திருப்பனந்தாள்*

*3) திருமந்திர அருள்முறைத்திரட்டு (1973) சிதம்பரம்*

*4) கம்பராமாயணத்தில 16 படலங்கள் (1963)*

*5) திருவருட்பயன் - 1965 சென்னை.*

பதிப்பு : *பரதசங்கிரகம் - **1954** - அண்ணாமலைப் பல்கலைக் கழகம் -சிதம்பரம்*

உரைவளப் பதிப்பு : 
*1.தொல்காப்பியம்: புறத்திணையியல் - **1983***
*2. தொல்காப்பியம்: களவியல் - **1983***
*3. தொல்காப்பியம்: கற்பியல் - **1983***
*4. தொல்காப்பியம்; பொருளியல் - **1983***
*5. தொல்காப்பியம்; உவமையியல் - **1985***
*6. தொல்காப்பியம்; மெய்ப்பாட்டியியல் - **1986***
*7. தொல்காப்பியம்; செய்யுளியல் - **1989***

*ஆகியவை மதுரை காமராசர் பல்கலைக்கழக வெளியீடுகள்.*

***சிறப்புகள்:***

1. *சித்தாந்த செம்மல் -*

   *தூத்துக்குடி சைவசித்தாந்த சபை **(1944)***
2. *திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் -*

   *தருமபுரம் ஆதினம் **(1971)***
3. *திருமுறை உரை மணி -*

   *காஞ்சிபுரம் ஸ்ரீசங்கர மடம் **(1984)***
4. *கலைமாமணி -*

   *தமிழ்நாடு இயல் - இசை, நாடக மன்றம் **(1985)***
5. *தமிழ்ப்பேரவைச் செம்மல் -*

   *மதுரை காமராசர் பல்கலைக் கழகம் **(1984 - 1989)***
6. *தமிழகப் புலவர் குழு உறுப்பினர்*
7. *திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கத் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை நினைவு பொற்கிழி **(1986)***

Q Q Q